சுதேச

மித்திரன்

மே 13, 1956 விலை 4 அணா

PIONEERS
IN TRANSPORT
1840
போக்குவரத்து பணியில் முதன்மையில்
நின்று இன்றைய தேவைகளையும் நாளைய
தேவைகளையும் எப்பொழுதும் ஆராய்ந்து
1954
காலத்திற்கேற்ற நவ...
வசதிகளை புகுத்துவதே
எமது அன்றாட அலுவல்
களில் ஒரு கட்டமாகும்.
தரமேன்மையும் சேவை
யுமான ஒரு நோக்கத்
திற்காகவே எங்கள்
வசதிகள், அனுபவம்
அனைத்தையும் செலுத்து
கிறோம்.
Simpson & Co Ltd
MADRAS - 2.
கிளைகள்; பெங்களூர் - உதகமண்டலம் -
திருச்சிராப்பள்ளி - செகந்தராபாத் (டெக்கான்)

பொருளடக்கம்

Vol. XXVII] துன்முகி௵ சித்திரை௴ 31௳ மே 13, 1956. [No. 15

பாகிஸ்தானை நம்பலாமா? 3

காற்றுவாக்கிலே —பாலு 4

பிரமுகர் வரிசை 5

தலைநகர் தபால் 6

கல்கத்தா கடிதம் 7

இலங்கை லிகிதம் 8

எங்கெங்கோ சென்றலைந்தான்
—சாந்தா ரங்காச்சாரி 9

அம்மா
—ஆர். சூடாமணி 13

நேர்மை எங்கே?
—பி. கே. சுவாமி 16

இருட்டு
—எம். வி. வெங்கட்ராம் 19

வைத்திய வினா—விடை 25

திரிவேணி
—ஹேமா ஆனந்ததீர்த்தன் 27

புத்தர் ஞானக் காட்சி
—பி. கோதண்டராமன் 32

நடந்த விஷயம்
—என். பி. ஹரிஹரன் 35

அதிசய வீணை
—வாண்டுமாமா 36

மோக முள்
—தி. ஜானகிராமன் 38

துப்பறியும் சுப்புடு
—சந்தனு 43

உங்கள் கால பலன்
—பி. வி. ராவ் 44

நவநாகரிகக் குறிப்புகள்
—காசினி 50

கலா மண்டபம் 51

நகர அரங்கம்
—ஸஞ்சாரி 54

தீக்ஷிதர் கீர்த்தனை 55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே: அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

சென்னை கார்ப்பரேஷன் கவுன்ஸிலர்கள் தினம் மகன் மகனாக ...

காலச் சக்கரம்



விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க எல்லா ராஜ்யங்களுக்கும் மத்திய அரசாங்கம் தானியம் விநியோகிக்கப் போவதாக யூனியன் உதவி மந்திரி கூறினார்
சர்க்கார் வழங்கும் தானியம்
கள்ளச் சந்தை
தொழிற் சங்கங்கள் இணைய வேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் கோருவதை இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரஸ் நிராகரித்தது
உமது ஆட்டுக் குட்டியுடன் சகதோழனாக இருப்பதே என் விருப்பம்!
கம்யூனிஸ்ட் கட்சி
இ.தே.தொ.க. காங்கிரஸ்
(ஆசியாவுக்கு யு.எஸ். பொருளாதார உதவி) அவல்
(நேடோ பொருளாதார உதவி) உமி
பாவம், நாமுந்தான் இந்தப் பஞ்சை ஆசியர்களுக்கு உதவி செய்வோமே
நேடோ
ஆசிய நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய 'நேடோ' திட்டமிட்டு வருகிறது
COMMEN

வாழிய செந்தமிழ் சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

பாகிஸ்தானை நம்பலாமா ?

சென்ற வாரம் இந்திய அதிகாரிகளுடன் நடத்திய சம்பாஷணையின் விளைவாக, கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்கள் பெருவாரியாக வெளியேறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதாக பாக். அதிகாரிகள் உறுதி கூறியிருக்கின்றனர். இவ்வுறுதிமொழி காரியத்தில் பிரதிபலிக்குமா, அல்லது மற்றொரு ஏட்டுச்சுரைக்காயாயிருக்குமா என்பது தெரிய வேண்டும். இந்தியாவோ, ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புகளில் ஒவ்வொன்றையும் பரிபூரணமாக, நிறைவேற்றிவைத்திருக்கிறது. எனவேதான், இந்நாட்டிலுள்ள மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்த யாரும் வெளியேற எண்ணுவதில்லை; இந்தியாவை முற்றிலும் தங்கள் சொந்த தேசமாகப் பாவித்து நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால், பாகிஸ்தானிலுள்ள மைனாரிட்டியின் கதி முற்றிலும் வேறு. 1950–ம் ஆண்டு ஏற்பட்ட நேரு–லியாகத் அலி ஒப்பந்தம் முதல் அநேக சமயங்களில் மைனாரிட்டி பிரச்னைபற்றி பாகிஸ்தான் கொடுத்த வாக்குறுதி எதையும் சித்தசுத்தியுடன் நிறைவேற்றியதில்லை.

மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்கள் அநேகமாக முற்றிலும் வெளியேற்றப்பட்டுவிட்டனர். கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும் மூன்றில் ஒரு பங்கு ஹிந்துக்கள் ஏற்கெனவே இந்தியாவுக்குத் திரும்பி விட்டார்கள். சமீப மாதங்களில் வெளியேற்ற விகிதம் மிக பயங்கரமாக அதிகரித்து வந்திருக்கிறது. இந்நிலைக்குப் பரிகாரம் காணுமுன், இதற்கான காரணங்களைத் தெளிவாக நிர்ணயிப்பது அவசியம். இவற்றைச் சுருங்கச் சொல்லின், பாகிஸ்தானிலுள்ள மைனாரிட்டி அங்கு அதிகாரத்தில் உள்ளவர்களிடம் நம்பிக்கை இழந்து விட்டது. மைனாரிட்டியின் உயிரோ, சொத்தோ, கௌரவமோ, கலாசாரமோ மதிக்கப்படுவதில்லை. அரசியல் வகையில் ஹிந்துக்களுக்கு சமத்துவம் கிடையாது என்று பாக். அரசியல் சட்டம் பட்டவர்த்தனமாகக் கோஷிக்கிறது. பொருளாதார வகையிலும் அவர்கள் வாழ்வு மிகக் கேவலமாகி வருகிறது. அவர்களது சொத்தை சர்க்கார் பலவந்தமாக ஆர்ஜிதம் செய்வது மிக சகஜமாகி விட்டது. இந்நிலையில் ஹிந்துக்கள் அருவருப்புற்று இங்கு வருவதில் ஆச்சரியமென்ன ?

ஒரு மைனாரிட்டியைப்பற்றிய பொறுப்பு, அந்தந்த ராஜ்ய சர்க்காரைச்சேர்ந்ததென இந்தியா,பாக். அதிகாரிகளின் கூட்டறிக்கை கூறுகிறது. சட்டரீதியில் இதில் ஆட்சேபகரமானது ஒன்றுமில்லை. எந்த மைனாரிட்டியும் தானுள்ள ராஜ்யத்தின் சர்க்காரிடம் விசுவாசம் கொண்டு தனது குறைகளுக்கு அந்த சர்க்காரிடமே பரிகாரம் கோரவேண்டுமென்பது உண்மைதான். ஆனால், அவ்வாறே அந்த சர்க்காரும் அந்த மைனாரிட்டி விஷயத்தில் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து அதன் நியாயமான குறைகளைக் களையக் கடமைப்பட்டவர்களே. இந்தக் கடமையை பாக். சர்க்கார் முறைப்படி நிறைவேற்றிவைக்காததாலேயே, அங்குள்ள மைனாரிட்டியினர் பெருவாரியாக வெளியேறுகின்றனர். அவ்வளவு பேரும் இந்தியாவுக்குள்ளேயே வந்து குவிவதால், இந்நாடு இவ்விஷயத்தில் அலட்சியமாக இருந்துகொண்டிருப்பது சாத்தியமல்ல. ஆனால், இந்திய சர்க்கார் அந்த மைனாரிட்டிக்குத் தங்கள் நாட்டில் வந்து குடியேற தாராளமாக ஸர்ட்டிபிகேட்டுகள் கொடுப்பதும் இந்த வெளியேற்றத்துக்கு ஒரு முக்கிய காரணம் என்று பாக். அதிகாரிகள் வாதிக்கின்றனர். பாகிஸ்தானிலிருந்து இங்கு வரும் அகதிகளின் கஷ்டம் சொல்லி முடியாது. எனினும், பாக். ஹிந்துக்கள் தாங்கள் தலைமுறை தலைமுறையாக வசித்து வந்த வீடு வாசல்களையும், மற்ற சொத்துக்களையும் விட்டு விட்டு, இந்தியாவில் இத்தகைய கஷ்டத்தை அனுபவிக்க தாங்களாகவே முன்வருகிறார்கள் என்று சொல்வது எவ்வளவு அபத்தம்! அந்த ஹிந்துக்கள் விஷயத்தில் பாக். அதிகாரிகள் முறைப்படி பொறுப்பு உணர்ச்சியுடன், அதாவது இந்தியாவில் முஸ்லிம்களிடம் இந்திய சர்க்கார் நடந்துகொள்வதுபோல், நடந்துகொள்வாராயின், பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்கள் யாரும் வெளியேறத் துடிக்கார். அவர்களிடை நம்பிக்கையுண்டாக்க முற்படுவதாக பாக். அதிகாரிகள் மீண்டும் இப்போது உறுதி கூறியிருக்கின்றனர். ஆனால், சம்பாஷணை முடிவில் கூட்டறிக்கை வெளியிடுவதிலேயே மாறுபாட்டம் ஏற்பட்டிருப்பது ஒரு நல்ல ஆரம்பத்தைக் குறிப்பதாயில்லை. பாகிஸ்தான் தனது உறுதிமொழிகளை நிறைவேற்றும்படி செய்ய இந்திய சர்க்கார் ஒரு வழி காண வேண்டும். பாகிஸ்தானிலிருந்து வெளியேறும் ஹிந்துக்கள் அநேகமாக அனைவரும் மேற்கு வங்கத்திலேயே குவிகின்றனர். சமீபத்தில் உத்தேசிக்கப்பட்டபடி வங்க–பீகார் இணைப்பு ஏற்பட்டிருக்குமாயின், இவ்வகையில், வங்கத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி சிறிது தணிய வழியேற்பட்டிருக்கும். ஆனால், அங்கு மட்டுமின்றி, நாட்டின் வேறு சில பகுதிகளிலும் குறுகிய திருஷ்டியுள்ளவர்களின் கை ஓங்கியுள்ள காலம் இது.



எங்கும் ஞானோதயம்!

"பூரண ஞானம் பொலிந்த நன்னாடு. புத்தர்பிரானருள் பொங்கிய நாடு." பழம் பெரும் பாரத நாட்டின் புகழை இப்படிப் பாடினார் பாரதி. புவனம் புகழும் புத்தர் முக்தி அடைந்து 2500 ஆண்டுகள் ஆகின்றன. இவ்விழாவை இம்மாத இறுதியில் கொண்டாடுகிறது பாரதம். அரசாங்கமே அமர்க்களமாக கொண்டாடுகிறது. நாஸ்திகத்திடம் நாட்டமா என்று சிலருக்கு கோபம். சமய சார்பற்ற அரசாங்கம் இப்படி செய்யலாமா? செய்வதில் தவறில்லை. அன்பும் அறநெறியும் போதித்த ஆசிய ஜோதிக்கு அஞ்சலியை ஆட்சேபிக்க அவசியமே இல்லை. ஆனால் இந்து மதத்தைத் தூற்றும் 'பகுத்தறிவாளர்கள்' புத்த மதத்தைப் போற்றுவதுதான் புரியாத புதிர். தெய்வ நிந்தனையும் வெறுப்புணர்ச்சியும் புத்தரின் போதனைகளா?

புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானோதயம் ஏற்பட்டது. தென்னை மரத்தடியில் நமது கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு 'ஞானோதயம்' ஏற்பட்டுள்ளது. காங்கிரஸுடன் ஒத்துழைக்க முடிவு செய்துவிட்டனர். வம்புக்காக தேர்தலில் மல்லுக்கு நின்று மண்ணைக் கவ்வ விரும்பவில்லையாம். பிரத்யட்ச புத்தியைப் பாராட்டவேண்டியதுதான். சோஷலிஸ சமுதாய லட்சியம் கம்யூனிஸத்தை மிஞ்சும் வேகத்தில் செல்கிறதே! கம்யூனிஸ்ட் கட்சி மூட்டை கட்டிவிடலாமே? ஆனால் காங்கிரஸுடன் கூட்டு சேரவும் மனமில்லை. எனினும் காங்கிரஸின் செல்வாக்கு அசைக்க முடியாதது என்று கண்டுகொண்டனர். அதை எதிர்க்கும் கட்சிகளுடனும் கூட்டு சேரப் போவதில்லையாம். வடிகட்டின வகுப்புவாதிகளுடன் கொஞ்சிக் குலாவப் போவதில்லை. பிற்போக்காளர்களைக் கட்டித் தழுவப்போவதில்லை. முன்பு அமைத்த கூட்டணிகளின் கட்டுப்பாடு ஏழேழு ஜன்மங்களுக்குப் போதுமென்றாகிவிட்டதாம். ஆந்திராவில் மூக்கு உடைபட்டது, பாலக்காட்டில் கண்களைத் திறந்துவிட்டது. "கூட்டணிகளை முறியடிப்போம்" என்று முழங்குகிறார் முதல் அமைச்சர். கண்ணீர்த்துளிகளையும், கம்யூனிஸ்ட்டுகளையும் ஆவேசமாக தாக்குகிறார். கம்யூனிஸ்ட்டுகள் இப்போது நல்ல பிள்ளைகளாகிவிட்டனர். பெரியார் கட்சியோ பக்க மேளம் வாசிக்கிறது. மற்ற உதிரிக் கட்சிகள் பற்றிக் கவலையில்லை. நெல்லிக்காய் மூட்டைகள். பச்சைத் தமிழருக்குப் பயமேன்? கூட்டணி எங்கே அமையப்போகிறது! நிழலுடன் சண்டையிடுவானேன்?

தமிழ் நாட்டு அமைச்சர் ஒருவருக்கும் அறிவொளி பிறந்துவிட்டது. தட்சிணப் பிரதேச யோசனைக்குப் புத்துயிர் வந்தது. கொங்கு நாட்டு அமைச்சருக்கு பாண்டி நாட்டு மன்னர் தோள் கொடுக்கிறார். வறண்ட பூமியை வளமாக்க கேரள நாட்டு நீர்வளத்தைப் பயன் படுத்தலாம். மத்திய அரசாங்கத்திடமிருந்து ரூ. 100 கோடி மான்யமும் பெறலாமே! இணைந்து வாழ்ந்தால் இந்திர லோகமாகும். தமிழ் வளர்ந்த மன்னர் மரபினர், மறத்தமிழர், "பதவியையும் பணயம் வைக்கத் தயார்" என்று முரசு கொட்டுகிறார். தமிழ்ப்பற்று, இன உணர்ச்சி, தன்மானம் அவருக்கில்லையா? உறங்கிக் கிடந்த பிரச்னைக்கு உத்வேகம் உண்டாகியுள்ளது. மந்தமான அரசியலில் சூடு பிடிக்கிறது. அதிக சூடு பிடிக்க வேண்டும் என்று மாற்றுக் கட்சிகள் விரும்புவது இயற்கையே. காங்கிரஸுக்குள்ளேயே காரசாரமான சொல் வீச்சுகள். வாதப் பிரதிவாதங்கள். பொது ஜன கருத்து உருவாக இது உதவும். வேண்டியதும் அதுதானே!

காலங்கடந்த ஞானோதயத்தால் பலனில்லை. தட்சிணப்பிரதேசம் இதற்கு விதிவிலக்காயிருக்கலாம். தேர்தலுக்குப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். தேர்தல் பிரச்னையாக வைத்து கோதாவில் இறங்கலாம். ஆனால் எல்லாவற்றிலும் இப்படி எண்ணலாகாது. உதாரணமாக கேரளத்துக் கதையைக் கேளுங்கள். மணமகன் குறித்த நேரத்தில் வந்து சேரவில்லை. முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டது. கலியாணத்துக்கு வந்த விருந்தாளி ஒருவனுக்கு அடித்தது அதிருஷ்டம். அவன் கையில் தாலியைக் கொடுத்து கட்டச் சொன்னார்கள் மணமகள் வீட்டார். காத்திருந்தவன் வந்து சேருமுன் புது மண ஜோடி பறந்தோடிவிட்டது! தாமதத்துக்குத் தகுந்த தண்டனைதானே?

சென்னை நகர பஸ் போக்குவரத்து இலாகாவுக்கும் ஞானோதயம்! பிரயாணிகளிடம் பஸ் ஊழியர்கள் ஒழுங்காக நடந்துகொள்ள மரியாதை வாரம் கொண்டாடப்பட்டது. "மரியாதை எதிர்பார்ப்பது உங்கள் உரிமை – எங்கள் கடமை" என்ற சின்னமணிந்தனர் கண்டக்டர்களும், டிரைவர்களும். நிரந்தர பலன் ஏற்படுமா என்பது சந்தேகமே. நாய் வாலை நிமிர்த்த முடியுமா? ஏதோ தெய்வ சகாயத்தால் ஒரு வாரமாவது மரியாதையுடன் நடந்துகொண்டார்களே என்று பொதுஜனம் ஆறுதல் அடைந்தால் அதுவே போதும்!

—பாலு.

ENGLISH BOOKS

THE CONCEPT OF LEGISLATIVE INDEPENDENCE

By R. V. Krishna Iyer, B. A. M. L. Re. 1-0

(Postage As. 8 Extra)

Books by Hon. Justice A. S. P. Iyer, M. A., I. C. S.

Chanakya & Chandragupta	Rs 4-0
Slaves of Ideas & other plays	Rs. 2-8
Famous Tales of Ind	Rs. 4-0

Mathematical Basis of Raga Prastara—Carnatic system by K. Ramachandran, M. A. L. T. Re. 1-0

சிறந்த சங்கீத நூல்கள்

தியாகராஜ கீர்த்தனஹாரம்	ரூ.	5	0	0
ஸ்ரீ வர்ணமாலிகை	ரூ.	1	0	0
தக்ஷிணராக ரத்னகரம்	ரூ.	2	0	0
தாள தீபிகை	ரூ.	1	0	0

நான்கு புத்தகங்களும் ஸ்ரீ K ராமச்சந்திரன் M. A. L. T. அவர்களால் தொகுத்து எழுதப்பட்டவை

கிடைக்குமிடம்:—

வாவில்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு & ஸன்ஸ்,

292, எஸ்பிளனேட், சென்னை-1

பிரமுகர் வரிசை:

ஸ்ரீ கிருஷ்ணஸின்ஹா

ராஜ்ய சீரமைப்பு அறிக்கை வெளியாகி நாட்டில் மாகாண வெறி கோர தாண்டவம் செய்தபோது, இருண்ட வானத்தில் ஒளி ரேகைபோல உதித்த 'வங்காள-பீஹார் இணைப்புத் திட்டம்' இப்பொழுது பிசுபிசுத்து விட்டது.

ஆயினும் இதனால் பீஹார் முதன் மந்திரி ஸ்ரீ கிருஷ்ண ஸின்ஹாவின் கியாதி கிஞ்சித்தும் குறைந்துவிடவில்லை. அரசியல் வாழ்வில் காந்திஜியின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவர் இவர். 1887-ல் பீஹார் ஜமீந்தார் வம்சத்தில் பிறந்த இவர் கல்கத்தாவில் பட்டம் பெற்று, சட்டமும் கற்றவர். தேச விடுதலைப் போராட்டத்தில் பன்முறை சிறை சென்றிருக்கிறார். ஆயினும், ஆரம்பத்திலிருந்தே சட்ட சபை என்றால் அலாதி பிரியம் இவருக்கு. இந்த ஆர்வம் தான் 1927-ல் பீஹார் சட்ட சபையில் சுயராஜ்யக் கட்சியின் தலைவராக இருந்து பணியாற்றச் செய்தது. இந்த அனுபவமானது 1937-39-ல் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை ஏற்றபோது பீஹார் முதன் மந்திரியாக்கியது இவரை. அன்றுபோல இன்றும் முதன் மந்திரியாகவுள்ள தனிப் பெருமை இவரைத் தவிர ம. பி. முதன் மந்திரி ஸ்ரீ சுக்லா ஒருவருக்கே உண்டு.

தன்னை வங்காளிகள் மதிக்காவிட்டாலும்கூட வங்கம் அல்லலுறும் போது பீஹார் கைகொடுக்கத் தயங்கியதில்லை. தேசப் பிரிவினையால் வங்கம் தத்தளித்தபோது உதவிக்கு விரைந்தது பீஹார். இப்போதுமென்ன? அகதிகள் தொல்லையால் வங்கம் படும்பாடு வெகுவாகக் குறைந்திருக்கும், பீஹார் சட்ட சபையை ஸ்ரீ ஸின்ஹா சம்மதிக்க வைத்த இணைப்புத் திட்டத்தை ஏற்றிருந்தால். ஆனால், வங்க மக்களோ அதை இப்போது நிராகரித்து விட்டனர். இதன் பலனை வங்கம் இன்றில்லாவிடில் நாளை அனுபவிக்கத்தான் போகிறது!

தலைநகர் பால்.....

இந்தியாவின் பிரதான மொழிகளைச் சேர்ந்த இலக்கிய கர்த்தாக்கள் சென்ற மாத இறுதியில் ரேடியோ இலக்கிய அரங்கில் கலந்துகொண்டு, தத்தம் கவி வளம் பற்றிப் பேசினார்கள். சாதாரண மனிதனும்-படிக்கத் தெரியாதவரும்-லகுவில் புரிந்துகொள்ளத் தகுந்த நடையை, ரேடியோ மேலும் பின்பற்ற வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தினார்கள். தவிர, 'இந்தியாவின் பிராந்திய மொழிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்; ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு அறிஞர்கள் கோஷ்டி அடிக்கடி சென்று, கருத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ள வேண்டும். மேலும், பிராந்திய மொழிகளுக்கிடையேயும் பெருமளவில் மொழி பெயர்ப்பு வேலை நடக்க வேண்டும்' என்று யோசனை கூறினார்கள். ரேடியோவும், சாஹித்திய அகாடமியாரும் இனியும் அகில பாரத இலக்கிய மகாநாடுகளுக்கு ஏற்பாடு செய்து வர வேண்டுமென்றும் அவர்கள் சிபார்சு செய்தனர். ஆனால், இவற்றையெல்லாம் சிறப்பான வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமே என்பதுதான் கவலை.

இந்த ரேடியோ இலக்கிய அரங்கில் தமிழகத்திலிருந்து எதிர்பார்த்திருந்த அன்பர், ஆரம்ப நிகழ்ச்சிக்கு வர இயலாது போயிற்றும். காரணம் என்னவோ தெரியவில்லை! இதே மாதிரிதான், சாஹித்திய அகாடமியின் நாடக உரைக் கோவையிலும்! எனினும், திடீர் அழைப்பின் பேரில் ஸ்ரீ ஷண்முகம் கலந்து கொண்டது நினைவிருக்கலாம். அதைப் போலவே, ரேடியோ இலக்கிய அரங்கில், தில்லித் தமிழ்ச் சங்க அக்கிராஸனர் டாக்டர் கிருஷ்ணன், கடைசி நேர அழைப்பையும் ஏற்று, தமக்கே உரிய பாணியில்-ஹாஸ்யமும், கருத்தும் செறிந்த பிரசங்கமொன்றைச் செய்து பிரமாத 'அப்ளாஸ்'களைத் தட்டிக் கொண்டு போனார்.



தில்லி பஜனை சமாஜத்தாரின் ராமநவமி உத்சவ ஊர்வலத்தின் ஒரு பகுதி.

இலக்கிய மன்றத்தைத் துவக்கிவைத்த ஸ்ரீ நேரு, மொழி வெறியைக் கண்டித்தார். அரசியல் காரணங்களுக்காக மொழியைத் துஷ்பிரயோகம் செய்யலாகாது என்றும் கூறினார். இலக்கிய கர்த்தாக்கள் கலையியல் வளர்ச்சியுடன், பொருளியல் வளர்ச்சிக்கும் உதவும் வகையில் எழுத்துப் பணியாற்ற வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஃ ஃ ஃ

மொழியைப்பற்றிப் பேசுகையில், தில்லித் தமிழ்ச் சங்கத்தினர் மேற்கொண்டுள்ள பணியைப்பற்றியும் குறிப்பிட வேண்டும். மற்ற மொழியினருக்குத் தமிழ் கற்றுக்கொடுப்பதற்கான பெரு முயற்சியில், இப்போது சங்கம் தீவிரமாக இறங்கியுள்ளது. தலைநகரில் முன்னர் இரண்டொரு முறை முயன்று கைவிடப்பட்ட இந்த முயற்சி இந்த முறை வெற்றியடையும் என்று தோன்றுகிறது. இந்த மாதம் இரண்டாந் தேதியன்று தில்லி சர்வகலாசாலை ரிஜிஸ்திரார் ஸ்ரீ டி. பி. எஸ். அய்யர் துவக்கி வைத்த இந்த வகுப்பில், ஒரு ஸ்திரீ உட்பட சுமார் பன்னிரண்டு பேர் படிக்கிறார்கள். வாரம் இரு முறை நடக்கும் இந்த வகுப்பில் மாணவர்களின் தொகை பெருகி வருகிறதாம். மாணவர்கள் பஞ்சாபிகள், மராட்டியர்கள், சிந்திகள் முதலான பல மொழிகளைச் சேர்ந்தவர்கள். சங்கக் காரியதரிசியே ஆசிரியர் பொறுப்பை ஏற்றுள்ளார். லகுவான முறையில் சொல்லிக்கொடுக்கும் திறனுடையவர் அவர்.

ஃ ஃ ஃ

தில்லியில் நாட்டியத்துக்கு 'மவுசு' அதிகம்; அதுவும் குழந்தைகளின் நாட்டிய நிகழ்ச்சிகள் பெருகிக் கொண்டே வருகின்றன. சென்ற மாதம் இருபத்தியொன்பதாம் தேதியன்று, பைன் ஆர்ட்ஸ் மண்டபத்தில் இரண்டு சிறுமிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம், மிக வெற்றிகரமாக நடந்தேறிற்று. தட்சிண பாரத் சமாஜத்தின் ஆதரவிலான இந்த நிகழ்ச்சியில் குமாரி லட்சுமி மேனனும், ஜயந்தி பாணியும் அரங்கேறி ஆடினார்கள். ஏழு எட்டு வயதுள்ள இந்தச் சிறுமிகள் சுமார் ஒன்றரை மணி நேரம் சிறப்பாக ஆடிக்காட்டினார்கள். மந்திரிகள், பார்லிமெண்ட் உறுப்பினர்கள், வெளி நாட்டினர் முதலானோர் திரண்டு வந்திருந்த சபையில், லட்சுமியும், ஜயந்தியும் தமக்குள்ள கலை ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் நிரூபித்தார்கள். அந்தச் சிறுமிகளுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்தவரும், தில்லியில் பிரபல நடனமணிகளில் ஒருவருமான குமாரி வஸந்தாவின் புகழ் மேலோங்கிற்று. அரங்கேற்றத்துக்கு அக்கிராஸனம் வகித்த மந்திரி ஸ்ரீ பி. என். தத்தார், தலைநகரில் நடந்துவரும் கலைப்பணியைப் பாராட்டினார்; இந்தியாவின் அருங்கலையான பரதநாட்டிய சாஸ்திரத்தைப் பேணிப் பாதுகாத்த தென்னாட்டைப் போற்றினார்.

ஃ ஃ ஃ

கரோல்பாக் சென்ற வாரம் அல்லோல கல்லோலப்பட்டது. ராமபிரான் யானை சகிதம் கரோல்பாக் வீதிகளில் பவனி வந்தார். தில்லி பஜனை சமாஜத்தாரின் ராமர் விழா மிகவும் விமரிசையாக நடந்தேறிற்று. நல்லதொரு இசை விருந்து அளித்தார்கள். தில்லியின் இளம் வித்வான்களில் ஒருவரான ஸ்ரீ பி. வி. லட்சுமணனின் இன்னிசையை கரோல்

★

தமிழ் மாதப் பத்திரிகையான 'உமா'வின் நான்காவது ஆண்டு விழா சமீபத்தில் ஸ்ரீ 'தேவன்' தலைமையில் சிறப்பாக நடந்தேறியது ஸ்ரீமான்கள் ம. பொ. சிவஞான கிராமணியார், கி. வா. ஜகந்நாதன், எஸ். ஏ. பி. அண்ணாமலை ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு பேசினர்.

★

கல்கத்தா கடிதம்

★

சௌ. சரோஜினிக்கு,

அநேக ஆசீர்வாதங்கள். கடந்த ஏழு வருடங்களாக, கல்கத்தா தமிழர்களிடையே தமிழ் நாடகங்களை நடத்தி வரும் அமெச்சூர் நாடகக் கழகத்தினர், கடந்த புதன்கிழமையன்று தங்கள் ஏழாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடினார்கள். ஆண்டுக்கு ஒரு பெயரில் புதிய புதிய சபைகள் தோன்றி மறைவது சகஜமாக இருக்கும் இந்த நாளில், தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக உழைத்து வருவதே எல்லோருக்கும் பெருமை தரும் விஷயம். இதோடுகூட, தாங்கள் எடுத்துக்கொண்ட காரியத்தில் கணிசமான வெற்றியை அடைந்துள்ள அமெச்சூர் நாடகக் கழகத்தினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்த விழாவுக்கு மரைன் என்ஜினீரிங் காலேஜ் உதவி டைரக்டர் ஸ்ரீ கஸ்தூரி தலைமை தாங்கி, தென் இந்தியர்களுக்காகவென்றிருக்கும் சங்கங்கள் தமக்குள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இந்த ஆண்டு விழாவைப் பொறுத்த வரையில், மூன்று தமிழர்களின் சங்கங்கள் ஒன்றுபட்டு உழைத்தன என்பது கண்கூடு. ரசிக ரஞ்சன சபையினருக்குச் சொந்தமான நிலத்திலே, கல்கத்தா பஜனை சமாஜத்தினர் அமைத்திருந்த பந்தலிலே இந்த ஆண்டு விழாக் கொண்டாட்டம் நடந்தேறியது எதிர்காலத்தில் ஒற்றுமைக்கு நல்ல அறிகுறி. நாடகக் கழகத் தலைவர் 'டிஸ்கோ' அய்யங்காரின் சேவை, தொடர்ந்து பல ஆண்டுகளுக்குக் கிட்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

ஃ ஃ ஃ

கல்கத்தா பஜனை சமாஜத்தினர், இந்த ஆண்டு ஸ்ரீராமநவமி உத்ஸவத்தை ரசிக ரஞ்சன சபையினாரின் நிலத்திலே வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். மிகவும் விஸ்தாரமாகப் பந்தல் அமைத்திருந்ததால் இசை நிகழ்ச்சிகளை வெகு நன்றாக ரசிக்க முடிந்தது. உள்ளூர் வித்வான்களான ஸ்ரீமான்கள் என். எஸ். வைத்தியநாதனும், லட்சுமிநாராயணன், சங்கரன் சகோதரர்களும் வெகு இனிமையாகப் பாடி சபையோரை மகிழ்வித்தனர். பிந்தியவர்கள் குறிப்பிடத்தக்க அளவு தங்கள் பாணியை மாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்த இரண்டு கச்சேரிகளுக்கும் பக்கவாத்தியம் வாசிப்பதற்கென்றே தமிழகத்திலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த தி ன் னி ய ம் வைத்தியநாதனும் (வயலின்), பாலக்காடு வி. ஏ. சுந்தரமும் (மிருதங்கம்) வெகு உதவிபடியாகத் தங்கள் வாத்தியங்களைக் கையாண்டு கச்சேரிகளைப் பரிமளிக்கச் செய்தனர். கல்கத்தா சங்கீத உலகத்தின் சம்பத்திய சாத்திரத்திலே, உள்ளூர் இளம் வித்வான் முதல் முதலாக இந்தத் தடவைதான் தமிழகத்திலிருந்து வி த் வான்களை அழைத்திருந்தார்கள். உள்ளூர் இளம் பாடகர்களுக்கு இத்தகைய வாய்ப்பையளித்த பஜனை சபா நிர்வாகிகள் நமது பாராட்டுக்குரியவர்களாகிறார்கள். இந்த நூதன வழக்கத்தைக் கையாண்டது தவிர, இந்த ஆண்டிலே, உத்ஸவத்திற்காக இரண்டு நாதஸ்வர கோஷ்டியினரையும் அழைத்திருந்தனர் நிர்வாகிகள். கடைசி நாள் ஊர்வலத்தின்போது நாதஸ்வரம் வாசித்த திருச்சேறை சகோதரர்கள் பக்தகோடிகளை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள். உத்ஸவத்தின்போது ராமாயண ஹரிகதா காலட்சேபம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. துவக்க நாளில் ஹௌரா குமாரி சாந்தா வெகு இனிமையாக வீணைக் கச்சேரி செய்து பக்தகோடிகளை மகிழ்வித்தார். கல்கத்தா ரசிகர்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட

நல்ல புகழ் கிட்டும் என்று சொல்லலாம்.

ஃ ஃ ஃ

மொழிவாரி ராஜ்யப் பிரிவினையைத் தழுவி, பீஹார், மேற்கு வங்க மாகாணங்களை இணைத்து, ஒரே ராஜ்யமாகச் செய்ய வேண்டுமென்ற முதல் மந்திரி டாக்டர் பி. ஸி. ராயின் திட்டம், கடந்த வாரம் மக்களின் ஒருமுகமான எதிர்ப்பு காரணமாக வாபஸ் பெறப்பட்டது. வட கல்கத்தா பார்லிமெண்ட் தொகுதி மறு தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகரைச் சந்தேகமறத் தோற்கடித்ததன் மூலம், வங்க மக்கள் இரு மாகாண இணைப்புத் திட்டத்திற்குத் தங்கள் எதிர்ப்பைப் பகிரங்கமாக வெளிப்படுத்தினார்கள். பொதுமக்கள் விருப்பத்தை எதிர்த்து ஐக்கிய திட்டம் வெளியிட்ட காங்கிரஸ் கட்சி அபேட்சகர்கள், சமீபத்தில் நடந்த மறு தேர்தல்கள் ஒன்றில் கூட வெற்றி பெற முடியவில்லை.

—பாலம்.

இலங்கை லிகிதம்

இலங்கை பார்லிமெண்டில் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது விவாதம் நடைபெறுகையில் தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் அரசாங்கத்தின் பாஷைக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தார்கள். இலங்கையில் சிங்கள வம்சம் தோன்றுவதற்கு முன்பிருந்தே தமிழ் மன்னர்கள் இந்நாட்டை ஆண்டு வந்திருப்பதையும், சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே தமிழ் மொழி இலங்கையிலிருந்து வருவதையும் எடுத்துக்காட்டி, தமிழ் மொழியை அழிக்க முயற்சிப்பதும் தமிழர் மீது சிங்களத்தைத் திணிப்பதும் அநியாயம் என்று தமிழ்த் தலைவர்கள் இடித்துக் காட்டினார்கள். சிங்களவர்கள் சிங்களம் வேண்டுமென்று கேட்டால் அதை தேசீயமென்றும், தமிழர் தமிழ் வேண்டுமென்று கேட்டால் அதை வகுப்புவாதம் என்றும் வர்ணிக்கும் விந்தையை ஸ்ரீ அமிர்தலிங்கம் எடுத்துக் காட்டி, "நாங்கள் உரிமையைப் பெற பார்லிமெண்டுக்கு வந்திருக்கிறோம்; யாசகம் வாங்குவதற்கு அல்ல" என்று முழங்கினார்.

"தமிழன் ஒருபோதும் அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டதில்லை. அடிமைப்படுத்த நினைப்பவர்களுக்கு போர் முனையில் பதில் சொல்லுவதுதான் அவன் வழக்கம். பகவான் புத்தரின் 2500-வது ஜயந்தி விழாவைக் கொண்டாடும் வருஷத்தில் பலாத்காரப் போராட்டத்தில் இறங்கும்படி சிங்களத் தலைவர்கள் தூண்டுகிறார்கள். உரிமையைப் பெறுவதற்காக உயிர்த் தியாகம் செய்யவும் தமிழர்கள் கச்சை கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டதை சிங்களவர் உணர வேண்டும்"—இவ்வாறு ஸ்ரீ ஸி. சுந்தரலிங்கம் பார்லிமெண்டில் பலமாக எச்சரித்தார்.

யார் காடியாகக் கத்திய பொழுதிலும் தமிழை ஒதுக்கி சிங்களத்தை மட்டும் ராஜாங்க பாஷையாக்குவதென்று அரசாங்கம் முடிவாகத் தீர்மானித்துவிட்டது. இவ்வாரம் பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா இதை மறுபடியும் வெளியிட்டு சிங்களம் ராஜாங்க பாஷையாகிய பொழுதிலும் நியாயமான அளவிற்கு தமிழும் உபயோகிக்கப்படுமென்றார். "'எல்லா வேலைகளையும் சிங்களத்தில் மாற்றுவதன் முன்னால் இடைக்காலத்தில் என்ன ஏற்பாடு செய்வது? தமிழ் பாஷையை எந்த அளவிற்கு உபயோகிப்பது?' என்பதைதீர்மானிக்க அரசாங்கப் பார்லிமெண்டரிக் கட்சி ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறது. இந்தக் கமிட்டி அறிக்கை சமர்ப்பித்தவுடன் சிங்களத்தை மட்டும் ராஜாங்க பாஷையாக்கும் மசோதா பார்லிமெண்டில் கொண்டு வந்து சட்டமாக்கப்பட்டுவிடும்" என்று பிரதம மந்திரி அறிவித்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

இவ்வார பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கோவா பிரச்னையிலே புதிய இலங்கை அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று ஒரு கேள்வி கேட்ட பொழுது "காலனி ஆட்சி உலகின் எந்த பாகத்தில் இருப்பதையும் நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்" என்று பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா சொன்னார். கோவா பிரதேசம் போர்த்துகலின் ஒரு [illegible] மென்பதை தாம் ஒப்புக்கொள்ளத் தயாரில்லையென்றும் பிரதம மந்திரி குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

இலங்கை ஜனநாயக காங்கிரஸின் 16-வது வருஷாந்தர மகாநாடு இம்மாதம் 11, 12, 13-ந் தேதிகளில் நாவலப்பிட்டி என்னுமிடத்தில் நடைபெறுகின்றது. காங்கிரஸின் தற்போதைய தலைவரான ஸ்ரீ கே. ராஜலிங்கம் அடுத்த வருடத் தலைவராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இலங்கையில் புதிய அரசாங்கம் ஏற்பட்டு ஒரு புதிய யுகம் ஆரம்பித்திருப்பதாக பொதுவாகக் கருதப்படுகின்றமையினால், இவ்வருடம் காங்கிரஸ் கூடும் மகாநாட்டுப் பந்தலுக்கு "நவயுக நகரம்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். வருஷாந்திர மகாநாட்டுக்குப் பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர் கூடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. மகாநாட்டுக்கு விஜயம் செய்யுமாறு பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகாவையும் அழைத்திருக்கிறார்கள். 16 ஆண்டுகளுக்கு முன்னால் பாரதப் பிரதம மந்திரி ஸ்ரீ நேருவினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்த காங்கிரஸ் துரதிருஷ்டவசமாக இரண்டு போட்டி முகாம்களாகப் பிளவுபட்டிருக்கிறது. ஜனாப் ஏ. அஸீஸ் தலைமையில் உள்ள காங்கிரஸின் மற்றொரு பிரிவினர் தங்களுடைய ஆண்டு விழாவை இம்மாதக் கடைசி வாரத்தில் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் மகாநாடு இரண்டு இடங்களில் நடப்பது இதுவே முதன் முறையாகும்.

ஃ ஃ ஃ

இலங்கையில் ஆபாச சினிமாப் படங்கள் மேனாடுகளிலிருந்து வருவதைத் தடுக்க அரசாங்கம் கண்டிப்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளவிருக்கிறது. தென்னிந்தியாவிலிருந்து சிற்றின்பத்தை அடிப்படையாகக்கொண்ட தமிழ்ப் புத்தகங்கள் ஏராளமாக வருகின்றன. இவற்றைத் தடுக்கவும் சுங்க இலாகாவுக்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

அக்கொடிய இருமலை நிறுத்த
பெப்ஸ் உபயோகியுங்கள்

இருமல், ஜலதோஷம், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இன்ப்ளுயன்ஸா, மற்றும் இதர தொண்டை, மார்பு உபாதைகள், ஹிருதயத்தையும், சுவாசப்பைகளையும் அபாயத்திற்குள்ளாக்குகின்றன. இவற்றிற்கு பெப்ஸ் உட்கொண்டு உடனே நிவாரணம் பெறுங்கள். பெப்ஸிலுள்ள குணமளிக்கும் மருந்து சத்துகள் இருமலை நிறுத்தி, ரணத்தை ஆற்றுகின்றன. மேலும் இவைகள் எரிச்சலுக்கு ஹிதமளிப்பதுடன், தீங்கிழைக்கும் கிருமிகளை நாசம் செய்கின்றன. குழந்தைகளும் வயோதிகர்களும் உபயோகிக்கலாம். தீங்கு விளைவிக்கும் மருந்துகள் இதில் இல்லை.

PEPS

பெப்ஸ் தொண்டை, மார்பு உபாதைகளுக்கு சமனமூட்டும் வில்லைகள்.

FPY-39-TAM

ஸோல் ஏஜண்டுகள்: தாதா & கா.
86, நைனியப்ப நாயகன் தெரு, சென்னை-3.

★

தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுகா கண்டரமாணிக்கம் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமிக்கு ஏப்ரல் 19-ந் தேதி முதல் பத்து தினங்கள் ஸ்ரீராம நவமி உத்ஸவம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

★

அவர்கள் அறிந்த நாளாக தாத்தா ஒரு தாத்தாதான். நரைத்த மயிர். அமைதியான தோற்றம். ஆனால் கண்களில் மட்டும் மினுமினுக்கும் ஒரு ஒளி. வீட்டில் எல்லோருக்கும் வேலை. ஆகையால் குழந்தைகளுடன் விளையாட தாத்தாதான். அவர்தான் அவர்களுடைய முதல் தோழன். பிரதி தினமும் தூங்கு முன் கதை சொல்லுவார். கதையென்றால் சாதாரண பாட்டிக் கதையா? இல்லை. ராமாயண, மகா பாரதக் கதைகளா? இல்லை. இவை புதுக்கதைகள். பயமாக இருக்கும். அற்புதமாக இருக்கும். சில சமயங்களில் புரியவே புரியாது. கதைகளுக்கு இறுதியில் ஒரு நீதி கூட இராது. குழந்தைகளுக்கு இக்கதைகளைக் கேட்பதில் குதூகலமே கிடையாது. ஆனால் அந்தக் கதைகளைக் கேட்காமல் இருக்கவும் முடியாது. கிரன் மட்டும் கதையில் தன்னையே மறந்து "இன்னொண்ணு தாத்தா" என்று கேட்பான். அவனுக்குத்தான் அந்தக் கதைகள் பிடித்திருந்தன. அவன் அண்ணன்மார் மூவரும் பயம் தாங்க முடியாமல் காதை இறுகப் பொத்திக் கொண்டு மறு பக்கம் திரும்பிப் படுத்துத் தூங்கிவிடுவார்கள். கிரன் தாத்தாவின் செல்லப் பேரன் என்றும் சொல்ல முடியாது. இன்னும் பார்க்கப்போனால், மீதி மூன்று பேர் மீதும்தான் அவர் கவனமெல்லாம் சென்றது. சிரத்தையாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார். உடைகள் போட்டு விடுவார். அன்பாகப் பார்த்துக் கொள்வார். அவர்களும் நல்ல பிள்ளைகளாக வளர்ந்து வந்தார்கள். கிரன் அப்படியில்லை. படிக்கவே மாட்டான். ஒட்டாச்சிணுங்கியும் கூட. அவனுக்கு சிநேகிதர்களே கிடையாது. தாத்தாவும் அவனைப் பற்றிக் கவலைப்படுவதாகவே தோன்றவில்லை.

ஒரு நாள் அதிகாலையில் ஒரு மரத்தின் நிழலில் தனியாகப் படுத்து தனக்குத் தானாகவே ஏதோ பேசிக்கொண்டிருந்தான் கிரன். மரத்தின் கிளை ஒன்று பக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றில் தொங்கித் தண்ணீருடன் விளையாடிக்கொண்டிருந்தது.

"கிரன்"—என்று கூப்பிட்டார் தாத்தா, அருகே வந்து. "இங்கே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?"

"இந்த ஆற்றோடு பேசிக்கொண்டிருந்தேன் தாத்தா" என்றான் கிரன், நிதானமாக. "என்னென்னமோ சொல்கிறது, தாத்தா, இந்த ஆறு. இப்போ என்ன சொல்லிக்கொண்டு போகிறது தெரியுமா? முட்டாள், முட்டாள், முட்டாள்..."

தாத்தாவுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக்கொண்டு கேட்டார், "ஏன் உன்னை முட்டாள் என்கிறது?"

"ஏன்னா, நான் இங்கே வீணாக் காலத்தைப் போக்கிக்கொண்டிருக்கேன், சோம்பேறியா. பள்ளிக்கூடத்துப் பாடமெல்லாம் இருக்கு படிக்க. . . தாத்தா, நான் சொல்லலியே, நேத்திக்கி வாத்தியார் என்னை அடிச்சார்.... இந்தப் பாடங்களே எனக்குப் பிடிக்கல்லே.. தாத்தா வாயேன்! அதோ மாத்து.. அவன் படகுலே ஏறிண்டு நாம் போய்விட்டு வரலாம்".

படகிலேறிச் சென்றார்கள், தாத்தாவும் பேரனும். மாத்து படகை ஓட்டிச் சென்றான். தாத்தாவும் பேரனும் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். அவரவர் எண்ணம் அவரவர் மனதில்.

தலைமுறை தலைமுறையாக அவர்கள் விவசாயிகள். தாத்தா தமது உடலில் பலமிருந்தவரை நிலத்தில் உழைத்தவர். ஆனால் அவர் மகன் தன் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லி வைத்தான். "காலம் மாறி வருகிறது. நாமும் கூடவே மாற வேண்டும்" என்றான். தாத்தாவுக்கு இது பிடிக்கவில்லை. வேண்டாம் என்றார். தகப்பனுக்கும் பிள்ளைக்கும் வாக்குவாதம் பலத்தது. இருவரும் வாயில் வந்தபடி பேசி விட்டனர். திடீரென்று ஒரு நாள் பெரியவர் "சரி, அவர்கள் பள்ளிக்குப் போகட்டும், படிக்கட்டும்" என்றார். அதற்குப் பிறகு,அவர் எதிர்பார்க்கவே இல்லை. தன் மகன் இறந்த பிறகும் முன்போலவே எல்லாம் நடந்துவரச் செய்தார்.

பத்து வருஷங்கள் சென்றன.

முன்னி, சரண், அருண் மூன்று பேரும் சர்க்கார் உதவிச் சம்பளம் பெற்றுப் படித்தனர். பள்ளிக்கூடத்துப் படிப்பு முடிந்ததும், குமாஸ்தா வேலைகள் சம்பாதித்துக்கொண்டனர். அவர்கள் மூவரும் நல்ல பிள்ளைகள். கஷ்டப்பட்டு வேலை செய்பவர்கள். சோம்பித் திரிய மாட்டார்கள். மனக்குழப்பமின்றி வீண் ஆசைகள் இல்லாமல் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர்.

கிரனைப்பற்றித்தான் எல்லோருக்கும் கவலை; தாத்தாவைத் தவிர. பயமறியா இளங்கன்று. மகா புத்திசாலி, ஆனால் சோம்பேறி. யார் சொன்னதையும் கேட்க மாட்டான். முரண்டு. பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும், "கல்லூரியில் சேர வேண்டும்" என்றான்.

"கல்லூரிக்கா?" முன்னி கேட்டான். "எதற்கு? நாங்கள் கல்லூரிக்குப் போனோமா?"

"நான் போகப் போகிறேன்" என்றான் கிரன், தன் வழக்கமான முரட்டுக் குரலில். "நாள் முழுவதும் கண்ணை மூடிக் கொண்டு பேனாவும் கையுமாய் ஒரு ஆபீஸில் உட்கார்ந்திருக்க நான் தயாராக இல்லை. கண்ணைத் திறந்து சுற்றிப் பார்த்து வாழ விரும்புகிறேன்".

எல்லாருமாக தாத்தாவிடம் சென்றனர். மூத்தவன் முன்னி சொன்னான்: "தாத்தா பட்டணத்திற்குப் போனால் இவனை கையில் பிடிக்க முடியாது. மூன்றே நாளில் நம் குடும்பத்துப் பெயரை ஊர் சிரிக்க வைத்துவிடுவான்".

முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு மூலையில் உட்கார்ந்திருந்தான் கிரன். தாத்தா சாந்தமாகக் கேட்டார்: "கிரன், நீ ஏன் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்கிறாய்?"

"நான்தான் முன்னியிடம் ஏற்கெனவே சொல்லியாகிவிட்டதே. எனக்கு வெளியே போக வேண்டும். உலகத்தைப் பார்க்க வேண்டும். தாத்தா, நான் சொன்னால் சிரிக்காதே. நான் வாழ விரும்புகிறேன்". சுற்றிப் பார்த்தான். முன்னி, சரண், அருண்—ஒருவருக்கும் அவன் சொல்வதன் அர்த்தம் புரிந்ததாகத் தெரியவில்லை. "உங்களுக்குப் புரியாது. நான் உங்களைப்போல் இல்லை. ஏனோ எனக்கே தெரியவில்லை... சாப்பிடுவதும், உறங்குவதும், சம்பாதிப்பதும், மணப்பதும், குழந்தைகள் பெறுவதும்—இவ்வளவுதானா வாழ்க்கை. இதற்கெல்லாம் மேல், ஏதாவது இருக்க வேண்டும். அது என்னவென்று கேட்காதீர்கள். எனக்குத் தெரியாது. ஆனால் நான் அறிய விரும்புகிறேன்." தாத்தாவைத் திரும்பிப் பார்த்தான் கிரன். "தாத்தா, நீ சொல் இவர்களுக்கு. உனக்குப் புரிகிறது நான் பேசுவது. மனமேது? உடலேது? நமக்கேன் அன்பு வேண்டும்? ஏன் காதல்? சோற்றைவிட மது பெரிதா? சாந்திக்கும் உறக்கத்திற்கும் என்ன

வித்யாசம்? சந்தோஷமென்றால்? இதற்கெல்லாம் உனக்கு விடை தெரியுமா? இன்னும் ஆயிரமாயிரம் வினாக்கள் என் மனதில் குதித்துக் கும்மாளமடிக்கின்றன. எனக்குத் தலை நோகிறது. புதிர் புரியவில்லை. அறிந்தவரை நான் அறிய வேண்டும். எனக்கு அனுபவம் வேண்டும்." பேச முடியாமல் திணறினான். கையை விரித்து "அவ்வளவுதான்" என்று சொல்லிவிட்டுப் பிடிவாதமாக மௌனம் சாதித்தான்.

"அவன் சொல்வது சரியாகத்தானே தோன்றுகிறது" என்றார் தாத்தா.

முன்னிக்குத் தாக்கி வாரிப் போட்டது. "தாத்தா, உனக்கும் பைத்தியம் பிடித்து விட்டதா? நாங்கள் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்றாயே, மறந்துவிட்டதா? கிராமத்திலேயே இருக்க வேண்டும். நம் நிலம், நம் தெய்வம், நம் வாழ்வு—அதைவிட்டுப் போகக் கூடாது என்றெல்லாம் சொன்னாயே? வயலில் வேலை செய்தால்தான் நமக்கு மோட்சம் என்றாயே... கிரன் கல்லூரிக்குப்போனால் திரும்பி இங்கு வருவான் என்று நினைக்கிறாயா? மாட்டவே மாட்டான். எங்கள் எல்லோரையும்விட இந்த கிராமத்தையும், நம் நிலத்தையும் விட்டுப் பிரிந்துவிடுவான்".

"அவன் திரும்பி வருவான்".

"தாத்தா, நான் இப்பவே சொல்லி விடுகிறேன். திரும்பி வருவதாக எனக்கு உத்தேசமில்லை", என்றான் கிரன். "எனக்கு நிலத்தில் வேலை செய்வதென்றால் குமட்டிக்கொண்டு வருகிறது. அது உனக்கே தெரியும் தாத்தா. எனக்கு இந்தக் கத்தரிக்காய் வாழ்க்கை வேண்டாம். இதைவிட்டு வெளியே சென்று... ஓ! பேசிப் பேசி என்ன பிரயோஜனம். ஏதாவது செய்ய வேண்டாமா, மனிதனாகப் பிறந்தவன்? உழுவதும் விதைப்பதும், அறுப்பதும்தானா வாழ்க்கையின் இலட்சியம்." தாத்தாவின் கையை எடுத்து தன் கண்களில் ஒற்றிக்கொண்டான் கிரன். "தாத்தா, இதெல்லாம் உனக்கு ரொம்ப கஷ்டமாகத்தான் இருக்கும். எனக்குத் தெரியவில்லையா? ஆனால் நான் வேறு, நீ வேறு. உன் மனம் இங்கு உன்னை இறுகப் பிடித்து வைத்திருக்கிறது. ஆனால் என் மனம் என்னை அதோ அங்கு அழைக்கிறது. புரிந்துகொள்ளப் பார்!"

கொஞ்ச நேரம் ஒருவரும் பேசவில்லை. அருவருப்பான நிசப்தம் நிலவியது.

"கிரன் கல்லூரிக்குப் போகப் போகிறான்" என்றார் தாத்தா கடைசியில். "நான் அனுப்பப் போகிறேன் அவனை. இதைப்பற்றி இனிமேல் ஒருவரும் பேச வேண்டாம்".

கிரன் பட்டணம் சென்றான். உலகில் கலந்தான். பலரைப் பார்த்தான். சிநேகிதர்கள் சம்பாதித்துக்கொண்டான். பணத்தை வாரி இறைத்தான். சிகரெட், சினிமா; சூதாடக் கற்றுக்கொண்டான்.

ஒரு நாள் இரவு சாப்பாட்டிற்குப் பிறகு முன்னி சொன்னான்: "தாத்தா, பிருதுவி எழுதியிருக்கிறான். கிரன் நன்றாக சூட்டாடுகிறானாம்."

"ஆமாம். கிரனும் எழுதியிருந்தான்" என்றார் தாத்தா சாத்வீகமாக.

"இதோ இருக்கிறது அவன் கடிதம், கேள். கெட்ட செய்தி காலால் நடந்து வராது. காற்றில் பறந்து வரும். யாராவது எழுதியிருப்பார்கள். உனக்குத் தெரிந்திருக்கும். இரண்டு நாட்களுக்கு முன் நான் சூட்டாட்டத்தில் முப்பது ரூபாய்க்கு மேல் தோற்றுவிட்டேன். தாத்தா, நீ கவனித்திருக்கிறாயா? சூதாடும்பொழுது நமக்கு ஒரு உத்சாகம் பிறக்கிறது. மனதில் ஒரு குதூகலம் ஊறுகிறது. சதா தூங்கிக்கொண்டு வாழ்கிறோமே, இதற்கு ஏற்ற மாற்று சூதாட்டம்.. எனக்கு வெட்கமாக இல்லை."

"கேட்டாயா முன்னி? கிரன் முன்னுக்கு வந்துவிடுவான். அனுபவம் அடைந்து வருகிறான். நல்ல புத்திசாலி." கிழவர் முகத்தில் புன்சிரிப்பொன்று வந்து சென்றது. அவர் பேரன்கள் மூவரும் திகைத்துப்போயினர். தாத்தாவுக்கு நிச்சயம் பைத்தியம்தான் பிடித்துவிட்டதென்று மனத்திற்குள் நினைத்துக்கொண்டு சும்மாயிருந்தனர்.

கிரன் மென்மேலும் அனுபவ பக்குவமடைந்து வந்தான்.... குடித்தான்... பிறகு. ...."தாத்தா, இப்பத்தான் நான் அவள் வீட்டிலிருந்து வருகிறேன். பசித்தால் சாப்பிடுகிறோம். தாகமெடுத்தால் தண்ணீர் கொள்கிறோம். ஏன் தாத்தா இதை மட்டும் மிருக இச்சை என்கிறார்கள்...அது என்ன இச்சையாக இருந்தாலும், அதில் இருப்பதாகச் சொல்லப்படும் இன்பம் வீண் பேச்சு. உலகமே இதை மட்டும் ஏன் மிகைப்படுத்திச் சொல்ல வேண்டும். இது வெறும் தன்னைமாற்றமா?—அல்லது அவர்கள் எதிர்பார்த்தது அவ்வளவுதானா? இன்றைய அனுபவத்திலிருந்து எனக்கு இது தெரியவந்தது. தேக சுகமென்பது பொய். தேகமும் மனமும் ஒன்றாக இன்புற்றால்தான் சுகம். மனமின்றி

உடல் மட்டும் திருப்தியடைய முடியாது... ஆனால் நான் செய்தது தவறென்றோ, பாபமென்றோ எனக்குத் தோன்றவில்லை. இதைப் பற்றித் தெரிந்துகொண்டதில் எனக்கு சந்தோஷம்தான். 'இந்த வழியே மீண்டும் நான் செல்லமாட்டேன், இந்த அல்ப இன்பத்தை நான் மறுபடியும் நாடமாட்டேன்' என்று உறுதி கூறவும் முடியாது என்னால். முட்டாள்களும், கிழவர்களும்தான் எதைப்பற்றியும் உறுதி கூற முடியும். நான் இரண்டுமல்ல."

கிழவர் மெள்ள நகைத்தார். 'தன்னையே கண்டு, தன் இச்சைகளையே கண்டு பயப்படும் மஹானாயிருப்பதை விட, தன்னையறிந்த பாபியாய் இருப்பதே மேல்' என்று நினைத்துக்கொண்டார்.

பிறகு இரண்டு வருஷங்களுக்கு கிரனிடமிருந்து ஒரு தகவலுமே இல்லை. வதந்திகள் மட்டும் வந்துகொண்டே இருந்தன. கெட்டலைந்தான் கிரன். தாத்தாவும் சொல்லிக்கொண்டே இருந்தார், "அவன் கட்டாயம் திரும்பி வருவான்" என்று. அவர் மனதில் சந்தேகமே இல்லை. சஞ்சலமும் இல்லை.

இதற்குப் பின் இரண்டு மாதங்களில் கிரன் வரத்தான் செய்தான். அண்ணன்மார் மூவரும் மௌனக்கோபத்துடன் வரவேற்றனர். அவர்களை அவன் லக்ஷ்யமே செய்யவில்லை. இரவு எல்லோரும் படுத்து உறங்கின பிறகு கிரன் தன் அறையில் தனியே படுத்திருந்தான். ஜன்னல் வழியாக மெல்லிய நிலா அறைக்குள் விளக்கேற்றியது. கிழவர் வந்தார். நகர்ந்துகொண்டு இடங்கொடுத்தான் கிரன். வெகுநேரம் இருவரும் பேசவில்லை. பிறகு பேச ஆரம்பித்தான். கிரன், "பிரயோஜனமில்லை தாத்தா. நானும் எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தேன். எங்கெல்லாம்! எவ்வளவு காலம்! எனக்கு திருப்தி என்னவோ கிட்டவில்லை. இன்னும், எனக்கு என்ன வேண்டுமென்றே தெரியவில்லை... என் அதிருப்தியை

தேன். உலகத்தார் துர்ப்பழக்கங்கள் என்பனவெல்லாம் கூட எனக்குப் பயனளிக்கவில்லை. சூதாடினால் வெறியேறும், மனம் திருப்தியடையும் என்றார்கள். சூதாடிப் பார்த்தேன். முதலிரண்டு தரம் கொஞ்சம் உற்சாகமாகத்தான் இருந்தது. பிறகு அருவருப்புத்தான். மதுபோதையில் உலகமே மாயவாணம் தீட்டிய அற்புத சித்திரமாகத் தோற்றமளிக்கும். நம்மை மறந்து இன்பத்தில் திளைக்கலாம் என்கிறார்கள். அம்மாதிரி திளைப்பது தான் போதை மாயம். வெறும் தன்னைமாற்றம். குடித்தவனுக்குக் கிடைப்பது மறுநாள் காலை தலைவலி. பெண்? உடல் அயர்ந்து தூங்கினேன். மனத்திற்குத் திருப்தியில்லை."

"இன்னம் உன் மனத்திற்கு நிம்மதி வரவில்லையா? இன்னும் உலகத்தில் சென்று ஏதாவது செய்ய வேண்டுமென்ற அவா இருக்கிறதா உனக்கு?"

"ஆமாம், தாத்தா. அந்த அவா தீயாக என்னைத் தகிக்கிறது. எவ்வளவோ செய்ய முடியும் என்றால். அது எனக்குத் தெரிகிறது. ஆனால் ஒரு சுவர் குறுக்கே நிற்கிறது. கதவைக் கண்டுபிடித்து இந்தச் சுவரைத் தாண்டவேண்டும், எனக்கு வேண்டியதை அடைய."

"கிரன், உலகத்திலேயே இரண்டு தான் நிஜம். அன்பு, அறிவு. அவைகளைத் தப்ப முடியாது."

"அவை தருமா எனக்கு சந்தோஷம்?"

"சந்தோஷம் நமக்குள் இருக்கிறது, கிரன். அது வெளி சுகங்களிலிருந்து வருவதில்லை."

"புத்தகம் மாதிரி பேசுகிறாய், தாத்தா. எனக்குள் என்ன இருக்கிறது, நான் சந்தோஷமாக இருக்க? என் இலட்சியங்கள்தான், எட்டாத தூரத்திலிருந்து என்னைத் துன்புறுத்துகின்றன. இயற்கைக்கும் இலட்சியத்திற்கும் நடுவே பாலம் கட்ட முயலுவது முடியாத காரியம். வெறும் வேதாந்த மோசடி".

"கிரன், விதியை மாற்றியமைப்பது மனிதன் வேலையல்ல."

"விதியாவது, வேப்பங்காயாவது. எனக்கு விதியில் நம்பிக்கையில்லை. நான்தான் என் விதி. தாத்தா, எனக்கு மட்டும் என்ன வேண்டுமென்று தெரிந்தால், நான் போய் அதை பிடித்தெடுத்துக் கொள்வேன், விதியானாலும் சரி, விதி இல்லாவிட்டாலும் சரி. நான் செய்து பார்ப்பதெல்லாம் ஏனோ தப்பா முடிகிறது".

மார்பால் தவழ்ந்து நீந்தி முன்வர முயலும் குழந்தை பின்னே செல்வதை தாய் பார்த்து சிரிப்பதைப்போல் புன்னகை புரிந்தார் கிழவர்.

"இருப்பவருக்கு இயலாதது இறந்தவருக்கு முடியலாம். படித்துப் பார்" என்று சொல்லி எழுந்து சென்றார்.

கிரன் படித்தான்... இன்னும் படித்தான்...படித்துக்கொண்டே போனான். பிசாசு பிடித்தவன்போல் மூன்று வருஷங்கள் ஓயாமல் படித்தான். அவன் அறை நிறைய புத்தகங்கள். கிழவர் அறையும் நிறைந்துவிட்டது. எங்கு பார்த்தாலும் புத்தகங்கள்தான். வேதாந்த சரித்திரம், இலக்கியம் என்னென்னவோ புத்தகங்கள். இன்னும் வாங்கிக் கொண்டே போனான். கிரனின் முன் கோபம் போய்விட்டது. பேச்சும் குறைந்துவிட்டது. இரா வேளையில் தனியாக வெகுதூரம் தன்னை மறந்து எங்கெங்கோ சென்றலைவான். முன்னி தாத்தாவிடம் சொன்னான்: "நீங்கள் இருவரும் என்ன பாஷையில் பேசிக்கொள்கிறீர்களோ, எனக்குத் தெரியாது. இந்த மாதிரி படித்தால், பைத்தியம்தான் பிடிக்கும். நீ சொல்லு தாத்தா அவனுக்கு. அவன் உடலும் வாழ்க்கையும் நாசமாகி வருகின்றன... இதனால் அவனுக்கு என்ன பயனோ, அது பகவானுக்கே வெளிச்சம். கிரன் இன்னும் குழந்தையா? வயசு இருபத்தாறு ஆகிறது. ஒரு வேலையில் இருக்க வேண்டாமா?"

"அவன் வேலையாய்த்தான் இருக்கிறான். சும்மா இல்லையே" என்றார் தாத்தா.

திடீரென்று ஒரு நாள் கிரன் புறப்பட்டு பட்டணத்திற்குச் சென்றான். அண்ணன்மார் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். திரும்பிப் போய்விட்டான், அவன் விளையாடல்களைத் தொடர்ந்து நடத்த!"—என்றனர். ஆனால் பத்து நாட்களுக்கெல்லாம் கிரன் திரும்பிவந்தான், பட்டாள உடை தரித்து. நேராகத் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த கிழவரிடம் சென்றான். "தாத்தா, நான் ராணுவத்தில் சேர்ந்துவிட்டேன்".

கிழவர் பேசவில்லை. நிதானமாக கிரனை நோக்கினார். அவன் மேலும் சொல்லப் போவதைக் கேட்கக் காத்திருந்தார்.

"நீ சொன்னபடி படித்தேன். எவ்வளவோ அறிந்துகொண்டேன். ஆனால், வில்லை. நான் அறிந்துகொண்டதை பரீட்சித்துப் பார்க்கப் போகிறேன். நம் வாழ்க்கை இயற்கையைவிட்டு மிகவும் விலகிவிட்டது. செயற்கை வாழ்க்கை வாழ்கிறோம். இதனால்தான், மனிதன் நிஜமாக என்ன நினைக்கிறான், எப்பேர்ப்பட்டவன், கடவுள் மனிதனை ஏன் சிருஷ்டித்தார்—ஒன்றையும் கண்டு கொள்ள முடியவில்லை. போர்க்களத்தில் எமனை நோக்கி நிற்கும்போது, சாவின் முன்னிலையில் வாழும்போது, இந்த செயற்கைக் கோலம் உதிர்ந்துவிடலாம். மனிதன் தன் இயற்கை வடிவில், சுயரூபத்தில் விளங்கலாம். அங்கு மனிதன் எப்படி இருக்கிறான் என்று பார்க்கப் போகிறேன். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? சந்தோஷத்தை அனுபவிக்க நமக்கிருக்கும் சக்தியை நாகரிகம் விழுங்கிவிட்டதா என்ற கேள்விக்கு விடை தேடிச் செல்கிறேன். தாத்தா, மீதிப்பேர் யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். உனக்குப் புரிகிறதா தாத்தா என் மனது?"

"நன்றாய் புரிகிறது, கிரன். போய்வா" என்றார் கிழவர். நெஞ்சில் ஏதோ அடைத்துக்கொண்டது.

கிரன் அன்றிரவே புறப்பட்டுச் சென்றான்.

முன்னி சீறி விழுந்தாள், தன் தாத்தாவின் மீது. "உன் விநோத எண்ணங்களுக்கெல்லாம் கிரன் பலி. சாகத்தான் போகிறான்."

"அவன் கட்டாயம் திரும்பி வருவான்". என்றார் கிழவர் கோபிக்காமல்.

ஒரு வருஷத்திற்குப் பின், கிரன் திரும்பி வந்தான் காலில் அடிபட்டு. வடக்கே ராணுவ ஆஸ்பத்திரி ஒன்றில்

கொஞ்ச காலம் இருந்து, குணமடைந்த பிறகு வீடு வந்து சேர்ந்தான். சரியாக நடக்க முடியவில்லை. ஒரு காலை இழுத்து இழுத்துத்தான் நடந்தான். அவன் முகத்திலும் சோர்வு தோன்றியிருந்தது. தலை மயிர் நரைக்க ஆரம்பித்திருந்தது. கிரனுக்கு அப்பொழுது வயது 28.

வந்து ஒரு வாரத்திற்குப் பிறகு, ஒரு நாள் மாலை கிழவரிடம் சென்றான். அவர் காலடியில் உட்கார்ந்தான். கிழவர் அன்பாக அவன் தலை மயிரைத் தடவிக் கொடுத்தார்.

"உனக்குத் தலை நரைக்கிறது கிரன்! வயசு என்னாகிறது உனக்கு?"

"28 ஆகப்போகிறது. இன்னும் கிழவனில்லை."

"எனக்கு 85 ஆகிறது. என் மனம் பால்யமாகவே தோன்றுகிறது."

"தாத்தா, எனக்கு உன்னைவிட பத்து வயது ஆனாற்போல் இருக்கிறது. எவ்வளவு களைப்பாய் இருக்கிறது, தெரியுமா? அப்பா . . . 28 வருஷங்கள் பிடித்தது எனக்குப் புத்தி வர; நிஜத்தை அறிந்துகொள்ள."

"நிஜமென்ன, கிரன்?"

"சூன்யம் . . . தாத்தா, சூன்யம்! ஒன்றும் நிஜமல்ல. அதுதான் நிஜம். உலகத்திற்கு ஒரு அர்த்தமுண்டு என்று நினைத்து, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்; அவ்வளவுதான். அர்த்தமேயில்லை. நிஜத்தை மறைக்க ஒரு திரை. அந்தத் திரை அழகான திரை. நான் சொன்னேனே, அந்த மாயவர்ணம் தீட்டிய அற்புதச் சித்திரம் அமைந்த திரை. இதைக் கண்டு மனிதன் மயங்கிவிடுகிறான். திரைக்குப் பின் என்னவோ இருக்கிறதென்று நம்புகிறான். திரையைக் கிழித்தெறிந்தால், அந்தகாரம், சலிப்பு, சூன்யம்."

"கிரன், உன் மனம் கசந்துவிட்டது, திரிந்துபோன பால் மாதிரி. அது தப்பு."

"இல்லை, தாத்தா. உயிர் ஒரு அற்புதம், கடவுள் அளித்த பரிசு என்று சொல்வது தவறு என்று நான் அறிந்து கொண்டுவிட்டேன். மரணம்தான் அற்புதம், பரிசு...உயிரல்ல; மரணம், விடுதலை. அதற்குப் பின் சுதந்திரம். சந்தோஷம். உயிர் அர்த்தமற்றது, பயனற்றது, அல்பமானது. மரணத்தை நான் பார்த்தேன். என் சகாக்கள் எத்தனையோ ஆயிரம் பேர் சாவதைக் கண்டேன். சாகும் தருவாயில், அவர்களது முகங்களில் நான் கண்டது பயமில்லை, துக்கமில்லை, அதிருப்தியில்லை—நான் கண்டது இனிய இன்பம், பரிமளிக்கும் அமைதி."



"அப்படியானால், கிரன், உனக்கு உயிர் வேண்டாமா? மரணம்தான் வேண்டுமா?"

"இல்லை. இல்லவே இல்லை. எனக்கு உயிர்தான் வேண்டும். நான் வாழவே விரும்புகிறேன். ஆனால், கனவுகளின்றி, கர்வமின்றி, சந்தேகமில்லாமல், பயமில்லாமல், இச்சையில்லாமல் வாழ விரும்புகிறேன். இருப்பதை இருக்குமாறு பார்த்து, செயற்கைக் கோலமில்லாமல், அவைகளின் நிஜ ரூபத்தில் பார்த்து.... தாத்தா, எனக்கு விளக்கிச் சொல்லத் தெரியவில்லை. ஆனால், அன்று எனக்குள் ஏதோ நேர்ந்தது மட்டும் நிச்சயம். மாலை அஸ்தமன நேரம். எங்கள் எங்கள் இடத்தில் நின்றுகொண்டிருந்தோம். போர்க்களத்தில் குழிகளில் காத்திருந்தோம், மேல் அதிகாரியின் இறுதி உத்தரவிற்காக. எங்கும் நிசப்தம்... தாத்தா, அன்று அங்கு போர்க்களத்தில் அமைதி நிலவியிருந்தது. துப்பாக்கியும் கையுமாய், என்போன்ற பலரைச் சுட்டுக் கொல்ல ஆயத்தமாய்க் காத்திருந்த சமயம், போர்க்களத்தில் அந்த நிசப்தத்தில் எங்கும் பரவியுள்ள ஒரு மோனத் திருவுருவைஉணர்ந்தேன். இதுவா கடவுள்—ஆண்டவன்? காணவில்லை, கேட்கவில்லை; என் உள்ளத்தில் உணர்ந்தேன்; என் உணர்ச்சிகள் அந்த நம்பிக்கையை ஒப்புக்கொண்டன. சற்று நேரத்திற்கெல்லாம் . . . ."

"என்ன, கிரன்?"

"உத்தரவு பிறந்தது, போர் துவங்கிற்று. என்ன கோர சப்தம்? பீரங்கிகள் இடித்தன. துப்பாக்கிகள் குலைத்தன. ஊடே ஊடே கூக்குரல்கள். மயிர் சிலிர்த்தது. அதை என்னால் மறக்கவே முடியாது. ஒரு நிமிஷத்தில் அந்த சாத்வீகக் காட்சி மாயமாய் மறைந்தது. நீல வானமும், பச்சைப்பசும் புல்தரையும் அவ்வழகான நிலத் தோற்றமும் எங்கோ போய் ஒளிந்துகொண்டன. அந்தச் சந்தடியில் உலகமே மனிதனைப் பார்த்துப் பரிகசிப்பதுபோல் இருந்தது. என்ன பயங்கர சிரிப்பு! என் தலை சுற்றிற்று. அப்பொழுதுதான் காயம் பட்டிருக்க வேண்டும் எனக்கு. ஆனால், எனக்கு நோவே தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் ரத்தம்." அந்த நினைவு கிரன் உடலை உலுக்கிற்று. மீண்டும் பேசினான்: "தலை சுற்றிற்று. நிலை தவறித் தத்தளித்தேன். புலன்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த பயங்கரக் கனவிலிருந்து தப்ப வழியில்லை? எது நிஜம்? எதைப் பிடித்துக்கொண்டு கரையேறலாம்? எது சாச்வதம், இந்தப் போகும் உலகில்? வாயைவிட்டு அலறலாமா என்றிருந்தது. அப்பொழுதுதான் கண்டேன்..."

"என்ன கண்டாய், கிரன்?" கிழவர் குரலில் அவசரம் தொனித்தது. "என்ன பார்த்தாய்?"

"மண், தாத்தா, மண்! நிலத்து மண்! பூதேவி! செயற்கைக் குவியலுக்கிடையே ஒரு இயற்கைக் கோயில். நிலம்தான் சாச்வதம். மீதியெல்லாம் நீர்மேல்குமிழி. நிலம்தான் நிஜம். மீதியெல்லாம் பொய். நோயின் பாதையில் தாயின் மார்பில் ஆறுதல் தேடும் சேய்போல, நிலத்தில் சாய்ந்தேன். அமைதி, திருப்தி கிட்டியது. திரை விலகிற்று. உண்மையைக் கண்டேன். கண் கூசவில்லை. அதற்குப் பிறகு, அந்தப் போரும், மக்கள் இறப்பதும், அவர்கள் அழுகையும் நோவும், பொய்யாகத் தோன்றிற்று எனக்கு. அவை என்னைப் பாதிக்கவில்லை. பொம்மைகள் ஆடி விளையாடி விழுந்து உடைவதுபோல இருந்தது."

கிழவர் ஒன்றுமே சொல்லவில்லை. சும்மாவிருந்தார். சில நிமிஷங்களுக்குப் பிறகு கிரன், கிழவர் கையை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டு, மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"என் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைத்துவிட்டது, தாத்தா. எனக்கு என்ன வேண்டுமென்று அறிந்துகொண்டேன். எனக்கு இந்த நிலம் வேண்டும். நான் நிலத்து மண். நிலத்தில்தான் எனக்கு அமைதியுண்டு. அதுவே எனக்குத் திருப்தியளிக்கும். என் கையால் வேலை செய்யப்போகிறேன், என் வயலில். நிலத்தை உழுது, விதை விதைத்து, சாகுபடி செய்து, நிலம் தரும் உணவை உண்ண வேண்டும். இந்த மண்தான் எனக்கு வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும். . . . பயமின்றி, எளிமையுடன், சந்தோஷமாக!"

கிழவருக்குப் பேச வாய் வரவில்லை. பேரனை அழைத்து அணைத்துக்கொண்டார். வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது அவருடைய ஆனந்தம்.

ஸ்ரீமதி சாந்தா ரங்காச்சாரி ஆங்கிலத்தில் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பு இது. 1946-ல் பிரசுரமாகியது.



அம்மா

ஆர். சூடாமணி

மாலை ஆறரை மணி இருக்கும். சைனா பஜாரில் ஒரு பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காக நான் காத்து நின்றுகொண்டிருந்தேன். பஸ் வரும் வரை மனத்தைக் கவர அங்கே எவ்வளவு காட்சிகள், கலகலப்பு! எனக்குப் பின்னால் வரிசையாய்க் கடைகள். அவைகளினருகிலும், நடைபாதையிலும், தெருவிலும் என்ன ஜனக் கூட்டம், எவ்வளவு விதமான இரைச்சல்கள்! சிறிய வியாபாரிகளும், பிச்சைக்காரர்களும், போவோர் வருவோரை முற்றுகையிட்டனர். அப்பப்பா, என்ன கூச்சல்! கடைகளில் ஒரே மும்முரம், பண்டிகைத் தினம் மாதிரி. இந்த இடத்தில் தினமும் அந்த நேரத்தில் உற்சவம் போலத்தான் ஜனத்திரளும் சப்தங்களும்.

பஸ் இன்னும் வரவில்லை. நான் என் முகத்தை இடது பக்கமாய்த் திருப்பினேன். அந்தப் பக்கம் நடைபாதையை அடுத்து மோட்டார்கள் வரிசையாய் நின்றுகொண்டிருந்தன.

எனக்குச் சமீபத்திலிருந்த மோட்டார் மீது என் பார்வை நிலைத்தது. அதில் ஒரு இளம் பெண் அமர்ந்திருந்தாள்.

அவளுக்கு வயது பதினேழு அல்லது பதினெட்டுதான் இருக்கும். நாகரிகமான வெள்ளை சில்க் புடவை அணிந்து, தலைமயிரை ஒய்யாரமாகத் தூக்கிக் கட்டியிருந்தாள். ஒரு மல்லிகைச் சரம் அந்த மயிரில் அதன் கருமையை அழகாக எடுத்துக்காட்டி மிளிர்ந்தது.

அந்த மோட்டார் ஒரு துணிக்கடையின் எதிரே இருந்தது. வண்டியிலிருந்து யாரோ துணி வாங்க உள்ளே சென்றிருக்க வேண்டும். இவள் இறங்காமல் காரிலேயே உட்கார்ந்திருக்கிறாள். துணிக் கடைக்குள் சென்று பார்வையிட இஷ்டமில்லாத பெண்கூட உண்டா? இதோ இவளைத்தான் பார்க்கிறேன்!

அது மட்டுமல்ல. அவள் பார்வை மனிதர்கள் மீதும் செல்லவில்லை. கீழ்நோக்கிய பார்வையுடன் வலது கைவிரல்களை நாசூக்காய் முன்தலையில் பதித்தவாறு அசையாமல் உட்கார்ந்திருந்தாள். அழகிதான். உட்கார்ந்திருந்த தினுசும் ரம்மியமாக ஒரு சித்திரப் பாவையை நினைவுறுத்துவதாயிருந்தது. நானும் அந்த பாவத்துடனேயே அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தெருவில் யாராவது "கிழத்துக்கு சபலத்தைப் பார்!" என்று விமர்சனம் செய்திருக்கலாம். ஆயினும் நான் ஐம்பது வயதுள்ள ஒரு யோக்கியமான கிருஹஸ்தன் என்பது மறுக்க முடியாத உண்மை.

திடீரென்று அவள் பக்கத்தில் ஒரு சிறிய தலை குதித்துத் தோன்றியது. அப்போதுதான் வண்டியில் இரண்டு பேர் இருந்தார்களென்று அறிந்தேன்.

அந்தக் குழந்தைக்கு வயது நாலுக்கு மேல் இருக்காது. பால் வடியும் முகம். அவ்வளவு நேரம் ஸீட்டில் படுத்துக் கொண்டிருந்தான் போலிருக்கிறது.

அவன் குதித்து எழுந்த வேகத்தில் அவனுடைய தலை அந்தப் பெண்ணின் தோளில் பலமாக இடித்தது. முகத்தைச் சுளித்துக்கொண்டு, அவள் முதன் முதலாக அசைந்து உட்கார்ந்தாள்.

"சூ! சும்மா உட்காரு."

அவள் குரல் இனிமையாகத்தானிருந்தது. ஆனால், நான் சற்று திடுக்கிட்

ஒரு இலேசான கடுமை தொனித்ததோ அந்தக் குரலில்? தன்னுள்ளேயே ஆழ்ந்திருந்த நிலையில் குழந்தை குறுக்கிட்டதால் உதித்த ஒரு அதிருப்தி.

குழந்தை முத்துப் பற்கள் தோன்றச் சிரித்தான். "சும்மா உட்காரமாட்டேன்" என்றான்.

பார்த்தும் பாராத விழிகளால் அவனை ஒருதரம் நோக்கிவிட்டு, அவள் தன் பழைய நிலையில் ஆழ்ந்துவிட்டாள்.

பெண் கொஞ்சம் முசுடு என்று என் ஐம்பது வயது விமர்சனம் செய்தது.

அடுத்த நிமிஷம் நான் கேட்ட வார்த்தை, விஷயத்தைக் குரூரமாகத் தெளிவுபடுத்திவிட்டது.

"சித்தி!" என்றான் குழந்தை, அந்தப் பெண்ணைப் பார்த்து.

"என்ன?" என்றாள் அவள், தலையை நிமிர்த்தாமலேயே.

"என் சித்தி!" என்று கொஞ்சிக் கொண்டே சிறுவன் எழும்பி, அவள் கழுத்தை அணைத்து முகத்தோடு முகம் வைத்துக்கொண்டான். அவள் கைகளும் அவன் தோள்மீது பதிந்தன—குழந்தையைத் தழுவவென்று நான் அரைக்கணத்துக்கு நினைத்துவிட்டேன்.

ஆனால், புருவம் நெறியப் பற்களைக் கடித்துக்கொண்டு, அவள் ஏதோ மகத்தான ஒரு ஆவேசத்தில் கட்டுண்டவள் போல் குழந்தையின் தோள்களைப் பிடித்துத் தள்ளினாள்.

"சந்துரு! நீ இப்படியெல்லாம் என் கிட்ட பண்ணக்கூடாது. ஆமாம்."

மாற்றாந்தாய்!

நான் அதிர்ச்சியுற்று நின்றுவிட்டேன். குழந்தைகளோடு இயற்கையாகவே சிரித்து விளையாட வேண்டிய வயதுள்ள பெண், மாற்றாந்தாய் ஸ்தானம் வந்தவுடனேயே இந்த விபரீத மனப்பான்மையும் வந்துவிடுமா?

அவள் முகத்தில் உணர்ச்சியின் துடிப்பு இன்னும் மறையவில்லை. உதடுகள் நடுங்கப் பழையபடி உட்கார்ந்து கொண்டாள். கையை உயர்த்தித் தலைமயிரிலிருந்த மல்லிகைப் பூவை மிருதுவாய்த் தடவினாள்.

குழந்தையின் கைபட்டு புஷ்பம் கலைந்துவிட்டதோ என்று சந்தேகம்! சீ, என்ன அற்பத்தனம்!

சந்துரு சற்று நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தான். பிறகு எழுந்து நின்று காரின் விளக்கை ஏழெட்டுத்தரம் ஏற்றி ஏற்றி அணைத்தான். அந்தப் பெண் ஒன்றிலும் அக்கறையில்லாமல் முன்புபோல

தன் பாதங்களையே நோக்கிக்கொண்டிருந்தாள்.

"சித்தி!"

"உம்."

"எங்கம்மா எங்கே?"

அவள் முகத்தில் ரத்தம் ஏறியது. "உங்கம்மாவைப் பத்திதான் இப்போ கவலை. வாயை மூடிண்டு இரு" என்றாள் படபடப்புடன். அவள் மூச்சு வேகமாய் வந்தது.

குழந்தை தன் தாயைப் பற்றிப் பேசினால் இவளுக்கு இத்தனை ஆங்காரமா! அடேயப்பா! வெளியில் அழகு. உள்ளே?

சந்துரு ஸீட்டில் மண்டியிட்டு உட்கார்ந்து பின்புறம் கண்ணாடி வழியாய் வெளியே பார்த்தான்.

"சித்தி சித்தி! அதோ பாரேன். அங்கே ஒத்தன் கிளியைத் தூக்கிண்டு வரான்!"

சித்தி அசையவில்லை. பையனுடைய உற்சாகத்துக்கு அவளிடம் ஒரு பதிலும் கிடையாது.

குழந்தை அடுத்தபடியாய் நகர்ந்து அவள் மடி மீது முழங்கால்களை ஊன்றிக்கொண்டு கதவுக்கு வெளியே தலையை நீட்டினான்.

அவள் வலியால் சிணுங்கினாள்.

"டேய் சந்துரு, ரெட்டை வால், என்ன இப்படிப் படுத்தரே? உள்ளே நகர்ந்து சரியாக உட்காரு".

"சித்தி, எறங்கிப் போகலாம் வா, கடைக்குள்ளே..."

"அடாடாடா, பெரிய தொல்லையாப் போச்சு உன்னோட. அந்தக் கூட்டத்திலே நாம் போனா நெரிஞ்சு போயுட மாட்டோமா?"

அந்த மகிமைக்காரி கூட்டத்தில் நசுங்கிப் போக இஷ்டப்படாமல்தானே பத்திரமாய் வண்டியில் உட்கார்ந்திருக்கிறாள்? எனக்கு எல்லாம் புரிந்தது. அவளிடம் திடீரென்று ஒரு அருவருப்பு என் உள்ளத்தில் தோன்றியது. ஆயினும் அந்த நாடகத்தை முழுவதும் பார்க்காமல் போக மனம் வரவில்லை. அபூர்வமாக வந்த பஸ்ஸைப் போகவிட்டு நான் அந்த இருவரையே கவனித்துக்கொண்டிருந்தேன்.

"எறங்கித்தான் போகணும். ம்...ம்..." சந்துருவின் அழகிய உதடுகள் பிதுங்கலாயின.

அவள் அவனைத் தீவிரமாய்ப் பார்த்தாள்—அடித்துவிடலாமா என்று யோசிப்பவள்போல்.

"இதோ பார் சந்துரு. நீ இப்படியெல்லாம் படுத்தினயானால் நான் உன்னைக் கீழே இறக்கிவிட்டுட்டு வீட்டுக்குப் போயுடுவேன்".

குழந்தை பயத்துடன் சற்று உள்ளே நகர்ந்தான். "போகாதே".

"அப்படியானா சமத்தா, என்னைத் தொந்தரவு பண்ணாமை இரு".

அவள் அவனைப் பிடித்து உள்ளே இழுத்து விட்டுவிட்டு ஒரு பெருமூச்சுடன் சாய்ந்து உட்கார்ந்து தன் மல்லிகைச் சரத்தை மறுபடியும் தடவி விட்டுக்கொண்டாள். சற்று நேரம் காரில் மௌனம் நிலவியது. குழந்தையின் முகத்திலிருந்த கலக்கத்தைப் பாராமலேயே அவள் பழையபடி தனக்குள் ஆழ்ந்துவிட்டாள். பெரிய மனுஷி!

"சித்தி!"

அவள் பேசவில்லை.

"நான் எறங்கவே கூடாதா?"

"இதென்னடா சனியன், இன்னிக்கு இப்படிக் கழுத்தறுக்கறே?" அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். "சந்துரு, நீ சமத்தா என்னோட வண்டியிலேயே இருக்கணும்னு அப்பா சொல்லி அனுப்பிச்சாரோன்னோ? சித்தி உனக்கு எல்லாம் பண்ணறாளே, கொஞ்சநாழி அவளைத் தொந்தரவு பண்ணாமை இருந்தா உனக்கென்ன? பேசாம உட்கார்ந்திரு. இல்லேன்னா அந்தக் கடைக்குள்ளே ஒரு பெரிய குரங்கு இருக்கு. அதுகிட்ட உன்னைப் பிடிச்சுக் கொடுத்துடுவேன்."

சந்துரு பயத்துடன் மௌனமானான். இளம் உள்ளத்தை அவள் எப்படி பயமுறுத்திச் சிதைக்கிறாள்! அவனை உள்ளே அழைத்துக்கொண்டு போனால்தான் என்ன? இவள் யோசனையில் ஆழ்ந்திருக்கும்போது அவன் 'படுத்து'கிறானாம்...அந்தத் தாயில்லாக் குழந்தையை எண்ணி என் மனம் வேதனைப்பட்டது.

"நீ கெட்டவ. உன்னோட நான் பேச மாட்டேன் போ."

குழந்தையின் பயம் கோபமாக வெளிப்பட்டது. அவள் என்ன செய்து விடுவாளோ என்று நான் துணுக்குற்றேன். ஆனால் அவள் அவன் திட்டியதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. பழையபடி கீழ்நோக்கிய கண்களுடன் தனக்குள் பார்வையைச் செலுத்தி அவள் உட்கார்ந்திருந்தாள். தலையில் பொருத்தப்பட்டிருந்த அவள் வலது கை விரல்கள் அவளுக்கும் கடைக்கும் நடுவில் ஒரு திரையாக இருந்தன.

பையனின் கோபம் கடைசியில் துக்கமாக மாறியது. மெள்ள, "அம்மா, அம்மா அம்மா" என்று விசிக்கலானான்.

அவள் ஆவேசத்துடன் தலை நிமிர்ந்தாள். அவன் வசவுகளை அவள் பொறுத்துக்கொள்வாள்; அவள் சொல்லும் 'அம்மா' என்ற வார்த்தையைப் பொறுக்க மாட்டாளென்று இப்போது எனக்குப் புரிந்துவிட்டது. என்ன மனப்பான்மை!

உணர்ச்சியால் குரல் நடுங்க அவள் "அம்மாவைக் கூப்பிடறானாம் அம்மாவை. ரொம்ப தீனமாய் வேறு. பெரிய குறைபாடு உனக்கு அம்மா இல்லேன்னு! நான் ஒருத்தி இங்கே.." என்னும்போது அவள் இதய ஆழத்தின் கொந்தளிப்பு உடல் முழுவதும் பதறிக்கொண்டிருந்தது. அவனை அவள் பார்த்த பார்வையில்தான் என்ன வேகம்! இத்தகைய கோபத்துடனும் கொந்தளிப்புடனும் தான் அவனை அவள் அம்மா மாதிரி பார்த்துக்கொள்கிறாளாமா! நல்ல வேடிக்கை!

நான் அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினேன். படர்ந்து வரும் இருளிலும், அவள் குழந்தையைப் பார்த்த பார்வையின் ஆழத்தை நான் உணர முடிந்தது. அந்த ஆழம் அப்படியே வெடித்துத் தன் வெடிப்பில் அவ்விடத்தின் மற்ற இரைச்சல்களைக் கௌவிப் புதைத்துவிடப்போகிறதென்றே ஒரு கணம் எதிர்பார்த்தேன். என் உடல் என்னையுமறியாமல் மெள்ள நடுங்கியது.

சந்துரு அந்தப் பார்வையை எப்படிச் சகித்தானோ தெரியாது. அதன் ஆழத்தையும் கடந்துவிட்டதோ, குழந்தைத் தன்மையின் எளிமை? அப்படித்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் நான் அடுத்தபடி கேட்டது ஒரு பெரிய அழுகை.

"எனக்கு அம்மா வேணும்...எனக்கு என் அம்மா வேணும்...."

அதைக்கேட்டு அவளுக்கு என்ன ஆயிற்று? மனித குணமே போய் ராட்சஸியாகிவிட்டாளா?

எதிர்பார்த்ததும் எதிர்பாராததும்!



அந்தக் கோபத்தின் வேகத்தை உடலினாலேயே தொட்டது போலிருந்தது எனக்கு.

"அம்மாவா வேணும்? உனக்கா வேணும்? அம்மா வேணுமா உனக்கு?"

சித்திரப் பாவையின் நளின விரல்கள்தானா அப்படி அந்தக் குழந்தையை வெறிகொண்டு அறைந்தன?

நான் பதறித் தலையைத் திருப்பிக் கொண்டேன். சந்துருவின் அலறல் என் காதில் விழுந்து என்னுள் ஊடுருவிப் பாய்ந்தது. என் இதயத்தில் அருவருப்பும் கசப்பும் எப்படி வந்து மோதின! அவளை நான் அப்போது எப்படி வெறுத்தேன்!

பத்து நிமிஷங்கள் ஆகியிருக்குமென்று நினைக்கிறேன். நான் திரும்பிப் பார்த்தேன். அழுகையின் காரணமாகவே குழந்தை தூங்கிவிட்டான் போலிருக்கிறது. அவன் குரல் கேட்கவில்லை.

அவள்? பழைய நிலையில், பழைய தோற்றத்துடன் விளங்கினாள்!

ஆனால் அந்த அழகிய ஓவியத்தால் என் மனத்தில் பழைய பாவம் தோன்றவில்லை. நான் அவளை வெறுத்தேன்.

"என்ன நீலா, ரொம்ப நாழி ஆய்விட்டதா? பையன் தூங்கிவிட்டானா என்ன?" என்று கேட்டுக்கொண்டே கையில் சில துணிகளுடன் ஒருத்தி, பின்னால் டிரைவர் தொடர, அந்தக் காரினருகில் வந்து பேசினாள்.

"ஆமாம் சுலோ. ரொம்பப்படுத்தி விட்டான்" என்று உள்ளே இருந்தவள் கதவைத் திறந்தாள்.

சுலோவும் அவள் பின்னால் வந்த டிரைவரும் துணிகளை வண்டிக்குள் வைக்கலானார்கள். நீலா பழையபடி உட்கார்ந்திருந்தாள்.

"யார், சுலோசனாவா?" என்று கூவிக் கொண்டே தெருவில் போன இளம் பெண் ஒருத்தி சுலோவின் அருகில் வந்து நின்றாள்.

சுலோ திரும்பிப் பார்த்தாள். தன்னுடைய சிநேகிதியைக் கண்டு, "நீயா ராதா? 'ஷாப்பிங்'கா? நான் இப்போ தான் முடித்தேன்" என்றாள்.

"உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சு சுலோ. வண்டிக்குள் யார்?" என்றாள் சிநேகிதி ராதா.

"தூங்குகிறது என் பிள்ளை சந்துரு. உட்கார்ந்திருப்பது என் தங்கை நீலா" என்று சுலோ பதிலளித்தாள்.

நான் ஸ்தம்பித்தேன்.

சுலோவின் சிநேகிதி, "ஓஹோ. அவள் கடைக்குள் வரவில்லையா?" என்றாள்.

சுலோ ராதாவினருகில் வந்து சற்று தாழ்ந்த குரலில், "அவளுக்கு இந்த இடத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. அம்மா வரும் கடை இது" என்றாள்.

"ஆமாம். உங்கம்மாவைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ரொம்ப வருத்தமாயிருக்கிறது."

"அம்மா போய் மூன்று மாதமாகிறது. நாங்களெல்லாம் சமாளித்துக் கொண்டோம். நீலாதான் சிதைந்து விட்டாள். ராத்திரியெல்லாம் அழுகிறாள். அவளையே நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறாள். உனக்குத்தான் தெரியுமே ராதா, அம்மாவிடம் அவளுக்கு உயிர். கட்டிக்கொண்டு முகத்தோடு முகம் வைத்துத்தான் பேசுவாள். அம்மாவுக்குப் பிடித்த மல்லிப்பூவைத் தினம் தலையில் வைத்துக்கொள்கிறாள். அவள் துயரத்தை எப்படி மாற்றுவதென்றே புரியவில்லை ராதா. சந்துருவிடம் அவளுக்கு ரொம்ப ஆசையென்பதற்காகத்தான் அவனாவது அவள் மனத்தை மாற்றட்டுமென்று நான் அவனை அவளுடனேயே முக்கால்வாசி நேரமும் விட்டு வைத்திருக்கிறேன்..."

நான் கடைசியில் பஸ்ஸில் ஏறிய போது என் மனத்தில் வெறுப்பு இல்லை. தாயில்லாக் குழந்தையிடம் பரிதாபமே நிறைந்திருந்தது.

கோபத்தையும் ஆங்காரத்தையும் கண்டதாக நினைத்தேன். அவை துயரத்தின் பயங்கர பிரதிபிம்பங்களென்று இந்த ஐம்பது வயது அனுபவம் உணர்த்தத் தவறிவிட்டது!

நீலாவை எனக்குத் தெரியாது. அவளை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை; இனிமேல் பார்ப்பேனென்று நிச்சயமுமில்லை. ஒரு அன்னியனாகவே வெளியே நின்று மின்வெட்டுபோல் பளிச்சிட்ட மனித உணர்ச்சியின் ஒரு தீவிரத் துடிப்பை ஒரு கணம் தற்செயலாக தரிசித்துவிட்டு இதோ செல்கிறேன். ஆனால் அதே மனிதத்தன்மையை எனக்கும் அளித்த ஆண்டவனிடம் அவளுக்காகப் பிரார்த்திக்க எனக்கு உரிமை இருக்கிறது.

"தெய்வமே! நான் முன்பின் அறியாத நீலாவுக்கு மன நிம்மதியைக் கொடு" என்ற இதயபூர்வமான விண்ணப்பத்துடன் நான் என் வழியே போகிறேன்.

★

மறதியைப்போக்குவது
மறுமலர்ச்சி அளிப்பது
மணத்தில் சிறந்தது
மக்கள் விரும்புவது

REGD TRADE MARK



T.A.S. ரத்தினம்
பவுன் நிறமுள்ள
பட்டணம்பொடி

தபால்பெட்டி 1151, சென்னை 21



நேர்மை எங்கே?

பி.கே.சுவாமி

சர்மா, தம் மனைவியை நோக்கி, "இன்றைக்கு நமது வெள்ளி கூஜா ரயிலிலே தொலைந்து போவதற்கு இருந்தது, விசாலம்! நல்ல வேளை; அப்படி நேரவில்லை" என்று கூறிவிட்டு, அது நிகழ்ந்த விதத்தை விவரிக்க ஆரம்பித்தார்.

பிரயாணத்தை முடித்துக்கொண்டு அன்று மாலையில்தான் திரும்பியிருந்தார் அவர்.

"திருச்சி ஜங்ஷனிலே வந்து ஏகப்பட்ட கூட்டம் இடித்துப் புடைத்துக்கொண்டு வண்டிக்குள் நுழைந்தது. இறங்குவோரும் ஏறுவோருமாகக் கொஞ்ச நேரம் நெரிசல்பட்டு அமளியாயிருந்து, பின் ஒரு வழியாக எல்லாம் ஓய்ந்து வண்டி புறப்பட்டது. அடுத்த ஸ்டேஷன் வந்ததும் பலகை மேல் பார்த்தால் அங்கிருந்த நம் கூஜாவைக் காணவில்லை!

"எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. யோசித்துப் பார்க்கப் பார்க்க, ரயிலில் ஏறும்போது நம் கையில் கூஜா வைத்திருந்தோமா இல்லையா என்றே சந்தேகம் வந்துவிட்டது! எப்படி இருக்கும் எனக்கு? விஷயத்தை வெளியே சொல்லுவதற்கும் கூச்சமாக இருந்தது. நாலு பேருக்குத் தெரிந்தால் அநாவசியமாக போலீஸ் வரை சமாசாரம் எட்டிவிடுமே! அப்புறம் அதுவேறு பெரிய தொல்லையாகப் போய்விடும் அல்லவா?

"இவ்வாறெல்லாம் எண்ணி மனத்திற்குள் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தேன். இதை எப்படியோ கவனித்துவிட்ட பெரியவர் ஒருவர், மெல்ல ரகசியமான குரலில், 'என்ன சார் விஷயம்? ஒரு மாதிரியாய் இருக்கிறீர்களே ஏன்?' என்று கேட்டார். பிறருக்குக் கேட்காத தணிந்த குரலில் நான் விவரத்தைச் சொன்னேன்.

"அடுத்தாற்போல் ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றதுமே, பெரியவர் ஏதோ காரியமாக இறங்கிப் போனார். என்ன ஆச்சரியம்! அரை நிமிஷத்தில் இரண்டு வெள்ளிக் கூஜாவுடன் வந்து நின்றார்! இரண்டும் ஒரே அளவு; ஒரே மாதிரி.

"'இதில் எது சார் உங்களுடையது? பார்த்து எடுத்துக்கொள்ளுங்கள்' என்றார் அவர்.

"மூடியைக் கழற்றி தம்ளரைப் பார்த்து நம்முடையதை அடையாளம் கண்டுபிடித்தேன். வியப்புத் தாங்காமல் 'எப்படி சார் கிடைத்தது? இன்னொன்று வைத்திருக்கிறீர்களே, அது யாருடையது?' என்று கேட்டேன்.

"'இங்கே நெருக்கடியாய் இருக்கிறதென்று என் அண்ணா குடும்பத்தினரை கடைசிப் பெட்டிக்கு மாற்றினேன் இல்லையா? அவர்கள் பண்டங்களோடு இதுவும் சேர்ந்து போய்விட்டது; யாரும் கவனிக்கவில்லை' என்றார் பெரியவர்.

"நான் நிம்மதியாக மூச்சு விட்டேன். வேறு யார் கையில் சிக்கியிருந்தாலும் தொலைந்ததுதானே?" என்றார் சர்மா.

"நீங்கள் ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டால் இந்தத் தொல்லையெல்லாம் எதற்கு?" என்று விசாலம் குறைப்பட்டுக்கொண்டாள்.

மாடியில் படித்துக்கொண்டிருந்த சுந்தரம், அப்பாவின் குரல் கேட்டுக் கீழே இறங்கி வந்தான். சர்மா தொடர்ந்து கூறினார்:

"பெரியவர் செய்த உதவியை அறிந்ததும், வண்டியில் இருந்தவர்களெல்லாம் அவரது நேர்மையைப் புகழ்ந்தார்கள். 'இப்படிப்பட்ட சுபாவம் உள்ளவர்கள் இந்தக் காலத்தில் யார் இருக்கிறார்கள்? உங்களைப் போன்றவர்களால்தான் உலகத்தில் மழையே பெய்கிறது' என்றெல்லாம் பாராட்டிப் பேசினார்கள்.

"அப்போது இன்னொரு பிரயாணி, தமக்கு நேர்ந்த ஒரு ரசமான அனுபவத்தைச் சொன்னார். அதை உங்களுக்குச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று ஆரம்பித்தார் சர்மா.

சர்மா சொன்னார்:—

"அவர் ஓர் எழுத்தாளராம். பெயர் அமிர்த கணேசன். சென்ற வருஷம் செப்டம்பர் மாதத்தில் சென்னை 'அதிரசம்' வாரப் பத்திரிகை காரியாலயத்தினர் ஒரு சிறு கதைப் போட்டியை அறிவித்தார்கள். மொத்தப் பரிசு ஆயிரத்து ஐந்நூறு ரூபாயில் முதல் பரிசுக் கதைக்கு ரூபாய் ஐந்நூறு; இரண்டாவது பரிசு இருநூற்றைம்பது வீதம் இரண்டு கதைகளுக்கு ரூபாய் ஐந்நூறு; மூன்றாவது பரிசு நூறு வீதம் ஐந்து கதைகளுக்கு ரூபாய் ஐந்நூறு.

அந்தப் போட்டிக்கு எப்படியும் ஒரு கதை எழுதி அனுப்ப வேண்டும் என்று தீர்மானித்தார், அமிர்த கணேசன். ஆனால், இடைவிடாத அலுவல் காரணமாகக் கதை எழுத அவகாசமே கிடைக்கவில்லை அவருக்கு. கடைசியில் போட்டிக்குக் கதைகள் அனுப்பவேண்டிய முடிவு தேதியும் சமீபத்தில் நெருங்கிவிட்டது.

டிசம்பர் 31-ந் தேதிக்குள் 'அதிரசம்' காரியாலயத்தில் போட்டிக் கதை கிடைக்க வேண்டும் என்று ஏற்பாடு. நம் எழுத்தாளருக்கோ, அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்புதான்—அதாவது 29-ந் தேதிதான்—கொஞ்சம் ஓய்வு கிடைத்தது.

கிடைத்த அவகாசத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தம்முடைய திறமையெல்லாம் உபயோகித்து ஒரு கதையை எழுத ஆரம்பித்தார் அமிர்த கணேசன். என்ன விந்தை! அவர் சற்றும் எதிர்பாராதவண்ணம் அந்தக் கதை வெகு அற்புதமாக அமைந்துபோய் விட்டது! அதற்கு 'நேர்மை எங்கே?' என்ற பொருத்தமான தலைப்பும் கொடுத்தபோது, அவருக்குப் பரம திருப்தி ஏற்பட்டது என்றே சொல்ல வேண்டும்.

மறு தினம் 30-ந் தேதி காலையில் தாம் எழுதிய கதையைக் கவரில் போட்டு ஒட்டி, 'அதிரசம் சிறு கதைப் போட்டி' என்று குறிப்பிட்டுத் தெளிவாக விலாசம் எழுதினார். அன்று காலை தபால் எடுக்கும் நேரத்திற்குள் பெட்டியில் சேர்த்தால்தான் மறு நாள் சென்னையில் கிடைக்கும். எனவே, உடனடியாகத் தபாலாபீசுக்குச் சென்று ஸ்டாம்பு வாங்கி கையோடு ஒட்டிப் போட்டு வரலாம் என்று தீர்மானித்தார். அந்தக் கவரை ஒரு புத்தகத்தின் மத்தியில் வைத்து எடுத்துக்கொண்டு போனார்.

தபாலாபீசில் நுழைந்தவுடன் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தபோது பகீரென்றது அவருக்கு! அங்கிருந்த கவரைக் காணவில்லை! வழியில் எங்கோ நழுவி விழுந்திருக்க வேண்டும். எப்படி இருக்கும் அவருக்கு?

[illegible] வழியே சென்று எங்காவது கிடக்கிறதா என்று தேடினர். ஆனல் என்ன பிரயோசனம்? கவரைக் காணமல் மனம் உடைந்துபோய் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அன்று பூராவும் அவருக்கு ஒரு வேலையும் ஓடவில்லை.

அவசரத்தில் எழுதியதால் கதைக்கு அவர் நகல் வைத்துக்கொள்ளவில்லை. இனிமேல் மறுபடியும் எழுதிச் சேர்ப்பது என்பதும் இயலாத காரியம். தவிர, அம் மாதிரிக் கச்சிதமாக எங்ஙனம் அமையும்? எனவே கடைசியில், போட்டிக்கு அவரால் கதை அனுப்ப முடியாமலே போய்விட்டது!

கவரின் மேலே தமது விலாசத்தை அவர் எழுதவில்லையே தவிர, உள்ளே எழுதியிருந்தார் அல்லவா? அதைப் பார்த்த பிறகாவது கண்டெடுத்த புண்ணியவான்கள் ஒருவேளை அவரிடம் அதைச் சேர்ப்பிக்கக்கூடும் என்று எதிர்பார்த்தார். ஆனல் அதுவும் நடைபெறவில்லை. அந்தக் கதை போனது போனதுதான்!

அப்புறம் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக அந்த நிகழ்ச்சியைப்பற்றி மறந்துபோனர். வாரங்களும் மாதங்களும் விரைந்து சென்றன.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள்.

அந்த வார 'அதிரசம்' இதழ் ஒன்றைத் தற்செயலாக வாங்கிப் பக்கங்களைப் புரட்டினர் எழுத்தாளர் அமிர்த கணேசன். என்ன அதிசயம்! ஒரு பக்கத்தில், கோட்டை எழுத்துக்களில் 'சிறு கதைப் போட்டி முடிவு' பிரசுரமாகியிருந்தது:—

முதல் பரிசு ரூபாய் ஐந்நூறு—'நேர்மை எங்கே?' என்ற கதையை எழுதிய ஸ்ரீ அமிர்த கணேசன் அவர்களுக்கு......

எங்கிருந்தோ அவர் உடம்பெல்லாம் ஒருவிதமான மின்சாரம் பாய்ந்து செல்வது போன்ற உணர்ச்சி!

இது என்ன, செப்பிடு வித்தையா—இல்லை—மாயா ஜால மகேந்திர ஜாலமா? அவர் கண்கள் அவரை ஏமாற்றுகின்றனவா? அவர் காண்பது கனவா அல்லது நனவா? கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு மீண்டும் மீண்டும் பார்த்தார் அமிர்த கணேசன்.

ஆம்; நிஜமாகவே முதல் பரிசு அவருக்குத்தான்—அவர் எழுதிய 'நேர்மை எங்கே?' என்ற கதைக்குத்தான்! சந்தேகமே இல்லை!

அளவு கடந்த வியப்பினலும் திகைப்பினலும் அவர் தேகமெங்கும் புல்லரித்தது!....

அப்புறம் அடுத்த வார 'அதிரசம்' இதழிலேயே முதல் பரிசு பெற்ற அவரது கதை 'நேர்மை எங்கே?' பிரசுரமாகியிருந்தது—பிரமாதமான அலங்காரங்களுடன். கதை வெளியான அதே தினத்தில் ஐந்நூறு ரூபாய்க்குச் 'செக்'கும் அவருக்குக் கிடைத்துவிட்டது.

பிந்திய இதழ்களில் வெளியான வாசகர்களின் புகழுரைகளுக்குக் கணக்கே இல்லை! பரிசு பெற்ற எல்லாருடைய புகைப் படங்களுக்கும் மத்தியில் நடு நாயகமாக, அமிர்த கணேசனின் கவர்ச்சிகரமான படம்......

[illegible] ஏற்பட்ட பிரமிப்பு பல தினங்கள் வரை நீங்கவேயில்லை அவருக்கு.

ஆனல்......தொலைந்துபோய்விட்டதென நினைத்த கதை, பரிசு வாங்கியிருக்கிறதே! இந்த அதிசயம் எப்படி நடந்தது? இது எங்ஙனம் சாத்தியமாயிற்று? கலி காலத்தில் இத்தகைய அற்புதமும் நிகழக்கூடுமா?

இவ்விதம் பலவாறாக எண்ணி யெண்ணி ஆச்சரியப்பட்டுப் போனர், எழுத்தாளர் அமிர்த கணேசன்.

அப்படியானல்.....அன்று நழுவ விட்ட கவரைக் கண்டெடுத்த நபர், தம் செலவில் ஸ்டாம்பு வாங்கி, ஒட்டிப் போட்டிருக்க வேண்டும். அதைப் பிரித்துப் பார்த்திருந்தால் உள்ளே எழுதியவர் விலாசம் இருப்பதை அறிந்து தகவல் கொடுத்திருக்கக் கூடும். ஆனல் பிரிக்கவில்லை போலிருக்கிறது.

உலகத்தில் இப்படி நல்ல சித்தம் உடையவர்களும் இருக்கத்தானே செய்கிறர்கள்? அந்த எழுத்தாளருக்கு ஐந்நூறு ரூபாய் பரிசு கிடைக்கக் காரணமாயிருந்த பேர்வழி யார்?

'எனக்கு இந்தக் காரியம் செய்து உதவிய நபர் யார் என்று மட்டும் தெரியக் கூடுமானல், குறைந்தபட்சம் நூறு ரூபாயாவது சன்மானம் செய்யவேண்டும் என்று ஆவலாய் இருக்கிறது. என்னுடைய மனப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனல் எப்படிக் கண்டுபிடிப்பது என்றுதான் தெரியவில்லை' என்று முடித்தார் மேற்படி எழுத்தாளர்.

அவர் அவ்விதம் சொல்லி வாய் மூடினரோ இல்லையோ, இரண்டொரு பெஞ்சுகள் தாண்டி அந்தப் பக்கமிருந்து 'சார்!... எழுத்தாளர் சார்!' என்று ஒரு குரல் பலமாக ஒலித்தது! கூடவே, சுமார் பதினைந்து வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் எழுந்து நிற்பது தெரிந்தது. அவன், நாங்கள் இருந்த இடத்தை நோக்கி வந்துகொண்டே, 'நீங்கள் அந்தக் கவரில் விலாசம் முழுவதும் ஆங்கிலத்தில்தான் எழுதியிருந்தீர்கள்; இல்லையா?' என்று கேட்டான் அவரைப் பார்த்து.

'ஆமாம்; ஆமாம்!' என்றர் எழுத்தாளர், வியப்படைந்தவராய்.

'கடைசியில் 'மெட்ராஸ்—4' என்பது மட்டும் பெரிதாக எழுதிக் கோடிட்டிருந்ததாக ஞாபகம்' என்றன் பையன்.

'ஆமாம், அதேதான்! அதைத் தபாலில் சேர்த்தது நீதானு தம்பி?' என்று கேட்டார் அவர், ஆவல் பொங்கும் குரலில்.

'அவசரப்படாதீர்கள்! அது சுத்த வெள்ளை நிறமுள்ள நீள சைஸ் கவர் தானே?' என்று கேட்டான் பையன்.

'சந்தேகமே இல்லை! அதுவேதான். ஆகா...!' என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் எழுத்தாளர்.

உடனே பையன் அவரை நோக்கி, 'கொஞ்சம் நினைவுபடுத்திப் பாருங்கள். தபாலாபீசுக்குப் போகும்போது காய்கறி மார்க்கெட் வழியாகப் போனீர்களோ?' என்று கேட்டான்.

அதற்கு அவர், 'ஓ, ரைட் ரைட்! நிச்சயமாக!...அன்று...நான்..' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தபோது, பையன் இடைமறித்து, 'மார்க்கெட் 'கேட்' அரு[illegible]

[illegible] தபாலாபீசுக்குப் போய் ஸ்டாம்பு வாங்கி ஒட்டிப் போட்டுவிட்டு அப்படியே ஸ்கூலுக்குப் போய்விட்டேன்; பிரித்துப் பார்க்கவில்லை. அதனல்தான் கவரின் சொந்தக்காரர் யார் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. அறிய வேண்டிய அவசியமும் இல்லை என்று நினைத்தேன்' என்று கூறினன்.

எழுத்தாளருக்கு ஒரே உற்சாகம்! பையனை அப்படியே சேர்த்துக் கட்டிக்கொண்டார். 'ஆகா! தம்பீ! நீ செய்துள்ள உதவிக்கு நான்...' என்று ஏதோ சொல்ல வந்தவர், பரபரவென்று மணி பர்ஸை எடுத்து, ஒரு நூறு ரூபாய் நோட்டை உருவி அவனிடம் நீட்டி, வைத்துக்கொள்ளுமாறு வற்புறுத்தினர்.

ஆனல் அந்தப் பையன் அதை வாங்கிக் கொள்ள மறுத்தான்.

'ஐயா! நான் ஒரு சாரணச் சிறுவன். சேவை புரிவது எனது முக்கிய கடமை. நான் அன்று செய்த காரியம் ஓர் அற்பமான உதவிதான். அதற்குப்போய் இவ்வளவு பெரிய தொகையைத் தாங்கள் கொடுப்பது சரியல்ல.

பார்க்கப்போனல், எனக்குச் சேர வேண்டியது அன்று நான் ஒட்டிப்போட்ட ஆறணு ஸ்டாம்பு கிரயம்தான். அதுவும் கூட நான் எதிர்பார்க்கவில்லை; எதிர்பார்க்கவும் கூடாது. வேண்டுமானல்—உங்கள் திருப்திக்காக—அந்த ஆறணவை மட்டும் கொடுங்கள்; பெற்றுக்கொள்கிறேன். நூறு ரூபாயைத் தயவு செய்து

டெல்ஹி தென்னிந்தியருக்கு நற்செய்தி!

ருசியான சாம்பார் பொடி!
மணம் கமழும் ரசப் பொடி!!
உயர்தர வெற்றிலை பீடா!!!

சுத்தமான தயாரிப்பு.

K. G. K. & Co.

P. B. 604 New Delhi
Show Room:
(South Indian Boarding House,
Connaught Circus, New Delhi)

தென்னிந்தியர்
பிரத்தியேகத் தேவைகளாவன:

வாசனைப் பாக்கு, கலர் சுண்ணும்பு, அப்பளாம், பப்படம், வடாம், வற்றல், ஊறுகாய்கள், நேந்திரங்காய் வறுவல், காப்பிப்பொடி இவைகளும் கிடைக்கும்.

கல்யாணம் முதலிய விசேஷ வைபவங்களுக்கு விருந்தினரை உபசரிக்க எமது ஸ்பெஷல் "பீடா" வுக்கு ஆர்டர் செய்யுங்கள்.

பிரதி வெள்ளிக்கிழமையும், பண்டிகை நாட்களிலும் சென்னைக்கதம்பம் விற்பனையாகிறது.

நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்; எனக்கு வேண்டாம். கதை எழுதிய உங்களுக்கேதான் ஐந்நூறும் சேருவது நியாயம்' என்று வாதாடினான்.

ஆனால் அவன் எவ்வளவு சொல்லியும் எழுத்தாளர் கேட்டால்தானே? பிடிவாதமாக அந்த நூறு ரூபாய் நோட்டை அவன் கைகளுக்குள் திணித்து, அதை ஏற்றுக்கொள்ளும்படி செய்துவிட்டார்.

'நீ அன்று எடுத்து சிரத்தையோடு தபாலில் சேர்க்காவிட்டால் எனக்கு அந்த ஐந்நூறு ஏது தம்பி? பேசுகிறாயே!' என்று அடித்துச் சொல்லி மடக்கிவிட்டார்.

'போனால் போகிறது' என்று வேறு வழியின்றிச் சிறுவனும் பெற்றுக்கொண்டான்.

ரயிலில் இருந்தவர்களுக்கெல்லாம் இந்த அசாதாரண நிகழ்ச்சியைக் காணப் பெரிதும் விநோதமாக இருந்தது! முதலில் புகழ்ந்த பெரியவரோடு அந்தச் சிறுவனையும் சேர்த்துக் கொண்டாடினர் பிரயாணிகள்."

கதையை முடித்தார் சர்மா.

ஃ ஃ ஃ

"சுருட்டைக் கிராப்புடன், ஒல்லியாகவும், சிவப்பாகவும் இருந்தானா அப்பா, அந்தப் பையன்?" என்று கேட்டான் சுந்தரம், திடுதிப்பென்று.

"ஆமாம்; அதே பையன்தான்! அவனை உனக்குத் தெரியுமா என்ன?" என்று ஆவலுடன் கேட்டார் சர்மா, பதிலுக்கு.

"அவன் சுத்த அயோக்கியன் அப்பா!" என்று ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டான் சுந்தரம்.

"என்னது! ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார் சர்மா, திகைத்துப்போய்.

"அவன் சொன்னது அத்தனையும் பொய் அப்பா! அவன் சாரணர் படையில் சேரவும் இல்லை, ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை! உண்மையில் நான்தான் அப்பா அன்று அந்தக் கவரை எடுத்துப்போய் ஸ்டாம்பு வாங்கி ஒட்டியது, தபாலில் சேர்த்தது எல்லாம்..." என்று சொல்லிவிட்டு எழுந்து சென்று, தன்னுடைய 'ஸ்கவுட் டயரி'யைக் கொண்டுவந்து அப்பாவிடம் காண்பித்தான் சுந்தரம்.

டிசம்பர் 30–ஆம் தேதி சம்பவத்தை விரிவாக அந்தப் பக்கத்தில் எழுதியிருந்தான் சுந்தரம்.

கடைசியில், "இன்று அந்தக் கவரை நான் தபாலாபீசுக்கு எடுத்துச் செல்லும் போது என் கூட வந்தவன் விசுவநாதன் என்ற பையன். அவனுக்கு மட்டுமே மேற்படி விஷயம் தெரியும் . . ." என்று குறித்திருந்தான்.

"அந்த விசுவநாதன்தான் அப்பா இன்று ரயிலில் அப்படிப் பேசியிருக்கிறான்!" என்றான் சுந்தரம்.

"அட ராஸ்கல், எத்தனை சாமர்த்தியமாகப் புளுகிவிட்டு நூறு ரூபாயை அடித்துக்கொண்டான் போக்கிரி!" என்று ஆத்திரப்பட்டார், சர்மா.

டிபனுக்கு நேரமாகிவிட்டதென்று எழுந்தபோது, அவர்கள் மூவருடைய மனத்திலும் மேலோங்கி நின்ற கேள்வி 'நேர்மை எங்கே?' என்பதுதான்!

எழுத்துலகம்

எஸ். ராஜா

கவி ரவீந்திரநாத தாகூரைப்பற்றிச் சொல்லப்படுகிற சம்பவம் இது. இங்கிலாந்தில் ஒரு நாள் ஒரு பெரிய மாளிகையின் முன்னறையில் இருநூறு, முன்னூறு பெரிய இலக்கிய உலகப் புள்ளிகள் கூடியிருந்தனர். விமர்சகர்கள், கவிகள், போராசிரியர்கள், பத்திரிகாசிரியர்கள் எல்லோரும் தாகூர் தன் கவிதையைத் தானே படிப்பதைக் கேட்க வந்து கூடியிருந்தார்கள். தாகூர் தன் கீதாஞ்சலி மொழிபெயர்ப்பில் பல பகுதிகளை அழகாக வாசித்தார். ஆங்கிலேயர்களுக்கே உரித்தான ஒரு மௌனத்துடன், ஆழ்ந்த கவனத்துடன் எல்லோரும் இந்தப் புதுமைக் கவியின் கவிதைகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

சட்டென்று கவி படிப்பதை நிறுத்திவிட்டார். ஒரு நிமிஷம் கழித்துத்தான் கவியின் குரல் கேட்கவில்லை என்று சபையோர் கவனத்துக்கு வந்தது. நிமிர்ந்து பார்த்தபோது கவி பின்னால் எங்கேயோ எதையோ கவனித்துக் கொண்டு மௌனமாகிவிட்டார் என்று கண்டார்கள். எல்லோரும் ஒருமனதாகத் திரும்பிப்பார்த்தபோது, முன்னறை வாசற்படியில் அழகிய சிறுமி ஒருத்தி, வயது ஆறேழு இருக்கும், அலங்காரமாக நின்றுகொண்டிருந்தாள். "குழந்தை நின்ற நிலையே ஒரு காவியம் போல இருந்தது" என்று அந்தச் சபையில் இருந்த ஒருவர் பின்னர் எழுதியிருக்கிறார்.

"அம்மா என்று கூப்பிட்டுக்கொண்டு அந்தக் குழந்தை உள்ளே ஆடி ஓடிக் கொண்டு வந்ததற்கும் தாகூரின் கவிதைக்கும் ஏதோ சம்பந்தமிருப்பது போல அங்கிருந்தவர்களில் பலருக்கும் தோன்றிற்று" என்று வேறு ஒருவர் இந்தச் சம்பவத்தைக் குறித்து வைத்திருக்கிறார். அது எப்படியானாலும் சபையில் தாகூர் தன் கவிதைப் படிப்பைத் தொடரவில்லை.

ஃ ஃ ஃ

"உலகத்துக்கெல்லாம் அன்பு செலுத்த வேண்டும், பெரியவனோ சின்னவனோ எல்லோருமே என் நண்பர்கள்" என்று முழக்கம் செய்த அமெரிக்கக் கவி வால்ட் விட்மனுக்கு தாராளமாக யாரைக் கண்டாலுமே பிடிக்காதாம். "என் ஊர்க்காரர்களில் நான் அறிந்தவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பது பேர்வழிகள் அயோக்கியர்கள், ஆஷாடபூதிகள், வேஷதாரிகள்" என்று அவர் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்.

கார்லைல் என்கிற ஆங்கில ஆசிரியர் அவரைப் பற்றிச் சொன்னது இதுதான்: "காளை மாடு கையில் பேனா எடுத்துக் கவிதை எழுதத் தொடங்கிவிட்டது–பாருங்களேன்!"

நட்பு என்று ஒன்று கிடைக்காத காரணத்தினால்தான் அவர் பக்கம் பக்கமாக நட்பையும் அன்பையும் பற்றி எழுதிக் குவித்தார் என்று சொல்லலாம்.

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் புதுசாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு பிரசுராலயம் தங்களுடைய முதல் புஸ்தகமாக ஜியார்ஜ் பெர்னார்டு ஷாவின் உயிலை வெளியிட்டது.

ஃ ஃ ஃ

நேஷனல் ஜியாக்ரபிக் மாகஸின் என்கிற பத்திரிகை ஒரு மாதத்தில் இருபத்தியொருலக்ஷத்து ஐம்பதினாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டதாம். ஒன்றன் மேல் ஒன்றாக அவ்வளவு பிரதிகளையும் அடுக்கி வைத்தால் சற்றேறக்குறைய பத்து மைல் உயரம் இருக்கும் என்று சொல்கிறார்கள். 1899–ல் ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பத்திரிகைக்கு ஆரம்ப முதல் இன்று வரை ஒரே ஆசிரியர்தான். உதவி ஆசிரியர், 1905–ல் அதில் சேர்ந்தவர், இன்னமும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்.

ஃ ஃ ஃ

நிகோலோ மாக்கியாவல்லி என்கிற ஒரு இத்தாலியர் தன் அரசாங்கத்தின் சார்பில் அயல்நாட்டுக்குத் தூது போனார். போன இடத்தில் ஒரு கல்யாணமான பெண்ணைக் காதலித்தார். காதலிலும், அரசியல் தூதிலும் தோல்வியுற்று மூக்குடைபட்டுத் திரும்பிய மாக்கியாவல்லி, ஊரில் சௌக்கியமாக இருந்து கொண்டு இரண்டு புஸ்தகங்கள் எழுதினார். 'அயல்நாட்டு அரசாங்கங்களுடன் உறவு கொள்வது எப்படி? ராஜதந்திரியாக இருப்பது எப்படி?' என்று ஒரு நூல்–இதன் பெயர் 'ராஜகுமாரன்'. இன்னொரு நூலின் பெயர் 'காதலில் வெற்றி'–காதல் விவகாரங்களை எப்படி நடத்தி எப்படி வெற்றி பெற வேண்டும் என்பது பற்றியது இந்த நூல். இந்த நூல்கள் இரண்டும் பிரமாதமான வெற்றி பெற்றன. செயலில் தோல்வியடைந்த மாக்கியாவல்லி எழுதிய இந்த நூல்கள் இரண்டுமே இன்றும் பிரமாதமான நூல்களாகப் போற்றப்பட்டு வருகின்றன.

ஃ ஃ ஃ

இலக்கியத்தின் மிகச் சிறந்த அழகியைச் சிருஷ்டித்தவர் ஹோமர் என்கிற கிரேக்க கவி. ஆனால் அவர் குருடர்!

ஃ ஃ ஃ

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிறந்த நாவலாசிரியர் யார் என்று கேட்டால் அநேகமாகப் பலர் டால்ஸ்டாய் என்று தயங்காமல் கூறிவிடுவார்கள். டால்ஸ்டாயின் அபிப்பிராயப்படி சார்லஸ் டிக்கன்ஸ்தான் அந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த நாவலாசிரியர்.

✶

ஜபத்தைத்தான் நான் விடவில்லையே! நாற்றமும் அட... யது. வெண்ணிலாவின் தோற்றத்தில் மாறுதலேற்ப... வில்லை."

"அவள் ரொம்பவும் அழுகிறாளா?"

"ஆம், உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"இந்தக் கோளாறு உள்ளவர்களின் தன்மை அது. அவர்களுக்குக் கோபம், காமம் முதலிய உணர்ச்சிகள் அதிகம் ஆகும். அவர்கள் ஆசை நிறைவேறாவிட்டால் அடிக்கடி அழுவார்கள். கேவலமான பாஷையில் பேசுவார்கள். என்னைத் திட்டினாளா?"

"இவ்வளவும் உங்களுக்கு எப்படித் தெரிகிறது? நீங்கள் தெய்வத்தின் அருள் பெற்றவரா?" என்றேன் சந்தேகத்துடன்.

முதன் முறையாக டாக்டரின் முகம் வாடுவதைக் கண்டேன்.

"கூத்தரசு, அந்தப் பாக்கியம் எனக்கு இன்னும் கிட்டவில்லை. எப்போது கிட்டும் என்றும் தெரியாது. என் கடமைகளைச் செய்கிறேன். அந்தப் பாக்கியம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு."

"இனிமேல் இருட்டில் தோற்றம் ஒன்றும் வராதா?"

இருட்டு

எம்.வி.வெங்கட்ராம்

8

வெண்ணிலா உண்ணாத மருந்து

எந்தக் கொள்கைக்காகக் கட்சி கட்டினேனோ அந்தக் கொள்கையின் அஸ்திவாரமே ஆட்டம் கண்டுவிட்டது. எந்தக் கொள்கையை உண்மை என்று நம்பினேனோ அது பொய் என்று ஆகிவிட்டது. என் அனுபவத்தை விஞ்ஞான ரீதியிலோ, தர்க்க ரீதியிலோ விளக்கி மற்றவருக்குப் புரியவைக்க முடியாது என்பதை நான் அறிவேன்; நான் கண்ட கோரமான காட்சியைப் பிறரிடம்—என் சகாக்களிடம்—சொன்னால் 'கட்டுக் கதை' என்றோ, 'சித்தப் பிரமை' என்றோ ஏளனம் செய்வார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆயினும், மற்றவர்களுக்குப் புரியவைக்க முடியவில்லை என்பதற்காக நான் அனுபவித்ததை 'இல்லை' என்று நானே கூற முடியுமா? மதவாதிகள் 'நம்பிக்கைதான் மதத்தின் அடிப்படை' என்பதை, நான் கிண்டல் செய்வது வழக்கம். புராணங்கள் அற்புத நிகழ்ச்சிகள் (Miracles) பற்றி வருணிப்பதை, மக்களை மடையர்களாக்கும் கதைகள் என்று கேலி செய்தது உண்டு. நானே ஓர் அதிசயத்தின் நாயகன் ஆனபின், தெய்வம் அறிந்தவர்களால் அசாத்தியமானது இல்லை என்பதை நான் நம்ப வேண்டியவன்தானே? மனித சக்திக்கு மீறிய சக்திகள் உள்ளதை அறியாதவர்கள் விந்தைகள் பற்றிய கதைகளை நம்ப மாட்டார்கள் என்பதற்காகத்தான் போலும் 'நம்பிக்கை மதத்தின் அடிப்படை' என்றார்கள்.

விஞ்ஞானிகளையும், விஞ்ஞான அறிவையும் போற்றுவதிலும், வளர்ப்பதிலும் குற்றம் சொல்லுவது தவறு. அதற்காக, 'விஞ்ஞானம் கண்டதுதான் அறிவு, விஞ்ஞான ரீதியில் சொல்ல முடியாதது அறியாமை' என்று கூறி அறிவைக் குறுக்கிக்கொண்டதுதான் இன்றைய மனித ஜாதியின் சாபக்கேடு என்று எனக்குத் தோன்றியது!

என் கொள்கையின் தோல்வி என்னுடைய தோல்வியாகத் தோன்றவில்லை. என் அறிவு விரிவு பெற்றதாகவே அதை நினைத்தேன்.

காலையில் கண் விழித்தபோது, நான் ஒரு புதிய மனிதனாய்க் கண் விழித்தேன். கனவு கண்டு ஞானம் பெற்றவர்கள் வரலாறுகளைப் படித்துள்ளேன். என் மாறுதலும் ஏறக்குறைய அப்படித்தானே? ஆம், 'ஞானம்' எனக்குக் கிட்டிவிடவில்லை. 'ஞானம்' என்று ஒன்று இருப்பது எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

புது அறிவு பெற்ற உற்சாகத்தோடு டாக்டரிடம் சென்றேன். வெண்ணிலாவையும் தப்பவைக்க வேண்டும் என்கிற ஆவல், அதிகாலையிலேயே என்னை அவரிடம் அழைத்துச்சென்றது.

"டாக்டர், தெய்வம் என்னைக் காப்பாற்றிவிட்டது!" என்று சொல்லும்போதே என் நா தழுதழுத்தது.

அவர் சிரித்தார்: "என்ன நடந்தது?"

"ஜபத்தைக் கைவிடாத வரை வராது. தொடர்ந்து கடவுளுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைக் கிரமமாகச் செய்தால் எந்த அசுத்த சக்தியும் உன்னைத் தொந்தரவு செய்யாது. அதற்குச் சிறிது காலம் ஆகும்."

"டாக்டர், என்னைப் பொறுத்தவரை உண்மை எனக்கு உதயமாகிவிட்டது. வெண்ணிலாவையும் எப்படியாவது நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்."

"அவளைக் காப்பாற்ற வேண்டுமானால், ஜாக்கிரதை தேவை. நீ விழித்துக்கொண்டாய் என்பதை அறிந்து வெண்ணிலாவைப் பீடித்துள்ள அசுத்த சக்தி அவளைச் சீக்கிரம் தீர்த்துக்கட்ட முயலும்."

"அவளுக்கு விமோசனம் இல்லையா? ஜபம் செய்வதற்கு அவள் கட்டாயம் இணங்கமாட்டாள்."

"அதைத்தான் சொல்லுகிறேன். நம்முடைய யோசனை எதையும் அவள் கேட்க மாட்டாள். அவளைக் கோயிலுக்கு அழைத்துப் போக முடியுமா?"

"கோயிலுக்கா?"

"கோயிலுக்குத்தான். ஆஞ்சநேயர் அல்லது நரசிம்ம சுவாமி கோயிலுக்குச் சென்று, சந்நிதியில் அவளை உட்கார வைத்தால் ஓரளவு குணமாகும். பிறகு அவளைச் சுலுவாக நம் வழிக்கு அழைத்துக்கொள்ளலாம்."

"கோயில் என்றாலே அவள் சீறு... வாளே!"

"வேறு வழியில்லை."

"அவளிடம் விஷயத்தைச் சொல்லலாமா?"

...ள். உன்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுவாள். நயமாகவோ பயம் காட்டியோ அவளைக் கோயிலுக்கு அழைத்துப்போக வேண்டும்.”

நான் யோசனையில் ஆழ்ந்தேன். வெண்ணிலாவைக் கடவுள் நெறிக்குத் திருப்புவதும், அவளை ஆலயத்துக்கு அழைத்துச்செல்வதும் நடக்க முடியாத காரியங்கள். அப்படிச் செய்யாவிட்டால் அவள் உயிருக்கே கேடு விளையலாம் என்ற திகில் என்னைச் சூழ்ந்தது.

“எப்படியாவது அவளை மடக்க முயலுகிறேன்” என்று கூறி டாக்டரிடம் விடைபெற்று வீட்டுக்குச் சென்ற போது என்னைவிடக் கவலையாக அவள் என்னை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“மறுபடி டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டீர்களா?”

“ஆம், வெண்ணிலா. உட்காரு. உன்னிடம் ஒரு விஷயம் பற்றிப் பேச வேண்டும்.”

பக்கத்தில் உட்கார்ந்த அவள் கையைப் பற்றிக்கொண்டு கேட்டேன்: “உன் மீது எனக்குள்ள அன்பு பற்றி உனக்குச் சந்தேகம் இருக்கிறதா?”

“என்ன சேதி? முன்னுரை பலமாக இருக்கிறதே?”

“இல்லை. சொல்லு. . .”

“என் மேல் உங்களுக்கு அன்பு இல்லை என்று எப்போது சொன்னேன்? அந்த அன்பு குறைகிறது என்பதை உங்கள் நடத்தை காட்டுகிறது. இரண்டு ராத்திரி என்னை அறையில் விட்டு ஓடினீர்கள். நேற்று ராத்திரி டாக்டர் சொன்னதைக் கேட்டு–”

“வியாதியையும், ப த் தி யத்தையும் அன்புக் குறைவு என்று நினைக்கலாமா வெண்ணிலா? நீ நன்றாக இருக்க வேண்டும், நானும் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை.”

“நாம் இருவருமே நன்றாக இருந்து, கட்சியை வளர்த்து, சமூகத்தில் உள்ள கோளாறுகளைக் களைய வேண்டும் என்பது என் ஆசை.”

“ஆனால். . . உன் உடல் நிலையைக் கவனித்தால். . .”

“அரசு, எனக்கு ஏதோ மயக்கம் வருகிறது. மருந்து சாப்பிட்டால் குணம் ஆகிவிடுகிறது. டாக்டரைப் பார்ப்போம். உங்கள் அம்பலவாணரை அல்ல. பூஜை செய்தால் வியாதி தீர்ந்துவிடும் என்று கையில் ஏதாவது படம் தந்து அனுப்பிவிடுவார்!”

திடுக்கிட்டேன். நான் சொல்ல வந்ததை அவள் ஏற்க மாட்டாள் என்பதற்கு இப்பேச்சு போதாதா?

“வெண்ணிலா, அம்பலவாணர் உறுதியான தெய்வ நம்பிக்கை உடையவர் தான். ஆனால், அதற்காக, அவருக்கு மருந்து பற்றி ஒன்றும் தெரியாது என்றுவிட முடியுமா?”

“அவர் பேரில் எனக்கு நம்பிக்கை இல்லை. இந்த ஊரில் வேறு டாக்டர் இல்லையா? உடம்பு குணமாக வேண்டியதுதானே? எந்த டாக்டர் பார்த்தால் என்ன?”

“நான் சொல்லுவதைக் கேட்க மாட்டாயா?”

“இந்த டாக்டரைத்தான் பார்க்க வேண்டும் என்கிறீர்களா?”

“இல்லை” என்று தயங்கினேன்.

“என்னதான் சொல்கிறீர்கள்?”

வருவது வரட்டும் என்கிற துணிவு கொண்டு கூறினேன்: “டாக்டர் அம்பலவாணர் உனக்கு உடல் சம்பந்தமான நோய் ஒன்றும் இல்லை என்கிறார்.”

“பின், எதற்காக இவ்வளவு பத்தியம். . .”

“ஏதோ மன வியாதி இருக்கிறதாம். ஏதாவது கோயிலுக்குப் போய் வந்தால் தான் குணம் ஆகுமாம்.”

அவ்வளவுதான்; சொல்லிவிட்டேன்.

படம் பார்த்துக் குதிக்கு முன் சிரித்தாளே, அதேபோல் பயங்கரமாகச் சிரித்தாள் அவள்.

“பேஷ், பேஷ்! நல்ல மருந்து கண்டு பிடித்தார் உங்கள் டாக்டர்! எவ்வளவு காலம் இதற்கு ஆராய்ச்சி செய்தாராம்?”

அவளுடைய சிரிப்பும், கிண்டலும் என்னைக் குத்தின. கடவுளைக் காணாவிட்டாலும், கடவுள் உண்மையை உணர்ந்த எனக்கு வேதனையாக இருந்தது.

“வெண்ணிலா, ஒரு சோதனை செய்வோமா?” என்றேன், டாக்டர் என்னிடம் செய்ததை அனுசரித்து.

அவளுடைய முகம் சிவந்தது, கறுத்தது.

“அப்படியானால் அந்தப் போலி வைத்தியர் சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா?”

... இருக்க முடியவில்லை. அவர் ஆதாரத்தோடு, தெய்வம் இருப்பதை எனக்கு நிரூபித்துவிட்டார். . .”

“அப்படியானால், ரொம்ப சரி. உங்களோடு எனக்கு வேலை இல்லை. பயம் காரணமாய்த்தான் சாதாரணமாக மக்கள் தெய்வ நம்பிக்கை கொள்கிறார்கள். உங்களைத் தைரியசாலி என்று நம்பினேன். ஒன்றுமில்லாத ஒரு நோயுக்கு அஞ்சி, கடவுளிடம் அடைக்கலம் புகுந்துவிட்டீர்களே! சரி, நீங்கள் என்றைக்குத் திருந்தி, நம் கொள்கையில் உறுதிகொள்கிறீர்களோ, அன்றைக்குத்தான் நான் உங்களோடு வாழ முடியும். நீங்கள் திருந்தாவிட்டால், என்னை மறந்துவிட வேண்டியதுதான். . .”

விஷயம் இவ்வளவு விபரீதமான திருப்பம் கொள்ளும் என்று எதிர் பாராத என்னுடைய மலைப்பு அடங்கு முன், அவள் தன் புடவை முதலியவைகளை ஒரு பெட்டியில் வைத்துக் கொள்ளத் தொடங்கினாள். கோபத்தால் அவள் உடல் நடுங்குவதையும், கண் மணிகள் சிவந்து கண்களிலிருந்து வெளிப்பாய முயலுகிறவை போல் விரிவதையும் கவனித்தேன்.

“ஏன் அவசரப்படுகிறாய் வெண்ணிலா? . . .” என்று அவளைச் சமாதானப்படுத்த முயன்றேன் .

“கொள்கைக்காகத்தான் உங்களை ஏற்றேன். கொள்கை இழந்த பின் உங்களோடு இருக்க எனக்கு விருப்பம் இல்லை. டாக்டரால் உண்டான பிரமை நீங்கிய பின் எனக்கு எழுதுங்கள். வருகிறேன்” என்று கூறிக்கொண்டே பெட்டியைத் தானே தூக்கிக்கொண்டு தெருவுக்குச் சென்றுவிட்டாள் அவள். நான் கூப்பிடுவதையும் அவள் பொருட்படுத்தவில்லை. அவளுக்குப் பின்னால் ஓடி, மன்றாடி, தெருவில் ஒரு ஆபாசக் காட்சியை நடத்த நான் விரும்பவில்லை. குழம்பிய நெஞ்சுடன் அங்கேயே உட்கார்ந்துவிட்டேன். கோபம் தணிந்து திரும்பிவிடுவாள் என்கிற நம்பிக்கை கொஞ்ச நேரம் இருந்தது. வெகு நேரம் அவளைக் காணாததால் அவள் போய்விட்டாள் என்பது உறுதி ஆயிற்று.

எதிர்பாராத இந்த முடிவை டாக்டரிடம் தெரிவித்தேன்.

“நான் எதிர்பார்த்தேன். அவளைத் திருத்துவது கஷ்டம்” என்றார் டாக்டர்.

“எப்படியாவது அவளைக் காப்பாற்ற வேண்டும். அவள் மன்னார்குடியிலும் நான் இங்குமாக இருந்தால் ஒரு வேளை அவள் விவாக ரத்து கோரலாம் அல்லவா?”

“நிச்சயமாக அவள் அவ்வளவு தூரத்துக்குப் போகமாட்டாள். சில நாட்கள் பொறுமையாக இரு. கடிதமும் போடாதே. அவள் தானாகத் திரும்புவாள். அல்லது கடிதம் எழுதுவாள்.”

“அப்படி நீங்கள் நினைப்பதற்குக் காரணம் என்ன?”

“உன்னைவிட்டுப் பிரிந்திருக்க அவளால் முடியாது. நான் முன் சொன்னது போல், அவளை அண்டியுள்ள அசுத்த சக்தி ரத்தமும், உயிர்ச் சத்தும்

வேண்டித்தான் அவளோடு இருக்கிறது. அது அவளை உன்னிடம் துரத்தும்."

எனக்கும் வேறு வழி புலப்படாததால், அவர் கூறியபடி காத்திருந்தேன். அவருடைய யோசனைப்படி, என் உயிருக்குப் பாதுகாப்பாகவும், வெண்ணிலாவுக்கு உயிர்ப்பிச்சை கேட்கவும், வீட்டில் ஓர் அறையைப் பூஜைக்கு ஒதுக்கி, ராமரின் திருவுருவத்தை ஸ்தாபித்தேன். காலையிலும் மாலையிலும், ஓய்ந்த நேரங்களிலும் இடையருத ஜபமும் செய்யத் தொடங்கினேன்!

9

நோய் வலுக்கிறது

டாக்டர் சொன்னபடிகாத்திருந்தேன்; அவருடைய வார்த்தையில் எனக்கு எல்லையற்ற நம்பிக்கை உண்டாகிவிட்டது.

தினமும் ஆலயம் சென்றேன். முதலில் வெட்கமாக இருந்தது; பிறகு உண்மையை ஒளிப்பதே ஒரு பலஹீனம் என்கிற நினைவு வெட்கத்தை உதறியது. காலையில் நீராடி, பூஜை செய்த பிறகுதான் ஆகாரம் என்கிற நியதி ஏற்படுத்திக் கொண்டேன். பிரார்த்தனையின்போது வெண்ணிலாவைக் காக்கும்படி வேண்டிக் கொள்ள நான் தவறவில்லை.

அம்பலவாணர் கூறியது போலவே, ஏழு எட்டு நாட்களுக்குப் பின்னர், வெண்ணிலாவிடமிருந்து கடிதம் வந்தது.

"...உங்களைக் கோபித்துக்கொண்டு இங்கே வந்த பிறகுதான் என் தவறை உணர்ந்தேன். உங்களை விட்டுப் பிரிந்திருக்க முடியாது என்பதையும் உணருகிறேன். எப்போதும் உங்கள் நினைவாக இருக்கிறது...

"...மனிதருக்கு நோய் வருவதும், அதற்காக மருந்து உண்பதும் சகஜம். ஆனால், உடலின் வேதனையை மனத்தின் வியாதியாக நீங்கள் ஆக்கிக்கொண்டதைக் காண எனக்கு மிகவும் துன்பமாக இருக்கிறது. நோய்க்குப் பயந்து கொள்கையை நீங்கள் துறந்ததுபற்றி வருந்துகிறேன். டாக்டரை முதலில் பார்த்தபோதே எனக்கு அப்படித் தோன்றியது; அது போலவே நடந்து விட்டது. அவர் பிடியிலிருந்து உங்களை விடுவிக்கவேண்டும். அதற்கு நான் உங்களுக்குப் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

"ஆனால், என் உடல் நிலை இங்கு வந்த பிறகு மோசமாகிவிட்டது. அந்த மயக்கம் அடிக்கடி வருகிறது; எந்தப் படத்தை உற்றுப் பார்த்தாலும் என் உடல் தள்ளாடிவிடுகிறது; எதையும் பாராமலிருப்போம் என்று பேசாமல் இருந்தால் இருந்திருந்து நெருப்பு வைத்தாற்போல் உடம்பு முழுவதும் எரிச்சல் மூளுகிறது; நீர் பிரிவதை ஒரு விநாடிகூட அடக்கிக் கொள்ள முடியவில்லை; எதிலும் உற்சாகம் இல்லை; காரணம் இல்லாமல் கோபம் வருகிறது, வெறுப்பு உண்டாகிறது, உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும் என்கிற ஆத்திரம் உண்டாகிறது.

"இங்கே உள்ள ஒரு டாக்டரிடம் காட்டினேன். என் வியாதியின் லட்சணங்கள் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு, அவர் என்னைக் கோயிலுக்குப் போகச் சொல்லவில்லை! சென்னைக்குப் போகும்படி ஆலோசனை கூறினார். 'நீங்கள் சொல்லுகிறதைக் கேட்டால், உங்களுடைய மூளையில் 'டியூமர்' (சிறு கட்டி) இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். உடம்பிலேயே முக்கியமான அங்கம் மூளைதானே? அதில் கட்டியிருந்தால், உடலின் எந்த அங்கமும் சரியாக இயங்காது. சென்னைக்குப்போய் ஜெனரல் ஹாஸ்பிடல் சர்ஜன் எஸ். ஆர். கே. ராவைப் பாருங்கள். மூளைக் கட்டி இருந்தால், ஆபரேஷன் செய்துதான் அதை எடுக்க வேண்டும். எஸ். ஆர். கே. ராவிடம் இந்தப் பெரிய ('மேஜர்') ஆபரேஷனை தைரியமாக ஒப்படைக்கலாம். 'டியூமர்' இல்லை என்றால், வேறு என்ன கோளாறு என்பதை அவர் சொல்லிவிடுவார்', என்று மன்னார்குடி டாக்டர் சொன்னார். கால தாமதம் செய்தால் கஷ்டம் என்கிறார்.

"உங்களைப்போல் நான் கலங்கிவிடவில்லை. கோயில் சென்று, கல்லைக் கும்பிட்டு, நோயை நீக்கிக்கொள்ளலாம் என்று நான் நினைக்கவில்லை. சென்னை சர்ஜனைக் கலந்து முடிவு செய்வதெ[ன்று] தீர்மானித்துவிட்டேன். நாளை இ[...] நானும் அப்பாவும் சென்னைக்குப் போ[...]தென முடிவு செய்திருக்கிறோம்; நீங்[...]களும் உடன் இருந்தால், எனக்கு ஆறுதலாக இருக்கும். தயவு செய்து நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால், எல்லோரும் சேர்ந்து கிளம்பலாம். என் தவறைப் பாராட்டாமல் நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்..."

கடிதத்தைப் படித்த அம்பலவாணர் சொன்னார்: "மன்னார்குடி டாக்டர் சொன்னதில் தவறு இல்லை. மூளைக் கட்டி உடையவர்கள், வெண்ணிலாவைப்போலத் தான் நடந்துகொள்வார்கள்."

"அப்படியானால் அவளுக்கு 'டியூமர்' இருக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறீர்களா?"

"கிடையவே கிடையாது. எக்ஸ்ரே எடுத்துப் பார்த்துவிட்டோமே."

"அவள் சென்னைக்கு அழைக்கிறாளே? என்ன செய்வது?"

அம்பலவாணர் கொஞ்ச நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்த பின் கூறினார்: "நான் உன் அருகில் இருக்கக்கூடாது என்பதுதான் அவளைப் பிடித்துள்ள அசுத்தச் சக்தியின் திட்டமாக இருக்க வேண்டும். அவளோடு சென்னைக்குப் போ. சர்ஜனிடம் காட்டினால் டியூமர் இல்லை என்றுதான் சொல்லுவார். அவளோடு கூடவே இரு; அன்பாகப் பழகு; நீ இரவில் கண்ட கோரத்தை அவளிடம் சொல்லிவிடாதே; உன் வியாதி ஜபம் செய்ததால் நீங்கியது என்பதை மட்டும் அவள் மனம் நெகிழ்ந்துள்ள வேளை பார்த்துச் சொல்லு. அன்பு மூலம் அவளைக் கவர்ந்து நம் வழிக்கு அவளைத் திருப்ப முயற்சி செய்."

"டியூமர் இருப்பதாக சர்ஜன் சொன்னால்?"

எஸ். ஆர். கே. ராவ் மிகவும் கெட்டிக்காரர்; வியன்னாவிலும் அமெரிக்காவிலும் பயிற்சி பெற்றவர். அவசரப்பட்டு ஒரு முடிவும் செய்யமாட்டார். டியூமர் ஆபரேஷன் என்றால் உயிரைப் பணயம் வைக்கிற விஷயம்; மண்டையைப் பிளந்து ஒட்ட வேண்டும். எக்ஸ்ரே எடுத்ததும் டியூமர் இல்லை என்று தெரிந்துவிடும்; வேறு ஏதாவது மருந்து தருவாரே தவிர, ஆபரேஷன் செய்யமாட்டார்."

மன்னார்குடியில் வெண்ணிலாவைக் கண்டபோது ஓர் ஆயுள் காலம் பிரிந்திருந்தவள்போல் என்னைக் கட்டிக்கொண்டு அழுதாள். ஏழெட்டு நாட்களில் அவள் நீறு போல் வெளிறி இருந்ததைக் காண எனக்கு மிகவும் வேதனை உண்டாயிற்று.

"நீங்கள் வர மாட்டீர்கள் என்று பயந்தேன்" என்று அவள் விசித்தாள்.

"வராமல் இருப்பேனா?" என்று அவளுக்கு ஆறுதல் கூறினேன்.

நானோ அவளோ டாக்டரைப் பற்றியே பேசவில்லை. சந்தர்ப்பம் பார்த்துப் பேசலாம் என்று காத்திருந்தேன். அன்றிரவே, அவளுடைய தந்தையுடன், நாங்கள் சென்னைக்குப் புறப்பட்டோம்.

நோயின் முடிவு

எஸ். ஆர். கே. ராவைக் காலையில் அவர் வீட்டுக்குப் போய்ப் பார்த்தோம். மாதம் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கிறவர் என்று சொல்லப்படுகிற அவரும், அம்பலவாணரைப்போல் மிகுந்த தெய்வ பக்தியுடையவர் என்பது நோயாளிகள் காக்கும் அறையில் கால் வைத்ததும் தெளிவாகியது. தலைக்கு மேலே, சஞ்சீவி மலையைச் சுமந்துவரும் மாருதியின் பெரிய சித்திரம் ஒன்று சுவரில் பொருத்தியிருந்தது. வெண்ணிலா அப்படத்தைக் காணக்கூடாது என்று நான் நினைப்பதற்குள் அவள் அதைப் பார்த்துவிட்டாள். பார்த்ததும், காற்றில் அலைக்கழிக்கப்படும் துரும்பு போல் குதிக்கவாரம்பித்தாள். அவளை வலுக்கட்டாயமாக இழுத்துப் பார்வையை வேறு புறம் திருப்பிய பிறகுதான் அவளுடைய ஆட்டம் நின்றது.

அந்த ஆட்டத்துக்கு இடையிலேயே, ராவ் அங்கே வந்துவிட்டார். அவளுடைய 'வலிப்பு' அடங்கிய பிறகு, அமைதியாக அமர்ந்து, நோயின் வரலாறு முழுவதையும் கேட்டுக்கொண்டார்.

"நீங்கள் சொல்லும் அறிகுறிகளைக் கேட்டால் மூளைக் கட்டி ('பிரெய்ன் ட்யூமர்') தான் என்று தோன்றுகிறது, எக்ஸ்ரே எடுத்துப் பார்ப்போம்" என்றார்.

"கும்பகோணத்தில் எக்ஸ்ரே எடுத்தோம். டியூமர் இல்லை என்று அந்த டாக்டர் சொன்னார்" என்றேன்.

"இங்கு எடுத்துப் பார்க்கலாம். உடலில் மூளை சரியாக இயங்கினால்தான் அவயவங்கள் சரியாக இயங்கும். காது கேட்பது, கண்ணால் பார்ப்பது, காலால் நடப்பது—முதலிய எல்லா வேலைகளும், மூளை சரியாக இருந்தால்தான் சரிவர நடக்கும். மூளையை அவயவங்களுடன் இணைக்கும் நரம்புகளை டியூமர் பாதிக்கிறது. அதனால் எதையும் சரியாகப் பார்க்க முடியாது; கேட்க முடியாது; மூளையில் கிரகித்துக் கொள்ளவும் முடியாது. எக்ஸ்ரே எடுப்போம். பார்த்துக்கொண்டுதான் எதுவும் செய்ய முடியும்."

அப்பால் அவர், அவளுடைய ரத்தம், நீர் முதலியவற்றைச் சோதனைக்கு எடுத்துக்கொண்டு, எக்ஸ்ரேயும் எடுத்தபின், மாலை ஆறு மணிக்கு வரும்படி கூறி எங்களுக்கு விடையளித்து அனுப்பிவிட்டார்.

'டாக்டர் அம்பலவாணர் கூறியபடி, எக்ஸ்ரே மூளைக்கட்டி ஏதும் காண்பிக்காது. ஆகையால் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை' என்று நான் சற்று அலட்சியமாகவே இருந்தேன். அவளோடு மிகவும் நெருக்கமாய்ப் பழகினேன். சரியானதொரு சந்தர்ப்பத்தில் அவளிடம் பேசி, அவளைத் தெய்வ நெறிக்குத் திருப்ப வேண்டும் என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

ஆனால் விதி வேறு பாட்டையில் சென்றது!

சென்னையில் நாங்கள் வாடகைக்கு எடுத்த ஜாகைக்குத் திரும்பியபோது வெண்ணிலா மிகவும் களைப்பாயிருந்தாள்; ஜாகைக்கு வந்ததும் அவள் அயர்ந்து தூங்கிவிட்டாள். சுமார் பன்னிரண்டு மணிக்கு எங்கள் மூவருக்கும் ஹோட்டலிலிருந்து 'டிபன் காரியரில்' சாப்பாடு வந்தது. அவள் விழித்த பின் சாப்பிடலாம் என்று நானும் அவள் தந்தையும் காத்திருந்தோம். ஒரு மணிக்கு மேல்தான் அவள் கண் விழித்தாள்.

"கூத்தரசு என்றால் நடராஸா; நடராஸா என்றால் நடனமாடும் ராஸா. இடது காலைத் தரையில் வைத்து, வலது காலை மேலே தூக்கி, தைதை என்று குதிப்பார் நடராஸா, நம் நடராஸா!" என்று பாட்டுப் பாடுவதுபோல் நீட்டி அவள் பேசியதைக் கேட்டு நாங்கள் இருவரும் திடுக்கிட்டோம்.

பைத்தியக்காரி போல் அவள் கோலாகலமாய்ச் சிரித்தாள். அவள் முகத்தில் பிரேதக்களை வீசியது; கண்கள் எங்களை வெறித்து நோக்கின. நான் பயம் கொண்டேன்.

என்னைப் பார்த்துக்கொண்டே அவள் பாடவாரம்பித்தாள்:

"நடராஸா—நம்ம நடராஸா,
நம்பியவருக்கு எமராஸா!
நடராஸா—நடராஸா,
சுடுகாடு வா ராஸா!....."

சிறிது நேரம், கண்களை மூடிக்கொண்டு மௌனமாயிருந்தாள்.

பிறகு, "ராமனைத் தெரியுமா உங்களுக்கு? சோத்துராமன், சாப்பாட்டு ராமன்" என்று நகைத்தபடி சாப்பாடு வந்திருந்த 'செட்டு'களைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டாள் அவள்.

"ராஸா, நீங்கள் எனக்குப் பரிமாறுங்கள். உங்கள் கையால் சாப்பிட்டுவிட்டு, வெகுதூரம் போகப் போகிறேன்."

பிரமைகொண்டு நின்ற நான், இலை போட்டுக்கொண்ட அவளுக்குப் பரிமாறினேன். அவள் பேசுவதையும் நிறுத்தவில்லை; சாப்பிடுவதையும் நிறுத்தவில்லை. எங்கள் மூன்று பேருக்காக மூன்று எடுப்பு சாப்பாடு வந்திருந்தது; மூவரும் சாப்பிட்டு எஞ்சும். அவள் ஒரு எடுப்பை மிக வேகமாய்ச் சாப்பிட்டு முடித்தாள்.

"ராஸா, சோறு போடாமல் ஏன் நிற்கிறீர்கள்?"

"மோர் சாதம் சாப்பிட்டுவிட்டாயே; இன்னும் வேண்டுமா?" என்றேன்.

"நான் எப்போது சாப்பிட்டேன். எனக்குச் சோறு போடக்கூட உங்களுக்கு மனசு இல்லை. வீட்டை விட்டுத் துரத்தினீர்கள்; பட்டினி போட்டுக் கொல்லப் பார்க்கிறீர்களா?" என்று அவள் வாய்விட்டுப் புலம்பத் தொடங்கினாள்.

"இன்னும் கொஞ்சம் போடுங்களேன்" என்றார் அவள் தந்தை.

மறுபடியும் சாம்பாரிலிருந்து மோர் சாதம் வரை சாப்பிட்டு, இலையைச் சுத்தமாகத் துடைத்துவிட்டு, சோற்றுக்காகக் காத்திருந்தாள் அவள்! அவள் சாப்பிடுவதைப் பார்க்கவே எனக்கு அச்சமாயிருந்தது.

"எழுந்திரு, வெண்ணிலா!" என்றேன். "இவ்வளவு சாப்பிட்டால் உனக்கு ஆகாது."

"அப்பா, ராஸாவுக்கு என்னைக் கண்டால் பிடிக்கவில்லை. சோறு போடக் கூடத் தயங்குகிறார். நீங்கள் எனக்குச் சோறு போட மாட்டீர்களா, அப்பா?" என்று பெருங்குரலில் அழுதாள்.

அவளுடைய கூச்சலுக்கு அஞ்சி மூன்றாவது 'ஸெட்'டையும் பிரித்துப் பரிமாறினோம். அதையும் காலி செய்துவிட்டாள். இன்னும் அவள் சாப்பிட்டிருப்பாள். ஆனால் சாப்பாடு இல்லை. அவளை இலை முன்னாலிருந்து வலுக்கட்டாயமாக எழுப்பி, கைகளை அலம்ப வைத்தேன்.

"ராஸா, உன் கைபட்டாலே என் வயிறு நிரம்பிவிடுகிறது!" என்னை 'நீ' என்று ஏகவசனத்தில் முதன் முறையாக அப்போதுதான் அவள் பேசினாள்.

எனக்கு ஒரே குழப்பம் ஆகிவிட்டது. அவள் ஒரு நிமிஷமும் மௌனமாயிருக்க மறுத்தாள். வாய் கொண்டு சொல்ல முடி

ராத வகையில் ஆபாசமாகப் பேசினாள். ரத்தம் குடிக்க வேண்டும் என்றும், சுடுகாட்டில் சென்று பிணங்களைப் பிடுங்கித் தின்ன வேண்டும் என்றும், பயங்கரமாகப் பேசினாள். நாங்கள் அனுபவித்த இன்பத்தைப் பச்சையாக வருணித்துப் பாட்டாகவே பாடினாள். என்னையும், மாமனாரையும் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நகரவிடாமல், எங்களைச் சுற்றிச்சுற்றி ஆடினாள். கடைசியில் அவளாகவே ஓய்ந்து, மாலை நாலரை மணிக்குத் தூங்கிவிட்டாள்.

அவளுடைய பேச்சைக் கேட்டவர்கள் அவளைப் பைத்தியக்காரி என்றுதான் நினைப்பார்கள். அவள் தந்தையும் அவ்வாறுதான் எண்ணினார். ஆனால் எனக்கு டாக்டர் அம்பலவாணர் கூறியதன் உண்மை தெளிவாயிற்று. சென்னைக்கு வந்ததே பிசகு என்று நினைத்தேன். திரும்பிவிடலாம் என்றால், இந்த அலங்கோலமான நிலையில் எப்படித் திரும்புவது? அவளுடைய முகக் கோரமும், பயங்கரமும் என் திகிலை வளர்த்தன. இறைவனிடம் அவள் உயிருக்காக மன்றாடிக் கொண்டிருந்தேன்.

ஆறு மணிக்கு முந்தியே அவள் தூக்கம் கலைந்தது. அவள் முகத்தில் பைத்தியத்தின் அறிகுறி எதுவும் காணவில்லை.

"அரசு, மணி என்ன? ரொம்ப நேரம் தூங்கிவிட்டேன் போலிருக்கிறது" என்று எப்போதும்போல் குழைவாகப் பேசினாள் அவள். மத்தியானம் ஆடிய ஆட்டம் அவளுக்கு நினைவில்லைபோலும். நானும் அதைப்பற்றிப் பேச விரும்பவில்லை.

சர்ஜனிடம் சென்றதும், மத்தியானம் நடந்ததை அவரிடம் விவரமாகத் தெரிவித்தேன்.

"எனக்கு ஒன்றும் ஞாபகம் வரவில்லை" என்றாள் வெண்ணிலா, முகம் வாடி.

சர்ஜன் அமைதியாகக் கூறினார்: "அப்படியானால் கேஸ் ஸீரியஸ் ஆகிவிட்டது. உடனடியாக ஆபரேஷன் செய்து டியூமரை எடுக்காவிட்டால் அபாயம்தான். இப்போது செய்வதால், குணமாவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது."

அவர் சொன்னதைக் கேட்டு இடிந்து போனேன். "அப்படியானால், டியூமர்தான் என்கிறீர்களா? கும்பகோணம் டாக்டர் இல்லை என்றாரே. எக்ஸ்ரே—"

"எக்ஸ்ரே பார்த்துத்தான் சொல்லுகிறேன். நானாகவா சொல்லுகிறேன்?" என்ற சர்ஜனின் குரலில், அவர் திறமை சந்தேகிக்கப்பட்ட ஆத்திரம் ஒலித்தது.

"ஆனால்..." என்று நான் ஆரம்பித்த போது, வெண்ணிலா குறுக்கிட்டாள்: "அந்த நாட்டுப்புற டாக்டர்தான் 'அதாரிட்டி' என்று உங்கள் நினைப்போ?"

பொறியில் அகப் பட்டுக்கொண்ட விலங்கு போல், தவித்தேன். அவளிடம் வாதாடாமல் சர்ஜனிடம் கெஞ்சினேன்: "டாக்டர், ஆபரேஷனைத் தவிர வேறு சிகிச்சை இல்லையா?"

"கிடையாது. மூளையின் முக்கியமான வேலையை டியூமர் பாதிக்கத் தொடங்கிவிட்டது. நோயாளியினால் சரியாகச் சிந்திக்க முடியாது. தெளிவாக எதையும் சொல்ல முடியாது. செய்ததும் ஞாபகத்தில் இராது. மூளைக்கட்டியால் ஏற்படக்கூடிய பயங்கரமான கோளாறு இதுதான். இந்த நிலை அதிக நாள் நீடிக்காது. சில நாட்கள் போனால்—சுத்தமாக பைத்தியமே பிடிக்கும். அந்தப் பைத்தியத்தைக் குணப்படுத்தவே முடியாது. நடக்கும்போதோ, உட்காரும்போதோ தடுமாறிக் கீழே விழுந்து உயிருக்கு அபாயம் ஏற்படும்" என்று விவரமாக வருணித்த சர்ஜனை நான் ஒரு அரக்கனாகவே கண்டேன்.

எதற்கும் டாக்டர் அம்பலவாணரை அழைத்து வைத்துக்கொண்டால் நல்லது என்று நினைத்துக் கேட்டேன்: "நீங்கள் சொல்லுவதுபோல் செய்யலாம். ஆபரேஷனை இன்னும் மூன்று நாள் கழித்து வைத்துக்கொள்ளலாமா?"

"சரியாகப் போயிற்று. இனி தாமதித்தால் பிரயோசனம் இல்லை. இன்று இரவு பொறுப்பதே தவறு. நாளை ஆபரேஷன் செய்தால்—ஒரு சான்ஸ் பார்க்கலாம். நாளை கழித்து என்றால் நான் ஆபரேஷன் செய்வதற்கு ஒப்புக்கொள்ள மாட்டேன். உங்கள் சௌகரியம்போல் செய்யுங்கள்."

வெண்ணிலா என்னை வெறுப்புடன் பார்த்துவிட்டு, சர்ஜனிடம் சொன்னாள்: "நான் ஆபரேஷனுக்குச் சம்மதிக்கிறேன். பைத்தியக்காரியாக அலைய எனக்கு இஷ்டம் இல்லை. அதற்குப் பதிலாகச் சாவதே மேல். என் கணவருக்கு அந்தப் பட்டிக்காட்டு டாக்டர் சொன்னால்தான் நம்பிக்கை உண்டாகும். கோயிலுக்குப் போனால் குணமாகும் என்று அந்த டாக்டர் சொல்வார். இந்த அறிஞரும் அதை ஆமோதிப்பார். இனிமேல் ஆராய்ச்சி, மருந்து ஒன்றும் வேண்டாம். வருகிற நோயாளிகளை எல்லாம் கோயிலுக்கு அனுப்புங்கள். ஒரு மூட்டை விபூதி வைத்துக்கொண்டு எல்லா நோயாளிகளுக்கும் விநியோகம் செய்யுங்கள். வியாதிகள் பறந்து போகும்!" என்று எகத்தாளமாய் அவள் கிண்டல் செய்தாள். அவள் பேசுவதாக எனக்குத் தோன்றவில்லை. அவளுக்குள்ளிருந்து வேறு யாரோ பேசுவதாகவே எனக்குத் தோன்றியது. அவள் குரலில் வெறி நிறைந்த உறுதி இருந்தது.

"என்ன தம்பி, டாக்டரே சொல்கிறார். நீ இப்படிச் சொன்னால் என்ன ஆகிறது? மறுபடியும் ஒத்திப்போட்டு உயிருக்கு அபாயம் நேர்ந்தால் என்ன செய்கிறது?" என்று அவள் தந்தை தழுதழுத்தக் குரலில் கூறினார். புதல்வியின் மீது இருந்த பாசம் அவரை அப்படிப் பேச வைத்தது.

என்ன கூத்து இது! எங்கும் ஓடி ஒளிய முடியாத திறந்தவெளியில் மரணத்துடன் போராட முயன்று கொண்டிருந்தேன்! அதுவோ, என்னைத் துரும்பாக எள்ளியது!

சர்ஜன் சொன்னார்: "நானும் தெய்வ நம்பிக்கையுடையவன். அதற்காக நாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் கைகட்டிக்கொண்டு இருக்க முடியுமா? எனக்கு ஆபரேஷன் செய்யத்தான் தெரியும். உயிரைக் கொடுக்கவோ, காப்பாற்றவோ தெய்வத்தால்தான் முடியும். இன்று இரவு பிரார்த்தனை செய்துகொள்ளுங்கள்."

என் தலை ஆடிக்கொண்டிருந்தது. 'அம்பலவாணர் நிச்சயமாக மூளைக்கட்டி இல்லை என்கிறார். அவருக்கு ஆதாரம் எக்ஸ்ரேதான். சர்ஜன் கட்டி இருப்பதாய்க் கூறுகிறார். அவருக்கும் ஆதாரம் எக்ஸ்ரேதான். வெண்ணிலா ஆடிக்குதிப்பதை மூளைக்கட்டியினால் உண்டான கோளாறு என்கிறார் சர்ஜன். அது அசுத்தமான சக்தியின் ஆட்டம் என்கிறார் டாக்டர். எதை நம்புவது?' அம்பலவாணரைத்தான் நான் நம்பினேன். ஆனால் எக்ஸ்ரே முடிவு பற்றி என்ன நினைப்பது?

இருட்டில் எனக்கு விளைந்த துன்பம் நீங்கியதால் கடவுளின் உண்மை எனக்குச் சந்தேகமறத் துலங்கிவிட்டது. ஆனால் அம்பலவாணர் எக்ஸ்ரேயைச் சோதனை செய்ததில் பிசகு இருந்து (பிசகு சகஜம்தானே?) வெண்ணிலாவுக்கு உண்மையாகவே டியூமர் இருந்து, அதைக் குறித்த காலத்தில் ஆபரேஷன் செய்யாமல் அவளுடைய உயிருக்கே கேடு விளைந்தால்—அதற்குப் பொறுப்பாளி யார்?

"என்ன யோசிக்கிறீர்கள்? நாளைக்கு ஆபரேஷன் நடக்க வேண்டியதுதான். அரசு, மனத்தை ஏன் தளரவிடுகிறீர்கள்?" என்று சற்று நயமாகப் பேசினாள் வெண்ணிலா.

"தம்பி, யோசனை செய்வதற்கு என்ன இருக்கிறது?" என்றார் மாமனார்.

"காலை ஒன்பது மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வந்துவிடுங்கள். பூர்வாங்கமான

வேலைகள் முடிந்து, ஆபரேஷன் ஒன்று அல்லது இரண்டு மணிக்கு நடக்கும்" என்று முடிவு கூறினார் சர்ஜன்.

அவர் வீட்டைவிட்டு வெளிவந்த பிறகும் என் குழப்பம் தீரவில்லை. நம்பிக்கையின் சிறு சுடர் இன்னும் என்னுள் எரிந்தது. இரவு மணி ஏழரைதான் ஆகியிருந்தது. டாக்டர் அம்பலவாணரைப் போனில் அழைத்து, விவரம் கூறி, நாளைக் காலைக்குள் இங்கு வந்து சேரும்படி செய்தால்–வெண்ணிலா பிழைத்துவிடுவாள் என்று நினைத்தேன்.

வெண்ணிலாவுக்கும் தெரியாமல் டாக்டரைப் போனில் கூப்பிட்டேன். அவர் ஊரில் இல்லை, எந்த ஊருக்குப் போயிருக்கிறார் என்றும் பதில் வரலே–என் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. 'உயிர்கள் தோன்றுவதும், மறைவதும் தெய்வத்தின் சித்தம். அதுதான் அவளைக் காப்பாற்ற வேண்டும்' என்று அந்த இரவு முழுவதையும் பிரார்த்தனையில் கழித்தேன்.

மறு நாள் ஆபரேஷன் தியேட்டருக்குப் போகு முன்னால்–வெண்ணிலா மிகவும் தெளிவாக இருந்தாள். புன்னகை செய்தவாறு, எல்லோர் முன்னிலையிலும் என் கன்னங்களைத் தீண்டி, "அரசு, ஏன் இவ்வளவு அதைரியப்படுகிறீர்கள்? மறுபடியும் நாம் சந்திப்போமென்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பயப்படாதீர்கள்!" என்று கனிவாய்க் கூறியபோது என்னால் பொறுக்க முடியவில்லை. . .

பிறகு நடந்த கதை உங்களுக்குத் தெரியும். டாக்டர் சொன்ன பிறகுதான் உண்மையாக அவளுக்கு டியூமர் இல்லை என்பது தெரிந்தது.

அவளை நான் மனப்பூர்வமாக நேசித்தேன். அவளுடைய மரணம் எனக்குப் பெரும் வேதனையாகத்தான் இருக்கிறது. தோற்றம், வளர்ச்சி, மறைவு என்கிற அடிப்படையில் பல கோடி உயிருள்ளவைகளையும், உயிர் இல்லாதவைகளையும் படைத்து, வினை–விளைவு என்னும் சட்டத்தால் அவைகளை ஆட்டிவைக்கும் மகா சக்தியின் முன்னிலையில் நாம் அனைவரும் சிறு துகள்கள். 'அறிந்துவிட்டேன்' என்று மனிதன் அகந்தை கொள்வதற்கு ஏதும் இல்லை. அவன் அறிய வேண்டியதுதான் அதிகம் என்கிற உண்மையை, அவளுடைய மறைவு எனக்கு உணர்த்திவிட்டது. அவளுடைய ஆன்ம சாந்திக்காக என் தெய்வத்திடம் பிரார்த்திக்கிறேன்— ..."

11

ஒளி வழி

பனியையும், காற்றையும் உள்ளுக்கிழுத்து உள்ளத்து வெம்மையை ஆற்றிக்கொள்ள விரும்புகிறவன்போல் ஆழ்ந்த மூச்சுவிட்டுக்கொண்டே தன் அனுபவத்தைக் கூறி முடித்தான் கூத்தரசு.

வியப்புடனும், பரபரப்புடனும் அதைக் கேட்டுக்கொண்டிருந்த நான், நெருப்பு அணைந்திருப்பதையும், கொட்டும் பனியில் நாங்கள் உட்கார்ந்திருந்ததையும் கவனித்தேன். கூத்தரசு தன் பேச்சை நிறுத்தியதும் மறுபடியும் நெருப்பை மூட்டும் முயற்சியில் ஈடுபட்டேன். டாக்டர் அம்பலவாணர், இரு முழங் கால்களையும் அணைத்துக்கொண்டு தூங்குவதையும் அப்போதுதான் கவனித்தேன்.

வெகு நேரம் அந்த இடத்தில் மௌனம் நிலவியது. நான் டாக்டரை உசுப்பி எழுப்பினேன்.

"சரி, கார் தயாரா?" என்றார் அவர்.

"என் கதை இப்போதுதான் முடிந்தது" என்றான் கூத்தரசு.

"ஒரு தூக்கம் போட்டாகிவிட்டது. இனி எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் விழித்திருப்பேன்."

"அது இருக்கட்டும், டாக்டர், நீங்களும் ஒரு தவறு செய்துவிட்டீர்கள். வெண்ணிலாவிடம் ஆரம்பத்திலேயே உண்மை கூறியிருந்தால்?"–என்றேன்.

"நான் செய்த தவறு அது அல்ல. நாங்கள் சொல்லியிருந்தால், அவள் அப்போதே மன்னார்குடி போயிருப்பாள். அவளிடம் பேசி வாதாடாமல், வலுக்கட்டாயமாக அவளைக் கோயிலுக்கு இழுத்துச் சென்றிருக்க வேண்டும். அதைச் செய்யாததுதான் என் தவறு."

"கோயிலுக்குப் போனால் குணம் ஆகியிருக்கும் என்று அவ்வளவு உறுதியாக நம்புகிறீர்களா நீங்கள்?" என்று அவரைக் கேட்டேன்.

"நிச்சயமாக. மருந்தினால் குணமாகும் வியாதியானால் மருந்துதான் கொடுத்திருப்பேன். என் நோயாளிகள் எல்லோரையும்–வெண்ணிலா சொன்னது போல்–கோயிலுக்கா அனுப்புகிறேன்? அவளுடைய கோளாறு மருந்தால் தீருவது அல்ல என்பதுதான் தெளிவாகிவிட்டதே!"

"ஆனால் உங்களுக்கு இந்த மர்மமான கோளாறு பற்றி இத்தனை விஷயங்கள் எப்படித் தெரிந்தன?"

"அது ஒரு தனிக் கதை. மற்றொரு சமயம் சொல்லுகிறேன். கூத்தரசின் அனுபவத்தைவிட சுவாரசியமாக, நம்ப முடியாததாக இருக்கும். அது இருக்கட்டும். கூத்தரசு, நீ இனி என்ன செய்யப் போகிறாய்?"

"நானா? . . . இனி நான் கல்யாணம் செய்துகொள்ளப்போவதில்லை. நான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளப்போகிறேன். என் உயிரைக் காப்பாற்றிய 'ஒளி'யின் உண்மை உருவத்தை அறியும்வரை–எனக்கு வேறு வேலையோ, கடமையோ இல்லை."

"டிரைவர், இன்னுமா உன் வேலை முடியவில்லை? இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகிறதே!" என்று கூவினார் டாக்டர்.

"என்ஜின் சரியாகிவிட்டது. லைட்டையும் சரி பண்ணிக்கொண்டு புறப்படுவோம். பொழுது விடியும்போது கும்பகோணம் போய்விடலாம்."

(முற்றிற்று)

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்ட புண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் **களிம்பு.**

சைபால் CIBOL

ரமணீஸ்

பேபி கிரைப்

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய **சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.**

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி,

மதுரை.

எங்கள் வைத்தியரைக் கேளுங்கள்

120. ஆர். கி. பெங்களூர்.

அதிக வியர்வை. ஒரு மணி நேரத்திற்கொரு தரம் சட்டையை மாற்ற வேண்டி இருக்கிறது. என்ன செய்யலாம்?

இது உடன் பிறந்த கூறு. எனக்குத் தெரிந்த வரையில், இயற்கையை மாற்ற முடியாது.

121. எல். வி. எல். பெங்களூர்.

மருந்துகளைச் சாப்பிடும் வகையில் சில ஸந்தேகங்கள்.

பதிலளிக்கப்பட்டது.

122. கே. எஸ். பேராவூரணி.

330/55–ல் சொன்ன சிகிச்சைகளைச் செய்து வருகிறேன். குணம் காண வில்லை. என்ன செய்யலாம்?

போதுமான அளவு மருந்து உபயோகித்தாகவில்லையெனத்தோணுகிறது. உதாரணமாக, ஆறு மாதமாகச் சாப்பிடுகிறேன் என்றால் போதுமா? ஒரு மாதத்தில் சாப்பிட்டு முடிக்க வேண்டிய மருந்தை ஆறு மாத காலத்தில் நீட்டி முழக்கிச் சாப்பிட்டால் குணங் காண முடியுமா?

மருந்தின் அளவை அதிகரித்தும், அனுபானத்தை மாற்றியும் உபயோகிக்க வேண்டும். குணம் கிடைக்கும் வரை பொறுமையை இழக்கலாகாது.

123. ஸ்ரீமதி ஜே. மன்னார்குடி.

கர்ண நாதத்திற்காக நீங்கள் தெரிவித்தபடி க்ஷீரபாலா தைலத்தை 15 நாளாக உபயோகித்து வருகிறேன். தலையில் அரிப்பு. முடி உதிர்கிறது. "மயிர் கொட்டி மொட்டையாய்விடுமா?"

இல்லவே இல்லையம்மா! கட்டாயமாக இல்லை. மூன்று முறை ஆவர்த்தித்த க்ஷீரபலா தைலத்தில் கொழுப்பு (நெய்) அதிகமிருக்கும். காலத்தையொட்டி வியர்வை இந்த தைலமுமாக ஒரு ஜீட்டு ஏற்பட்டு முடிகளின் வேர் நொந்து உதிரலாம்.

இது ஒரு பெரிய காரியமா? கர்ண நாதம் குணமானால் எவ்வளவோ பெரிய ஸாதனையல்லவா? இத்தைலத்தை நிறுத்தினாலே ஒரு வாரத்தில் முடி உதிர்வது நின்றுவிடும். . பிறகு தானே உதிர்ந்தவை முளைக்கவும் செய்யும். இதெல்லாம் எப்போது? ஒருக்கால் இந்த தைலத்தால்தான் முடி உதிர்வதானால் அல்லது வேறு காரணத்தால் முடி உதிர்வதானால், க்ஷீரபாலா உபயோகிக்கத் தொடங்கியது காகதாளீயநியாயம் ஆகும். எப்படியானாலும் கர்ணநாதம் போகட்டும். முடி வளரச் செய்வது ஒரு காரியமேயல்ல. ஓரளவாவது கர்ண நாதம் மாறியதும் எழுதவும்.

124. ஸ்ரீமதி எம். ஜே. துறையூர்.

(1) சகோதரிக்கு வயது 20. அடிக்கடி ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும். ஆனால் சரீரம் உஷ்ண சரீரம்.

(2) தனக்கு வயது 17. உயரம் 4 அடி 10½ அங்குலம். எடை 84 ராத்தல். உயரம் அதிகரிக்க வேண்டும்.

(3) அண்ணிக்கு வயது 28. தேகம் மெலிவு. பலஹீனம்.

(1) கேள்வி 3–ன் பதிலைப் பார்க்கவும்.

(2) கேள்வி 107–ன் பதிலைப் பார்க்கவும்.

(3) கேள்வி 6–ன் பதிலைப் பார்க்கவும்.

125. எஸ். எச். ர. ஆம்பூர்.

இரண்டு மாதமாகக் கண் வலி. அதில் சிற்சில உபத்திரவங்களும் பெருகி இப்போது சிவப்பு மாறாமல் நின்றுவிட்டது. "படித்தால், கொஞ்ச தூரம் பார்த்தால், மங்கலாகத் தெரிகிறது." என்ன செய்யலாம்?

கால தாமதமின்றி தக்க கண்வைத்திய நிபுணரின் ஆலோசனையையும், உதவியையும் பெறவும். பிறகு வேணுமானால் நிபுணர் தெரிவித்த தகவலையும் குறித்து எழுதவும்.

126. ஸ்ரீமதி ல. திருவல்லிக்கேணி.

பெண்களுக்குத் தனிப்பட்டதான உபத்திரவம். பிரசுரிப்பதற்கில்லை. நேரிடப் பதிலெழுத, விலாசமல்லை. தன் விலாசம் எழுதிய கவர் உள்ளடக்கம் வைத்திருப்பதாக எழுதியுள்ளார். ஆனால் வைக்க மறந்துவிட்டார். பத்திரிகையிலும் பதிலெழுத முடியாது. நேரிட எழுதவும் விலாசமில்லை. அவலப் பெண்!

குச்சா மாமா

127. டி. எஸ். ஆர். புத்தூர்.

சிறுநீருடன் "கோழை போன்ற திரவம்" மலம் கழிக்கும்தோறும் வருகிறது. இது எதனால்? போக்க என்ன வழி?

விவரம் போதாது. முதலில் இந்த 'திரவம்' என்னவென்று மூத்திரப் பரீட்சை செய்து நிச்சயிக்க வேண்டும். வயதும் தெரிய வேண்டும். பிறகு வேணுமானால் ஆலோசனை சொல்லலாம்.

128 கே. வெ. பம்பாய் (16).

17 வயது கல்லூரி மாணவன். 1952–ல் 5.5 கண்ணாடி உபயோகித்து வந்தார். தற்போது –9க்கு வந்திருக்கிறது. என்ன செய்யலாம்?

கண்ணைப்பற்றி எனக்கு அதிகம் அனுபவமில்லை. ஆயினும்,

(1) முருங்கைக் கொழுந்தைக் கசக்கிப் பிழிந்த ரஸம் 4–5 துளிகள். இத்துடன் தேன் 4–5 துளிகள். இரண்டையும் குழைத்து, இரண்டு கண்களிலும் அஞ்ஜனமிடவும். சிறிது நேரமாகி, சிறிது கண்ணீரும் போன பிறகு கண்களைக் கழுவ வேண்டும். இதற்கு

(2) கடுக்காயத் தோல், தானிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, அதிமதுரம் ஆகியவற்றை இடித்துச் சமனெடையில் கூட்டிக் கலந்து வைத்துக்கொள்ளவும். இந்த சூரணத்தில் (பெருந் தூளாக இருந்தாலே போதும்) 2 பலத்தை 32 ஔன்ஸ் ஜலத்திலிட்டு சிறு தீயால் காய்ச்சி, 8 அவுன்ஸ் கஷாயமாகச் சுண்டிய பிறகு கஷாயத்தை (நன்றாய் சுத்தமான துணியில்) வடிகட்டி, ஆறியதும் இதில் ஒரு ஸ்பூன் தேனுங் கலந்து கொண்டு–இதனால் கண்களை (மருந்திட்ட பின்) கழுவ வேண்டும். கனீனகத்தில் (மூக்கின் அருகிலுள்ள பாகம்) இங்கிஃபில்லராலோ வேறு அவ்வகை உபாயத்தாலோ இக்கஷாயத்தை ஒழுகவிட்டு, அது கண்ணைக் கழுவி அபாங்கத்தின் (கடைக் கண்ணின்) ஓரமாக வழியுமாறு வகை செய்து, அவ்விடத்தில் ஒரு தட்டை ஏந்திக் கஷாயத்தை ஏற்கவும். இதிலிருந்தே மறுபடி மறுபடியும் கஷாயத்தை எடுத்து மேற்சொன்னதுபோல் ஒழுக விடலாம். இவ்வாறு ஒவ்வொரு கண்ணிற்கும் 20–30 தரம் ஒழுகவிட்டுக் கண்களைக் கழுவிக்கொள்ள வேண்டும்.

(3) படோலாதிகிருதம் என்ற மருந்தில் காலை, மாலை ஒவ்வொரு டீஸ்பூனளவு உள்ளுக்குச் சாப்பிடலாம்.

(4) திரிபலாதி சூர்ணத்தில் ½ டீஸ்பூனளவு. இதில் 10 துளி தேனும், 1 டீஸ்பூன் நெய்யுமாகக் கூட்டிக் குழைத்ததை இரவில் படுக்கும் முன் சாப்பிட்டு வர கண்களுக்கு பலமும், சகிப்புத்தன்மையும் கூடுதலாகும்.

பத்தியங்கள்:–

"ஆதவன் தன் விளக்கொளியும் ஆகா,
ஆகா.
மாதருடன் அபினி கஞ்ஜா மயக்கவகை
ஆகா, ஆகா.
ஓதலுடனுடல் பாடல் ஓதமிவை ஆகா,
ஆகா..."

என்று பத்தியங்கள் வெகு நீளமான பாடல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இனும்! இனும்!! இனும்!!!

பூரண ஆரோக்யம்
இன்ப வாழ்க்கை
நல்ல சந்ததிக்கு வழி

"தம்பதி விகாசம்"

மேன்மையான
உங்கள் ஜீவிதம்
சௌக்யமாகவிருக்க
ஓர் வழிகாட்டும்
புஸ்தகம்.

மதன் மஞ்சரி பார்மஸி,
ராம்வாடி, கல்பா தேவி ரோட்,.
பம்பாய்-2.

சுருக்கத்தில் சொல்லப்போனால், மிகவும் சிறியவை, மிகவும் பிரகாசமானவை, பயத்தையோ அருவருப்பையோ உண்டாக்கக்கூடியவை, அதிஸமீபத்திலிருப்பவை அதிதூரத்திலிருப்பவை இவற்றைப் பார்த்தல் கூடாது.

இரண்டு மாத காலம் இவ்வாறு செய்து குணா குணங்களைப்பற்றி எழுதவும்.

129. ஜி. கோ. பிருந்தாவனம்.
பிரசுரிக்கத்தகாதது.

130. வி. சே. திருச்சி.
பிரசுரிக்கத்தகாதது.

131. சி. கோ. செம்மங்குப்பம்.
நேரில் பார்த்தால் பரீக்ஷித்து ஆலோசனை சொல்ல முடியும்.

132. சு. பழங்கானத்தம்.
(1) கை கால்களில் அதிக வியர்வைக்கும்
(2) உடல் வளரவும்.
(3) நல்ல நிறம் உண்டாகவும்
(4) ஆணிப் பருக்கள் ஒழியவும் என்ன செய்யலாம்?

(1) இது சரீரக் கூறு. இதற்குச் சிகிச்சை செய்யப்போய் ஒன்று கிடக்க ஒன்று விளைந்தாலோ?

(2) கேள்வி 6க்கும் 107க்குங் கொடுத்திருக்கும் பதில்களை நோக்கவும்.

(3) தினசரி அப்யங்கம். லாக்ஷாதி தைலத்தை இதற்கு உபயோகிப்பது நல்லது.

(4) ஆணிப் பருக்களுக்கு அம்மாம்பச் சரியின் பாலைப் பூசவும்.

133. ஸ்ரீமதி ரா. புது டில்லி–3.
கூபன் அனுப்பவில்லை.

134. கே. ஷே. மோ. ஆதிரங்கம்.
(1) "தேமலுக்குத் தெரிவித்த மருந்தினால் ஒரு மாதத்தில் குணம் அடைந்துவிட்டேன்." "நன்றி."
(2) முகத்தில் பருக்கள். அதனால் கருமையான புள்ளிகள். என்ன செய்யலாம்?

(1) தங்களுடைய நன்றிகள் எனக்குப் பாடஞ் சொன்ன "மாஸ்டர்" அவர்களுக்குரித்தானவை. என் நன்றிகளுடன் சேர்த்து அவற்றை அவருக்குச் சமர்ப்பிக்கிறேன்.

(2) முகப்பரு, அதனாலுண்டாகும் தழும்பு ஆகியவற்றைப் போக்க கேள்வி 41–ன் பதிலைக் காணவும். அவற்றில்

(ஏ) அதிகாலையில் எழுந்து, 'சாந்திகாரி' என்ற லேபத்தைத் தண்ணீர்விட்டு அம்மியில் வெண்ணெய் போல் அரைத்து, சிறிது தண்ணீர்விட்டுக் குழம்பாகக் கரைத்துக்கொண்டு முகத்தின் மேல் பூசிக்கொள்ளவும். சிறிது உலர உலர மேன்மேலும் இப்பூச்சை பூசிட அரைக்கால் அங்குலம் முதல் கால் அங்குலம் வரையில் கனம் ஏறிடும். இந்நிலையில் இதை முகத்தில் சற்று நேரம் விட்டிருக்கவும். ஓரளவு ஆறியதும், (முழுவதும் காயவிடக்கூடாது) சிறிது ஈரமிருக்கும்போதே மறுபடியும் தண்ணீரினால் நனைத்து ஊறியதும், பற்றை எடுத்துக் களைந்து முகத்தைத் தண்ணீரினால் கழுவி, மிருதுவான துணியினால் ஒற்றிவிட்டு (துணியினால் துடைக்கக்கூடாது), பருத் தைலத்தைத் தடவி ஊறவிட வேண்டும். இவ்வளவும் சூரியன் உதயமாகுமுன் செய்தாக வேண்டும். இதன் பிறகுதான் பல் தேய்ப்பது, ஸ்நானஞ் செய்வது முதலியவை.

(பி) இரவில் படுக்கப்போகும் முன்பு 'குங்குமாதி லேபத்தை' இலேசாக முகத்தின் மேல் பூசிப் (அமர்த்தித் தேய்த்தல் கூடாது) படுக்கவும்.

(ஸி) மலபந்தமில்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

பத்தியம்:— காந்திகாரியை உபயோகிக்கும் தினங்களில் வெய்யிலில் போகக் கூடாது; 'குடை பிடித்துக்கொள்கிறேன்; செருப்பு போட்டுக்கொள்கிறேன்; அல்லது காரில்தானே போகிறேன். வைத்தியர் அப்படித்தான் சொல்லுவார். நமக்குக் கட்டுப்படியாகுமா?' என்றெல்லாம் நினைத்து உஷ்ணந்தட்ட விடக்கூடாது. அவ்வாறே நெருப்பினருகில் செல்வது, அதிக கோபப்படுவது, இரவில் கண் விழிப்பது முதலியவைகளும் கூடாது.

ஒரு விஷயம். இவ்வளவு நிர்ப்பந்தத்துடன் இந்த சிகிச்சை இல்லாவிட்டாலென்ன? ஏதோ ஸ்திரீகளானால் முகத்தை அழகு செய்துகொள்ளவும், அழகைக் குறைக்கும் பருக்கள், அதனாலுண்டாகும் தழும்புகள் இவற்றைப் போக்கவும் இச்சிப்பது இயற்கை. தாங்களோ தவஞ்செய்து ஆணாய்ப் பிறந்தவர். பருக்களும் பருத் தழும்புகளும் இருக்கட்டுமே! அதற்கான வயது கடந்தால் மாறிவிடுமே!

வாரியர்

நீலீ பிருங்காதி

தைலம்

காந்தி மிக்க கருங் கூந்தல் செழிப்பாக வளருவதற்கும், கொட்டிப்போகாமலிருப்பதற்கும், கொட்டிப்போன இடங்களில் மறுபடி முளைப்பதற்கும் மிகச் சிறந்தது.

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலமும்கூட

விலை 16 அவுன்ஸ் புட்டி ரூ. 6/-

கபரீ தைலம் ரூ. 5/-

★ ★

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனு பஜார்

தெப்பக்குளம், திருச்சி.

(நிறுவனம்: 1936)

சாஸ்திரோக்தமாக தயார் செய்யப்பட்ட எல்லா ஆயுர்வேத மருந்துகளும் எங்களிடம் கிடைக்கும். ஜாபிதாவுக்கு 0-1-6 ஸ்டாம்புடன் எழுதவும்.

திரிவேணி

★ தொடர் கதை ★

ஹேமா ஆனந்ததீர்த்தன்

19

லீலாவின் மனத்தில் ஒரு திட்டம் உருவாகிவிட்டது. அதை எழுத்தில் வடிக்க மேஜையண்டை சென்று பேப்பரும், பேனாவும் எடுத்துக்கொண்டு உட்கார்ந்து லீலா எழுத ஆரம்பித்தாள்:—

"ராஜு,

உன்னுடன் பேச வேண்டாமென்று சொல்லிவிட்டாய். பேசவில்லை. எழுதுகிறேன்.

எவ்வளவோ வகையில் உனக்கு புத்திமதி சொல்லிப் பார்த்து விட்டேன். நீ கேட்பதாக இல்லை. ஆனாலும் நான் அதற்காக உன்னை உன் வழியில் விட்டு விட முடியாது. உன் மனம் சேற்றில் அழுந்திவிட்டது. மேலே வர மறுக்கிறது. எனவே அதை மீட்பதற்காக நானும் சேற்றில் இறங்கத் தீர்மானித்து விட்டேன்.

நீயும் பத்மாவும் ஆனந்தமாக தாம்பத்யம் நடத்த வேண்டுமென்பதற்காக எவ்வளவோ பாடுபட்டேன். எவ்வளவோ அபவாதங்களுக்கும் ஆளானேன். அவ்வளவும் கடைசியில் பயனற்றுப் போய் விட வேண்டுமா? பத்மாவை மறந்து, மனத்தைக் கட்டுப்படுத்தாமல் அதற்கு நீ அடிமையாகி விட்டாயே?

நீயும் நானும் இந்த வீட்டில் தனியாக இருப்பதுபற்றி எவ்வளவோ பேர் நாக்கில் நரம்பில்லாமல் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஏன் அபவாதத்திற்கு இடம் கொடுக்க வேண்டும்? அவர்கள் பேச்சை உண்மை ஆக்கி விடுவோம். இது உனக்கும் பத்மாவுக்கும் நான் செய்யும் கடைசி சேவையாக இருக்கட்டும். பத்மா நல்லபடியாக வீடு வந்து சேரும் வரையில் அவள் இருக்க வேண்டிய ஸ்தானத்தை பரிபூரணமாக நான் ஏற்றுக் கொள்ள அனுமதி கொடு. அதனாலாவது உன் மனம் காசுக்கு உடலை விற்கும் நாரீமணிகளைத் தேடாமலிருக்குமானால் போதுமானது.

காசுக்காகவும் காமத் திருப்திக்காகவும் கற்பை இழக்கும் பெண்கள் எவ்வளவோ பேர். மாசில்லாத அன்பின் காரணமாக, என் தங்கையின் வாழ்வு பாழாகி விடக்கூடாது என்பதற்காக, நீ நெறி கெட்டு அலையக்கூடாது என்பதற்காக, நான் இம்முடிவுக்கு வந்துள்ளேன். இது சரியோ தவறோ எனக்கு அக்கறையில்லை. இதனால், பத்மா திரும்பி வரும் வரையில் உன்னைப் பாதுகாத்து அவளிடம் ஒப்படைத்துவிட்டேனானால், அதுவே எனக்கு நிம்மதி.

உன் அன்புள்ள,
லீலா."

கடிதத்தை எழுதி முடித்துவிட்டு லீலா மற்றொரு முறை அதைப் படித்துப் பார்த்தாள். நீண்ட ஒரு பெரு மூச்சு அவள் அடி வயிற்றிலிருந்து பீரிட்டெழுந்தது.

கடிதத்தை நான்காக மடித்துக் கையில் எடுத்துக்கொண்டு ராஜுவின் அறையை நோக்கிச் சென்றாள்.

ராஜு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். லீலா அவன் அருகே சென்று குனிந்து அவன் முகத்தையே பார்த்தபடி சில விநாடிகள் நின்றாள். "ஐயோ பாவம்!" என்று தோன்றியது அவளுக்கு.

ராஜு படுக்கையில் புரண்டான். விழித்துக்கொண்டு விடுவானோ என்று பயந்து அவள் இரண்டடி பின்வாங்கினாள். அப்பொழுது ராஜு அந்த வீட்டுக்கு வந்த புதிதில் நடந்த சம்பவம் அவள் ஞாபகத்திற்கு வந்தது. ஓர் இரவு அவன் தவறான எண்ணத்துடன் அவளை நெருங்கியதும், அவள் அவன் கன்னத்தில் அறைந்ததும் நேற்றுத்தான் நடந்ததுபோல் இருந்தது. இன்று நிலைமை தலை கீழாக மாறிவிட்ட விதியின் விசித்திரத்தை நினைந்து அந்த நிலையிலும் அவள் உதட்டிலே சோகப் புன்னகை நெளிந்தது. மேலும் அங்கே நின்றுகொண்டிருக்க அவளுக்கு துணிவு இருக்கவில்லை. கடிதத்தை எப்படி அவனிடம் கொடுப்பது என்று யோசித்தாள். அப்போதுதான் மேஜை மீதிருந்த கூஜா அவள் கண்ணில் பட்டது.

ராஜு இரவில் இரண்டு மூன்று தடவை எழுந்து தண்ணீர் குடிப்பது வழக்கம் என்பது அவளுக்குத் தெரியும். எனவே கடிதத்தை கூஜாவின் அருகில் வைத்து விட்டால் அவன் பார்வையில் கண்டிப்பாகப் பட்டுவிடும் என்று நினைத்து மடித்த கடிதத்தை அப்படியே கூஜாவுக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு அறையை விட்டு அகன்றாள்.

படுக்கையில் வந்து படுத்துக்கொண்ட லீலாவுக்கு தூக்கம் வரும்போல் தெரியவில்லை. உடலெல்லாம் வியர்த்திருந்ததை அறிந்து போர்வையால் நன்றாகத் துடைத்துக்கொண்டாள்.

மனத்தில் போராட்டத்தின் சின்னங்கள் தோன்ற ஆரம்பித்தன. தான் செய்த காரியம் சரியா தவறா என்ற சந்தேகம் லேசாக முளை விட்டது அவள் மனத்திலே. சற்றுமுன், தான் செய்தது மிகவும் சரி என்று நினைத்திருந்த அவள், இப்பொழுது மன நிம்மதி இழக்கத் தொடங்கினாள். அவள் மனம் இரண்டு பகுதியாகப் பிரிந்து ஒன்றுடன் ஒன்று வாதமிடுவதுபோல் இருந்தது அவளுக்கு.

"பேஷ்! பேஷ்! ரொம்ப நன்றாக இருக்கிறது உன் செய்கை."

"ஏன், என் செய்கைக்கு என்ன? தவறொன்றுமில்லையே!"

"உரக்கச் சொல்லாதே. யாராவது நகைக்கப் போகிறார்கள்."

"நகைப்பவர்கள் நகைத்துவிட்டுப் போகட்டும். என்னிடம் களங்கம் கிடையாது."

"அதை நான் நம்பத் தயாராக இல்லை. உன் தகாத ஆசைக்கு நீ தியாகத்தின் போர்வை போட்டு மூடப் பார்க்கிறாய்."

"இது அபாண்டம். நான் அப்படிப் பட்டவளல்ல."

"உனக்கு நீயே கூறிக்கொள்ளும் சமாதானம்தான். யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்."

"அன்றொரு நாள் இரவு ராஜு என்னைத் தீய எண்ணத்தோடு நெருங்கியபோது அவன் கன்னத்தில் அறைந்து அனுப்பவில்லையா நான்?"

"அன்று நிலைமை வேறு, இன்று நிலைமை வேறு. அன்று உன் புருஷன் இருந்தான். இன்று நீ புருஷனை இழந்த விதவை. இளம் விதவை."

"தீய எண்ணங்கள் எனக்கு ஏற்பட வேண்டுமானால் எப்பொழுதோ ஏற்பட்டிருக்கலாம். சத்தியமாக ராஜு—பத்மாவின் நன்மைக்காகவே நான் இந்தத் துணிகரமான முடிவுக்கு வந்தேன்."

"பூனை மாத்தின் கீழிருந்து பால் குடித்த கதைதான்."

"ஊராருக்கு நான் பயப்பட வேண்டாமே. சத்தியத்திற்குக் கட்டுப்பட்டால் போதுமல்லவா?"

"ஊரார் அப்படி இருக்கட்டும். ராஜூவே உன்னைப்பற்றி என்ன நினைப்பான் என்று யோசித்தாயா?"

"என்ன நினைப்பான்?"

"கேட்கவா வேண்டும்? இத்தனை நாளும் அவன் உன் மீது வைத்திருந்த மரியாதையும் அன்பும் ஒரே விநாடியில் தவிடு பொடியாகிவிடும், நீ காமத்தின் வசப்பட்டுவிட்டாய் என்று தெரிந்தால்."

"ராஜூ ஒருபோதும் என்னைத் தவறாக நினைக்கமாட்டான்."

"நினைத்துக்கொண்டிரு. கடிதத்தைப் படித்ததும் உன் மீது காரி உமிழப் போகிறான் பார். இத்தனை நாளும் தன் தெய்வமாகப் பூஜித்து வந்த உன்னை கால் தூசிக்குச் சமமாக மதிக்கப் போகிறான் பார்த்துக்கொண்டே இரு."

"அப்படியா?"

"அப்படியேதான்! நினைக்க நினைக்க வேடிக்கையாக இருக்கிறது உன் செய்கை. நீ சொல்லும் இந்தத் துணிகரமான முடிவுக்கு வர முக்கியமான காரணம் என்ன?"

"பத்மாவின் வாழ்வு பாழாகக்கூடாது என்பதுதான்."

"சரி, ஒத்துக்கொள்கிறேன். பத்மா உன்னுடைய இந்தச் செயலை ஒத்துக்கொள்வாளா? நீ செய்வது அவளுக்கே துரோகம் அல்லவா?"

"நானா பத்மாவுக்கு துரோகம் செய்வேன்?"

"நீ செய்யத் துணிந்திருக்கும் இந்தக் காரியத்திற்கு வேறு என்ன அர்த்தம்?"

"பத்மா ஒருபோதும் என்னைச் சந்தேகிக்கமாட்டாள்."

"அது மாத்திரம் நினைக்காதே. வேறு எந்த விஷயத்தில் வேண்டுமானால் அப்படி இருக்கலாம். தன் கணவனையே நீ பறித்துக்கொண்டுவிட்டாய் என்று தெரிந்தால் அவள் மனமுடைந்தே போவாள்."

"ஊம்? எனக்கொன்றும் விளங்கவில்லையே."

"இன்னும் என்ன விளங்க வேண்டும்? போ, போய் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்துவிடு."

"அப்படியானால் ராஜூ எப்படி வேண்டுமானாலும் போகட்டும் என்று விட்டுவிடுவதா?"

"ஆம். விதி அப்படி இருந்தால் என்ன செய்ய முடியும்? மேலும், நான் கேட்கிறேன். உன் முடிவை செயல்படுத்திவிட்டாய் என்றே வைத்துக்கொள்வோம். ராஜூ உன்னோடு திருப்தி அடைந்து விடுவான் என்பது என்ன நிச்சயம்? கட்டிய மனைவியை மறந்து மற்றொருவளை ஏற்றுக் கொள்பவன் கண்டிப்பாக ஒருத்தியோடு நிற்க மாட்டான்."

"அப்படியானால் என் தியாகத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடும்."

"தியாகம் என்று மற்றொரு முறை சொல்லாதே. பைத்தியக்காரத்தனம் என்று சொல்."

"ராஜூவை நீ அநாவசியமாக சந்தேகிக்கிறாய். மலருக்கு மலர் தாவும் வண்டு அல்ல அவன். சந்தர்ப்பங்களின் சூழ்ச்சியால் அவன் இன்று இந்த நிலையை அடைந்துள்ளான். பத்மாவின் ஸ்தானத்தில்தானே என்னை வைத்துக் கொள்ளும்படி அவனைக் கேட்கிறேன்?"

"ஏன் வீணாக சப்பைக் கட்டுக் கட்டுகிறாய்? ஆயிரம் சொன்னாலும் பத்மா நீ ஆக முடியாது. நீ பத்மா ஆக முடியாது. எப்பொழுது பத்மாவை மறந்து உன்னை ஏற்றுக்கொள்கிறானோ அப்படி உன்னையும் மறந்து வேறொருத்தியை நாடுவதில் சந்தேகமே இல்லை."

"ராஜூ—பத்மா—நான், நம் மூன்று பேரின் உள்ளங்களும் எப்படி ஒன்றோடொன்று கலந்து உறவு கொண்டுள்ளது என்பதை அறிந்துமா நீ இப்படிப் பேசுகிறாய்?"

"அறிந்ததனால்தான் அப்படிப் பேசுகிறேன். அந்தப் பரிசுத்தமான திரிவேணியில் உன் செய்கை நஞ்சைக் கலந்துவிடுமே என்பதனால்தான் இவ்வளவும் சொல்லுகிறேன்."

"அதை நான் ஒருபோதும் சகிக்க மாட்டேன்."

"அப்படியானால் போ. சீக்கிரம் போ. ராஜு பார்ப்பதற்கு முன்னால் அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து விடு."

"ஊம்..."

"யோசிக்காதே. பிறகு விஷயம் விபரீதமாகிவிடும், போ."

"ராஜுவைத் தடுக்க வேறு வழி?"

"கடவுளை நம்புவது ஒன்றுதான். உன் பரிசுத்தமான அன்பே அவனை நல்வழிக்குத் திருப்பட்டுமே? போ, தாமதம் செய்யாதே."

லீலா படுக்கையை விட்டு எழுந்தாள். விடுவிடுவென்று ராஜுவின் அறைக்கு வந்தாள். ராஜு நன்றாகத் தூங்கிக் கொண்டுதான் இருந்தான். லீலா மேஜையின் மீது பார்வையைச் செலுத்தினாள். கடிதம் மேஜையின் மீது இருந்தது. ஆனால் அவள் வைத்த இடத்தில் இருக்கவில்லை. கொஞ்சம் தள்ளி இருந்தது.

'எப்படி இடம் மாறியிருக்கும்? ராஜு கடிதத்தைப் பார்த்துவிட்டானோ? அல்லது காற்றினால் கடிதம் இடம் பெயர்ந்து நகர்ந்து போயிருக்குமோ?' லீலாவின் மனம் குழம்பியது. ராஜுவை எழுப்பிக் கேட்டுவிடலாமா என்று யோசித்தாள். ஆனால் அடுத்த கணமே அது விவேகமல்ல என்று நினைத்து அந்த எண்ணத்தை விட்டு விட்டாள்.

மேஜை மீதிருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு ராஜுவின் அறையைவிட்டு வெளியே வந்து விட்டாள்.

மறு நாள். காலை மணி எட்டடித்தும் ராஜு படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. லீலாவுக்கும் அவனை எழுப்ப வேண்டுமென்று தோன்றவில்லை. சாதாரண நாட்களில் அவன் ஆறு மணிக்கே எழுந்துவிடுவான். அப்படி எழுந்திருக்காவிட்டால் லீலா உடனே அவனை எழுப்பிவிடுவாள். அன்று ஏனோ அவளுக்கு அப்படி செய்யத் தோன்றவில்லை. தோன்றவில்லை என்று சொல்வதைவிட விரும்பவில்லை என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். ஏனோ, கூச்சமாகவும் இருந்தது அவளுக்கு. ராஜு தன்னுடைய கடிதத்தைப் படித்துவிட்டிருப்பானோ என்பதை நினைத்தபோது அவளுக்கு உடல் ஒரு முறை சிலிர்த்தது. அவமான உணர்ச்சியும் உள்ளத்தில் ஒரு மூலையில் குறுகுறுத்துக்கொண்டே இருந்தது.

மணி எட்டரையும் ஆயிற்று. ராஜு இன்னும் எழுந்திருக்கவில்லை.

லீலாவுக்கு இப்பொழுது கவலை தோன்ற ஆரம்பித்தது. ராஜுவுக்கு உடம்புக்கு ஏதாவது...

அந்த எண்ணம் தோன்றியதுதான் தாமதம். மற்ற நினைவுகளையெல்லாம் மறந்து லீலா ராஜுவின் அறைக்குத் தாவினாள்.

ராஜு படுக்கையில் புரண்டான்.

"ராஜு, எழுந்திருக்கவில்லையா?" என்று கேட்டபடியே அவன் போர்வையைப் பிடித்து மெதுவாக இழுத்தாள்.

ராஜு 'உம்' என்று முனகியபடியே கண்களைத் திறந்து லீலாவைப் பார்த்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. முகம் வேதனையால் வாடியிருப்பதுபோல் தெரிந்தது.

"உடம்பு சரியில்லையா ராஜு?" என்று நெற்றியில் கையை வைத்துப் பார்த்தவள் திடுக்கிட்டாள். ராஜுவின் உடல் நெருப்பாகக் காய்ந்துகொண்டிருந்தது.

"ஜுரம் அதிகமாக இருக்கும் போலிருக்கிறதே" என்று லீலா பதறினாள்.

ராஜு லீலாவின் இரண்டு கைகளையும் இறுகப் பிடித்துக்கொண்டான். அவளையே சில விநாடிகள் கண் இமைக்காமல்

பார்த்தான். மளமளவென்று அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. அடுத்த நிமிடம் சிறு குழந்தைபோல அவன் விசும்பினான். அவன் உடல் குலுங்கியது.

"என்ன ராஜு, என்ன" என்று பதட்டத்துடன் அவன் அருகிலேயே உட்கார்ந்துகொண்டு அவன் நெற்றியின் மீது கிடந்த தலை மயிரை சரிப்படுத்தினாள். அவள் நெஞ்சு பட்பட்டென்று வேகமாக அடித்துக்கொள்ள ஆரம்பித்தது.

"லீலா..." என்றுதான் ராஜு கூறினானே ஒழிய மேலே பேச முடியவில்லை. ஏதோ உணர்ச்சி அவன் தொண்டையை அடைத்தது.

"என்ன ராஜு?"—நடுங்கும் குரலில் லீலா கேட்டாள்.

"லீலா...நீ...நான்..உன்னை நான் என் தாயாக...தாயினும் மேலாக மதிக்கிறேன் லீலா. என்னை மன்னித்துவிடு. இனிமேல் சேகருடன் சேரமாட்டேன். உன் மனம் புண்படும்படி நடந்துகொள்ள மாட்டேன்" என்று கூறி விம்மினான்.

லீலாவின் கண்களில் நீர் முத்துக்கள் கோத்து நின்றன. ராஜுவின் சொற்கள் அமிர்தம்போல அவள் காதுகளில் பாய்ந்து ஆனந்தபாஷ்பத்தை அவள் கண்களில் வரவழைத்தன.

"அழாதே ராஜு. அசடு. இப்போ நீ என்ன செய்துவிட்டாய்?" என்று அவன் முதுகை வாஞ்சையுடன் வருடினாள்.

"லீலா...இவ்வளவு நாளும் உன்னை என் சகோதரிபோல் கருதி வந்தேன். இனி மேல் அப்படி வேண்டாம்...நமக்குள் வயது வித்தியாசம் எப்படி இருந்தாலும் நீ என்னை உன் பிள்ளையாக ஏற்றுக்கொள் லீலா. நான் முரளிக்கு ஒரு அண்ணனாக இருக்கிறேன்."

லீலாவின் கண்களில் கோத்து நின்ற நீர் அவள் கன்னங்களின் வழியாக வழிந்தோடியது. ராஜு அவள் புடவைத் தலைப்பால் அவள் கண்களைத் துடைத்தான்.

"பாம்...பாம்"—வாசலில் கார் ஹாரன் சப்தம் கேட்டது.

சேகரனின் கார்!

ராஜு படுக்கையினின்றும் எழுந்து வேகமாக வெளியே சென்றான். அவன் செல்லும் வேகத்தைப் பார்த்து லீலா பயந்து போய்விட்டாள்.

"என்ன செய்யப்போறே ராஜு?" என்று கேட்டுக்கொண்டே அவனைப் பின்தொடர்ந்தாள்.

ராஜு அவளுக்குப் பதில் சொல்லாமல் தெருவுக்கு விரைந்தான்.

வாசற்படியில் நின்றுகொண்டே ராஜு சேகரனைப் பார்த்துச் சொன்னான்:

"சேகர், உனக்கு ஒரு நமஸ்காரம். உன் சிநேகிதத்திற்கும் ஒரு நமஸ்காரம். இனிமேல் என்னை மறந்துவிடு. என்னைத் தேடிக்கொண்டு வராதே. நான் சாகும் வரையில் இனி உன்னோடு சேரமாட்டேன். இது சத்தியம். கிரகணம்போல் இவ்வளவு நாள் என்னைப் பீடித்தாய். போதும். போய்விட்டு வா. கடவுள் உனக்கும் நல்ல புத்தி கொடுக்கட்டும்."

சேகரன் திகைத்துப்போய் பதில் சொல்ல நாப் பெயராமல் ராஜுவையே பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் ராஜு அவன் பதிலை எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. தான் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்ததும் 'படீர்' என்று கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்துவிட்டான்.

இரண்டொரு நிமிடங்களில் சேகரனின் கார் அங்கிருந்து கிளம்பிச் சென்றது.

"பல் தேய்த்துக்கொண்டு வா. காப்பி சாப்பிடுவியாம். அப்புறமா டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டு வா" என்றாள் லீலா.

"டாக்டர் வீட்டுக்கு எதற்கு?"

"உடம்பு நெருப்புப்போல் சுடுகிறதே."

"அது இனி சரியாகப் போகும். உள்ளத்தின் சுமை இறங்கிவிட்டதல்லவா!" என்று சிரித்தபடியே ராஜு பல் தேய்க்கச் சென்றான்.

லீலாவுக்கு மனம் இறக்கை கட்டிப் பறந்தது. ஆனாலும் ராஜுவின் திடீர் மாற்றத்திற்குக் காரணம் புலப்படவில்லை. கடிதத்தை அவன் பார்த்துவிட்டானா இல்லையா என்பது இன்னும் சந்தேகமாகவே இருந்தது. எப்படி இருந்தால் என்ன? அவன் மனம் மாறிவிட்டது. தான் செய்யவிருந்த துணிகரமான தியாகத்திற்குத் தேவையே இல்லாது போய்விட்டது. உண்மை அன்பிற்குத்தான் எவ்வளவு மகத்தான சக்தி!

20

பதினெட்டு மாதங்கள் ஓடிவிட்டன. ராஜு ஆனர்ஸ் முதல் வகுப்பில் தேறினான். பத்மா உடல் பூரணமாகக் குணமடைந்து வீட்டுக்கு வந்து ஆறு மாதங்களாயிற்று.

பரீட்சை ரிசல்டுகள் வெளி வருவதற்கு முன்னமே ராஜுவுக்கு ஒரு பெரிய பாங்க் ஒன்றில் வேலை கிடைத்தது. அவன் தற்காலிகமாக அதை ஒத்துக்கொண்டு ஐ. ஏ. எஸ். பரீட்சைக்காகப் படித்துக்கொண்டிருந்தான்.

மேஜையின் முன் உட்கார்ந்து ராஜு படித்துக்கொண்டிருந்தான். பத்மா வந்து அவன் அருகே நின்றுகொண்டாள்.

"என்ன பத்மா?"

"ஒன்றுமில்லை. சும்மா பார்க்கிறேன்."

"பரீட்சை நெருங்கிவிட்டது. படிக்க வேண்டியது நிறைய இருக்கிறது பத்மா."

"சரி அப்படியானால் என்னை இங்கே வராதே என்று சொல்லுகிறீர்கள். அவ்வளவுதானே? நான் போகிறேன்" என்று கூறி பத்மா புறப்பட்டாள்.

"அதற்குள் கோபம் வந்துவிட்டதா? இரு பத்மா" என்று அவள் கையைப்பற்றி இழுத்து அவளைத் தன் அருகே அமர்த்திக்கொண்டான்.

"இப்போதெல்லாம் நீங்கள் சேகருடன் சேருவதே இல்லை போலிருக்கிறதே!" என்று சிரித்தாள் பத்மா.

"அது என்ன பிரமாதம்? நாளைக்கே வேண்டுமானால் போய் மறுபடியும் ஒட்டிக்கொள்ளுகிறேன்!"

"வேண்டாம், வேண்டாம். நமஸ்காரம்!" என்றாள் பத்மா.

இருவரும் சிரித்தார்கள்.

"என்ன, சிரிப்பு ரொம்பப் பலமாக இருக்கிறது" என்று கேட்டுக்கொண்டே லீலா உள்ளே வந்தாள். ஒரு கையில் பால் பாத்திரமும், மற்றொரு கையில் ஃப்ளாஸ்கும் இருந்தது.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாத வாரி எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

லீலாவைக் கண்டதும் பத்மா 'சட்' டென்று ராஜூவினிடமிருந்து விலகிக் கொண்டாள்.

அதைப் பார்த்த லீலா மகிழ்ச்சியோடு புன்னகை புரிந்தாள்.

"ஃப்ளாஸ்கில் என்ன லீலா? புதுசா இருக்கே?"

"காப்பி. காலையில் நீ மூன்று மணிக்கெல்லாம் எழுந்து படிக்க ஆரம்பிச்சுடறே. அவ்வளவு சீக்கிரம் பால்காரன் வருவதில்லை. அதற்காக இப்போதே காப்பி போட்டு வைத்துவிட்டேன்" என்றாள்.

"அந்த மூன்று மணி வேளையில் காப்பி குடிக்காவிட்டால் படிப்பு ஓடாதாமோ? ஆனாலும் அவருக்கு நீ ரொம்ப இடம் கொடுத்துக் கெடுத்துவிட்டாய் அக்கா!" என்று பத்மா அவனைச் சீண்டினாள்.

"போக்கிரி!" என்று ராஜூ அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

பத்மா வெட்கத்தால் முகத்தை மூடிக் கொண்டாள்.

"முரளி எங்கே? அதற்குள்ளாகத் தூங்கிவிட்டானா?" என்று ராஜூ கேட்டான்.

"அம்மா!" என்று கூடத்திலிருந்து அதே சமயத்தில் முரளி கூப்பிட்டான்.

"இல்லை. இன்னும் தூங்கவில்லை. இதோ முழிச்சிண்டிருக்கானே. இங்கே வாடா முரளி" என்று லீலா அவனைக் கூப்பிட்டாள்.

முரளி தட்டுத் தடுமாறிக்கொண்டே அந்த அறைக்குள் வந்தான். வரும்போதே தன் நிஜார் பாக்கெட்டுகளிலும், புஷ் கோட் பாக்கெட்டுகளிலும் எதையோ தேடிக்கொண்டிருந்தான். ராஜூ அவனுடைய சுருட்டை மயிரின் அழகைப் பார்த்து ஆவலுடன் ஓடிச்சென்று அவனைத் தூக்கிக்கொண்டான்.

"என்னடா தேடறே?"–பத்மா கேட்டாள்.

"சாக்கலேத்து!"

"ஏது நோக்கு சாக்கலேத்து?"–லீலா கேட்டாள்.

"சாயங்காலம் அப்பா வாங்கிக் கொடுத்தா!" என்று முரளி ராஜூவைச் சுட்டிக் காட்டினான்.

எல்லோரும் 'கொல்'லென்று சிரித்து விட்டார்கள்.

"அசடு! 'அப்பா'ன்னு சொல்லக்கூடாதுன்னு எவ்வளவு தடவைடா சொல்றது. 'சித்தப்பா'ன்னு சொல்லணும் தெரிஞ்சதா?" என்று லீலா அவனை அதட்டினாள்.

"போம்மா!" என்று முரளி அவளை அடிக்கக் கையை ஓங்கினான்.

"கறுப்பனுக்கு உதடு அவன் அப்பாவைப் போலவே கோணிண்டு போறதைப் பார்" என்று கூறியபடியே ராஜூ முரளியை அணைத்து முத்தமிட்டுக் கொண்டான்.

"நீ 'அப்பா'ன்னே கூப்பிடுடா கண்ணு. நாங்கள் உன்னை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்போகிறோம்" என்றாள் பத்மா சிரித்துக்கொண்டே.

"போறும் போறும். அசட்டுத்தனமாகப் பேசாதே. உனக்கே பத்து பையன்கள் பிறக்கப் போகிறார்கள்" என்றாள் லீலா.

பத்மாவும் ராஜூவும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக்கொண்டார்கள்.

"சரி சரி, அவன் படிக்கட்டும். பத்மா, வெளியில் வா. பதினொரு மணிக்குமேல் தான் நீ அவன் அறைக்குள் போக வேண்டும். ஊம்!" என்று லீலா அதிகாரம் செய்தாள்.

"அட, ரொம்பத்தான் விரட்டறயே!" என்று சொல்லி பத்மா சிரித்தாள்.

மூவரும் அறையை விட்டு வெளியேறினர்.

ராஜூ படிப்பைத் தொடர்ந்தான்.

"நான் இன்று உங்களுக்கு ஒரு அதிசயம் காண்பிக்கப் போகிறேன்" என்றாள் பத்மா, தன் இரண்டு கைகளையும் முதுகுக்குப் பின்னால் கட்டியபடி அவன் எதிரே வந்து நின்றுகொண்டு.

"என்னது?" என்று கேட்டபடியே புத்தகத்தை மூடினான் ராஜூ. மணி பதினொன்றடித்தது.

"ஆச்சரியப்பட்டு மூர்ச்சை ஆகிவிடப் போகிறீர்கள். ஜாக்கிரதை" என்று கூறிக்கொண்டே பத்மா அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

ராஜூ ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்தான்.

உண்மையிலேயே அவன் பிரமிப்படைந்து விட்டான்.

அன்றொரு நாள் லீலா அவன் மேஜையின் மீது எழுதி வைத்துவிட்டுப் பிறகு எடுத்துச்சென்றுவிட்ட கடிதம்!

"இது எப்படி உன்னிடம் வந்தது?" என்று கேட்டான்.

"அக்கா இதை உங்கள் மேஜையின் மேல் வைத்தாளாம். அப்புறம் ஏதோ தோன்றி உங்களுக்குத் தெரியாமல் மறுபடியும் எடுத்துக்கொண்டு போய்விட்டாளாம்."

"அப்படியானால் அக்கா உன்னிடமிருந்து ஒன்றையுமே மறைக்கவில்லை?"

"எதற்காக மறைக்க வேண்டும்?"

"இந்தக் கடிதத்தைப் பார்த்த பிறகும் கூட உனக்கு லீலாவின் மேல் சந்தேகமோ பொறாமையோ தோன்றவில்லையா?"

"அதற்குப் பதில் அவள் என்னிடம் வைத்திருக்கும் அன்பைக் கண்டு உள்ளம் நெகிழ்கிறது" என்று தொண்டை கரகரக்க பத்மா சொன்னாள்.

"பத்மா, நான் பாக்கியவான்" என்று உணர்ச்சி வசப்பட்டு ராஜூ பத்மாவை அணைத்துக்கொண்டான்.

"பத்மா, இனி நானும் உண்மையைச் சொல்லிவிடலாமென்று நினைக்கிறேன். இந்தக் கடிதத்தை நான் அன்றைக்கே பார்த்து விட்டேன். லீலா இதை என் மேஜை மீது வைத்துவிட்டுப் போன உடனேயே பார்த்துவிட்டேன். என் மனம் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. பிறகு இரண்டாவது முறை நான் எழுந்து பார்த்தபோது கடிதத்தைக் காணவில்லை. லீலா எடுத்துக்கொண்டு போய்விட்டாள். அதிலிருந்து அவள் மனத்தில் நடக்கும் போராட்டத்தை அறிந்துகொண்டேன். அவளுடைய அன்பின் ஆழத்தைப் புரிந்துகொண்டேன். என் மனம் பழைய நிலைக்கு மீண்டது."

பத்மா அவன் சொன்னதைக் கேட்டு ஆச்சரியமடைந்தாள்.

"அக்கா!" என்று கூப்பிட்டாள்.

"வேண்டாம் பத்மா. கடைசி வரையில் நான் அக்கடிதத்தைப் பார்த்ததாக அவளுக்குத் தெரியவே வேண்டாம்" என்று ராஜூ பத்மாவைத் தடுத்தான்.

கதவருகில் நின்று இதைக் கேட்டுக் கொண்டிருந்த லீலா, கண்களைத் துடைத்தபடி அங்கிருந்து அகன்றாள்.

தன் கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டாள். சுவரில் மாட்டியிருந்த ராஜூ–பத்மா படத்தின் மீது அவள் பார்வை விழுந்தது. பார்த்துக்கொண்டே இருந்தாள். லேசாக அவள் உதடுகள் அசைந்தன. ராஜூவும் பத்மாவும் அவளைப் பார்த்து முறுவலித்தார்கள். படத்திலிருந்து அப்படியே எழுந்து வந்து அவர்களிருவரும் அவள் நெஞ்சிலே புகுந்துகொண்டாற்போல இருந்தது. நிம்மதியாகக் கண்களை மூடி, முரளியை அணைத்தபடி படுத்துக்கொண்டாள். நித்திரை அவளைத் தழுவிக்கொண்டது.

(முற்றும்.)

Nandi at Chamundi Hills, Mysore

பிரசித்திபெற்ற

நீபா

- ஹேர் ஆயில்
- டாய்லட் சோப்
- பிரில்லியண்டைன்
- ஸ்னே
- ஊதுபத்திகள்

நறுமணத்திற்கு மறுபெயர்

கங்கா ஒர்க்ஸ், அடையார், மதராஸ்-20



சித்தார்த்தன் ஞானக்காட்சி

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன், இமயமலைச்சாரலில் ஒரு சிறுநாட்டில் பிறந்து, கங்கைநதிக்கரையில்அமைதியான நந்தவனங்களில் அமர்ந்து, மானிடன் சிந்திக்கக்கூடிய மிக உயரிய சிந்தனைகளையெல்லாம் சிந்தித்து, தன் ஆத்மீக வளர்ச்சியில் மிக உயரியதோர் உச்சியை அடைந்தான் ஒரு பெருமனிதன்.

அவனை உலகம் இன்று புத்தன் என்று அழைக்கின்றது. புத்தன் எனில் விழிப்புற்றவன்; ஞானக்காட்சி பெற்றவன. சாக்கியர்களிடையே பிறந்த அவனைச் சாக்கிய முனி என்பர். கௌதம குலத்தவனுதலால் கௌதம புத்தன் என்றுங் கூறுவர். பெற்றோர்கள் அவனுக்கு அளித்த பெயர் சித்தார்த்தன்.

தென் பௌத்த சம்பிரதாயத்தின்படி, அவன் பிறந்தது கி. மு. 579–ல்; இல்லறத்தைத் துறந்தது 550–ல்; பூரண ஞானம் பெற்றது 544–ல். மகாபரிநிர்வாணம் அடைந்தது 499–ல். இதன்படி பார்த்தால், புத்தன் பிறந்தது இன்று சரியாக 2500 ஆண்டுகளுக்கு முன். சரித்திர ஆராய்ச்சியாளரின் கணக்கின்படிப் புத்தன் கி. மு. 563–ல் பிறந்தான்; 483–ல் இறந்தான். புத்தன் இந்நிலவுலகில் எண்பது ஆண்டுகள் வாழ்ந்தான்; தான் ஞானக்காட்சி பெற்றபின் நாற்பத்தைந்து ஆண்டுகள் கங்கைக்கரையில் ராச்சியம்தோறும் சென்று சமய போதனை செய்துவந்தான்.

அவனது அழகிய உருவம் மக்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அவனது வாழ்க்கையின் அழகும் போதனையின் எளிமையும், லட்சக்கணக்கான மக்களுக்கு அமைதியளித்தன; வாழ்க்கைப் பிரச்னைகளுக்குத் திருப்திகரமானதொரு விடையளித்தன; ஆசியாவின் மிக விழுமிய கலைகளுக்கு வற்றாத ஊற்றுயிருந்தன.

புத்தன் அவதரித்த காலத்தில், மக்கள் ஆத்மீக விஷயங்களிலுஞ் சரி, சமூக விஷயங்களிலுஞ் சரி, அறிவு மழுங்கி அடிமைப்பட்டுக் கிடந்தனர். வேதாந்தமும், சமயக் கோட்பாடுகளும் சீவனற்ற சமயச் சடங்குகளாகவும் சம்ஸ்காரங்களாகவுமே இழிநிலையடைந்தன. சாதிகள் பிரிவினையுணர்ச்சியுண்டாக்கி சகோதர பாவத்தைக் குலைத்தன. பிணியும், சாக்காடும் அலங்கோல ஆட்சி புரிந்தன. மக்கள் வருந்தினர், நம்பிக்கையிழந்தனர். அந்த சமயத்தில் தான் புத்தன் வந்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, விடுதலைக்குரிய வழியைக் காட்டினன். அவனது போதனை அனைவரையும் மேலே தூக்கிவிட்டது.

'வாழ்வு அனுபவிக்கப்பட வேண்டியதொரு உண்மை. அதைக் கடுந்துறவால் பாழாக்கவேண்டியதில்லை. யாவும் கருமத்தின் விளைவேயாம். வினைவிதைத்தவன் அதன் வினையை அறுத்தாகவேண்டும். பிறப்பை வாழ்க்கையின் ஆரம்பமாகவோ, சாவை அதன் முடிவாகவோ, கருதலாகாது. ஒவ்வொரு பிறப்பிலும் ஆத்மா தன்னுள் பழம் பிறப்புக்களின் அனுபவங்களைக் கொண்டுள்ளது. நல்வினையால், நல் வாழ்வால் சீர்திருந்தி, வினைகள் அறுத்தும், பிறப்புக்களை வென்றும் நிர்வாணமடையலாம். ஒருவன் தீமைக்கு ஆளாவதும் துயர் உறுவதும் தன்னாலேயாம்; ஒருவன் விடுதலையடைவதும் தன்னாலேயாம். சினத்தை அன்பால் வெல். பேராசையைத் தாராளத்தால் வெல். ஆசை பல தீமைகளுக்கு உன்னை ஆளாக்குவதால், அதை அடக்கு. பற்றற்ற, தூய சிந்தனையுடன் செயலாற்று. இவையாவும் உன் உள்ளத்தை விழுப்பம் செய்யும். நீ பரிபக்குவமடைவாய், நிர்வாணம் எய்துவாய்' இவையே சுருங்கக் கூறின் புத்தனின் போதனை.

புத்தன் யாதொரு கடவுளையும் முன் நிறுத்தவில்லை.

மனிதன் துயர் உறுவதற்குரிய காரணங்களை ஆராய்ந்து, அவற்றை விலக்கி, உள்ளந்திருந்தி, ஆத்மீக பரிபக்குவமடைவதே அவன் குறி. அந்த பரிபக்குவ நிலையை நிர்வாணம் என்றான் அவன். அவனுடைய தத்துவங்களில் பல இந்து சமயத்தின் ஆதார உண்மைகள். அவன் அர்த்தமற்ற சடங்குகளையும், வேள்விகளையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும் கண்டித்தானேயொழிய, இந்து சமயத்தையோ, அதைக்கண்ட மகரிஷிகளையோ தாக்கவில்லை. கடவுளைப்பற்றி பல வறட்டு ஆராய்ச்சிகள் நடந்த அக்காலத்தில், கடவுளைப்பற்றிய தத்துவ ஆராய்ச்சியில் இறங்கி தானும் மக்கள் மனத்தைக் குழப்பஞ் செய்ய விரும்பாத அவன், ஆத்மீக பரிபக்குவத்துடன் நின்றுவிட்டான். அதனால் அவனை நிரீசுவர வாதியென்றும், அவன் போதித்த சமயத்தை நிரீசுவர வாதமென்றும், சிலர் கூறுவர். உண்மையில் அது அங்ஙனமாகாது.

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட பௌத்த சமயம் நாடெங்கும் பரவியது. பாமர மக்களிடையே போல, செல்வர், மன்னரிடையேயும் அதன் செல்வாக்கு பரவியது. ஆனால், புத்துயிர் பெற்ற இந்து வைதிக சமயத்தின் தாக்குதலை எதிர்த்து நிற்கமுடியாமல் அது நாட்டினின்று மெல்ல மெல்ல மறைந்தது. ஆனால் புத்தரின் சமயபோதனைகள் இலங்கை, பர்மா, சியாம், கம்போடியா, சீனா, ஜப்பான் முதலிய நாடுகளில் பர

பி. கோதண்டராமன்

வியது. இன்று ஆசியாவில் பதினைந்து கோடி மக்கள் பௌத்தர்கள். பௌத்த சமயம் ஆசியாவில் மட்டுமன்றி பிற விடங்களிலும் பரவியுள்ளது. இன்று மூன்றில் ஒரு பகுதியினர் பௌத்த சமயத்தைத் தழுவியவர்கள்.

இங்ஙனமாக, புத்தன் இவ்வுலகின் அஞ்ஞான இருளை அகற்றி மக்கள்பால் தயைகூர்ந்து பூரண வாழ்வுக்கு வழிகாட்டினான். மன்னுலகு ஈன்ற மாமலரும், ஒப்பற்ற ஆசானும், முனிபுங்கவனும், லோக ரட்சகனும், பல ஜன்மங்களில் போதி சத்துவனாக விளங்கி, இறுதியில் சித்தார்த்தனாகப் பிறந்து அருளாளனான புத்தனாகப் பரிணமித்தவனுமான அவனைத் தலைகுனிந்து வணங்குவோமாக. போரும் பிணக்குமாயுள்ள இவ்வுலகில், இன்று, அவன் போதனைகளை நன்கறிந்து அவற்றின் வழி செல்வதன் இன்றியமையாமை வலியுறுத்தப்படுகின்றது. நம் அருந்தலைவரான நேரு, இவ்வாண்டு உலகெங்கும் நடைபெறும் புத்த ஜயந்தியின் இருபத்தைந்தாவது நூற்றாண்டு விழாவை நம் நாட்டிலும் சிறப்புறக் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பதும் • குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், இத்தகைய சிறப்பு வாய்ந்த மகான் புத்தரின் புனித வரலாற்றை இப்பக்கங்களில் ஒரு சிறிது அறிந்துகொள்வோமாக.

★

கிறிஸ்து பிறக்குமுன் ஆறும் நூற்றாண்டில், வட இந்தியாவில், இமயத்தின் கீழ்ச் சரிவுகளில் அமைந்து கங்கைப் பள்ளத்தாக்கில் பரவியிருந்த ராஜ்யங்கள் பல காணப்பட்டன. இன்றைய நேபாளத்தின் தென் திசை ஓரமாக இருந்த சாக்கியர் நாடும், மேற்கே சிராவஸ்தியைத் தலைநகராகக் கொண்டிருந்த இக்கால அயோத்தியான கோசலமும், கிழக்கே லிச்சாவிகள் நாடும், தென் கிழக்கே ராசகிருகத்தைத் தலைநகராகக் கொண்ட இக்கால பீகாரான மகதமும், தெற்கே கோலியர் நாடும் இவற்றுள் பிரதானமானவை. கபிலவாஸ்து என்னும் தலைநகரும், அதைச் சூழ்ந்து 900 சதுர மைல் விஸ்தீரணம் பரவியிருந்த நாடும் கொண்டதே சாக்கியர் நாடு. இந்நாட்டை அரசாண்டவன் கோசல மன்னனுக்குக் கப்பம் கட்டி வந்ததால், இது உத்தரகோசலம் என்றும் பெயர் பெற்றிருந்தது. இது கிழக்கே ஓடிய ரோகிணி நதியாலும், மேற்கிலும் தெற்கிலும் ஓடிய அசிராவதி நதியாலும் வளமுற்றுச் செழிப்பு மிகுந்ததொரு நெற்களஞ்சியமாகத் திகழ்ந்தது. கபிலபுரம் எனத் தமிழ் நூல்கள் குறிக்கும் கபிலவாஸ்து அமைதியும் இயற்கை வனப்பும் மிகுந்ததொரு நகராகும். இந்நகரில்தான், கௌதம புத்தன் வைசாகப் பூர்ணமியன்று சாக்கிய மன்னன் சுத்தோதனனிற்கும் அவன் மூத்த ராணியான மகாமாயாவுக்கும் தவப் புதல்வனாகப் பிறந்தான்.

புத்தனின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய திட்டவட்டமான சரித்திர ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. அவன் நிர்வாணமடைந்து பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் யாதொரு வாழ்க்கை வரலாறும் எழுதப்படவில்லை. நமக்குக் கிடைக்கக்கூடிய செய்திகள் யாவும் சரித்திரமும் கர்ணபரம்பரைக் கதைகளும் கலந்தனவாகவே உள்ளன. பின் எழுந்த சமய நூல்களில் விவரங்கள் பலவிதமாகக் கூறப்பட்டுள்ளன. நூற்றாண்டுகள் செல்லச்செல்ல இவ்விவரங்கள், கட்டுக்கதைகள், அற்புதங்கள், தெய்வச் செயல்கள் முதலியவற்றால் புதுப்புது மெருகுகள் பெற்றன. ஆயினும், இக்கதைகள் கவிதையுருவம் பெற்ற ஒருவிதச் சரித்திரமென்றே நாம் கொள்ளவேண்டும். புத்தன் திடுமென ஒரு பிறவியில் தோன்றியவன் அல்லன். அவன் பல பிறப்புக்களில் பேருணர்வு வளர்ச்சி பெற்று, இறுதியில் பரிபூரணமடைந்தவன். அவன் சரித்திரப் பரிணாமத்தில் தோன்றிய ஓர் உண்மையான மகாபுருஷன் என்பதில் ஐயமேயில்லை.

புத்திரப் பேறுக்காகத் தவஞ்செய்த சுத்தோதனன் தம்பதிக்கு, உலகையே ஆளப்போகும் புத்திரனொருவன் பிறக்கப் போகிறானென ஒரு நாள் முனிவனொருவன் தீர்க்கதரிசனம் கூறினான். அத்தீர்க்கதரிசனத்தின்படியே மகா மாயா அன்றிரவு ஒரு கனவுகண்டாள். அது வருமாறு: தலைநகரைப் பாதுகாக்கும் தெய்வீக மன்னர் நால்வர் அவளைப் படுக்கையினின்று தூக்கிச் சென்று இமயமலையில் ஒரு பெரிய சால மரத்தினடியில் விட்டனர். அங்கே தெய்வகணங்கள் அவளைத் தூய மலை ஏரி ஒன்றுக்கு அழைத்துச் சென்று நீராடச் செய்து, பின்னர் பொன் மாளிகையொன்றில் படுக்கவிட்டன. அருகாமையிலிருந்த தங்க மலையிலிருந்து கம்பீரமான வெள்ளை யானை ஒன்று கீழே இறங்கி பொன் மாளிகையை அடைந்து மாங்களின் கீழ் அலைந்தது. பிறகு அது மாயா தேவியை அணுகித் தன் வெள்ளித் துதிக்கையால் அவளது வலது பக்கத்தை வருடிவிட்டு, மேகம் போலக் கரைந்து ஆவிபோல அவள் வயிற்றில் நுழைந்தது. மாயா அது சமயம் இருட்டில் பேரொளியொன்று பிரகாசிக்கக் கண்டாள். ஒளி திகழும் தேவகணங்கள் ஆனந்தக்களிப்பால் பாடின.

மாயா சூல் கொண்டாள். இளவேனிற் பருவம் வந்தது. சுற்றிலுமிருந்த இயற்கை அபூர்வ வனப்புடன் திகழ்ந்தது. மகாராணி பிரசவத்திற்காகப் பிறந்தகம் சென்ற வழியில், உலும்பினி என்னும் நந்தவனத்தில் புத்தனை ஈன்றாள். இயற்கை குதூகலித்தது. கட்டாந்தரை ஊற்றெடுத்தது. குளிர்ந்த காற்று மெதுவாக வீசி மரங்களை அசைத்தது. பேரொளி ஒன்று தோன்றி உலகெங்கும் பிரகாசித்தது. தேவகணங்கள் மலர் மழை பொழிந்தன.

குழந்தை பிறந்த செய்தியைக் கேட்ட பெரியார் அசிதர் அதைப்பார்க்க விரும்பி மன்னன் மாளிகை வந்தார். அதை எடுத்துப் பார்த்தபோது சக்கரவர்த்திக்குரிய 32 குறிகளைக்கண்டார். உலகம் எதிர்பார்த்த புத்தனின் வருகையை அவர் உணர்ந்தார். "உரிய காலத்தில் இவன் பரிபக்குவமடைந்து புத்தனாவான். ஆனால் அதைப் பார்க்கத்தான் நான் கொடுத்துவைத்திருக்க மாட்டேன்" என்று சொல்லிக் கண்ணீர்விட்டார்.

ஐந்தாம் நாள் குழந்தைக்கு நாமகரண விழா நடந்தது. அவன் 'சித்தார்த்தன்'–அதாவது எண்ணியதை அடைந்தவன்–என்ற பெயர் பெற்றான். ஏழாம் நாள் மாயா விண்ணுலகம் சென்றாள். தாயில்லாக் குழந்தையை அவனது சிற்றன்னை மகாபிரசாபதி அன்புடன் வளர்க்கலானாள்.

ஐந்தாண்டுகள் சென்றன. கலை பயிலும் காலம் நெருங்கியதை உணர்ந்த மன்னன், சர்வமித்ரன் என்னும் பேராசிரியனை நியமித்தான். சித்தார்த்தன் வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், சிலம்பம், அரசு, அமச்சு, குடி படை முதலிய அரசாங்க வித்தைகளைக் கற்றான்.

வீர மன்னனுக்குரிய பயிற்சிகள் யாவும் பெற்றிருந்தும், சித்தார்த்தனிடம் அந்தணர்க்குரிய அருளும் அன்பும் இளமையிலிருந்தே வெளிப்படலாயின. ஒரு நாள் அவனது நெருங்கிய உறவினனான தேவதத்தன் அன்னப்பறவையொன்றை அம்பால் வீழ்த்தினான். காயமடைந்த அது, அருகிலிருந்த சித்தார்த்தனிடம் அடைக்கலமடைந்தது. அதை அவன் கருணையுடன் பாதுகாத்தான். தேவதத்தன் கேட்டும் அதை அவனிடம் ஒப்படைக்க மறுத்தான்.

மன்னன் சித்தார்த்தனுக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டினான். பதினாறும் வயதில், தன் மைத்துனன் சுப்ரபுத்தன் மகளான யசோதரையை அவனுக்கு மணஞ் செய்வித்தான். உலகத் துன்பங்கள் துயரங்கள் எவற்றாலும் மனம் சஞ்சலமடையாதிருக்கும் பொருட்டு, தன் மகனுக்குக் கோடை, குளிர், மழை ஆகிய மூன்று பருவங்களுக்கும் உரிய மூன்று அழகிய சித்திர மாளிகைகள் அமைத்து, அவற்றிற்குள்ளே அழகிய மாதர், களி நடனங்கள், இன்பக் கச்சேரிகள் ஆகிய யாவற்றிற்கும் ஏற்பாடுகள் செய்து, அவன் இனிது இல்லறம் நடத்தச் செய்தான்.

சித்தார்த்தன் சிறிது காலம் இன்ப போகங்களில் கட்டுண்டு கிடந்தான் என்பதில் ஐயமில்லை. ஆயினும், பூர்வ ஜன்மங்களின் வாசனை அவனை அடியோடு விட்டுவிடவில்லை. அவன் அடிக்கடி தனித்தமர்ந்து வாழ்க்கை பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான். தன்னைச் சூழ்ந்திருந்த மக்களின் அவல வாழ்க்கையும், பொருள்களின் தோற்றமும் அழிவும் அவன் சிந்தனைகளை மேன் மேலும் கிளர்த்தின. ஒரு நாள் மாளிகையிலிருந்து புறப்பட்டு நகர்வலம் சென்றபோது, வழியில், நரைதிரை முதிர்ந்த ஒரு முதியோன் கூன்வளைந்து தடியூன்றித் தத்தித்தள்ளாடி வந்ததைக் கண்டான். மற்றொரு வீதியில் உடம்பெல்லாம் வீங்கி நடுங்கிய நோயாளியொருவனைக் கண்டான். மற்றுமொரு வீதியில் பாடையில் பிணத்தைப் படுக்க விட்டு நான்கு பேர் சுமந்து சென்றதைக் கண்டான். இன்னொரு வீதியில், உலக இச்சைகளையெல்லாம் வெறுத்து உண்மையான இன்பத்தை நாடிக் கானகம் நோக்கிச் சென்ற துறவியொருவனைக் கண்டான். தான் பார்த்தவற்றின் பொருளைத் தன் சாரதியிடம் கேட்டறிந்தான். அவன் மனம் குழம்பியது. இவற்றிற்கெல்லாம் காரணம் பிறப்பேயென்று தெளிந்தான். மாளிகைக்குத் திரும்பி வந்ததும், மீண்டும் வாழ்க்கைப் பிரச்னைகளைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான். இத்துன்ப உலகில் பிறவியின் கொடுமையிலிருந்து தன்னை மட்டுமன்றி மக்கட் குலம் யாவற்றையுமே காப்பாற்றும் பணி தனக்கேற்பட்டுள்ளதை உணர்ந்தான்.

இங்ஙனமிருந்து வருகையில், யசோதரை ஆண்மகவு ஒன்றைப் பெற்றாள். இதை அறிந்ததும், தனக்கு மேலும் ஒரு பந்தம் ஏற்பட்டதைக் குறித்து சித்தார்த்தன் மனம் புழுங்கினான். குழந்தைக்கு ராகுலன் (பந்தம்) என்று பெயர் சூட்டப்பட்டது. மேன்மேலும் சிந்தனையில் ஆழ்ந்த சித்தார்த்தன், ஒரு நாள் உண்மையை நாட உலகைத் துறக்க முடிவு செய்தான். அப்போது அவனுக்கு வயது 29.

ஒரு நாள் நள்ளிரவில் மாளிகையை விட்டுச் செல்லத் தயாரானான் சித்தார்த்தன். 'உலகில் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய துன்பங்களையெல்லாம் முற்றும் போக்குவதற்குரிய உண்மை வழியை அறிந்தாலன்றி மீளேன்' எனத் தன்னுள்ளத்தில் உறுதிகொண்டான். இச்சைகளின் தெய்வமாகிய மாரன் தோன்றி, "துறவு ஒழி" என எச்சரிக்கை செய்தான். சித்தார்த்தன் அதற்குச் செவிசாய்க்கவில்லை. கடைசியாகத் தன் குழந்தையைப் பார்க்கவும், யசோதரையிடமிருந்து விடைபெறவும் அவள் அறை சென்றான். மைந்தனை மார்போடணைத்து அவள் உறங்கிக்கொண்டிருந்தாள். 'குழந்தையை எடுத்தால், அவள் விழிப்பாள். பிறகு துறவு கடினமாகி விடலாம்' என்று அவன் எண்ணினான். தூர இருந்து குழந்தையைப் பார்த்து, 'நிர்வாணமடைந்த பின், மகனைப் பார்ப்பேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு மாளிகையை விட்டகன்றான். அன்று விசாகப் பூர்ணிமை. சித்தார்த்தனின் பெருந்துறவு தொடங்கியது.

சித்தார்த்தன், காந்தகன் என்னும் தன் குதிரை மீதேறிக்கொண்டு, முப்பது யோசனை சவாரி செய்தான். அவனுடன் சாரதி சன்னன் சென்றான். அவர்கள் அனோமா நதியை அடைந்தனர். சித்தார்த்தன் ராஜ உடைகளைக் கழற்றி, ஏழையொருவனிடமிருந்து பெற்ற கந்தலைக் கட்டிக்கொண்டான். உடைவாளால் கூந்தலையும், தாடியையும் வெட்டிச் சவரஞ் செய்துகொண்டான். சன்னனை அரண்மனை திரும்பச் சொல்லி, தன்னைப் பற்றிய செய்தியை அறிவித்துவிடச் சொன்னான்.

சித்தார்த்தன் ராஜ கிருகத்தை அடைந்தான். தெருவில் சாதுவைப்போலப் பிச்சை எடுத்து உண்டான். பிறகு, அதற்கு இரண்டு மைல் தொலைவிலிருந்த கழுகுக் குன்றின் உச்சியை அடைந்தான். அதில் முனிவர் சிலர் குகைகளில் வசித்தனர். அவர்களுடன் சிறிது நேரம் தங்கிப் பின்னர் வைசாலி நகரம் சென்றான். அங்கே பல சீடர்களுக்குக் குருவாக விளங்கிய அராத காலாமாவின் பாதங்களை வணங்கி, அவர் சீடனாகி, துக்க நிவாரணத்திற்கான வழியைக் கேட்டான். அவரது மார்க்கம் திருப்தி அளிக்காததால், அவரை விட்டு உத்தக முனிவரிடம் சென்றான். அவரும் திருப்தியளிக்காமற் போகவே, சித்தார்த்தன் மகத நாட்டின் வழியாகச் சென்று உருவேல வனத்தை அடைந்தான். அங்கே அமர்ந்து உண்மை காணக் கடுந் தவம் புரிந்தான். ஐவர் அவனுக்குச் சீடர்களாயினர். கடுந்தவத்தின் பயனாக அவன் உடல் மெலிந்தது. ஒரு நாள் அவன் மூர்ச்சையுற்றான். நல்ல காலமாக சுஜாதா என்னும் இடைகுலப் பெண் அவனுக்குப் பாற் கஞ்சியூட்டிக் காப்பாற்றினாள். சித்தார்த்தன் 'கடுந்துறவினால் பயனில்லை' எனத் தெளிந்தான். ஆனால், அவன் கருத்தைப் பிழைபடப் புரிந்துகொண்ட அவனுடைய சீடர்கள் அவன்மீது அவநம்பிக்கை கொண்டு, அவனைவிட்டுச் சென்றனர்.

கடைசியில் சித்தார்த்தன் ஓர் அரச மரத்தடியில் அமர்ந்து தியானம் செய்யலானான்.

சீல விரோதியான மாரன், சித்தார்த்தனின் மனத்தை வேறுபடுத்தக் கருதி, காமம், வெகுளி, மயக்கம் என்னும் தன் புத்திரிகளுடன் வந்து பலவாறு முயன்று போர் புரிந்தான். பேரிருள் கவ்வியது; பேரிடி இடித்தது; பூமி அதிர்ந்தது. உள்சக்தியையும் உள்ளொளியையும் பெருக்கிய சித்தார்த்தன், இத் தாக்குதலையெல்லாம் அமைதியுடன் நின்று சமாளித்தான். புத்தனின் உள்ளத்தை வேறுபடுத்துவதற்குரிய வன்மை தன்னிடம் இல்லாததை உணர்ந்த மாரன் தோல்வியுற்றுத் தன் உறைவிடஞ் சென்றான்.

சித்தார்த்தன் போதி மரத்தடியில் ஏழு நாட்கள் விடாது தியானஞ் செய்தான். அவன் உள்ளமும், உடலும் ஞானவொளியால் பிரகாசித்தன. பழம் பிறப்பு உணர்ச்சியும் தத்துவ ஞானமும் முறையே உண்டாயின. முற்பிறப்பில் பாவச் செயல்கள் செய்தோர் இப்பிறப்பில் வருந்துவதையும், சீலமும் ஜீவ காருண்யமும் பூண்டோர் இன்புற்று வாழ்வதையும் தன் ஞானக் கண்ணால் கண்டான். காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றை உடையவர் துக்கத்திற்கு ஆளாகின்றனர் என்றும், பிறந்தும், பிணிவாய்ப்பட்டும், மூப்பெய்தியும் இறக்கின்றனர் என்றும், இப் பிறப் பிறப்புக்களை ஒழிக்க, வேட்கையையும் அதனின்று எழும் கருமங்களையும் விலக்கிவிடுவதே வழி என்றும் கண்டான். பற்றற்ற நிலையே போதி, நிர்வாணம், அல்லது தெளிந்த ஞான நிலை என்றறிந்து அதை அடைந்தான். அப்போதி நிலை அடைந்த பின், துக்கம், துக்கோற்பவம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் ஆகிய நான்கு வாய்மைகளையும், நற்சாட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுணர்ந்தோர் தலைப்பாடு என்ற நல்வழிகள் எட்டையும் ஆராய்ந்து தெளிந்தான்.

ஆறு நீண்ட வருஷங்களுக்குப் பின், இந்த போதி நிலையை சித்தார்த்தன் அடைந்தான். அப்போது, அவனுக்கு வயது முப்பத்தைந்து. சித்தார்த்தனின் நாட்டம் முடிந்தது. புதிய புத்தன் ஒருவன் இப்புவியில் பிறந்தான்.

புத்தன் வெற்றி கீதம் பாடினான். இவ்வெற்றியைக் கண்ட உலகும், இயற்கைச் சக்திகளும், விண்ணுலகத் தேவர்களும் புதிய புத்தன் ஒருவன் பிறந்தது பற்றிக் களிபேருவகை எய்தினர். ஞானவான்களான நாகர்கள் சித்தார்த்தன் புத்தனானதை அங்கீகரித்து அவனுக்கு வழிபாடு செலுத்தினர்.

புத்தன் மக்கட் குலத்தின் மீது பேரிரக்கம் கொண்டான். உடனே அவனது சமய போதனை தொடங்கியது.



தொலைவிலிருக்கும் வரை குரங்கைப் போற்றலாம்; வணங்கலாம். கிட்ட வந்தாலோ நம் உடலுக்கும் உடைமைக்கும் சேதம்தான். இந்தக் குரங்காவது நன்மை செய்யவாவது என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. ஆனால், ஹம்பியில் தாயும் சேயும் துர்மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர் ஒரு குரங்கினால்! சரித்திரப் பிரசித்திபெற்ற விஜயநகர சாம்ராஜ்ய இடிபாழ்கள் நிறைந்த ஹம்பியில் இந்த அதிசயத்தைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

சென்னையிலிருந்து நாங்கள் இருபது பேர் போயிருந்தோம், உல்லாஸ யாத்திரையாக. பிள்ளையார், நரசிம்மர், விருபாக்ஷர் கோயில்களில் பூஜை செய்துவிட்டு, வழிகாட்டி கூறிய கதைகளைக் கேட்டவண்ணம் புனித துங்கபத்திரை நதிதீரத்தை நோக்கி நடந்து சென்றோம். 100 அடி தூரம் தள வரிசை போட்டிருந்த வீதி அது. அப்போது கிராமவாசிகள் கூட்டமொன்று எங்களுடன் சேர்ந்துகொண்டது. ஆடவர், பெண்டிரோடு சின்னஞ் சிறு பாலகர்களும் அந்தக் கூட்டத்திலிருந்தனர். சமைத்த சோறும் தின்பண்டங்களும் ஏராளமாக அவர்கள் கொண்டுவந்திருந்தனர்.

நதிதீரத்தை அடைந்ததும் எங்களில் ஒருவர் விடுவிடென்று தண்ணீரை நோக்கி நடந்தார். கூக்குரலிட்டு அவரை நிறுத்தினான், வழிகாட்டி. பொல்லாத முதலைகள் நிறைந்திருப்பதாயும், அனாயாசமாக ஆடு, மாடுகளைக்கூட விழுங்கி விடுவதாகவும் மெய்சிலிர்க்கும் கதைகளை அவிழ்த்தான், அவன். இவ்வளவு கூட்டமாக நாங்கள் சென்றபோதிலும் குரங்குகள் சேஷ்டைக்குக் குறைவேயில்லை. சமயம் பார்த்துப் பண்டங்களைத் தட்டிப் பறித்துச் சென்றன.

பின்னர் சிறிது நேரம் இளைப்பாறக் கோதண்டராமர் கோயிலுக்குச் சென்றோம். அரச மரங்கள் அடர்ந்து, பந்தல் போட்ட நிழலில், ஆற்றிலிருந்து குளிர்ந்த காற்று வீச, உண்டு களித்து இளைப்பாற அந்த இடம் சுகமாயிருந்தது. மர நிழலிலும் மண்டபங்களிலுமாகத் துயிலில் ஆழ்ந்தோம்.

திடீரென பதறிக் கத்தும் குரங்கின் ஒலி எங்களை உலுக்கி எழுப்பியது. இம்மாதிரி குரங்கு கதறிக் கேட்டதாக நினைவில்லை. நதி மீது வளைந்து நின்ற மரக் கிளையிலிருந்து சப்தம் வந்தது; மார்பில் குட்டியை அணைந்தவண்ணமிருந்த தாய்க் குரங்குதான். அந்த மரத்தின் கீழே சிறு குழந்தையுடன் ஒருத்தி நித்திரையிலாழ்ந்திருந்தாள்! அவளை நோக்கி விரைந்துகொண்டிருந்தது ஒரு முதலை. சிறிது நேரத்தில் குரங்குகள் அனைத்தும் 'கிரீச்'சிட்டுக் கத்தின. ஹம்பியிலுள்ள குரங்குகள் அனைத்தும் அங்கு கூடிவிட்டன போலும்! தடி, கம்புகளுடன் நாங்களும் ஓடினோம். துயிலும் தாயின் அணைப்பில் மெய்மறந்திருந்த பாலகனுக்குச் சில கெஜ தூரத்திலே யமன்! என்ன கொடூரமான சாவு காத்திருந்தது!

தடிகளால் தரையிலடித்து, கற்களை வீசி, கூச்சலிட்டு நாங்கள் கிளப்பிய ஆரவாரத்தைக்கேட்டு முதலை பின்னேறி ஓடி மறைந்தது. அபாயத்தை உணராத தாயும் எழுந்தாள். எங்களுக்கு நன்றி தெரிவித்து வணங்கினாள், ஆனந்தக் கண்ணீர் பொங்க. ஆனால், நன்றியனைத்திற்கும் உரித்தான குரங்கு, மானிடனின் செய்நன்றிக்குக் காத்திருக்கவில்லை. எங்கோ மறைந்துவிட்டது!

அதிசய வீணை

ரயில் விபத்து அயோக்கியர்களுக்கு இன்னும் சாதகமாக இருந்தது. தம்பி முரளி வரதனாகவும், மோஹன் அவன் பின்னோடு துணைக்கு வருபவனாகவும் நடிக்கத் திட்டமிட்டிருந்தனர், மோசக்காரர்கள். ரயில் விபத்தில் அவர்கள் சிக்கினாலும் அவர்களுக்குக் காயம் ஏதும் படவில்லை. மிகுந்த தந்திரசாலிகளான அவர்கள், சட்டென்று தங்கள் திட்டத்தை வேறு விதமாக மாற்றிக்கொண்டார்கள். மூளை கலங்கி நினைவிழந்து விட்டதாக நடித்தான் முரளி! இதனால் ஒரு சௌகரியம். எந்தவிதமான கதையையும் யாரிடமும் சொல்லிக்கொண்டிருக்கவேண்டியதில்லையல்லவா? ஞாபக சக்தி போய் விட்டதாக அழகாக நடித்தான். அவனிடமுள்ள தஸ்தாவேஜுகளைக் கொண்டு ஜனங்கள், வரதராஜன் தன் சொந்த ஊருக்குத் திரும்பி வந்த இடத்தில் ரயில் விபத்தில் சிக்கி மூளை கலங்கிப் பிரமை பிடித்துப் போய்விட்டான் என்று பேசிக்கொள்வார்கள் அல்லவா?

ஆனால், தங்களுக்கு முன்னாலேயே சேகரும், மல்லாரியும் அங்கிருந்தது அவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மல்லாரியை அவர்களுக்குத் தெரியாது. ஆகவே, மல்லாரியும் தங்களைப்போலவே வரதராஜனின் சொத்துக்கு ஆசைப்பட்டு மோசடி செய்யும் எண்ணத்துடன் வந்திருக்கும் ஒருவன் என்று தீர்மானித்தார்கள். அவர்கள் மனதில் அந்த எண்ணத்தை வளர்க்கும்படியான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி நடந்துகொண்டார் மல்லாரி.

தங்கள் திட்டப்படி வாரிசு சொத்துக் கிடைக்காவிடில் அரண்மனையிலுள்ள விலையுயர்ந்த பொருள்களை அடித்துக்கொண்டு போய்விடுவது என்று திட்டமிட்டு வேலை செய்தனர், சகோதரர்கள். அதனால்தான் மூளை கலங்கிய முரளி அரண்மனையிலேயே தங்க ஒப்புக்கொண்டான். இந்த அயோக்கியர்களுக்கு ஒரு கூட்டாளி சாமுண்டிக் கோட்டையில் இருந்தான். இன்னொரு வீட்டில் லட்ச ரூபாய்க்கு மேல் திருட்டுப் போயிற்றே, அதை நடத்தியவன் அவன்தான். அண்ணா மோஹன் அவனுடன் தொடர்பு கொண்டு அவன் மூலம் குகைச் சுரங்க வழிகளையும், அதன் மூலம் பங்களாவுக்குப் போகும் மார்க்கங்களையும் அறிந்துகொண்டான். மூவரும் வெளியேறத்தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்த சமயத்தில் மல்லாரியும், சேகரும் திடீரென்று மறைந்தது அவர்களுக்கு வியப்பாக—கலக்கமாகக் கூட இருந்தது. மல்லாரி, இந்தத் திருடர்களினால் சேகருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தாலும் நேரிடலாம் என்று தீர்மானித்து, சகுந்தலாவிடம்

சிறுவர் தொடர் கதை

"வாண்டு மாமா"

[illegible] தரும்படி சொல்லிவிட்டுத்தான் மாறு வேஷத்தில் இருந்துவந்தார். மறைந்த மல்லாரியின் மீது சந்தேகப் படும்படியாக தங்களது டைரியை மல்லாரியின் அறையில் வைத்தான் மோஹன்.

வக்கீல் ஆபத்சகாயத்திற்குப் பம்பாயிலிருந்து நம்பகமான தகவல்கள் வரதராஜனைப்பற்றிக் கிடைத்துவிட்ட செய்தியை எப்படியோ மோசக்காரச் சகோதரர்கள் தெரிந்துகொண்டார்கள். தங்கள் நடிப்பு வெளிப்பட்டு மாட்டிக்கொள்வதற்குள் பங்களாவிலுள்ள விலையுயர்ந்த பொருள்களைக் கடத்திச் சென்றுவிடத் தீர்மானித்து வேலை செய்தார்கள். பங்களாவிலேயே தங்கி இருந்த முரளிக்கு சமையலறையிலிருக்கும் ரகசிய அறையின் விவரம் மோஹனால் அனுப்பப்பட்டது. அதன்படி முரளி ஒரே இரவில் யாரும் எதிர்பாராதபடி ஜமீனில் விலையுயர்ந்த பொருள்களை எல்லாம் சுரங்கத்தின்மூலம் மோஹனிடம் சேர்ப்பித்துவிட்டான். ஆனால், மறு நாள் அவன் தப்பி ஓட நினைத்த போது விச்சுவினால் பின்தொடரப்பட்டான். பாதி வழியில் அவனுக்காகக் காத்திருந்த போலீஸ்காரர்களைக் கண்டு திரும்பி ஓடி வந்தபோது விச்சு வழியை அடைத்து மூடிவிடவே முரளி போலீசாரால் கைது செய்யப்பட்டான். அதற்கு முன்பே நகைகளுடன் ஓடுவதற்குத் தயாராக முரளியை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருந்த மோஹனும், அவன் கூட்டாளியும் மல்லாரியினால் கைது செய்யப்பட்டார்கள்.

மல்லாரி சொன்ன இத்தனை விவரங்களையும் திறந்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்தார்கள் எல்லோரும். முடிவாக மல்லாரி சொன்னார்:“இத்தனை சொன்ன பிறகும் ஓடிப்போன வரதராஜனின் உண்மை மகன் யார் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. இருந்தாலும் சேகர், தான் யார் என்பதை அவனே இன்னும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் விளக்கி விடுவான். எனக்குத் தெரியும் சேகர் யார் என்று. வக்கீலுக்குக் கிடைத்திருக்கும் தகவல்களும் அவன் யார் என்பதை ருஜுப்படுத்தும். இவ்வளவுக்கும் மேலாக இன்னொரு ரகசியமும் இருக்கிறது. அதை சேகரே உங்களுக்குக் காட்டுவான். அந்த ரகசியத்தை இந்த ஜமீனின் மூன்றாவது வாரிசான வரதராஜனே தன் மகனை சேகரிடம் ரகசியமாகச் சொல்லியிருக்கிறார். இந்த ஒரு விஷயத்தை மட்டும் நல்லவேளையாக அவர் அந்த மோசக்காரர்களிடம் தெரிவிக்கவில்லை. அந்த ஒரு ரகசியம்தான் மாணிக்கவல்லி அம்மையாரை திருப்தி படுத்தக்கூடியதும்கூட” என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார், துப்பறியும் நிபுணரான மல்லாரி.

மாணிக்கவல்லியின் கண்களில் ஒரு ஆவலும், தவிப்பும் பொங்கி நிறைந்து நின்றது. சங்கோஜத்துடன் சேகர் எழுந்திருந்தான்:— “என் அப்பா என்னிடம் வீணை வாசிக்கும் பொம்மையின் கதையைச் சொல்லிவிட்டு இந்த ரகசியத்தையும் சொன்னார். வீணையை மட்டும் கொண்டுவந்து பெண்ணின் கைகளில் பொருத்துபவர்கள், எங்கள் குடும்பத்தின் கதையைக் கேள்விப்பட்டவர்களாகக்கூட இருக்கலாம். ஆனால், இதை விட மேலான ஒரு ரகசியம் இருக்கிறது. அது இரண்டே பேருக்குத்தான் தெரியும். ஒன்று நான், மற்றவர் என் பாட்டி மாணிக்கவல்லி என்று சொன்னார். வீணை மீட்டும் பெண்ணின் கதை எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். ஆனால், கானத்தைப்பற்றித் தெரியாது” என்று சொல்லி நிறுத்தினான் சேகர்.

‘கானமா’ என்றார்கள் எல்லோரும் ஏககாலத்தில். கிழவி மாணிக்கவல்லியின் கண்களில் நீர் திரண்டு ஜ்வலித்தது.

“ஆமாம். கானம். வீணா கானம்” என்று சொல்லிக்கொண்டே சேகர், மேஜைமீது கண்ணாடி ஜாடிக்குள் இருந்த பொம்மையை எடுத்து எல்லோர் முன்னிலையிலும் கொண்டு வந்து வைத்தான். ஒரு பீடத்தின் மீது ஒரு அழகிய பெண் வீணை வாசித்துக் கொண்டிருப்பதாகத் தான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அப்படி இல்லை. பீடத்திற்கும் பெண்ணிற்கும் நடுவில் மயிரிழை போன்ற மெல்லிய இடைவெளி இருந்தது.



“இந்தப் பெண்ணின் உருவத்தை -வீணையை அதன் கைகளில் பொருத்தி, பீடத்தை பிடித்துக் கொண்டு மூன்று முறை திருகினால் அற்புதமான வீணையின் கானத்தைக் கேட்கலாம்” என்று என் தகப்பனார் சொல்லியிருக்கிறார் என்று சொல்லிக்கொண்டே பொம்மையைத் திருகினான். என்ன ஆச்சரியம்! அந்தப் பொம்மையிடமிருந்து இனிமையான வீணையின் கானம் கிளம்பிற்று. அதைக் கேட்ட அத்தனை பேரும் ஸ்தம்பித்து நின்றார்கள். ஆனால், மாணிக்கவல்லி மட்டும் நாத்தழுதழுக்க, “வரதராஜா . . . . இன்றைக்குத் தாண்டா உன்னை மறுபடி பார்க்கிறேன்” என்று சேகரைக் கை நீட்டி அழைத்து அணைத்துக் கொண்டாள்.

“உன் தாத்தாவுக்கு ஒரு ஐரோப்பியப் பிரபு பரிசாக அளித்த பொம்மை இது. சங்கீதம் பாடும் பொம்மை. இதன் ரகசியம் எனக்கும் உங்க அப்பாவுக்கும்தான் தெரியும். இதைச் செய்து காட்டுவதற்காகத்தான் நான் காத்திருந்தேன்”என்று கண்களில் கண்ணீர் வழியக் கதறிவிட்டாள் பாட்டி.

கடைசியில் உண்மையான வாரிசைக் கண்டுபிடித்துவிட்டதில் எல்லோருக்குமே மகிழ்ச்சிதான். சகுந்தலாவுக்குத்தான் ரொம்பப் பெருமை. அவள் நினைத்தபடியே சேகர் அவள் தம்பியாகிவிட்டானே!

மறு நாள் ஜமீன் பங்களாவில் பெரிய விழாவே கொண்டாடப் பட்டது. மாணிக்கவல்லிப் பாட்டிக்கு நூற்றாண்டு விழாவோடு,பேரன் கிடைத்த சந்தோஷமும்—அதில் கலந்திருந்தது. பிரமாதமான விருந்தும் வேடிக்கையுமாக அமர்க்களப்பட்டது. மல்லிகைக் கொல்லை ஜமீன்—அரண்மனையில், ரகுபதிக்கும் அவர் குழந்தைகளான விச்சு, சரஸா, ராமு மூவருக்கும் ராஜ் குமாரர் விசேஷ மரியாதை காட்டினார். மல்லாரியைப் புகழாதவர் இல்லை—விச்சுவுக்கு ஒரு தங்க மெடல் பரிசளிக்கச் சொன்னாள் ஜமீதாரிணி மாணிக்கவல்லி அம்மையார்.

[முற்றிற்று]

“கொஞ்சம் இரு” என்று, பாபு ஆரம்பித்ததும் கையைக் காண்பித்தார் ரங்கண்ணா. சுருதி சேர்ந்திருக்கிறதா என்று அவருக்கு மறுபடியும் சந்தேகம் வந்துவிட்டாற்போலிருக்கிறது. கண்ணை இடுக்கிப் புருவத்தைச் சுளித்து, தந்திகளை மீட்டி, தலையைச் சற்றுச் சாய்த்துக்கொண்டார்.

ஒரு நிமிஷம் ஆயிற்று.

தம்புராவின் நாதம் அலை அலையாக எழுந்து, செவியையும், உள்ளத்தையும் நிரப்பிற்று.

அப்பழுக்கில்லாத நாதமாக கூடம் முழுதும் கமழ்ந்தது அது.

சுருதி பரிபூர்ணமாகச் சேர்ந்திருந்தது. தீயும் சூடும்போல, இரவும் இருளும்போல, நிலவும் தண்மையும் போல, வைகறையும் தூய்மையும் போலச் சேர்ந்திருந்தது. மகா கவியின் சொற்களில் எழுவதுபோல, சொல்லாது காந்தாரம் சேர்ந்து தொனித்தது.

புலன்களைக் கூட்டி, ஒருமுகப்படுத்திற்று அந்த நாதம். புறத்தின் நினைவை அகற்றி, உள்ளத்தை மீற முடியாமல் கவ்விச்சென்றது. உடலையும் உலகையும் விட்டுச்சென்ற நினைவும், புத்தியும் ஒலியே ஊடும் ஒலியே பாவுமான அனுபவத்தின் மேலமர்ந்து, மாயக்கம்பளத்தில் அமர்ந்ததுபோல் பறந்தது. திக்கும் எல்லையும் அற்ற பெரு வெளியில் உலவுவது போன்றிருந்தது அந்த நாத உணர்வு.

நாத முனிகளெல்லாம் இப்படித்தான் திரிந்தார்கள். நாரதன் திரிந்தது இந்த மாயந்தான். மூவுலக வழிப்போக்கனைத் திரிந்த அவன், இந்த நாத வெளியில் தான் திரிந்தான் போலிருக்கிறது. இதைத்தான் மனிதனின் விரியாத கற்பனை, மூவுலகென்று குறுக்கிப் பெயரிட்டுவிட்டதா? அல்லது மூன்று ஸ்தாயிகளையே மூவுலகென்று சொல்லிற்று? தந்தி ஒலிக்க, வாய் பாட, செம்பை ஏந்திப் பிட்சை ஏற்ற தியாகய்யர் தெருவிலா நடந்தார்? திக்கை நிறைத்த நாதத்தில்தானே அலைந்தார்? அவர் செம்பை ஏந்தியது அரிசிக்கா? அல்லது நாத வெள்ளத்தில் மொள்ளுவதற்கா? ஊர் ஊராக காசிக்கும், தில்லைக்கும், தீர்த்தங்களுக்கும் தீட்சிதர் அலைந்ததெல்லாம் நாதத்தில் அலைந்ததுதானே! சுந்தரர் காலால் நடந்தது இந்த ஒருமையில்தானே! அவன் குளத்தில் மூழ்கி நீக்கிக் கொண்ட நோய் உடல் நோயா, அபஸ்வரமா? இந்த ஒருமையிலிருந்து விண்டு விண்டு வந்த பேதப்பாங்கா?

பாபுவுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. பாட்டுக்கூட இல்லை இது. வெறும் இரண்டு மூன்று ஒலிகள். வெறும் தம்புராவின் இசை. திருப்பித் திருப்பி வரும் ஒரே ஸ்வரங்கள். இதுவா இப்படிப் பரவசப்படுத்துகிறது? காரணம் என்ன என்று அறிய முடியவில்லை. தந்திகளின் இனிமையா? நின்று ஒலிக்கும் கார்வையின் நீளமா? சுருதி சேர்ந்த தூய்மையும் நிறைவா?

வாத்தியம் ஒலித்துக்கொண்டிருந்தது. ரங்கண்ணாவின் இடது விரல்கள் ஜீவா இவைகளை விட்டு துடையில் மல்லாந்திருந்தன. சுருதி நன்றாக, அவருக்குத் திருப்தியாகச் சேர்ந்துவிட்டது என்று தோன்றுகிறது.

கண்ணை மூடி, வாயைச் சற்றுத் திறந்து அவர் மீட்டிக்கொண்டேயிருந்தார். மார்பு மூச்சின் சலனத்தில் ஒழுங்காக ஏறி இறங்கிக்கொண்டிருந்தது. அவர் மனம் எங்கோ போய் செருகிக் கொண்டுவிட்டதுபோல் இருந்தது. பிய்த்துக்கொண்டு வர விரும்பாமல் எங்கேயோ ஒரு அறையில் தாழிட்டுக் கொண்டுவிட்டது போலிருந்தது. “அப்பாடா! அம்மா!” என்று இளைப்பாறுவதுபோல் அவர் இரண்டு, மூன்று முறை எழுப்பிய குரல், ஏதோ கஷ்டத்திலிருந்து தப்பியோடி புகுந்துகொண்ட அறையின் பத்திரமான தனிமையில் எழுப்பிய ஆச்வாசக் குரலாகத் தொனித்தது.

தொடர் நாவல்

சற்று கழித்துக் கண்ணைத் திறந்து, தூங்கி எழுந்ததுபோல் மலமலவென்று விழித்துக்கொண்டே பாபுவையும், சாம்பனையும் பார்த்தார் அவர்.

“நீ எப்படா வந்தே?” என்று அவர் நிலைப்பக்கம் பார்த்ததைக் கண்டு பாபு பின்னால் திரும்பினான். பதினேழு வயதிருக்கும். ஒல்லியாக, மாநிறமாக, குடுமியும், சந்தனப்பொட்டுமாக ஒரு பையன் நிலையண்டை உட்கார்ந்திருந்தான்.

“உன்னைத்தாண்டா, ஷண்முகம். எப்ப வந்தே?”

“இப்பத்தான் வந்தேன்.”

“நான் பாக்கவேயில்லியே.”

“————”

“என்ன பாக்கறே? புதுப் பையண்டா. காலேஜிலே வாசிக்கிறான். இங்கிலீஷ் காலேஜ்” என்று பாபுவைப் பார்த்து, “அவனும் உன் மாதிரிதாண்டா. திருவையாறு காலேஜிலே வாசிக்கிறான். தமிழ் வசிக்கிறான். எங்கப்பன், ஸ்வாமி பிறந்து, நாதமா வர்ஷிச்ச ஊர். கொடுத்து வச்ச பய. சனி ஞாயர்லே வருவன். இன்னிக்கு என்னடா லீவா உனக்கு?” என்று மீண்டும் ஷண்முகத்தின் பக்கம் திரும்பினார்.

“இல்லெ. தாத்தாவுக்கு திதி. ராத்திரி வந்தேன்.”

“என்னது?”

“தாத்தாவுக்கு திதி.”

“திதியா? சதாசிவத்துக்கா?”

“ஆமாம்.”

“ஓகோ. . . நவராத்திரி ஆனவுடனே தானே செத்துப்போனான். ஆமாமா. . . புண்யமாக் கட்டிண்டு போயிட்டான். . . ஹ்ம். தேவாரம், திருப்புகழ் எல்லாத்தியும் அனாதியா விட்டுட்டுப் போயிட்டாண்டா. அவன் பாடினான்னா என் பிரபு முன்னாடி வந்து நிப்பனே. . . நல்லதெல்

லாம் போயிட்டுது. என் மாதிரி உதவாக்கரையெல்லாம் சோத்துக்குப் பாரமா இன்னும் உக்காந் திண்டிருக்கோம்" என்று சதாசிவத்தின் நினைவில் இளகிய ரங்கண்ணு, மறுபடியும் தந்தியை மீட்டினுர்.

"அப்பாடா. . . சாம்பா, சுருதி எப்படிடா சேர்ந்திருக்கு இன்னிக்கி பாத்தியா?"

"——"

"ஏண்டா வாயடச்சுப்போச்சு? சொல்லேன். . . மந்தி, என்ன சிரிக்கறே? . . உம் மந்தஹாசத்தைப் பொசுக்க."

"எனக்கு உடம்பு சிலுக்கிறது அண்ணு."

"சிலுக்கிறதா? . . . சிலுக்கும் சிலுக்கும். . . இந்த மாதிரி சேர்றதே இல்லேடா. ரொம்ப அபூர்வம். இன்னிக்கி என்னமோ. . இந்தப் பையன் வந்திருக்கான்னே என்னமோ, தம்புரா கொஞ்சறது."

"ஆமாம், கொஞ்சறது. ரண்டு நாழியாச்சு அந்தப் பையன் உக்காந்திண்டிருக்கான், பிரும்மதண்டத்தைத் தலையிலே வச்சாப்பல. நீங்க என்னமோ கண்ணை மூடிண்டு தபசு பண்றேள். சாம்பனேட குலாவறேள். . . ஏண்டா, சாம்பா, தாத்தாவுக்கு திதிக்கத் திதிக்கச் சொல்றயே. மாளய பட்சத்துக்கே ஆறு மரக்கா தடல் உளுந்து கொண்டு கொட்டிப்பிடறேன்னே. சரசுவதி பூஜை, விஜயதசமி ஆயிடுத்து. உன் உடம்பு சிரித்துட்டாப் போரு மான்னேன்" என்று ரங்கண்ணு சம்சாரம் வந்து நின்று அதட்டினுள்.

"நீ எங்கடி வந்து இப்ப காடிவிடறே? ஏண்டா, தடிக் கம்பு! கேட்டுண்டியாடா சொல்றதை? கூர்ச்சம் மாதிரி வந்து உட்கார்ந்துக்கறியே. போது விடிஞ்சா ஆறு மரக்கா உளுந்துடா, வயசானவ கேக்கருளேன்னு ஏதாவது கொஞ்சம் இருக்கோ உனக்கு?"

"கொண்டு வந்துடறேண்ணு. நேத்திக்குத்தான் ரயில்வே ரசீது வந்திருக்கு. இன்னிக்கி மூட்டை வந்திருக்கும். நாளைக்குக் கட்டாயமா கொண்டு வந்து போட்டுடறேன்."

"நாளைக்கு மூட்டையோட வா. இல்லாட்டா இஞ்ச வந்து தாணுக்கு முட்டா உட்காராதே. . . கேட்டுண்டியாடீ. . . . சொல்லிப்பிட்டேன்."

"ஆமா. எனக்கு மெக்க மெக்கப் பேசணுமாக்கும் இப்ப. . . நாளைக்கி நாளைக்கின்னு சுவத்துலே எழுதி வச்சுட்டுப்போட்டும் அவன். நீங்க தபசு பண்ணிண்டிருங்கோ."

"நாளைக்குக் கொண்டு வறேனு இல்லியா பாருங்கோ மாமி."

"கொண்டு வந்தா வா, வராட்டாப் போ" என்று சொல்லிக்கொண்டே அடுக்களையைப் பார்க்கப்போனுள் கிழவி.

"ராமா ராம" என்று அரற்றிவிட்டு மறுபடியும் தந்தியை மீட்டினுர் ரங்கண்ணு.

"இன்னிக்கி என்னடா இப்படி சேந்துருக்கு. . அ. . பாட்டாவது, கீட்டாவது. இதையே கேட்டுண்டிருந்தாப் போரும் போலிருக்குடா சாம்பா. . இதைக் கேட்டுக்கொண்டே கட்டையைப் போட்டுட்டு ஓடிப்போயிடணும். ஆகாகா. . நீ என்னடா பாக்கறே? சங்கீதம் சொல்லிக்க வந்தோம். தேர் நிலையைவிட்டே கிளம்பலியேன்னு பாக்கறியா? . . ."

"அதெல்லாம் ஒண்ணுமில்லையே" என்றுன் பாபு.

"ஆரமிக்கிறதுக்கு முன்னடி கேட்டுடறேன். நீ எதுக்கு சங்கீதம் சொல்லிக்கப்போறே? கச்சேரி பண்ணி பிரக்யாதி வாத்துக்கா? இல்லே, ஞான சம்பத்துக்கா?"

அவர் எந்த பதிலை எதிர்பார்க்கிருர் என்று புரியறது? அப்பாவுக்கு ஆசை, பையன் கச்சேரி பண்ணிப் பார்க்க வேண்டும் என்று.

"ஏண்டா, ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறே?"

"ஞானம்தான் முக்கியம்."

"என்னமோ போலச் சொல்றியே. குரல் அழுத்தமாயில்லியே. . . சுவாமி கிட்ட போய் மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை எல்லாம் ஒழியணும்னு கேக்கணும் போலிருக்கு. அவர் நிச்சயமாக் கேட்டதைக் கொடுத்துடுவார்னு தொிஞ்சிருந்தா என்னடா ஆகும்?"

"சாமி கிட்டவே போக மாட்டோம்" என்று குரல் வந்தது.

"யார்ரு சொன்னது? ஷண்முகம். . . நீயாடா சொன்னே. . . உன் வாய்க்கு வெல்லமாப் போடணும். உங்க மாதிரி சிறுசுக மட்டும் இல்லே. நானும் ஓடியே போயிடுவேன். . . பிரசித்தி வேணுமா, ஞானம் மாத்திரம் வேணுமான்னு உன்னைக் கேட்டா நீ என்ன பண்ணுவே? சொல்லவும் முடியாம, மெல்லவும் முடியாம தவிக்கிறே!....கச்சேரி பண்ணு, வேண்டாங்கலே, அதுக்கு ஒண்ணும் இப்ப அவசரமில்லே. சாம்பக்கழுதைக்குக்கூட ஆசைதான். ஸ்வரம் பாடணும். பிடில்காரனையும், மிருதங்கக்காரனையும் விழுந்து பிடுங்கணும், இந்தக் குஸ்தியைப் பதினுயிரம் பேர் பாக்கணும், அப்புறம் மூட்டை மூட்டையாப் பணத்தைத் தூக்கிண்டு வந்துடணும்னு. இந்தக் கிழம் சரின்னு வாயைத் திறக்க மாட்டேங்கறதேன்னு பொருமருன். ஏண்டா, ராஜப்பா பண்ணினுப்பல பண்ணிப்பிடேன். கச்சேரி கச்சேரின்னு துடிச்சிண்டு கிடந்தான். என்னைக் கேட்டுக் கேட்டுப் பாத்தான். நடக்கலே. கடசீலே அரங்கேத்துப்படின்னு ஒரு நோட்டீஸைப் போட்டுண்டு வந்து, "ரொம்பத் தொந்தரவு பண்ணினு எல்லாரும். சரின்னு ஒப்புதுன்னுட்டேன். அண்ணு வந்து ஆசீர்வாதம் பண்ணணும்னு கையைக் கட்டிண்டு ரொம்பப் பவ்யம் மாதிரி நின்னுது. போய்ட்டு வந்தேன். கெக்கேபிக்கேன்னு கத்தி என் மானத்தை வாங்கிப்பிட்டான். எல்லாம் தலையாட்டிண்டு உக்காந்திருந்தது. பய ஜனங்க மனசுக்கு எப்படி மிருதங்கம் வாசிக்கிறதுன்னு தொிஞ்சுனுட்டான். கடசீலே எனக்கு நாலு பேர் ஏந்திண்டு ஸ்தோத்ரமா பண்ணினுன். நானும் கழுத்திலே போட்டுண்டு, வேஷ்டியையும் வாங்கிண்டு வந்தேன். நீயும் அது மாதிரி நோட்டீஸ் அடிச்சுப்பிடேன் திடீர்னு. இப்பல்லாம்தான் ஞானம், உசிரு ஒண்ணும் அவசியமா இல்லியே. பலம் இருந்தாப்போறும். குஸ்தி போடணும். ஒண்ணு ரண்டு மறந்து போயிடாம எண்ணத் தொியணும். நீயும்தான் கத்துண்டிருக்கே அதெல்லாம். அடியேண்டா நோட்டீஸை. . . மாட்டியா? . . . மாட்டேன்னு போயேன். எனக்கென்ன? . . . . அப்ப உனக்கு என்னடா வேணும், போ, ஞானமா?"

"ஞானம்தான்" என்றுன் பாபு

"ஞானம்தானு? சரி. ஞானம்னு என்ன, தொியுமோ?"

"அறிவு. தொிஞ்சுக்கறது."

"தொிஞ்சுக்கறது மாத்திரம் இல்லே. தொிஞ்சுண்டது எல்லாம் பாட முடியணும். சில்பத்திலே ஞானம்னு மனசிலே நினைக்கிறதைக் கல்லிலே காண்பிக்கணும். சண்டையிலே

ஸ்ராப்ஜைக் கையிலியும் வில்லிலேயும் காமிக்கணும். அந்த மாதிரிதான் எல்லா சாஸ்திரமும். புஸ்தகத்தை வாசிச்சுத் தெரிஞ்சுக்கறதும், காதாலே கேட்டுக்கறதும் மாத்திரம் ஞானமாயிடாது. அனுபவம்தான் ஞானம். செய்யறதுதான் ஞானம். அவர் இந்த ராகத்தை அப்படி ஜமாய்ச்சுப்பிட்டார். அப்படி இழைச்சுப்பிட்டார்னு போருது. நேத்திக்கு ஒத்தன் தெருவோட சொல்லிண்டு போருன், ஆகா கல்யாணியைக் கொன்னு குழியை வெட்டி மூடிப்பிட்டான்டான்னு. இன்னும் விவரம் தொரிஞ்சுக் கேட்டாலும் சாி, செஞ்சு காமிக்கறது தாண்டா ஞானம். அனுபவம்தான் ஞானம். அது இல்லாத வரையில் அரைக் கிணறு தாண்டின சங்கதி. அதுக்கு என்ன பண்ணணும்? அ? என்ன பண்ணணும்?"

"உழைக்கணும்".

"ஆமாம். உழைக்கணும். மம்பிட்டியை வச்சுண்டு உழைச்சு பாடுபடறதுன்னு என்ன வேணும்?"

"பலம் வேணும்."

"ஆமாம். பலம் வேணும். ஆனு வெறும் மம்பிட்டியைப் போடற சங்கதியில்லே இது. மம்பிட்டி அடிக்கிற பலம், சம்மட்டி போடற பலம் எல்லாம் போருது இதுக்கு."

"....."

"என்னடா, புரியறதா? . .. முண்டு முண்டுன்னு சதையிருந்தா போருது" என்று கொண்டே சாம்பனைப் பார்த்தார் ரங்கண்ணு.

"சாம்பா, சொல்லட்டுமாடா இவனுக்கு? என்ன மந்தஹாசம்? உன் மோகரைக்கு மந்தஹாஸம் பண்ணினு மகாவிஷ்ணு மாதிரி இருக்கும்னு நெனச்சிண்டிருக்கியோ? இல்லாட்டா பாலா மணின்னு நெனப்போன்னேன்? . . . . . இவன் சிறுசா இருக்கானே? சொல்லட்டுமா? வாண்டாமா? சொல்லேண்டா... தடிக்கம்பு."

"எதை அண்ணு?"

"எதையா? என்ன, தெரியாது போல கேக்கறே. ஆஷாடபூதி. . . மம்பிட்டி புடிக்கிற பலம் போருதுடா இதுக்கு. பிராணன்லே பலம் வேணும். மனோ பலம், ஆத்ம பலம் எல்லாம் இருக்கணும். . எல்லாத்துக்கும் சாரீரம்தான் வேணும். ஆனு, இதுக்கு சாரீரம் ரொம்ப ரொம்ப வேணும்டாப்பா, ரொம்ப



வேணும். பிராண சக்தி கண்ணுக்குத் தொியாது. அதைத்தான் முரட்டுத்தனமா வளர்த்தாகணும். ஜெண்டை வாிசை ஆறபோது வெள்ளைக் கடுக்கன் வேணும் போலிருக்கும். வர்ணம் வந்தா மயில் கண் வேஷ்டி, மல்லுச் சட்டை. கீர்த்தனம் வந்தா கொஞ்சம் அத்தர் இருந்தாத் தேவலே போலிருக்கும். அப்பறம் எங்க தேவடியா வீடு இருக்குன்னு உடம்பு அலேயும். அதுக்கப்பறம் சங்கீதம், பிராணன் எல்லாம் ஒண்ணொண்ணுக் கரையும். . . எங்க ஐயா சங்கீதத்தைக் காப்பாத்தணுமேன்னு கல்யாணம் கூடப் பண்ணிக்காமல் இருந்தார். குரலைக் காப்பாத்திக்கிறதுக்கு அவர் பட்ட பாடு கொஞ்சமா? கல்யாணம் கிடந்துட்டுப் போறது. மோரைக் கண்ணுலே கூடப் பாக்க மாட்டார். எலுமிச்சம் பழம், புளி, வெத்திலேப்பாக்கு—ஒண்ணையும் விரலாலேகூடத் தொட்டறியார். சித்தத்தை அப்படி நிரோதம் பண்ணிண்டு சன்னசி மாதிரி வாழ்ந்துட்டுப் போய்ச் சேர்ந்தார். சன்னசி மாதிரி என்னத்துக்காக இருக்கணும்? யாருக்காக இருக்கணும்? எல்லாம் இதுக்குத்தான்" என்று தொண்டையை இடது கை கட்டை விரலாலும், ஆள் காட்டியாலும் தொட்டுக் காண்பித்தார் ரங்கண்ணு.

"அப்யாசம் பண்ற வித்தை கிட்ட அவ்வளவு பயம், அவ்வளவு பக்தி, மரியாதை எல்லாம் அவாளுக்கு இருந்தது. இப்ப மாதிரியா? கண்ட இடத்திலே கண்டதை வாங்கித் திங்கறானுங்கள். பன்னிக்குட்டி மாதிரி கண்டஇடத்திலே போய் விழுறானுகள். வித்தையோட ரகசியம் என்ன, உசிரு என்ன, நோக்கம் என்னன்னு யாராவது பாடறச்சே நெனச்சுண்டு பாடறானு? எந்த ஹைக்கோட்டு ஜட்ஜ் தலேயாட்டறூர்னு பாத்திண்டே இருக்கான். இதுக்கெல்லாம் அப்பால் இல்லாது போயிடுத்து. . . இந்த ஆடம்பரங்கள்ளாம் என்னதுக்காகும்? கச்சேரியிலே எங்கியோ ஒரு மூலேயிலே அனுமார் மாதிரி பரம ரஸிகனு ஒருத்தன் உட்கார்ந்திண்டிருப்பன். அவன்னு ஹைக்கோட் ஜட்ஜ். அவன் எங்கியாவது மூஞ்சியைகிணக்கப்போருனேன்னு மனசுலே பயம் இருக்கணும். அவனேப் பாத்தா பரதேசி மாதிரி இருக்கானே, எப்படியிருக்கானே. போலீஸ்காரன் உடுப்பைக் கழட்டிப்பிட்டு துப்புத் தேட வந்திருக்காப்பல வந்திருப்பன். அதான் பரம ஜாக்ரதையா இருக்கணும். நமக்கு எது சத்யம்னு பட்டுதோ அதைப் பாடறேும். நாம சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு சத்தியத்து ரூபத்தை அறிஞ்சுண்டு ஆராதிச்சா எந்தப் பய ஒரு வார்த்தை சொல்ல முடியும்ங்கறேன். சொல்ல முடியுமாடா, சாம்பா."

"——"

"முடியவே முடியாது. .. சத்தியத்தைப் புரிஞ்சுக்காத கூட்டமாயிருந்துது, தொலேயறது சனின்னு ஏந்திண்டு வா.

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலேக்கட்டி வியாதிகளே சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளேக் கண்டு ஏமாறதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி

அதில்லாம் உனக்கு எப்படி தம்பட்டம் அடிச்சாப் புடிக்கும்னு இளிச்சுண்டு நிப்பாளோ, அதுக்கு முன்னாலே. . . ? என்னடா சாம்பா."

"——"

"இப்ப அதானேடா பண்றான் எல்லாரும். கடைசியிலே இவனும் எல்லாத்தியும் மறந்துட்டு அதுகளையும் மேலே எழும்பவிடாம ஆட்டுக்கூட்டமாப் பண்ணிப்பிட்டு போய்ச்சேர்றான் .அனுசாரணையாம், அனுசாரணை! எவ்வளவு லட்சணமாயிருக்கு! என்னடா சாம்பா! ஏன் இன்னிக்கு வாயைத் திறக்க மாட்டேங்கறே. எல்லாம் உனக்குச் சொல்றுப்பல இருக்கோன்னேன்."

சிறிது மௌனம் நிலவிற்று.

"அப்படியிருக்கு சேதி. . . என்னடாப்பா ஆரம்பிக்கலாமா? சுருதி சேரு."

ஃ ஃ ஃ

சுருதி சேர்ந்ததும், ஒரு கீர்த்தனையைத் தொடங்கிச் சொல்லிக் கொடுத்தார் அவர். அரை மணி நேரமாயிற்று.

அந்த அரை மணிக்குள் தன் கண்ணில் விரல் கொடுத்து ஆட்டிவிட்டாற்போல் தானிருந்தது பாபுவுக்கு. மூச்சைப் பிடித்துக்கொண்டு அவர் ஸ்வரங்களில் நிற்கச் சொன்னதில் அவன் கண் பிதுங்கிற்று.

"மனனம் பண்ணுடா, தியானம் பண்ணு. சுருதிதான் தெய்வம். பெத்த தாய் அது. ஸ்வரங்களெல்லாம் தியானம் பண்ணி, தியானம் பண்ணிப் பண்ணித்தான் வசப்படுத்த முடியும். நாம பாட்டுக்கு ரீ காமாதான்னு சொல்லிப்பிட்டா வந்துடாது. உனக்கென்ன சிரமம் இப்பி? சாரீரம் நன்னா இருக்கு. கொஞ்சம் மனசுதான் போய் ஏகாக்கிரமா நிக்கணும். உனக்கொண்ணும் பெரிசு இல்லேடா. சாம்பன் கழுதை மாதிரி சாரீரத்தை வச்சுண்டு ஸ்வரம் இருக்கிற ஸ்டேஷன்லாம் கண்டு பிடிச்சுட்டானே. ஏண்டா கழுதே, உன் சிரமம் பட வேண்டாம் இவன். சாரீரத்தைப் பாத்தியாடா? தேனபிஷேகம் பண்ணியிருக்கான் ஜன்மாந்தரத்திலே. அம்பாள் கடாட்சிச்சிருக்கா".

பாபுவுக்கு திக்கென்றது. இவர் தெரிந்துதான் சொல்கிறாரா என்று புரியவில்லை.

பாபு பாடியதை ஸ்வரத்திற்கு ஸ்வரம் திருத்திக்கொண்டே வந்தார் அவர்.

"சாரீரம் நன்னாயிருக்கு. ஸ்வர சுத்தம் வேணுமேடா. அதுக்கு மனசுபோய் லயிச்சாத்தான் நடக்கும். மனசு போய் லயிக்கிறதுன்னா வெறும்னே தியானம் பண்ணிக்கிண்டே இருக்கணும். ஸ்வரம் ஸ்வரமா, சஞ்சாரம் சஞ்சாரமா?...இப்பவாண்டாம் – தெரிஞ்சுக்கோ, எங்கேயாவது தனியாய்ப் போய் உட்கார்ந்துக்கோ. மூச்சைப் பிடிச்சு ஸ்வாமியைப் பிரார்த்திச்சிண்டு அப்புறம் தியானம் பண்ணு. புரியறதா? மூச்சைப் பிடிக்கிற வித்தை தெரியணும்னா சாம்பனைக் கேளு. பாடறானோ இல்லியோ, பாடறதுக்கு வேணுங்கற ஜபர்தஸ்தெல்லாம் அவனுக்கு தெரியும். சாம்பா, மூச்சை அடக்கச் சொல்லிக் கொடு இவனுக்கு. ஒரே நாள்ளே ஏதாவது பண்ணிக் கொன்னுப்பிடாதே."

ஒரு நிமிஷம் பேசாமல் உட்கார்ந்துவிட்டு "சரி, பாடம் ஆயிடுத்து. போய் பாடம் பண்ணு."

". . . . ."

"பாடம் பண்றதுன்னா. கீர்த்தனையை சும்மா நெட்டுருப் போட்டாப் போறுது. நெட்டுரு பண்ணிப்பிட்டு தியானம் பண்ணு. பண்ணப்பண்ண தெரியும். அதானோட அழகு. நான் சும்மா சொல்லி என்ன பண்றது? பூந்து பார்த்த அப்புறம் அதைவிட்டு, வேற எங்கியும் மனசு துணியாதுடா, துணியவே துணியாது. .....சாம்பா, வெந்நீர் சுட்டுப் போச்சோ, பாரு", என்று தம்புராவை எடுத்து உறையைப் போட்டார், ரங்கண்ணா.

"சரி, போயிட்டு வறியா?"

"வரேன்".

"எப்ப வரே மறுபடியும். நாளைக் காலமே வறியா?"

"வரேன்."

"ஞாபகம் வச்சுக்கோ, சொன்னதெல்லாம்."

"ம்."

"சிறிசு, மனசிலே எத்தனையோ இருக்கும். மத்த வித்தைக்கெல்லாமாவது போனாப் போறதுங்கலாம். இதுக்கு, கன ஜாக்ரதையா இருக்கணும்...ரொம்ப இந்த சங்கதி. ஜாடை மாடையாத்தான் சொல்லலாம். ஜாக்ரதையா இரு. எல்லாம் கைகூடும். அப்ப போயிட்டு வரியா?"

"ம்."

"வெந்நீர் சுட்டுப் போச்சாடா, சாம்பா?"

"சுட்டுப் போயிடுத்தண்ணா."

"அப்ப வறியாடாப்பா நீ? ஷண்முகம், நீயும் புறப்படேன். தாத்தாவுக்கு திதின்னியேடா."

"புறப்பட வேண்டியதாங்க."

"அப்ப கிளம்பு. நான் குளிக்கப் போறேன். வயசாக வயசாக பிராதஸ்நானம் கூட போயிடுத்து...ம்...இனிமே இப்படித்தான்" என்று முணகிவிட்டு கொல்லைப்பக்கம் நடந்தார் ரங்கண்ணா.

எவ்வளவு உயரம்! முகம் சிம்மம் மாதிரி அப்பாலும் இப்பாலும் பார்த்து நடக்கும்போது, பாபு அவரை வியப்புத்தாங்காமல் பார்த்தான். கூடப் போக வேண்டும் போலிருந்தது. சாம்பனுக்குத்தான் இந்த உரிமைகள் உண்டு போலிருக்கிறது. சாம்பனுடைய இடம் நமக்கு என்றாவது கிடைக்குமா? இப்போதே போகலாமா? அவர் போகச் சொல்லிவிட்டார். கேட்காமல் அவரைத் தொடர்ந்துபோனால் என்ன சொல்வாரோ?

கொல்லை வாசல் தாண்டி அவர் உருவம் மறைந்ததும் பாபு வெளியே நடந்தான். ஷண்முகமும் கூட வந்துவிட்டான்.

திண்ணையில் ரங்கண்ணா சம்சாரம் உட்கார்ந்திருந்தாள்.

"உனக்கு எந்தூருடா பையா?"

"பாபநாசம் இப்ப."

"அப்பா அம்மா இருக்காளா?"

"இருக்கா."

"காலேஜிலே வாசிக்கிறியா?"

"ஆமாம்."

"எந்த க்ளாசு?"

"பி. ஏ.. அடுத்த வருஷம் பரீட்சைக்குப் போறேன்."

"ம்.. தாத்தாவுக்கு மாசம் என்ன கொடுக்கறதாக இருக்கே!"

தமாஷ் தம்பதி

★

"கர்ப்பத்தடை முறையைப் பற்றி ரொம்ப சிலாகித்துப் பேசியிருக்கிறார் நம்ம மந்திரி. படிச்சியோ? எல்லோரும் கர்ப்பத்தடை செய்து கொள்வது நல்லது என்று சொல்கிறார்."

"அது சரி! நேற்று படித்தீர்களே அதிகப்படியான குழந்தைகளை எல்லோரும் பெறவேண்டும் ஆறு குழந்தைகளுக்கு மேல் பெற்றால் தாய் தகப்பன்மார்களுக்கு அரசாங்கம் இலவச சம்பளம் கொடுக்கும் என்று ..!"

"அது இங்கேயில்லே ரஷ்யாவிலே!"

"சரி! அப்படின்னா கிளம்புங்கோ! நம்ப அந்த நாட்டுக்கே போய்விடுவோம்!"

★

பாபுவுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

"முடிந்ததைக் கொடுக்கறேன்."

"முடிஞ்சுதைன்னு? உன்னால முடிஞ்சுதா? அவராலெ கேட்க முடிஞ்சுதா?"

பாபு புன்சிரிப்புடன் நின்றான்.

"சொத்து கித்து இருக்கோ?"

"சுமாரா இருக்கு."

"சுமார்னு?"

"ரொம்ப இல்லெ. சாப்பாட்டுக்கு இருக்கு. பாபநாசத்திலே ஒரு வீடு இருக்கு."

"இஞ்சல்லாம் மொத்தமா ஆயிரம் ரண்டாயிரம்னு பேசிண்டு வரான். முந்நூறு நானூறுங்கறான். அதெல்லாம் காணறதுக்குள்ளியும் போரும் போரும்னு ஆறது. நீ மாசம் பதினெஞ்சு ரூபா கொடுத்துட வேண்டியது. இல்லாட்டா அவரைப்போய் வயசு காலத்திலே ஏன் கஷ்டப்படுத்தணும் சொல்லு."

பாபுவுக்கு அப்போதும் என்ன சொல்வதென்று புரியவில்லை. பதினைந்து ரூபாய்க்கு அப்பாவுக்கு நிச்சயமாக கொடுக்க முடியாது. கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தால் உபகாரச் சம்பளப் பரீட்சைக்கு உட்காரச் சொல்லி இந்தப் பாதிச் சம்பளக் காசுக்கு ஆசைப்பட்டிருக்கமாட்டார் அவர்.

"ஏன்? உனக்கு எத்தனை கொடுக்கிறதாக எண்ணம்?"

"நான் இன்னும் யோசிக்கவே இல்லை" என்றான் பாபு தலையைக் குனிந்து.

"அப்படின்னு நானே யோசிச்சுக் கொடுத்துப்பிட்டேன் இப்ப."

"பாக்கறேன்."

"எந்தத் தெருவிலே இருக்கே?"

"காலேஜுக்கு கிட்டதான்...ரூம் வச்சிண்டிருக்கேன்."

"ரூமுக்கு என்ன வாடகை?"

"அஞ்சு ரூபா."

"ஹோட்டல்லெ சாப்பாடா?"

"இல்லை. தெரிஞ்சவாளாத்திலே."

"அவாளுக்கு என்ன கொடுக்கறே?"

"பன்னண்டு ரூவா."

"காப்பி, சாப்பாடு, எண்ணெய் எல்லாமா?"

"ஆமாம்."

"ஏண்டா, ஷண்முகம், நீ என்னடா கொடுக்கறே சாப்பாட்டுக்கு உங்க காலேஜிலே?"

"எனக்கு இனும் சாப்பாடும்மா."

"எண்ணெய்."

"அதுவும் இனும்தான்."

"சரி, எப்ப ஊருக்குப் போப்போறே?"

"காலமே."

"சரி சாயங்காலம் வந்துட்டுப் போ."

"நான் போயிட்டு வரட்டுமா?" என்றான் பாபு.

"சரி, போயிட்டு வா. தாத்தா உசிரைக் கொடுப்பர். காசைப் பெரிசுன்னு நெனைக்காதே. அதுக்குத்தான் சொன்னேன்."

"சரி."

"போய்ட்டு வா."

ஷண்முகம், தெருவில் நடந்து போகும் போது பாபுவின் பூர்வ சிட்சை, குலம், கோத்ரம் எல்லாம், விசாரித்துக் கொண்டே வந்தான்.

"அம்மாவைக் கண்டு பயந்துடாதீங்க. ஐயாவுக்கு உலக நினைவே இருக்காது. அதுனாலெ அம்மா இப்படிப் பயமுறுத்தினாத்தான் நடக்கும்னு அலட்டுவாங்க. மனசிலே ஒண்ணும் வித்யாசமா இராது" என்று தேற்றினான் அவன்.

"ஐயாவுக்குத் தெரியுமா இது?"

"தெரியாமியா இருக்கும்? அவங்க சொன்னாலும் இவங்க கேக்க மாட்டாங்க. சுபாவம். ஐயா காதிலியே போட்டுக்கறதில்லை."

"ம்."

"அம்மாவுக்கு வேற ஒண்ணும் இல்லெ. வயசு காலத்திலே இப்படி ஐயாவை தொந்தரவு படுத்திக்கறாங்களேன்னுதான்... ஐயா கேப்பாங்களா? அவங்களுக்கு யாருக்காவது சொல்லிக்கிட்டே இருக்கணும். பேசிக்கிட்டே இருக்கணும். இல்லாட்டி உடம்பு வாடிப் போயிடும்."

ஷண்முகம் சிறு பையன்தான். ஆனால் உலகானுபவமும் அறிவும் நிறைந்திருக்கும் போலிருந்தது. பேச்சும் முற்றலாகத் தானிருந்தது. அவன் முகத்தில் தனியாக ஒரு களை. சிறு பிள்ளையின் களை. கிழக்கு வெளுத்ததும் தெரிவதுபோல, வரப் போகும் யௌவனத்தின் பொலிவு முகத்திலும் உடலின் மினுமினுப்பிலும் படர்ந்திருந்து வருகையை அறிவிப்பதுபோல. அவனை அக்கறையாகப் பார்த்துக் கொண்டு வந்தான் பாபு.

"அப்ப நான் வரட்டுங்களா?"

"எங்கே வீடு?"

"நான் வலயப்பேட்டை. திரும்பி ஐயா வீட்டோடதான் போகணும்."

"அடேடே, எனக்காகவா நடந்து வந்தீங்க."

"அம்மா சொல்லிக்கிட்டிருந்ததைக் கேட்டு, வித்தியாசமா நெனச்சுக்கப்படாதுன்னு சொல்ல வந்தேன். உங்க முகம் என்னமோ கொஞ்சம் மாறினாப்பல இருந்தது. அதான் வந்தேன். அம்மா வெகுளி. இப்படிதான் நீக்குபோக்கு தெரியாமே அரட்டிவிட்டிடுவாங்க...நான் வரட்டா? சனிக்கிழமை வருவேன் பாக்கறேன்."

பாபுவுக்கு ஒவ்வொரு அனுபவமும் நினைக்க நினைக்க புதிதாக, விசித்ரமாக இருந்தது. சாம்பனை அவர் கூப்பிட்ட ஆயிரம் கழுதையும், வெசவும்—எவ்வளவு செல்லம் அவனுக்கு!

புதிது புதிதாகத்தான் இருந்தது எல்லாம்.

எல்லாமா புதிது? அவர் சரீரத்தைப் பற்றிச் சொன்னது? வைத்தி சொன்னது போதாதா? ராஜம் சொல்கிறது போதாதா? இவருமா இதைச் சொல்ல வேண்டும்?

அது பழைய செய்திதான். இவரிடம் கேட்கிறது மூன்றாவது தடவை. அதன் புதுமைதான் குறையவில்லை. இவர் வேறு தினுசாகச் சொன்னதுதான் புதுமை. வேறு வார்த்தைகளில் சொன்னதுதான் புதுமை.

நமக்கு இதையெல்லாம் காப்பாற்ற முடியுமா?

அப்பா அகௌரவம் என்று சொன்னார். இவர் சங்கீதத்துக்கே ஆதாரம் என்கிறார்.

அப்பாவின் ஆசை பூர்த்தியாகிவிடும். அவருக்கு நான் சங்கீத வித்வானாக வேண்டும் என்று ஆசை. கச்சேரி பண்ண வேண்டும் என்று ஆசையோ என்னமோ? இந்த மாதிரி வாய்விட்டுச் சொன்னதாக ஞாபகமில்லை. சங்கீத வித்வானாகிப் பாடிக்கொண்டிருந்தால் கேட்கிறவர்கள் கேட்டுவிட்டுப் போகிறார்கள், இல்லாவிட்டால் சொந்தத்திற்குப் பயன்பட்டுவிட்டுப்போகிறது என்று அதைச் சொல்லாமலிருந்தாரா?

எது எப்படிப் போனாலும், குழப்பங்களுக்கும், ஐயங்களுக்கும் ரங்கண்ணா பேசிய சொற்களும், பேசப்போகும் சொற்களும் கட்டாயம் விடை தரும் என்றுதான் தோன்றுகிறது. அப்பா ஊன்றிய விதையை இவர் உரமும் நீரும் இட்டு வளர்ப்பார் என்றுதான் தோன்றுகிறது. யுக யுகமாக இவ்வளவு வசவு வாங்கி அபக்யாதி பெற்றுவிட்ட சரீரத்தில்தான் விண்ணின் விதைகளும் அமுங்கிக் கிடக்கின்றன. இது என்ன வேடிக்கை!

பாபுவுக்கு இந்தப் புது அனுபவத்தின் குளுமையில் தோட்டி வாரிவிட்ட புழுதி கூட பிரமாதமான சத்ருவாகத் தோன்றவில்லை. வீட்டிற்கு வரும்போது ஒன்பதரை மணி ஆகிவிட்டது.

(தொடரும்)

நீரிழிவுக்கு
நிவாரணம்

சிறுநீரில் சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும். இப்பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான்.

அதிகதாகம், பசி, அடிக்கடி சிறுநீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதிகளின் முக்கிய அறிகுறிகள், வியாதி முற்ற ராஜப் பிளவை, கட்டிகள், சாளேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும்.

பல வருட ஆராய்ச்சிக்குப்பின் வீனஸ் சார்ம் தயாரிக்கபபட்டிருக்கிறது. இதை உபயோகிப்பதால் பலர் மரணத்தினின்றும் தப்பியுள்ளனர். சில தினங்களுக்குள் குணம் அடைந்து வருவதை உணர்வீர்கள். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 6-12-0, பாக்கிங் தபால் செலவு இனும்.

வீனஸ் ரீஸர்ச்லாபரட்டரி
(S. M. W.)
Post Box No. 587, CALCUTTA.

துப்பறியும்
சுப்புடு
வேகமாய் வந்த ப்ளஷர் கார் ஒன்று, சுப்புடு வீட்டின் வாசலில் வந்து நின்றது.
சந்த்ரு
வாருங்கள் நளினி! என்ன விஷயம், என்னைத் தேடிக் கொண்டு இவ்வளவு தூரம்.......?
மிஸ்டர் சுப்புடு! விஷயம் இல்லாமலா வருவேன்? என்னுடைய அல்சேஷியன் நாய் தொலைந்து போய்விட்-டது
போனமாதம்தான் ரூபாய் ஆயிரத்துக்கு மேல் கொடுத்து அதை வாங்கினேன். அது தொலைந்து போனது, எனக்கு ரொம்ப மன வருத்தத்தை உண்டு பண்ணிவிட்டது. நீங்கள்தான் அதைக் கண்டு பிடித்துக் கொடுக்க வேண்டும்.
முயற்சி செய்கிறேன்!
ஒரு வாரம் ஓடி விட்டது. ஒரு நாள் மாலை நேரம் சுப்புடு ஜாலியாக, மெரீனு பீச்சில் காற்று வாங்கிக் கொண்டிருந்தார்.
ஆகா! கடவுளின் சிருஷ்டியை என்னவென்று சொல்வது? அகன்று பரந்த, நீலநிற ஆகாயம்! அதன் நடுவே வெண்ணிறக் கப்பல்கள் போல் மிதந்து செல்கின்றன மேகங்கள்!
ஐயோ! நாயை மிதித்துட்டேனே!
வெள்! ளொள்!
வௌ்!
ளொள்! ளொள்!
ஐயோ! அம்மாடி! ஓடமுடிய வில்லையே
டபார்!
மிஸ்டர் சுப்புடு என்னது? ஏன் இப்படிப் பயந்து ஓடி வருகிறீர்கள்?
நளினி! அதோ பாருங்கள்! நாய் துரத்துகிறது!
மிஸ்டர் சுப்புடு! இதுதான் என் டைகர்!....ஆகா! நீங்கள் எவ்வளவு சிரமப்-பட்டு இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களுக்குப் பெரிதும் கடமைப்-பட்டிருக்கிறேன்.

தொடரும்

உங்கள் காலபலன்

பி. வி. ராவ்

1956 மே 14உ முதல் (துன்முகி௵ வைகாசிமீ 1உ முதல் 31உ) ஜூன் 13உ முடிய.

[கீழ்க்கண்ட பலன்களை சந்திர ராசி, சூரிய ராசி, லக்ன ராசி மூன்றிலிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்.]

...மேஷ ராசி...

அசுவனி, பரணி, கிருத்திகை
முதல் பாதம் முடிய

பண, உத்தியோக விஷயங்களில் உஷாராயிருப்பதை இம்மாத கிரக அமைப்பு அவசியமாக்குகிறது. கும்ப செவ்வாய், புதிய தெம்பூட்டுவதால், மாதம் போகப் போக நம்பிக்கை அதிகரிக்கும். ஆயினும் இம்மாதத்திய நிகழ்ச்சிகளைச் சமாளிப்பது எளிதன்று. செவ்வாய், சனி, சூரியன் கேந்திர நிலையால் உமது முயற்சிகளில் கைமேல் பலன் துர்லபமெனலாம். மனோதத்துவ ரீதியான அம்சங்களும் சம்பந்தப்பட்டிருப்பதால் முக்கிய திட்டங்களை மிக ஜாக்கிரதையாக அமுல் நடத்த வேண்டும். பேச்சிலும் செயலிலும் அவசர புத்தி, அளவுக்கு மீறிய ஈடுபாடு, எரிச்சல், தீராலோசியா முடிவு ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். பொறுமையின் விளைவுகளும் பிரதிபலிக்கும். 4, 5–ல் இருக்கும் குரு மட்டுமே, பிராபல்யத்தையும், அந்தஸ்தையும் காப்பாற்றி வரும். 23–ந் தேதிக்குப் பிறகு சனி–குரு கேந்திர நிலை காரணமாக, அபிவிருத்தி முன்னேற்றம், பிராபல்யம் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் தடைபடும். ஆகவே எதிர்ப்பு குறைவாயுள்ள பாதையில் செல்வது உசிதம். சமூக, உத்தியோக வட்டார நண்பர்களை செவ்வாய் சேர்க்கும்; அவர்களிடம் தகாறும், அதிக நம்பிக்கையும் வேண்டாம்.

பண விவகாரம்:— நிதி வசதி திருப்திகரமாயில்லை. பொறுப்புகளை நிறைவேற்ற திண்டாட நேரலாம். ஆயினும் பழைய நண்பர்கள் ஒத்தாசை செய்வர். தனலாபத்திற்குக் கடிதப் போக்குவரத்தும், தஸ்தாவேஜிகளும் முக்கியமானவை.

குடும்பமும் சூழ்நிலையும்:— செவ்வாய்–சூரியன் கேந்திர நிலை குடும்ப சௌஜன்யத்துக்கு ஏற்றதல்ல. அனாவசியமாக நண்பர், உறவினரிடம் கோபம் மூளலாம். நீங்கள் வைது சண்டையிட்ட நண்பரே உதவி புரிய முன்வரும் போது, கடந்தவற்றை நினைத்து வருந்த நேரும். குருவின் நிலை ஹேஷ்ய போதத்திற்குச் சாதகமாயிருப்பதால், இரண்டாம் வாரத்திலிருந்து வெற்றியை எதிர்பார்க்கலாம். எல்லாக் கஷ்டங்களையும் பகவத் அனுக்ரஹத்தால் சமாளிக்கலாம்.

உத்தியோகம்:—முதல் வாரம், ஆபீசில் உயர்வுக்கு அனுகூலமானது. இரண்டாவது வாரத்திலிருந்து விசேஷ அபிவிருத்தி காணப்படினும் ஏதாவதுஒருவிதத்தில்ஆபீஸ் கவலையால் உற்சாகமிராது. சகாக்களை நம்பி ஏமாற வேண்டாம்.

வியாபாரிகளுக்கு:— உமது நலனுக்கு விரோதமாக 8–ம் வீட்டில் இரு பாப கிரகங்களிருப்பினும் பிற கிரகங்கள் சமயத்தில் கைகொடுக்கும். வெளி வியாபாரம் அதிருஷ்டகாமானது. பண வசதியின்மையால் கூட்டாளியின் முணுமுணுப்புகள் அதிகரிக்கும்.

மே 15 16 19 22 27 30, ஜூன் 3 5 9 10 11 18 நல்ல நாட்கள்.

மே 18 20 24, ஜூன் 7 8 நல்ல நாட்களல்ல.

..ரிஷப ராசி..

கிருத்திகை 2-ம் பாதம் முதல்
ரோஹிணி, மிருகசீரிஷம்
2-ம்பாதம் முடிய

கிரகங்கள் உமக்கு எதிராக அணிவகுத்து நிற்பது போலத் தோற்றுகிறது. ஏற்கெனவே கஷ்டத்தில் ஆழ்ந்திருப்பவர் மேலும் அவஸ்தைப்படுவர். பிறருக்கு இம்மாதம் வீட்டிலும் வெளியிலும் பிடுங்கல் அதிகமாயிருக்கும். 23ந் தேதியிலிருந்து கிரகங்களின் கேந்திர நிலையால் முன்னைவிட வாழ்க்கை சிரமமாயிருக்கும். இதனால் ஒரு நற்பலனுமுண்டு. நடத்தையில் தான்தோன்றிப்போக்கு குறைந்து கட்டுப்பாடு அதிகரிக்கும். வேதாந்த மனப்பாங்கும் மேலிடும். இதனால் ஏதாவதொரு துறையில் உமது சக்தியனைத்தையும் பிரயோகித்து, உற்சாகமுடன் செயலில் ஈடுபடத் தூண்டுதலிருக்கும். கிரகங்களின் இந்த எதிர்ப்பைச் சமாளிக்க இடையறாத முயற்சிதான் நல்ல உபாயம். சாத்தியமானவரை சுற்று வட்டாரத்தில் சச்சரவு வேண்டாம். ஜன்மத்தில் சூரியன் உமது சொந்த,உத்தியோக வாழ்க்கைக்குப் புத்துயிரூட்டுகிறது. 1, 7–ல் உள்ள கிரகங்களால் பித்தம் மேலிட்டு ஜீரணக் கோளாறு ஏற்படலாம். ஜாகைப் பிரச்னை அல்லது தாயைப் பற்றின கவலை உம்மை ஆட்கொள்ளும். வாகன சாரத்யத்தில் ரொம்ப ஜாக்கிரத்தை தேவை. பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, விவாகப் பிரச்னை தீரும். பிறருடன் பழகுகையில் ஆத்திரம், அவசரம், நிதானமின்மையைத் தவிர்க்கவும். வியாஜ்யங்களை இம்மாதம் தவிர்ப்பது நல்லது.

பண விவகாரம்:— ராசியாதிபதி – தனாதிபதி பரிவர்த்தனை, பண வசதிக்கு நல்ல அத்தாட்சி. அவர்களின் வக்கிர கதியால் இது பாதகமுறலாம். ஆயினும் தர்ம சங்கடமான நிலைமை ஏற்படாது. சமயத்தில் சகாயம் கிட்டும். முதல் வாரம் செலவு கடுமையாகும். பணநஷ்டமும் ஏற்படலாம்.

குடும்பமும் சூழ்நிலையும்:— 4–ல் குரு வீட்டில் சௌஜன்யம் தழைக்க உதவும். பெரியவரால் அனாவசியக் கவலை மூளும். முதலீட்டுக்கு இது நல்ல காலம். சிலர் வாகனம் வாங்கக்கூடும். மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

உத்தியோகம்:— சம்பாத்தியம் உயர்வின்றி அந்தஸ்து உயரும். கடும் உழைப்பும், எதிர்ப்புமிகுந்த சூழ்நிலையும் உம்மை எதிர்ப்படுகின்றன.

வியாபாரிகளுக்கு:— இம்மாதம் அவ்வளவாக அதிருஷ்டமெனச் சொல்ல முடியாது. வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெறுவிடினும், வர்த்தகம் ஸ்திரமடையும். கூட்டாளிகளிடையே மனக்கசப்பு நிலவும். முதல் வாரம் வெளி வியாபாரத்திற்கு ஏற்றது.

மே 15 16 19 22 26 29 30 ஜூன் 3 5 8 10 11 13 நல்ல நாட்கள்.

மே 18 20 21 24 28 31 ஜூன் 7 நல்ல நாட்களல்ல.

மிதுன ராசி

மிருகசீரிஷம் 3-ம் பாதம்முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய

12-ல் சூரியனும் புதனும், எழுத்து, உறவினர் விவகாரங்கள், பண விஷயங்கள் ஆகியவற்றில் ஈடுபாட்டைக் குறிக்கின்றன. இதனால் தொழிலிலும், குடும்பத்திலும் புதிய சிரத்தை பிறக்கும். 12, 1-ம் அதிபதிகள் பரிவர்த்தனை தவிர்க்க முடியாத செலவினங்களைக் காட்டுகின்றது. ராசியில் 5-ம் அதிபதி சஞ்சரிப்பதால், சொந்த, குடும்பப் பிரச்னைகள் திருப்திகரமாகத் தீர்க்கப்படும். குரு கடகத்திலிருக்கும் வரை, வியாபார சம்பந்தமான பேச்சுகள் மூலமும் பண, இதர உதவிகள் புரியச் சித்தமாயிருக்கும். நண்பர் உறவினர் மூலமும் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்; அனுபவம் பெருகும். 8, 12லுள்ள கிரகங்கள் இடையூறுயிருப்பினும், காலப்போக்கில் உமது சாதனை குறித்து உறவினர் அயலார் சிலாகிப்பு போதிய திருப்தியளிக்கும். சூழ்நிலை பற்றியும் நபர்கள்பற்றியும் உமது அபிப்ராயங்களை மாற்றிக் கொள்ள நேரலாம். 9-ல் செவ்வாய் வந்த பிறகு கடும் எதிர்ப்புக்கிடையேயும் முன்னேற்றம் காண இயலும். கடன் கொடுத்தவர்களையும், விரோதிகளையும் சந்தித்து, அவர்கள் உம்மை சந்திக்கு இழுக்காவண்ணம் சமரசமாகப் பேசித் தீர்த்துக்கொள்வதே மேல். பொறுமையே உமது பூஷணமாகும். கோர்ட் நடவடிக்கை குறித்து அச்சமிருப்பினும், ஏமாற்றமளிக்கும் வகையில் ஏதும் நிகழாது. கண்ணில் கோளாறு ஏற்படலாம். குழந்தை ஒன்றால் மகிழ்ச்சியடையலாம்.

பண விவகாரம்:— உச்ச செவ்வாயும் குருவும் பண வசதிக்கு உத்தரவாதமளிக்கின்றன. 9-ல் செவ்வாய், நிதித் துறையில் விசேஷ கவனத்தை அவசியமாக்குகிறது. நண்பர், உறவினர் உதவியுடன் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புண்டு. எனினும் உஷாராயிருப்பது அவசியம். சிக்கனமும், காரிய சாத்தியமுமே குறிக்கோளாக வேண்டும்.

குடும்பமும் சூழ்நிலையும்:— புதன்-சுக்கிரன் பரிவர்த்தனை வீட்டில் சுமுக உறவைக் குறிக்கின்றது. நல்ல பத்திரங்களில் முதலீடு செய்யலாம். விவாகமும் நேரலாம்.

உத்தியோகம்:— முதல் வாரம் ஆபீசில் சாதகமாயிருக்கும். பின்னர் எதிர்பார்ப்பதுபோல் பலனிராது. எழுத்து, கடிதப் போக்குவரத்து காரண்மாக கவலை மூளலாம். முக்கிய தஸ்தாவேஜியில் கையெழுத்திடுகையில் உஷாராயிருப்பதவசியம். இதனால் ஆபீசில் தொல்லை மூளலாம்.

வியாபாரிகளுக்கு:— 7-க்கு குரு, சுக்கிரன் பார்வையால் சுபிட்சம் மேலிடும். கூட்டாளிகளிடை பிளவு காணப்படுகிறது. கடிதப் போக்குவரத்தால் வியாபாரம் விஸ்தரிக்கப்படும்.

மே 15 16 19 21 22 26 29 30 31 ஜூன் 3 5 9 10 13 நல்ல நாட்கள்.

மே 18 20 24 28, ஜூன் 1 7 8 நல்ல நாட்களல்ல.

கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய

உமது விவகாரங்களில் குறிப்பாக முதல் வாரத்தில் வெற்றிகர முன்னேற்றத்தை கிரக அமைப்பு குறிக்கின்றது. நண்பர்களும் இதரர்களும் உமது விவகாரங்களில் முக்கிய பங்கு கொள்வதையும், இதன் பயனாகப் பிராபல்யமடைவதோடு புதிய திட்டங்கள் ஊக்குவிக்கப்படுவதையும், தான தருமங்களில் சிரத்தையையும், பொதுநலத் தொண்டையும் 11-ல் சூரியன் வற்புறுத்துகிறது. உச்சகுரு, வீட்டில் நாட்டமுள்ளவராக உம்மை ஆக்குவதோடு குடும்ப விஷயங்களை முன்னணிக்குக் கொண்டுவருகிறது. சமூக ஈடுபாடுகள் இம்மாதம் அதிகரிக்கும். விவாகப்பேச்சு வெற்றிகரமாக முடியும். பொதுஜன எதிர்ப்பு காரணமாக உமது அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் நம்பிக்கை குறையும். விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளரும் இம்மாதம் கீர்த்தியடைவர். முதல் வாரத்தில் மனநிம்மதியிருப்பினும்பின்னர் செவ்வாயின் இடப்பெயர்ச்சி காரணமாக கவலையும், எரிச்சலும், மனக்கசப்பும் மிகுதியாகும். குழந்தையிலொன்று உம்மை திகைக்கவைக்கும். நண்பர்கள் உதவி பிரமாதமாயிராது. ஆகவே அவர்களுடைய பொறுமையைத் தூண்டாவண்ணம் செயலாற்றுவது நலம். இரண்டாவது வாரத்திலிருந்து, நெருங்கிப் பழக விருப்பமும் தூண்டுதலுமிருக்கும். இதைத் தவிர்ப்பது நல்லது. 8-ல் செவ்வாய் காரணமாக அவதூறான வதந்திகள் கிளம்பலாம். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

பண விவகாரம்:— 11-ல் தன ஸ்தானாதிபதியும், தனகாரகன் இரண்டிலும் பண வசதிக்கு நல்ல அம்சங்கள். அதிக பணம் மிச்சப்படுத்த இயலும். ஹேஷ்ய பேரங்களில் சரியாக முதலீடு செய்யாது பின்னர் வருந்த நேரும். பண விஷயமாக நண்பனையோ உறவினரையோ நம்ப வேண்டாம். திடீரென நஷ்டம் ஏற்படக்கூடும்.

குடும்பமும் சூழ்நிலையும்:— சுகாதிபதி விரயத்திலிருப்பது, சுமுக குடும்ப வாழ்க்கையைக் குறிக்கவில்லை. வீட்டைவிட வெளியில் மகிழ்ச்சியுடனிருக்கலாம். தொலை தூரப்பயணம் நேரலாம்.

உத்தியோகம்:— முதல் வாரத்தில்தான் காரியாலயத்தில் ஆதரவு தெரிகிறது. அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் பின்னர் ஏமாற்றமடைய நேரலாம்.

1956 மே 15-ந் தேதி கிரக நிலை.

<table>
<tr><td></td><td></td><td>சூரியன்
வ-புதன்
கேது</td><td>சுக்கிரன்</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">மே 14உ புதன் வக்கிராரம்பம்;
ஜூன் 7உ வக்கிர நிவர்த்தி
ஜூன் 1உ சுக். வக்கிராரம்பம்
மே 23உ
செவ்வாய் கும்பத்தில் பிரவேசம்
மே 23உ
குரு சிம்மத்தில் பிரவேசம்</td><td>குரு
சந்திரன்
உரானஸ்</td></tr>
<tr><td>செவ்வாய்</td><td></td></tr>
<tr><td></td><td>வ-சனி,
ராகு</td><td>நெப்டியூன்-</td><td></td></tr>
</table>

விருத்தியாகும். புதிய கூட்டாளிகள் வருவர். புதிய தொடர்புகளும் ஏற்படும். இரண்டாம் வாரத்திலிருந்து பணமுடையும், கடும் செலவும் எதிர்ப்படும். தொழிலாளர் தொல்லை உச்சமாகும். கூட்டாளிகளிடையே குமுறல் தோன்றி பணச் சிக்கல்களும் ஏற்படலாம்.

மே 15 16 19 21 22 24 29 30 ஜூன் 1 3 5 9 11 13 நல்ல நாட்கள்.

மே 18 20 28 31 ஜூன் 7 8 நல்ல நாட்களல்ல.

சிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம்
முதல்பாதம் முடிய

சனி, செவ்வாயின் பாதக நிலையால் இம்மாத முதல் வாரம் சிரமமாயிருக்கும். குருவின் நிலையும், ஜெயத்திற்கு முன் பாகக் கவலையும் தொல்லையும் தருவதாக அமைந்துள்ளது. இரண்டாம் வாரத்திலிருந்து குரு ஜன்மத்திலும் செவ்வாய் 7–லும் பிரவேசிப்பதால்–சூழ்நிலையில் அனுகூல மாறுதல் காணப்படும். பணம், சௌகரியம், அந்தஸ்து ஆகியவற்றை வாரி வழங்கும் குரு பக்க துணையாகவிருப்பதால் பொதுவாக உமது காரியங்களில் முன்னேற்றமும் அபிவிருத்தியும் தோன்றும். அமைதியின்மையும் அதிருப்தியும் அகலும். குருவைத் தவிர கேந்திரத்திலுள்ள மூன்று கிரகங்களும் நீங்கள் அதிகாரம் செலுத்தி ஆலோசனை கூறும் ஸ்தானத்தில் உங்களை அமர்த்தும். விவகாரங்களுக்குத் தீர்வு காணுகையில் அபிப்பிராயபேதமும், மோதலும் மேலிட்டாலும் குருவின் நிலை காரணமாக இறுதியாகத் தீர்ப்புக் கூற இயலும். முடிவில்லா சர்ச்சையில் சிக்கிக்கொள்ள நேருமாகையால் விவாதங்களையும் தகராறுகளையும் தவிர்ப்பது நல்லது. மிதுன சுக்கிரனும் கும்ப செவ்வாயும் உமது காதல் விவகாரங்களில் வெளிக்குத் தெரியாததொரு விசித்திரப் போக்கைக் குறிக்கின்றன. அதனின்று தொல்லை மூளாதிருக்க உஷாராவது நலம். தேகாரோக்கியம் கெடுவதற்கான அறிகுறிகள் உள்ளன. விவகாரங்களில் மிதமான ஈடுபாட்டின் மூலம் கஷ்டத்தைக் குறைத்துக்கொள்ளலாம். யந்திரங்கள், கருவிகளால் அபாயத்தைத் தவிர்க்க, முன் யோசனையுடன் நடந்துகொள்வது அவசியம்.

பண விவகாரம்:— தன, லாப ஸ்தானாதிபதி வக்கிர கதியிலிருப்பதால் நிதி விஷயத்தில் கணிசமான ஏற்றத் தாழ்வு காணப்படும். உயர் வட்டாரத்தினர் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிப் பண சகாயமும் பெற இயலும். மாத முதல் பாதியில் கடும் செலவு காத்திருக்கிறது. நண்பர்கள் மூலம் புதிய வருமானத் துறைகளும் ஆராயப்படும்.

குடும்பமும் சூழ்நிலையும்:— கேந்திரத்திலுள்ள கிரகங்கள் குடும்பத்தில் வசதிகளைக் கொடுப்பவைகளாக இல்லை. வீட்டில் சௌஜன்யம் நிலவாது; முயன்றும் பயனிராது போகலாம். முதலீடு பற்றி கவனிக்கப்படலாம். வாகனங்களை நீங்களே ஓட்டுவது இம்மாதம் நல்லதல்ல. அபிப்பிராயபேதங்கள், தாமதத்திற்குப் பிறகு விவாகப் பிரச்னை தீர்க்கப்படலாம்.

உத்தியோகம்:— பத்திலிருக்கும் ராசியாதிபதி, ஆபீசில் உயர்வுக்கு அனுகுணமாயிருக்கின்றது. பொறுப்புகள் அதிகரிக்கும். பணப் பொறுப்பு இருப்பின் தப்புக் கணக்கு குறித்து ஜாக்கிரதையாவது நலம். உயர் வட்டாரப் பழக்கங்கள் ஏற்படுவதோடு, நண்பர் குழாத்திடையே பெரும் பிடிப்பும் பெருகும்.

வியாபாரிகளுக்கு:— வியாபார அபிவிருத்திக்கு அடிகோலும் பல வேலைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கும். சிறிது காலம் வர்த்தகம் மந்தமாயிருக்கலாம். கூட்டாளிகளிடை சிக்கல் தோன்றக்கூடும். நல்ல நிபந்தனைகளுடன் புதிய கூட்டு சேரக்கூடும்.

மே 15 16 19 21 22 24 26 27 29 30. ஜூன் 1 3 5 8 9 11 13 நல்ல நாட்கள்.

மே 18 28 31 ஜூன் 7 நல்ல நாட்களல்ல.

கன்யா ராசி

உத்திரம் 2-ம் பாதம் முதல்
ஹஸ்தம், சித்திரை
2 ம்-பாதம் முடிய

இம்மாத ஆரம்பம் உங்களுக்கு அதிருஷ்டகரமாக அமைந்திருக்கிறது. முக்கிய கிரகங்களின் நிலை குறிப்பிடத்தக்கது. 23–ந் தேதியில் குருவும் செவ்வாயும் இடம் மாறுவதையடுத்து உமது விவகாரங்களில் தடைகளும் தொல்லைகளும் தோன்றி வியாகூலமடையச் செய்யும். சித்திக்கவிருந்த உயர்வு எதிர்பாராதவிதமாக ஒத்திவைக்கப்படும். மேலதிகாரிகளுடன் நெருங்கிப் பழகியபோதிலும், உமது சகாக்களைவிட உங்களுக்கு அதிக சலுகை கிட்டாது. கோர்ட் வியாஜ்யங்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காது. சுக்கிரன் ஒன்றே சாதகமாயிருப்பதால், ஏமாற்றங்களும் கஷ்டங்களும் சூழ்ந்த நிலையில் மனச் சோர்வு தோன்றுது. ரகசிய விரோதிகள் உம்மைக் கவிழ்க்க நல்ல சந்தர்ப்பத்திற்குக் காத்திருக்கின்றனர். வக்கீல்கள் சாதகமாகச் சொன்னாலும், விரோதிகள் மீது நடவடிக்கைகளை ஒத்திப் போட வேண்டும். தொலைதூரப் பயணம் நேரலாம். மே 14–ந் தேதியிலிருந்து புதன் வக்கிரகதியிலிருப்பதால், உமது பாத்யதையை உடனே கவனிக்கக் கோரி மேலிடத்திற்குச் சமர்ப்பிக்கும் விஞ்ஞாபனங்களுக்குச் சரியான ஆதாரமிரா. கெட்ட நோக்கம், திட்டமில்லாத கருத்து, தெளிவின்மை ஆகியவற்றைத் தவிர்க்க, எல்லாப் பிரேரணைகளையும் சீராக அலசி ஆராய்வது அவசியம். சுக்கிரனும் வக்கிரகதியாவதால், பண விஷயங்கள் குறித்து நம்பகமான, நிலையான ஆலோசனை கிடைக்கும்வரை நடவடிக்கைகளை ஒத்திப் போடுவது மேல்.

குடும்பமும் சூழ்நிலையும்:— மாத முதல் பாதியில் லட்சிய சித்தியில் முனைவிருப்பினும் காரியம் இலகுவில் கைகூடாது. ஆயினும் காலப்போக்கு உமக்குச் சாதகமாகவேயிருக்கும். பௌர்ணமியையடுத்து மனஉத்ஸாகமோ சுற்று வட்டாரத்தில் நல்லுறவோ நிலவாது. வழக்கத்தைவிட பிடிவாதமாகவும், சொல் தாளாதவளாகவும் இருக்கும் மனைவியின் ஒத்துழைப்பும் கிடைக்காது. பிறருடன் பழகுகையில் மேலும் தாராள சிந்தை அவசியம். குடும்ப, ஜாகை பிரச்னைகளில் சிரத்தை மிகும். முதலீடும் உத்தேசிக்கப்படலாம்.

பண விவகாரம்:— 10–ல் ஸ்தானாதிபதி ஸ்திரத்தன்மையைக் குறிக்கிறது. குரு சிம்மத்துக்கு வந்த பிறகு செலவு அதிகரிக்கலாம். இரு வழிகளிலிருந்தாவது பண வருவாய் கிட்டுமாதலால் பொறுப்புகளை நிறைவேற்றுவது சிரமம் அல்ல.

உத்தியோகம்:— 10–ல் சுக்கிரன், ஊழியத்தில் ஊக்கமூட்டுவதாயும், ஆபீஸில் பிரபலஸ்தராகவும் ஆக்கும். வேலைப் பளு கடுமையாயிருப்பினும் முதலாளியின் பாராட்டுதல் கிடைக்கும். மேலதிகாரிகளுடன் உற்சாகமுடன் பழகுவீர். சகாக்கள் மட்டும் ரகசியமாக உமது நலத்துக்கு குழி பறிக்கின்றனர்.

வியாபாரிகளுக்கு:— மற்றவைகளைவிட முதல் வாரம் அதிருஷ்டகரமாயிருக்கும். வெளிநாட்டு வியாபாரம் அதிக லாபம் தரும். கூட்டு வியாபாரமும் தழைத்தோங்கும்.

மே 15 16 19 21 22 26 27 29 30 ஜூன் 1 3 5 8 10 13 நல்ல நாட்கள்.

மே 18 24 28 ஜூன் 3 7 நல்ல நாட்களல்ல.

துலா ராசி

சித்திரை 3-ம் பாதம் முதல்
சுவாதி, விசாகம் 3-ம் பாதம்
முடிய

மே 23–ந் தேதிக்குப்பிறகு இம்மாதம் உற்சாகமூட்டுவதாயிருக்கிறது. கொடுக்கல், வாங்கல், பொதுவாக பண

விஷயம், தேகாரோக்கியம் ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. குரு உச்சமாயிருக்கும் வரை, பணத்தட்டும், சுகவீனமும் தலைகாட்டா. 8-ல் சூரியன் புதனுக்கு, சனி, ராகுவின் பார்வை மன நிம்மதியைக் குலைத்த வண்ணமிருக்கும். 5-ல் செவ்வாய் பிரவேசித்தவுடன் கவலை அதிகரிக்கும். ராசியாதிபதி சுக்கிரன் 9-லிருப்பது, சகலருடனும் சுமுக உறவுக்கும், தைரியமுடனும் புத்திசாலித்தனமாகவும் பிரச்னைகளைத் தீர்க்கவும் ஏற்றது. சமூக வட்டாரத்தில் பிராபல்யத்துக்கும் இதுவே காரணமாகும். நிகழ்ந்தவற்றைப் பரிசீலித்து, உமது சொந்த விவகாரங்கள், நம்பிக்கை, திட்டங்கள், உறவுமுறை ஆகியவற்றைப் புனர் நிர்ணயிக்க கிரகங்களின் கேந்திரநிலை உதவிகரமாயிருக்கும். 11-ல் குருவும் பொதுவாக முன்னேற்றத்துக்கு அனுகூலமாக இருக்கிறது. விவாகப் பேச்சுகள் முடிவுக்கான கட்டத்தை அடையும். புதிய அறிவு, தத்துவ விசாரணை, பிரசுரங்கள், பத்திரிகைத் தொழில், தொலை தூரப் பயணம், நல்ல செய்தி ஆகியவை இதர முக்கிய நிகழ்ச்சிகளாம்.

பண விவகாரம்:— மாத பிற்பாதியிலிருந்து பணமுடை தளர்ந்து, ஸ்திரநிலை அடைவதோடு வசதிகளும் பெருகும். 11-க்கு சனி செவ்வாயின் பார்வையால், சில தினங்களுக்கு எதிர்பார்த்த இடத்தில் வருமானம் கிடைக்காமல் செய்யும். முதல் வாரத்தில் செலவு கடுமையானாலும் பின்னர் நிலைமை தெளிந்துவிடும்.

குடும்பமும் சூழ்நிலையும்:— குடும்பத்தில் அனாவசிய சில்லறைத் தகராறுகள் மூளலாம். இவற்றில் சிக்காமல் இருப்பது மேல். புத்திரனில் ஒருவன் விசேஷ கவனத்தைக் கவருவான். மனைவியுடன் நல்ல உறவு இராது.

உத்தியோகம்:— முதல் வாரத்தில் கவலை தோன்றலாம். பின்னர் வேலை மாறுதலோ, வேறிடத்துக்கு மாற்றலோ சம்பவிக்கும். பிற்பாதியில் முதலாளியின் அபிமானம் பூரணமாகக் கிடைக்கும். மேலதிகாரிகளுடன் சர்ச்சையைத் தவிர்க்கவும். இது விபரீதமாகப் போகக் கூடும்.

வியாபாரிகளுக்கு:— முதல் பாதி சாதகமாயில்லை. தாராள மனப்பான்மை அல்லது அதீத நம்பிக்கையால் நிதானமின்றி ஈடுபடும் பணபேரங்கள் நஷ்டம் தரக்கூடும். கூட்டாளிகளுக்கு கூட்டு நிபந்தனைகள் திருப்தியளிக்கா. வெளிநாட்டு வியாபாரம் லாபகரமாயிருக்கும்.

மே 15 16 19 21 22 26 29 30 31 ஜூன் 3 5 9 13 நல்ல நாட்கள்.

மே 18 20 24 28 ஜூன் 7 8 நல்ல நாட்களல்ல.



விருச்சிக ராசி..

விசாகம் 4-ம் பாதம் முதல்,
அனுஷம், கேட்டை முடிய

8-லுள்ள சுக்கிரனைத் தவிர மற்ற கிரகங்கள் ஸ்திர ராசியிலிருப்பது, உமது விவகாரங்கள் தாமதமாக, ஆனால் விடாப்பிடியாக முன்னேறுவதைக் குறிக்கின்றது. எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவதற்கு இடையறாத முயற்சி அவசியம். மிகுந்த பிரயாசைக்குப் பின் லட்சியசித்தி சாத்தியமாகலாம். ஆகவே, உத்தியோகத்தில் முன்னுக்கு வர உதவிபுரியக் கூடியவர் கவனத்தை நீங்கள் கவரவேண்டும். சலியா உழைப்புதான் இதற்கு வழி. கிரக அமைப்பின் கோளாறு காரணமாக, உமது வேலைபற்றிய விஷயங்களில் குழப்பமும், சந்தேகமும், மந்தமும் மேலிட்டிருக்கும். 10-ல் குரு, தற்போதைக்கு நம்பிக்கையூட்டுவதாயிருப்பதால் பலன் தரும்வகையில் நடவடிக்கைகள் எடுக்க இயலும். மனைவியும், அனுபவஸ்தர்களும் கூறும் புத்திமதிக்குச் செவிசாய்க்க வேண்டும். குருவின் ஆதரவால் புத்தி தீட்சண்யமுடன் நீங்கள் கூறும் அபூர்வ யோசனைகள் லாபகரமாக அமல் நடத்தப்படும். பிறருடைய வசதிகளைக் கொண்டு லாபமடையும் சந்தர்ப்பத்தை 8-ல் சுக்கிரன் குறிக்கின்றது. கிரக அமைப்பு, திருப்திகர ஆரோக்கியத்தைக் குறிக்கவில்லை. கவலையும், பித்தம் காரணமாக தலைச்சுற்றலும் சேர்ந்து வயிற்றில் உபாதையுண்டு பண்ணும். தேகமும் பலவீனமடையும். புத்திரரில் ஒருவர் முன்னுக்கு வருவார். விவாகம் அசாத்தியமல்ல. வியாஜ்யங்களைத் தவிர்ப்பது நல்லது. துன்மந்திரிகளை அண்ட விட வேண்டாம்.

பண விவகாரம்:— குருவின் ஸ்தான விசேஷத்தால் அனுகூல நிதி நிலைமை என்றே சொல்லலாம். கூட்டுப் பட்டா, பூர்வீக சொத்து, தர்ம சொத்து, நிலுவை முதலியவற்றிற்கு இது பொருந்தும். முதலீடும் சாத்தியமாகலாம். எதிராளிகளின் குறைகளை ஒதுக்கித் தள்ளுவதன் மூலம் அவர்கள் விரோதமாகப் பேசவொட்டாமல் செய்யலாம்.

குடும்பமும் சூழ்நிலையும்:— குரு மட்டுமே குடும்ப செள்ஜன்யத்திற்கு உதவிகரமாயிருக்கிறது. ஜாகை மாற்றம் பற்றி ஆலோசிக்கப்படலாம். மோட்டாரில் ஏதாவது கோளாறு ஏற்பட்டுத்தொல்லை தந்தவண்ணமிருக்கும்.

உத்தியோகம்:— ஜன்மராசியில் சனி அமர்ந்து 10-ல் குருவைப் பார்ப்பதால் ஆபீசில் எதிர்பார்த்த முன்னேற்றம் இராது. அனுகூல ஸ்தானத்தைக் கைப்பற்ற முயற்சி வெற்றியளிக்காவிடினும் முதலாளியின் அபிமானம் பூரணமாயிருக்கும். பலதரப்பட்ட வேலைகள் சுமர்வதோடு, பொறுப்பும் அதிகரிக்கும். முடிந்த வேலையைப் பற்றிச் சகாக்களுடன் தகராறு வேண்டாம்.

வியாபாரிகளுக்கு:— பாபிகள் பார்வை பெற்று 7-ல் உள்ள கிரகங்கள் இம்மாதம் லாபகர வியாபாரத்தைக் குறிக்கவில்லை. முன்னேற்றத்திற்குப் பலதரப்பட்ட இடையூறுகள் உள்ளன. வியாபாரம் மந்தமாகவும், தெம்பூட்டாதவாறும் இருக்கும். இந்த நிலைமை தற்காலிகமானதே.

மே 15 16 19 21 22 26 29 30 ஜூன் 1 3 5 8 10 11 நல்ல நாட்கள்.

மே 18 20 24 28 ஜூன் 1 7 நல்ல நாட்களல்ல.

தனுர் ராசி

மூலம், பூராடம், உத்திராடம்
முதல் பாதம் முடிய

பாபக் கிரகங்கள் உமது விவகாரங்களில் பிராதான்யம் வகிப்பது காரணமாக, மாத முதல் வாரம் அவசியமற்ற சந்தேகங்கள், பயனற்ற பயணங்கள், விரும்பத் தகாத நண்பர்கள், பணக் கவலைகள் ஆகியவைகளுடன் கழியும். இரண்டாவது பாதியில் குருவும் செவ்வாயும் நல்ல வீடுகளுக்கு மாறுவதால் நிலுவைகள் வசூல் ஆகும்; பல விவகாரங்கள் உமக்குச் சாதகமாகத் தீர்க்கப்படும். 6-ல் சூரியன், சத்துருக்கள் பலமற்றுப்போகச் செய்யும்; ஒரு பயணம் மேற்கொள்ளச் சாதகமாகவும், புது விரோதிகள் உண்டாவதைக் குறிப்பதாகவும் இருக்கிறது. பகைவர்கள் காரணமாக மன நிம்மதியிராது. வெகுதூர இடத்திலிருந்து உதவி கிடைத்தல், சட்ட நிபுணரின் புத்திமதி, கற்பனை உள்ளம், உயர்ந்த சிந்தனை, பக்தி, வேதாந்தப் படிப்புகள் ஆகியவை இம்மாதத்திய முக்கிய அம்சங்கள். 6-ல் சூரியனால், உமது ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு பலஹீனம் ஏற்படும். ஜுரம், தொண்டைக் கோளாறு ஆகியவையும் ஏற்படலாம். கண் வியாதியுள்ளவர்கள் இம்மாதம் மிகவும் சிரமப்படுவர். கல்யாண வைபவம் இம்மாதம் முக்கிய அம்சமாக இருக்கும்.

பண விவகாரம்:— பண விஷயங்கள் இம்மாதம் சுலபமாக இராது. என்றாலும், ஒரேயடியாகப் பணம் இல்லாமல் கஷ்டப்படவும் நேராது. நாடும் இடங்களில் பணம் சுலபமாகக் கிடைக்கும். இம்மாதம் கடன்படுவதும் சாத்தியமே.

குடும்பமும் சூழ்நிலையும்:— குடும்பத்திலுள்ளவர்கள் உம்முடன் அவ்வளவு சுமுகமாக இருக்கமாட்டார்கள் என்றாலும், வீட்டு வாழ்க்கையில் ஒற்றுமை நிலவவே செய்யும்.

உறவினர்களுடனும் நண்பர்களுடனும் விவாதத்தையும், கோபமாகப் பேசுவதையும் தவிர்க்கவும். ஒரு உயர்ந்த, புனிதமான காரியத்திற்காகச் சிலர் செலவு மிகுந்த ஒரு பயணம் மேற்கொள்ளக்கூடும்.

உத்தியோகம்:— 9-ல் குரு, உத்தியோகத் துறையில் நல்ல போக்கைக் குறிக்கிறது. மேலதிகாரி நீர் செய்யும் வேலையில் மகிழ்ச்சியடைவார். இம்மாதம் உயர் அந்தஸ்து ஏற்படுவதும் குறிக்கப்படுகிறது. வக்கிர கிரகங்கள் மேலும் பண வரவைக் குறிக்கின்றன.

வியாபாரிகளுக்கு:— வியாபாரத்தில் லாபம் பெறுவதற்கு மாத முதல் வாரம் சிறந்ததல்ல. அதற்குப் பிறகு நல்ல வருமானமிருக்கும். பண விஷயங்களில் வாடிக்கைக்காரர்களுடன் மன வேற்றுமை தோன்றலாம். கோர்ட் நடவடிக்கை எடுப்பது சிலருக்கு அவசியமாகத் தோன்றலாம். வெளிநாட்டு வியாபாரம் சாதகமான போக்குகொள்ளும்.

மே 15 16 19 21 22 26 27 30; ஜூன் 3 5 8 10 13—நல்ல நாட்கள்.

மே 18 20 24 28 31—நல்ல நாட்களல்ல.

மகர ராசி

உத்திராடம் 2-ம் பாதம் முதல்
திருவோணம், அவிட்டம்
2-ம் பாதம் முடிய

உமக்கு வேண்டியவர்கள், நெருங்கியவர்களைச் சுற்றியே இம்மாதத்திய நிகழ்ச்சிகள் பின்னப்பட்டிருக்கின்றன. பிறருடைய உதவியை நாடுதல், ஒத்துழைப்பு, நன்னம்பிக்கையைப் பெறுதல் முதலியவற்றிற்கு இம்மாதம் மிகச் சிறந்தது. வியாபார, உத்தியோகப் பேச்சுவார்த்தைகளில் கடிதப் பரிமாற்றங்களும், பேட்டிகளும், குறிப்பாக முதல் வாரம், பிரதான பங்கு வகிக்கின்றன. அதிருஷ்ட விளையாட்டுகளில் முதல் வாரம் பணம் கிடைக்கலாம். 2-வது வாரத்திலிருந்து பணப் புழக்கம் அதிகமிராது. பண விஷயங்களில் வெளியாரைவிட, நண்பரும் உறவினருமே அதிகம் சம்பந்தப்பட்டிருப்பர். சனியின் பார்வை பெறும் 8-வது வீட்டில் குரு பிரவேசிப்பது, உம்மைக் கவிழ்க்கப் பெரும் அளவில் ரகசிய வேலை நிகழ்வதையும், அவதூறு கிளப்புவதில் பலர் ஈடுபட்டிருப்பதையும் குறிக்கிறது. இந்தப் பகைவர்கள் உமது நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும்தான். உம்மை மிகுதியாகக் கவலைப்படுத்திவரும் இத்தகைய எதிர்ப்புகளுக்காக உணர்ச்சிவசப்பட்டு ஏதாவது செய்துவிடலாகாது. கல்யாண விவகாரங்கள் ஏதாவது இருந்தால் முடிவாகத் தீர்மானிக்க வேண்டியிருக்கும். முதலாளிகளாக இருப்பவர்கள், தொழிலாளர் தொல்லைகள் உண்டாகுமாதலால், கீழ்ப்படியாமையையும், விசுவாசமின்மையையும் உடனுக்குடன் விசாரித்து நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்தம் ஏற்படும். சகோதரர் அல்லது சகோதரியின் தேகம் சுகவீனங்கண்டு உமக்குக் கவலை ஏற்படும். தேகத்தில் அமித உஷ்ணம் காரணமாக உமது தேக ஆரோக்கியமும் பாதிக்கப்படும்.

பண விவகாரம்:— செவ்வாய்-சனி-சூரியன் கேந்திர நிலையால் இம்மாதம் பண நிலைமை அவ்வளவு சாதகமாக இராது. முதல் வாரம், மற்ற வாரங்களைவிட அதிருஷ்டகரமாக இருக்கலாம். உமது தேவைகளுக்காகவும், செலவுகளுக்காகவும் கடன் வாங்க நேரலாம். வருமானத் துறைகள் பயனற்றுப் போகலாம். உமது மனைவியைச் சேர்ந்தவர்களின்மூலம் உதவி கிடைக்கலாம். மொத்தத்தில் வருமானம் திருப்திகரமாக இராது.

குடும்பமும், சூழ்நிலையும்:— இம்மாதம் சந்தோஷகரமான வீட்டு வாழ்க்கையைக் குறிப்பதாக இல்லை. வீட்டில் நோயும், சண்டைகளும், மற்ற கவலைகளும் இருக்கும். சிலர் தமது சொந்த ஊருக்குப் பயணம் மேற்கொள்ளலாம். மற்ற கவலைகளுடன் குழந்தைகள்பற்றிய கவலையும் சேரும். முதலீடு பத்திரமானதாகவோ, லாபகரமானதாகவோ இராது. கண் உபாதைகள் மிகும்.

உத்தியோகம்:— உத்தியோக நலன்களைப் பெற உகந்த மாதமல்ல இது. உமது காரியாலயத்தில் எதிர்பார்க்கும் அளவுக்கு உம்மால் வேலை செய்ய முடியாமல் போகலாம். சாதகமாகவும், ஊக்கமளிப்பதாகவும் இன்றி, பாதகமும், அதிருப்தியும் மிக்கதாகவே இருக்கக்கூடும், இம்மாதம். உத்தியோகத்துறை 'சிவப்பு நாடா முறை' நீர் ஆச்சரியப்படுமளவுக்கு நன்கு வேலை செய்யும்.

வியாபாரிகளுக்கு:— இம்மாதம் ஹேஷ்ய பேரங்கள் வெற்றிகரமாக இருப்பதுடன், பெரும் அளவில் லாபம் அளிப்பனவாகவும் இருக்கும். வெளிநாட்டு வியாபாரம் நல்ல வருமானமளிக்கும். கூட்டு வியாபாரத்தால் நல்ல வருமானமும், பொதுஜன ஆதரவும் மிகும்.

மே 15 19 21 24 26 30; ஜூன் 3 5 9 13—நல்ல நாட்கள்.

மே 16 18 20 28 31; ஜூன் 7—நல்ல நாட்களல்ல.

கும்ப ராசி

அவிட்டம் 3-ம் பாதம் முதல்
சதயம், பூரட்டாதி
3-ம் பாதம் முடிய

கொஞ்சம் சோதனையான மாதமாகத்தான் இருக்குமென்றாலும், இம்மாதத்திய கிரகப் போக்கு ஆரம்பத்தில் உதவிகரமாக இருப்பதாகக் காண்கிறது. உமது சொந்தப் பிரச்னைகளில் சில நெருக்கடியான கட்டத்தை அடையக்கூடும். உமது லட்சியம்பற்றிய உமது மனப்போக்கால், குடும்ப வட்டாரத்தில் சலசலப்பு ஏற்படும். இம்மாத ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்படும் விஷயங்கள் குறித்து ஆத்ம சோதனை அவசியமாகிறது. இவை சரியான உணர்வுடன் சமாளிக்கப்பட்டால், வெற்றிகள் நிச்சயமாக உமதே என்பதில் சந்தேகமே இல்லை. உமது ராசியில் உலவும் செவ்வாய் மிகவும் அபாயகரமானதாதலால், வெளியாருடைய உதவியின்றி உமது விவகாரங்களை ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். அவ்வாறு கவனித்தால்தான் அதனால் உண்டாகும் பயன்கள் பிரமாதமாக இருப்பதுடன், உமது சொந்த, உத்தியோக நடவடிக்கைகளிலும் நீர் நினைத்தபடி பலன் அளிப்பதாகவும் இருக்கும். உணர்ச்சியூட்டும் அம்சங்களுக்குக் குறைவிராதென்றாலும், அதிருப்தியை விளைவிக்கும் எதிர்பாராத எரிச்சல்களும் இடைப்படக்கூடும். கிரகங்களின் போக்கு காரணமாக, குடும்பத்தில் நிகழும் சில சம்பவங்கள் உமது எதிர்கால நலனை உருவாக்குமென்று எண்ண இடமிருக்கிறது. அதனால், உமது சிந்திக்கும் சக்தியும் அபிவிருத்தியடையக்கூடும். முதல் பகுதியில் மனஸ்தாபத்தையும், அனாவசியமாக உணர்ச்சிவசப்படுதலையும் தவிர்க்கவும். மனோ உறுதிக் குறைவே மாத முதல் வாரத்தில் உமக்கிருக்கும் ஒரே குறை. அதற்குப் பிறகு நிலைமை மாறி, வெகு காலமாக நீர் அடையத் துடிக்கும் பல நல்ல சாதனைகளைச் சாதிக்கும் வாய்ப்புகள் பெருகும். கல்யாணப் பேச்சுவார்த்தைகள் மகிழ்ச்சிகரமாக முடியும்.

பண விவகாரம்:— மே மாதம் 23-ந் தேதிக்குப் பிறகு பணம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அதிகம் அடிபடும். மாத முதல் வாரத்தில் கடுமையான செலவு இருக்குமென்றாலும், லகுவானதாகவே தோன்றும் இம்மாதம். மே 23-ந் தேதிக்குப பிறகு குரு சப்தமத்தில் இருப்பது மிகுந்த பண வசதி ஏற்படுவதையும், நிலுவைகள் நன்கு வசூலாவதையும், பண விவகாரங்களில் மற்றவர்களுடன் கொள்ளும் தொடர்பில் சீரானபோக்கையும் குறிக்கிறது. செவ்வாயின் பார்வை காரணமாகச் சென்ற மாதத்தைக் காட்டிலும் இம்மாதம் செலவு அதிகமாக இருக்கும். பண லேவாதேவிகளில் மனஸ்தாபத்தைத் தவிர்க்கவும்.

குடும்பமும் சூழ்நிலையும்:— 4-வது வீட்டைப் பார்க்கும் செவ்வாயும், சனியும் உமது குடும்ப நலனுக்கு அவ்வளவு சாதகமாக இல்லை. தொல்லை தரும் குடும்பச் சூழ்நிலைக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்காமல் சமாளித்தால், பிறகு 5-ல் உள்ள சுக்கிரன் உமது குடும்பத்தில் திருப்திக்குப் போதும் வகை செய்யும். முதலீடு, சொத்து லேவாதேவிகள், வாகன சந்தோஷம் ஆகியவைகளுக்குக் கிரக அமைப்பு சாதகமாக இருக்கிறது.

உத்தியோகம்:— உச்ச சனியால் உத்தியோக விஷயங்களில் இரட்டைப் பயன்கள் உண்டு. சனி 12-ம் வீட்டையும்,

அவசியமாவதையும், சேமிப்பின் மூலமும், சமயோசித நடவடிக்கைகள் மூலமும் நல்ல பயன்களை அடைய முடிவதையும் குறிக்கிறது. காரியாலய வட்டாரத்தில் சாதனைக்கு உகந்த மாதமிது.

வியாபாரிகளுக்கு:— மாத முதல் வாரம் அதிருப்தியை அளிக்காதென்றாலும், மந்தமாக இருக்கும். இரண்டாவது வாரத்திலிருந்து வியாபாரம் செழிப்பாகவும், ஊக்கமளிப்பதாகவும் இருக்கும். திருப்தியற்ற மனப்போக்குடைய கூட்டாளிகளிடையே கூட்டு வியாபாரம் இருக்கும். வெளி நாட்டு வியாபாரம் நல்ல வருமானம் பயப்பதாக இருக்கும்.

மே. 15, 16, 19, 22, 24, 26, 30; ஜூன் 3, 5, 9, 10, 13–நல்ல நாட்கள்.

மே. 18, 28, 31; ஜூன் 1, 7, 8–நல்ல நாட்களல்ல.

..மீனராசி..

பூரட்டாதி 4-ம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய

மாத முதல் வாரம் பண விஷயத்திலும், வீட்டு வாழ்க்கையிலும் சந்தோஷமும், அதிர்ஷ்டமும் பயப்பதாக இருக்கிறது. ஜாதகத்திலுள்ள கிரகங்களும் உத்தரவாதமளிக்குமாயின், திடீர்ப் பண லாபம் சாத்தியமாகும். உறவினர்களும், நண்பர்களும் உம்முடன் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடுவர். அவர்கள் உமக்கு நல்ல வாய்ப்புகளையும் சுட்டிக்காட்டக்கூடும். பத்திரிகையாளர்கள், பிரசுரகர்த்தர்கள், ஆலோசனையாளர்கள் ஆகியோருக்கு இம்மாதம் சாதகமானது. இரண்டாவது வாரம் முதல் கிரக அமைப்புகள் உமக்குப் பாதகமாக மாறுவதால், மற்றவர்களை நடத்துவதில் ராஜதந்திரத்துடன் இருப்பதுடன், பகையோ, நாத்துடுக்கோ ஏற்படாமலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உமக்கென்று நீர் லட்சியத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். இன்றேல், பிற்கால வாழ்வுக்குத் திட்டம் வகுக்கிறோம் என்ற நினைவில் வெறுமனே காலந்தான் வீணாகும். காதல் விவகாரங்களில் சம்பிரதாயத்திற்குச் சிறிதும் விலகாமல் இருக்கவும். இதுவரை தீராமல் இருந்த பல விவகாரங்கள் சாதகமாகத் தீர்வதற்கு 3–ல் சூரியன் நன்மை பயப்பதாக இருக்கிறது. உமது சகோதரர் அல்லது உறவினர் உமது உதவியை நாடக்கூடும். 7–ம் வீட்டையும், 7–வது வீட்டு அதிபதியையும் செவ்வாய் பார்ப்பது, உமது மனைவியின் மனம், தேகம் ஆகியவைகளின் நலனுக்குச் சாதகமாக இல்லை. 6–ல் லக்னாதிபதி பிரவேசிப்பது காரணமாக

நாள் நோயுள்ளவர்களின் தேக நலன் சிறிது பாதிக்கப்படும். ஆனால் போகப்போக இம்மாதமே ஆரோக்கியம் அபிவிருத்தியாவதுடன், அடுத்த மாதம் மேலும் சீரடையும். ஆரோக்கியத்தை விருத்தி செய்துகொள்ளும் எண்ணமிருந்தால் ஆகார நியமத்தைச் சீர்படுத்திக்கொள்ள வேண்டும். 6–ல் குரு இருப்பதால் உமது மனப்பான்மை விரிவதுடன், பொருள்களின் தராதரத்தை அவ்வவற்றிற்குத் தக்கபடி பார்க்கும் சக்தி மிகும்.

பண விவகாரம்:— தர்ம சொத்துக்கள், பிதுரார்ஜித சொத்துக்கள், ஸ்தாவர சொத்துக்கள் ஆகியவைகள் விஷயத்தில் இம்மாத முதல் பகுதி மிகவும் சாதகமாக இருக்கிறது. பண விஷயங்கள் எல்லாவற்றிலும் மிகவும் தாராளமாக இருந்துவிட்டுப் பின்பு, அமிதமான நம்பிக்கை வைத்தது குறித்து வருந்துவீர். செலவு செய்வதில் சிக்கனமறியாதவராக இருப்பீராதலால், மாத இரண்டாவது வாரத்திலிருந்து பண நெருக்கடி இருக்கும். ஏற்கெனவே கடன்பட்டவராயின் சமாளிப்பது கஷ்டமாக இருக்கும்.

குடும்பமும், சூழ்நிலையும்:— 4–ல் சுக்கிரன் எதிர் பார்த்த குடும்ப மகிழ்ச்சிக்குச் சாதகமாக இருக்கிறது. என்றாலும் இந்த மகிழ்ச்சி மாதம் போகப்போகக் குறைந்து கொண்டே வரும். தங்கள் சொந்த நலனைக் கருதி உமது உறவினர்கள் உம்முடன் நெருங்கிய உறவு கொள்வர். சொத்து முதலீட்டுக்கோ, சர்க்கார் பத்திரங்களில் பணம் போடவோ உகந்த மாதமில்லை இது; மீறி முதலீடு செய்தால் பின் வருந்த நேரும்.

உத்தியோகம்:– மாத முதல் வாரத்தில், அலுவலகத்தில் உமது திறமை பற்றிய அங்கீகார முத்திரை பெறுவதைக் குறிக்கிறது இம்மாதம். உத்தியோக முறையில் உமக்கு ஏதாவது குறிக்கோள்கள் இருக்குமானால், அதைப்பற்றி மேலதிகாரிகளிடம் விண்ணப்பித்து மேன்மை பெறத்தக்க தருணமிது.

வியாபாரிகளுக்கு:— மாத முதல் பாதி வியாபாரிகளுக்கு மகிழ்ச்சியளிக்கும். அப்போது நல்ல லாபம் எதிர் பார்க்கலாம். அதற்குப் பிறகு பண முடையைச் சமாளிக்க வேண்டியிருக்கும். மேலும் பணம் முதலீடு செய்யப்படுமென்றாலும், வருமானம் குறைவாகவே இருக்கும்.

மே. 15, 16, 19, 21, 22, 24, 26, 30, 31; ஜூன் 3, 5, 9, 13–நல்ல நாட்கள்.

மே. 18, 27, 28, 30; ஜூன். 7, 9–நல்ல நாட்களல்ல.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,

நெ. 5, வாஸுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை—5.

ஓம்: தத்: ஸத்:

கே. டி. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின்

மேல்மாயில் மருந்து

உலகத்தில் முதன்மைபெற்ற மேக குஷ்டரோக நிவாரணி

மேக நோயால் துன்பப்படுவோருக்கு புத்துயிரளிக்கும் புனித சஞ்சீவி

மேக ரோக நிவாரண எண்ணெய், லேகியம்.

கருமேக, செம்மேகப் படைகள், மேக ரணங்கள், திமிர், மதமதப்பு, குஷ்டம், குழிப்புண், பித்த காரிகம், வாதம், குன்மம், கைகால் எரிச்சல், ரத்த பலக்குறைவு, சிரங்கு, நமைச்சல் மற்றுமுள்ள எல்லாவிதமான துர்நீர் வியாதிகளையும் ஆச்சரியமாக குணப்படுத்தும்.

விவரங்களுக்கு எழுதவும்: K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி & சன்ஸ்,

5/22, மேல்மாயில் P. O. (N. A. Dt.) India.

நவ நாகரீகக் குறிப்புகள்

காசினி

★ ஜெர்மன் தங்கம்

நேற்று மத்தியானம் உனக்குச் சாவகாசமாகக் கடிதம் எழுதலாம் என்று பேனாவைக் கையில் எடுத்தேன். அதற்குள் பார்வதி, இவள் நாத்தனார் ராஜம்-நாதன், எனக்கு இதுவரையில் அறிமுகம் இல்லாத மற்றொரு பெண், மூவருமாகப் பரபரவென்று உள்ளே வந்தார்கள்.

'வாருங்கோ? ஏன் இந்த அவசரம்?' என்றேன்.

'காலம் வரவரக் கெட்டே போச்சு!' என்று ராஜம்-நாதனும், 'நல்ல காலம், அது 'ஜெர்மன்-கோல்டு' தான்!' என்று பார்வதியும், 'எனக்கு மார்பு இன்னும் திக்-திக் என்று அடிச்சுக்கொள்ளுகிறது!' என்று இவர்கள் சிநேகிதியும், சம்பந்தா சம்பந்தமில்லாமல் சொன்னார்கள்.

என்ன சமாசாரமாக இருக்கும் என்று, நான் ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்தேன். இதற்குள் 'ஏதாவது நகையை ஜேபடிக்காரனிடம் பறிகொடுத்துவிட்டீர்களா? நல்ல காலம், 'ஜெர்மன்-கோல்டு' நகையாக்கும்?' என்று என் அத்தை பளிச்சென்று கேட்டாள்.

'ஏதேது! அத்தை பெரிய துப்பறியும் நிபுணராகவிட்டாரே! அதேதான்!' என்றாள் ராஜம்-நாதன்.

மின்சார விசிறியைச் சுழலவிட்டு, எல்லாரையும் உட்காரச் சொன்னேன். கூட வந்திருந்த மாதைத் தன் பள்ளித் தோழி, மைனாவதி என்று ராஜம்-நாதன் அறிமுகம் செய்துவைத்தாள். பிறகு விஷயத்தை மூவருமாக விளக்கினார்கள்.

நீ கேட்டிருந்தாயே 'இப்போ உங்க ஊரில் 'ஜெர்மன்-கோல்டு' என்ற உலோகத்தில் தினுசு தினுசாக நகைகள் வந்திருக்காமே? அசல் தங்கம்போல்இருப்பதுடன், விலை ரொம்பவும் மலிவாமே? எங்கள் எதிர் வீட்டுச் சுலோசனா சொல்லுகிறாளே?' என்று. இதே தினுசில் ராஜம்-நாதன் தன் மருமகளான பார்வதியின் பெண்ணுக்கு ஒரு 'நெக்லட்' வாங்கினாளாம். இதையும் எடுத்துக்கொண்டு, தன் சிநேகிதி மைனாவதியையும் அழைத்துக்கொண்டு, சாப்பாடு ஆனதும், பார்வதி வீட்டிற்குப் போனாளாம். குழந்தை காலையில் ஏதோ தலைவலி என்று பள்ளிக்குப் போகவில்லையாம். குழந்தையைப் பள்ளியில் விட்டுவிட்டு, என் வீட்டிற்கு வரலாம் என்று மூவருமாகக் கிளம்பினார்களாம். இந்தப் பெண் படிக்கும் பள்ளிக்கூடம் எங்கள் வீட்டிற்கு அருகில்தான் இருக்கிறது. குழந்தை நெக்லட்டைக் கழட்ட மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாளாம்—எல்லாரும் பஸ் ஏறினார்களாம்—ஒரே கூட்டமாம். பள்ளி வாசலில் பஸ் நின்றதும், இவர்கள் இறங்குவதற்கும், 'ஐயையோ! என் 'நெக்லட்'டைப் பிடுங்கிக்கொண்டு போறான்!' என்று பார்வதி பெண் கத்துவதற்கும், ஒருவன் பக்கத்து சந்தில் ஓடுவதற்கும் சரியாக இருந்ததாம்! இதுதான் சமாசாரம்.

'அவளைச் சமாதானம் செய்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினோம். ஏதோ, யார் செய்த புண்ணியமோ? 'நெக்லட்' விலை 12 ரூபாய்தான்!' என்றாள் ராஜம்-நாதன்.

'ஆமான்னா! இதனால்தான் அவளுக்கு நான் தங்க நகையே போடுவதில்லை! இப்படி 'ஜெர்மன்-கோல்டு,' 'ரோல்டு-கோல்டு' என்றுதான் போடுவேன். யாராவது நகைக்கு ஆசைப்பட்டு, குழந்தை உயிருக்கே ஏதாவது ஆபத்து வந்துவிட்டால்? எனக்கு ஒரே பயம்! அதுவும் அவள் தனியே பஸ்ஸில் பாதி நாளும் போறாள்!' என்றாள் பார்வதி.

'ஆமாம்! வழியும் சமத்தை, ஒட்டை ஜல்லடையில்தான் பத்திரமா பிடித்து வைக்க வேண்டும்!' என்று என் அத்தை, முகவாய்க்கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டாள்.

'என்ன அத்தை? இப்போ நான் என்னத்தைச் சொல்லிவிட்டேன்?' என்று பார்வதி கோபமாகவே கேட்டாள்.

'உன் பெண்ணுக்குச் சரிகை பாவாடை கட்டுகிறாய்-பட்டுச் சட்டை போடுகிறாய்-நகை மட்டும் தங்கம் இல்லை என்று நினைப்பார்களா? குழந்தைகளை ஒன்று தக்க துணையுடன் அனுப்பணும்; இல்லாவிட்டால் நகையே போடக்கூடாது!' என்றாள் என் அத்தை.

'உண்மை!' என்று ராஜம்-நாதனும், 'உங்கள் அத்தை தேவலையே!' என்று அவள் சிநேகிதியும் ஒத்துப்பாடினார்கள். பார்வதி முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டாள்.

இந்த 'ஜெர்மன்-தங்க' நகைகள், செயின், நெக்லெட், வளையல், கைகடிகாரச் சங்கிலி என்று ரகவாரியாக வந்து குவிந்து கிடக்கிறது. இதில் பொய்க் கல்கள் பதித்தும் வருகிறது. பார்வைக்

டென்று கறுப்பதும் இல்லை. விலையும் மிகவும் மலிவுதான். இந்த நகைகளைப் பணக்காரர்கள், ஏழைகள் எல்லோருமே வாங்கிப் போட்டுக்கொள்ளுகிறார்கள். கையில் எடுத்ததும்தான், மிகவும் லேசாக இருப்பதால், தங்க நகை இல்லை என்பது தெரிகிறது. இனி ஜேபடிக்காரர்கள் தங்க நகையை 'ஜெர்மன்-கோல்டு' என்று எண்ணி ஏமாறுவார்கள் என்று நினைக்கிறேன்! உனக்கு வேண்டுமானால் எழுது. வாங்கி அனுப்புகிறேன்.

★ கண் எரிச்சல்

'அத்தை, உங்களைப் பார்க்கத்தான் மைனாவதியை அழைத்து வந்தேன். இவள் இப்போது நாலைந்து வருஷமாகக் கல்கத்தாவில் இருக்கிறாள். அங்கே இவள் கணவருக்கு வேலை. கொஞ்ச நாட்களாகவே ஒரே கண் எரிச்சலாம். ஏதேதோ வைத்தியம் பார்த்தாச்சாம். ஒன்னும் சரிப்படலையாம். நீங்கள் ஏதாவது கைமருந்து சொல்லுவீர்களே என்று அழைக்க வந்தேன்' என்றாள் ராஜம்-நாதன்.

'கண் வைத்தியனிடம் காண்பித்தீர்களோ? கண் விஷயமாச்சே! வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமே! கைவைத்தியம் செய்துவிட்டுக் கையைப் பிசைந்துகொண்டு திண்டாடுவதில் என்ன பிரயோசனம்?' என்றாள் பார்வதி. தன் கணவர் ஒரு டாக்டர் என்பதை இவளால் மறக்கவே முடிகிறதில்லை! மேலும், என் அத்தை சொல்லும் கைமருந்துகளைக் கேட்டாலே இவளுக்கு ஒரு பரிகாசம்.

'எல்லாம் ஆச்சு-ரூபாயைத் தண்ணீர் போல் செலவு செய்ததுதான் மிச்சம்!' என்று மைனாவதி அலுத்துக்கொண்டாள்.

'கண் எரிச்சல் மட்டும் இருக்கா? சிவக்கவும் செய்கிறதா? ஆமாம்- நீ வாரம் ஒரு தரமாவது எண்ணெய் தேய்த்துக் குளிப்பது உண்டோ? இல்லையோ?' என்று அத்தை கேட்டாள்.

'வாரம் ஒரு தரம் ஷாம்பூ அல்லது சோப்புப் போட்டுத் தலை கசக்குவேன்!' என்றாள் மைனாவதி.

நம்ம தேசம் உஷ்ண தேசமாச்சே? சோப்பும், ஷாம்பூவும் போட்டால் எப்படி? வாரம் ஒரு முறையாவது நல்ல எண்ணெயை உச்சந்தலையில் அழுத்தித் தேச்சு, கொஞ்ச நேரம் ஊற வேண்டும். சீயக்காய்ப் பொடியுடன் கொஞ்சம் தாளிப்பொடியும் கலந்து தலை கசக்க வேண்டும். தாளிப்பொடிக்குப் பதில் நாலு நெல்லி முள்ளியை ஊற வைத்து, நன்னா அரைச்சு சீயக்காயுடன் கலந்து கொள்ளலாம். செம்பருத்தம்பூவையும் இத்துடன் கசக்கிக் கலந்துகொண்டால் ரொம்பவும் நல்லது-மயிரும் கறுத்து வளரும். குளித்ததும், மயிரை நன்றாக, ஈரம் போகத் துவட்டி, கையினால் கோதி விட வேண்டும். இதெல்லாம்தான் மயிருக்கும் நல்லது, கண்ணுக்கும் குளிர்ச்சி. மயிர் நன்னா வளரும். மருள் மைதாப்பும் தரேன். இதையும் விடாமல் இட்டுக்கொள்-எல்லாம் சரியாகிவிடும்!' என்றாள் என் அத்தை. மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.

கலாமண்டபம்

சினிமாச் செய்திகள்

'ஸிதாரோன் ஸே ஆகே' என்ற தமது ஹிந்திப்படம் நாலாயிரம் அடிகளுக்கு மேல் எடுக்கப்பட்டுவிட்டதாகவும், செப்டம்பர்மாதத்தில் அதைத் திரையிட ஏற்பாடு செய்துள்ளதாகவும் சென்ற வாரம் நாசு ஸ்டுடியோ அதிபர் ஸ்ரீ வி. எல். நாசு கூறினார்.

"அடுத்தபடியாக ஒரு கதையை தமிழ், தெலுங்கில் வர்ணப்படமாகத் தயாரிக்கப் போகிறேன். இதைத் தவிர மற்றொரு படமும் சாதாரண கருப்பு, வெளுப்பு பிலிமில் தயாரிக்கப்போகிறேன். இவ்வருஷ முடிவுக்குள் 'ஸிதாரோன்ஸே ஆகே"யைத் தவிர தமிழ்ப் படமொன்றையும் முடித்து வெளியிட உத்தேசம்" என்றார், மேலும் அவர். "இனி எங்கள் ஸ்டுடியோவில் எங்கள் சொந்தப் படங்கள் மட்டுமே தயாராகும்; வெளியார் படங்களை எடுக்க அனுமதிக்கப் போவதில்லை. வருஷத்தில் மூன்று படங்கள் நாங்கள் சொந்தத்தில் எடுக்கத் திட்டம் வகுத்துள்ளோம். அதன் படியேதான் செய்ய உத்தேசம்" என்றும் கூறினார். அத்துடன் 'பிரேமபாச'த்தை விட அதன் தெலுங்குப் பதிப்பான "பலே ராமுடு" ஆந்திர தேசத்தில் பிரமாத வசூலைத் தந்து வருகிறதென்றும் ஸ்ரீ நாசு தெரிவித்தார்.

தாம் தயாரிக்கும் 'சம்பூர்ண ராமாயண'த்தில் சீதையின் ஸ்வயம்வரக் காட்சியை கோடம்பாக்கம் பிலிம் ஸெண்டரில் சென்ற வாரம் நல்லதொரு சுப முகூர்த்தத்தில் படமாக்கினார் எம். ஏ. வி. பிக்சர்ஸ் அதிபர் ஸ்ரீ வேணு. தசரதனாக நாகையா நடித்தார். பால ராம லக்ஷ்மணர்களாக புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர்கள் நடித்தார்கள், ஸ்ரீ சோமு டைரக்ஷனில். இந்தப் படம் பூராவையும் சென்னையிலேயே எடுப்பதா கோவையிலா என்பதை ஸ்ரீ வேணு இன்னும் நிச்சயிக்கவில்லை. கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் தொழிலாளர் தகராறு தீர்ந்துவிட்டால் அந்த ஸ்டுடியோவை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு அங்கேயே ராமாயணத்தை எடுக்கலாம். பிலிம் சென்டர் ஸ்டுடியோவையும் குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்கு எடுக்கும் உத்தேசத்துடன் கேட்டாரென்றும், ஆனால், அந்த ஸ்டுடியோவின் நிர்வாகம் இதற்கு சம்மதிக்கவில்லை என்றும் தெரிகிறது. சென்னையிலேயே படத்தை முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டால் இவரது படத்திற்காக பிரத்யேகமாக ஓர் அரங்கம் பிலிம் செண்டர் ஸ்டுடியோவில் ஒதுக்கித் தரப்படும் என்றும் தெரிகிறது.

கோவையில் பக்ஷிராஜா ஸ்டுடியோவில் ஏற்பட்ட தொழிலாளர் தகாராறும் இன்னும் தீரவில்லை. இதனால் தன்னுடைய எதிர்காலத் திட்டங்கள் பாதிக்கப்படாதிருக்க ஸ்டுடியோவை சென்னைக்கு மாற்றிவிடலாமா என்று ஸ்ரீ ஸ்ரீராமுலு நாயுடு எண்ணுகிறாராம். கோடம்பாக்கத்திலுள்ள சியாமளா ஸ்டுடியோவை அவர் வாங்கப் போவதாகவும் ஒருவதந்தி உலவுகிறது. ஸ்ரீ நாயுடு தற்போது சென்னையில் தனக்காக ஒரு பெரிய மாளிகை கட்டி வருகிறார்.

❧ ❧

இந்திய பிலிம் பெடரேஷன் காரியதரிசி ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன் சென்ற வாரம் சென்னைக்கு வந்திருந்தார். இந்திய 'பேசும்' படத்தொழிலின் வெள்ளி விழாவை பிரமாதமான முறையில் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளதாகவும், அது சம்பந்தமாக தென்னிந்தியப் படாதிபதிகளைச் சந்திக்கவே தாம் வந்ததாகவும், சந்தித்து விவாதித்து விட்டதால் உடனே பம்பாய் புறப்படப் போவதாகவும் அவர் தெரிவித்தார். வெள்ளி விழாக் கொண்டாட்டம் பற்றிய விவரத்தை அவரிடம் கேட்டபோது "விழாவை தலைநகர் டில்லியிலும், பிரதான தயாரிப்பு கேந்திரங்களான சென்னை,

'சம்பூர்ண ராமாயண'த்தில் கல்யாண ஸீதையாக வரும் புதுமுகம் சுகுமாரி

பம்பாய், கல்க்த்தா ஆகிய நகரங்களிலும் கொண்டாடுவதே சிறந்தது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆனல், சிலர் விழாவை பம்பாயில் மட்டும் கொண்டாடலாமா அல்லது தலைநகரில் மட்டும் கொண்டாடலாமா என்று எண்ணுகிருர்கள். ஆயினும், கூடுமானவரை இந்த நான்கு இடங்களிலும் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்வதையே பெருவாரியான அங்கத்தினர்கள் விரும்புகின்றனர்" என்று கூறினர்.

'தற்போதைய தமிழ்ப் படங்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டதற்கு "இவை யாவும் வியர்த்தம்; இவைகளால் பொது மக்களுக்கும் பிரயோசனமில்லை, படமெடுப்பவர்களுக்கும் பிரயோசனமில்லை. 100க்கு 5 படங்கள்கூட வெற்றிபெறவில்லை. அப்படி வெற்றிபெறும் ஐந்து படங்களும் மக்களுக்குப் பயன்தரும் படங்களாக இல்லை. ஆனல், சினிமா என்பது வெறும் பொழுதுபோக்கு என்று கூறுகிறவர்கள் இதைக் கண்டு சமாதானமடையலாம்" என்ருர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன்.

ஃ ஃ ஃ

சமீபகாலம்வரை ஜெமினியின் விளம்பர அதிகாரியாகவும், பின்னர் பொது ஜனத் தொடர்பு அதிகாரியாகவும் இருந்த ஸ்ரீ வி. கே. என். சாரி, ஜெமினியிலிருந்து விலகிவிட்டார். வடநாட்டில், அபாரமாக விளம்பரம் செய்து 'சந்திரலேகா'வை அமோக வெற்றியடையச் செய்தவர் இவர்தான் என்ருல் மிகையாகாது. 'சம்சாரம்' என்ற படம் வெளிவந்தபோதும் ஓட்டர் ஜாபிதாவை வைத்துக்கொண்டு இந்தியாவெங்கும் உள்ள திரை ரசிகர்களுக்குத் தபால் கார்டுகள் எழுதி விளம்பரம் செய்தவர் இவர்தான். இவ்விதம் பற்பல புதுமைகளைக் கையாண்டு ஜெமினி ஸ்டூடியோவுக்கு மட்டுமன்றி சினிமா விளம்பரக் கலைக்கும் அரும்பணியாற்றியிருக்கிருர் ஸ்ரீ சாரி. இப்பொழுது விளம்பர அதிகாரியாயிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணஜியும் இவருடைய வழிகளில் நன்கு பழகியவர்; ஜெமினியின் விளம்பர வித்தையில் சிறந்த தேர்ச்சி பெற்றவர். அவருடைய சேவையினுல் ஜெமினியின் விளம்பரப் புகழ் என்றும் மங்காது பிரகாசிக்கும் என்று நம்பலாம்.

ஜெமினியின் அடுத்த தயாரிப்பு சினிமாஸ்கோப் முறையிலமைந்த டெக்னிகலர்ப் படம்தான் என்ருலும் நடுவே ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்புவின் டைரக்ஷனில் 'நீலவேணி' என்ற படம் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளில் தயாராகுமாம். இந்த 'நீலவேணி' என்பது ஒரு குதிரையின் பெயராம். புதுமையான கதையாக இருக்குமென எதிர்பார்க்கலாம். ஆனல், டெக்னிகலரில் எந்தக் கதையை எடுக்கப்போகிருர்கள் என்பது இன்னமும் ரகசியமாகவே இருக்கிறது. கதை இலாகாவில் பலர் இப்பொழுது இல்லை. சுப்பு, கி. ரா. ஆகிய இரண்டு எழுத்தாளர்கள்தான் இருக்கிருர்கள். ஆயினும், படக் கதை தீர்மானமாகி, விவாதிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதென்று தெரிகிறது. விரைவில் படப் படிப்பு வேலைகள் ஆரம்பமாகுமென்றும் கூறப்படுகிறது.

ஃ ஃ ஃ

மணி ப்ரொடக்ஷன்ஸார் தயாரிக்க முற்பட்டிருக்கும் இரு படங்களில் ஒன்று 'ஒன்பது நெஞ்சங்களின் அடியாழம் வரை சென்று தூண்டித் துருவிப் பார்க்கும் உணர்ச்சி மிகுந்த பல உயரிய சம்பவங்களைக்கொண்ட கதை'யாம். இந்த ஒன்பது நெஞ்சங்களில் ஒரு சிறுவனும் சிறுமியும் உண்டு. இவர்களைத் தேடிப் பிடிப்பதில் அவர்கள் தற்சமயம் ஈடுபட்டிருக்கிருர்கள். நடுத்தர உடலமைப்புடனும், அழகிய கவர்ச்சிகரமான முகத்துடனும் சிறுவன் இருக்க வேண்டுமாம். சுமார் ஏழு வயது இருக்கலாம்; பாடத் தெரிந்தால் நலம். சிறுமி சுமார் ஆறு வயதுடையவளாக, மெலிந்த உடலும் மருண்ட பார்வையும் கொண்டவளாக இருக்கவேண்டும். ஆடத் தெரிந்தால் அனுகூலம். இவ்வித லக்ஷணங்களுடன் சிறுவன், சிறுமி கிடைத்தால் மக்களின் மனதிற்கு மட்டுமன்றி சிந்தனைக்கும் சிறந்த விருந்தளிப்போம் என்று கூறும் மணி ப்ரொடக்ஷன்ஸின் விலாசம், நெ. 12, கோபாலகிருஷ்ணய்யர் ரோடு, தியாகராயநகர், சென்னை. வேண்டுபவர்கள் அவர்களுக்கே நேரில் எழுதி மேற்கொண்டு விவரம் தெரிந்துகொள்ளலாம்.

ஃ ஃ ஃ

காமிரா நிபுணர் பி. எஸ். ரங்காவின் விக்ரம் ப்ரொடக்ஷன்ஸ் தனது சொந்த ஸ்டூடியோவில் முதற் படமான 'மார்க்கண்டேயா'வை கடந்த ஞாயிறு முதல் எடுக்கத் துவங்கியுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று பாஷைகளிலும் தயாராகும் இப்படத்தை ரங்காவே டைரக்ட் செய்கிருர். புஷ்பவல்லியும், அவரது குமாரன் பாபுஜியும் இதில் நடிக்கின்றனர்.

ஃ ஃ ஃ

ஜெமினியின் நட்சத்திரமான வனஜா தற்போது, 'தந்தி' என்ற படத்தில்மட்டுமன்றி டி. ஆர். மகாலிங்கத்தின் 'தெருப் பாடகன்' என்ற படத்திலும் நடித்து வருகிருர்.

"காலம் மாறிப் போச்சு" என்ற படத்தைத் தயாரித்த சாரதி பிலிம்ஸார் ஹைதராபாத்தில் ஒரு ஸ்டூடியோவைக் கட்டி முடித்துள்ளார்கள்.

நடிகர் நாகையா தன்னுடைய 'பக்த ராமதாஸ்' முயற்சியை மீண்டும் ஆரம்பித்துள்ளார்.



தென்னுட்டுத் திரைக்கு வந்துவிட்ட ஏவி. எம் 'பாய் பாபி' (ஹிந்தி 'ரத்த பாசம்') படத்தில் நிம்மி, கிஷோர்குமார், (இடது படம்) 'காலம் மாறிப்போச்சு' என்பதை உணராமல் ஜெமினி கணேசனின் மனைவியைப் பிளக்க மண்வெட்டியை ஓங்குகிருர் துரைராஜ்.

பேட்டி

ஒரே படத்தின் மூலம், அதுவும் முதல் படத்திலேயே புகழ் பெற்றவர்கள் விரல் விட்டு எண்ணிவிடலாம். அத்தகைய அரிய சிறிய குழுவில் இடம் பெற்றிருப்பவர் ஸ்ரீ கோபிகிருஷ்ணா. சாந்தாராமின் டெக்னிகலர் படமான 'ஜனக் ஜனக் பாயல் பாஜே'யின் மூலம் அகில இந்தியப் புகழ் மட்டுமல்ல, அகில உலகப் பிரசித்தியும் பெற்றுவிட்டவர் இவர். அந்தப் படம் வெளிவந்ததிலிருந்து 'கதக்' என்ற நடன பாணிக்கே இவர் மூலம் அலாதி மவுசு பிறந்துவிட்டது; அதனைக் காண விழைகின்றனர் தேசமக்களெல்லோரும். இவ்வாறு தாமே கிளறிவிட்ட ஆர்வத்தைத் திருப்திப்படுத்த சென்ற வாரம் சென்னைக்கு வந்த இவர், இரு கச்சேரிகள் செய்ததோடு தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர் சங்கத்தாரையும் சந்தித்துப் பேசினார்.

நேபாள இசைவாணர், நடன வல்லுனர் குலத்திலுதித்தவர் இவர். எனவே பிள்ளைப் பிராயத்திலேயே கலையில் கவனம் திரும்பியதில் ஆச்சரியமில்லை. எனவே நேபாள சமஸ்தான சங்கீத வித்வானாக இருந்த இவருடைய தகப்பனார் ஸ்ரீ சுகதேவ் மஹாராஜ் இதற்குத் தடையேதும் சொல்லவில்லை. பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தம் மூத்த பெண் ஸிதாராவைப்போலவே இவரையும் நடனக் கலைக்கே அர்ப்பணித்துவிட்டார்.—ஆனால் எல்லோரையும் போல சாதாரண நடனங்களைக் கற்பதில் என்ன விசேஷம்? குடும்ப மஹிமைக்குத்தான் அது ஒத்து வருமா? ஆகவே, காப்பாற்றுவாரின்றி காலகதியடைந்துவந்த 'கதக்'கைத் தேர்ந்தெடுத்து அதில் தம் புதல்வனைப் பயிற்றுவிக்கலானார், ஐந்து வயது முதற்கொண்டே.

இந்த 'கதக்' என்ற நடனம் அயோத்தி நவாபுகளின் காலத்தில்தான் முன்னுக்கு வந்ததாம். லக்ஷ்மணபுரியில் அவர்களுடைய தர்பாரில் இரு மேதைகள் இதைத் திறம்பட ஆடி, எல்லோர் மனதையும் கவர்ந்து, பிரஸித்தப்படுத்தினர். அவர்கள் இருவரும் 'கதக்' என்ற ஜாதியைச் சேர்ந்தவர்களாகையால் அது முதல் இந்த நடனத்துக்கு இப்பெயரே ஏற்பட்டுவிட்டதாம் – இவற்றையெல்லாம் விவரித்த ஸ்ரீ கோபிகிருஷ்ணா, 'கதக்'கின் விசேஷ லக்ஷணங்களையும் எடுத்துரைத்தார்–பாவ விந்யாசங்கள் உண்டாயினும் லயம்தான் பிரதானம். அதுவும், துரித கதியில். சாதாரணமாக ஒருவர் ஆடவே ஏற்றது இது; கோஷ்டி நடனம் கஷ்டமானது. தலையை கிறுகிறுக்க வைக்கும் வேகத்தில் ஆட, ஒத்தாற்போல ஆட பலரைப்பயிற்றுவிப்பது என்பது மிக மிகக் கஷ்டம். எவ்வளவு கஷ்டம் [illegible] தமது பயிற்சியையே [illegible]க் காட்டினார் ஸ்ரீ கோபிகிருஷ்ணா. நிருத்ய ஸாம்ராட் சம்பு மஹாராஜிடம் 17 ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின்புதான் 'கதக்' வித்தையின் கரையைக் கண்டாராம் இவர்! ஏற்கனவேயே நடனக் கலையை நன்கு பயின்றிருந்த ஸந்த்யாவையே 'ஜனக் ஜனக்'கில் குறிப்பிட்ட சில 'கதக்' நடனங்களை ஆடத் தயார் செய்ய இரண்டு வருஷம் பிடித்ததாம்!

ஒரே ஆண்டில் பரத நாட்டியம் 'கற்று', அரங்கேற்றத்துக்கும் ஆளாகும் பேபிகளையும், குமாரிகளையும் காணும் நமக்கு இது மலைப்புத்தரும் செய்தியேயாயினும் இந்தக் கடும் பயிற்சிதான் 'ஜனக் ஜனக்'கில் தமக்குப் புகழ் தேடித் தந்தது என்றார் அவர். அது போன்று மேலும் பல படங்களில் நடித்து 'கதக்'கைப் பிராபல்யப்படுத்தத்தான் தமக்கு அவாவென்றும், ஆனால் தமது கியாதியைப் பயன்படுத்திப் பணம் திரட்டுவதில்தான் படாதிபதிகள் குறியாயிருக்கிறார்களேயொழிய கலையைப் பேணி வளர்க்க விரும்பவில்லையென்றும், இது காரணமாகத்தான் 'ஜனக் ஜனக்'கைத் தொடர்ந்து ஏழு படங்களுக்கு வந்த 'ஆபர்'களை தாம் ஏற்க மறுத்துவிட்டதாயும் தெரிவித்தார்.

'சாந்தாராமே படமெடுத்தால் நடிப்பீர்களல்லவா?'

'அவர் என்னைக்கொண்டு இனி படமெடுக்க மாட்டார். 'ஜனக் ஜனக்' படப் பிடிப்பின்போது என் வார்த்தைக்கு அவர் மிகுந்த மதிப்புக் கொடுத்தாரென்றாலும் இப்போது என் மீது அவருக்கு அசாத்யக் கோபம். 'ஜனக் ஜனக்' வெளியானபோது மற்ற நட்சத்திரங்களைப்போல என்னையும் அவர் இட்டுச் செல்லாதது இந்தக் கோபத்தினால்தான்!"

'காரணம்?'

'படப் பிடிப்பின்போது அவர் உத்தரவின்றி எங்கும் போகக்கூடாதென்றார். ஒரு சமயம்–'ஷூட்டிங்' இல்லாதபோது தான்–நண்பர்களின் அழைப்பின்பேரில் கோலாப்பூர் சென்றேன். அப்போதே கோபம் வந்துவிட்டது அவருக்கு. பிற்பாடு, ஐந்து வருஷ காலத்துக்கு என்னைக் கட்டுப்படுத்தி அவருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள நான் மறுக்கவும் கோபம் பன்மடங்காகியது. உண்மைக் கலைஞன் எவனும் இந்த மாதிரி கட்டுதிட்டங்களுக்கு சம்மதிக்கமாட்டான். மேலும், ஐந்தாண்டில் என் இளமை கழிந்து, கலையும் கரைந்துவிடும். எனவேதான் நான் மறுத்தேன்.'

'இதனால் உங்களுக்குத்தானே அதிக நஷ்டம்?'

'நான் அப்படி நினைக்கவில்லை. கலையைப் பொறுத்தவரையில் லாபமே தவிர ஒருவிதத்திலும் நஷ்டமில்லை. இஷ்டம் போல எங்கு வேண்டுமாயினும் நான் சென்று அதை ஆடிக்காட்டி, பொது ஜன ஆதரவைப் பெறலாம். திரைக்காக கலைத் தரத்தைக் குறைக்கத் தேவையுமில்லை. பண விஷயத்திலும்கூட நஷ்டமில்லைதான்!'

'அப்படியா நினைக்கிறீர்கள்?'

'ஆமாம், ஒரு படத்தில் நடிப்பதென்றால் குறைந்தபட்சம் ஒரு வருஷம் பிடிக்கும். அதுவரை ஓய்ச்சல் ஒழிவு இருக்காது, கச்சேரிகள் காரிய சாத்யமல்ல. நடிக்காவிடிலோ, மாதம் பத்துக் கச்சேரிகள் செய்தாலே போதும், பல மடங்கு பணம் சம்பாதித்து விடலாம்.'

'பின் ஏன் நடிப்பதில் நாட்டமிருப்பதாகக் கூறினீர்கள்?'

'எனக்கும் நன்கு நடிக்கத் தெரியும் என்று காட்டத்தான். 'ஜனக் ஜனக்'கைப் பார்த்த பல பேர் எனக்கு நடனம்தான் தெரியும், நடிப்புத் திறன் போதாது என்று முடிவுகட்டிவிட்டனர். அவர்கள் நான் திரையுலகுக்குப் புதிது என்பதை மறந்துவிட்டனர். உண்மையில், முதல் நாள் படப் பிடிப்பின்போது எனக்கு மயக்கமே வந்துவிட்டது. எப்படியோ சமாளித்து, கூடியவரையில் நல்ல பெயர் எடுத்துவிட்டேன் என்றே நினைக்கிறேன். அதை நிலைநிறுத்தவே மேலும் பல படங்களில் நடிக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன். ஆனால் முதல்தரப் படாதிபதியாக இருக்க வேண்டும். கலையார்வம் மிக்கவராக, கலைஞனுக்கு சுதந்திரம் அளிப்பவராகஇருக்க வேண்டும் அவர். அப்படிப்பட்டவர் முன்வந்தால், எனக்கு நடிக்க ஆக்ஷேபமில்லை."

23 வயதுக்குள் பேரும் புகழும் சம்பாதித்திருப்பதோடு இப்படி தளராத கலையார்வமும் தன்னம்பிக்கையும் வாய்க்கப்பெற்றிருக்கும் ஸ்ரீ கோபிகிருஷ்ணா, சென்னைக்கு வந்த காரணம் கச்சேரிகள் செய்வதற்காக மட்டுமல்ல. ரிபப்ளிக் ப்ரொடக்ஷன்ஸார் எடுத்துவரும் தெலுங்குப் படத்துக்கு நடன டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்கத்தான். பி. எஸ். ரங்கா டைரக்ஷனில் தயாராகும் இப்படத்தில் இவருடைய திறமை நன்கு வெளிப்படும், அதன் மூலம் தென்னாட்டு பாணியுடன் வட நாட்டு பாணி சீராகக் கலந்து சிறப்பாகப் பரிமளிக்குமென எதிர்பார்க்கலாம்.

தரை மட்டத்திலல்ல, ஐந்தடி எழும்பிக் குதித்து ஆடுகிறார் கோபிகிருஷ்ணா!

நகர அரங்கம்

“ஒரே கடிதம்” என்கிற தமிழ் சமூக நாடகத்தை ஸ்டாண்டர்டு வாக்குவம் கம்பெனி பொழுதுபோக்குச் சங்கத்தினர் சென்ற ஞாயிறன்று எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் நடித்தனர்.

‘பூதநாதன் பிள்ளை’யாகத் தோன்றிய டி. எஸ். நாராயணசுவாமி நல்ல நிதானத்துடன் திறம்பட நடித்தார். அடுத்தபடி, ‘வையாபுரி’ எஸ். கணபதியின் பேச்சும், நடிப்பும் கன கச்சிதம். ‘எட்டியப்பன்’ என். ராமச்சந்திரனுக்கு நிறைய வாய்ப்பு இருந்தும், கட்ட மாறுதல்களுக்கேற்ப நடிப்பில் நயம் காட்ட அவர் தவறிவிட்டார். கடைசி வரை ஒரே தோரணையில் அமர்க்களமாகப் பேசிக்கொண்டே போனார். ‘ஆடிய பாதம்’ டி. எஸ். சேஷாத்திரியின் நடிப்பில் வேகம் போதாது. சிரத்தையுடன் நடித்தாரென்றாலும் அவர் சிரமப்பட்டு நடித்ததாகவே தோன்றியது. ‘எட்டியப்பனை’ச் சுட்டுத் தள்ளும் காட்சியில் அவர் இன்னும் உழைத்து நடித்திருக்க வேண்டும்.

‘கலா’வாக வந்த ராஜேஸ்வரி அழகாகப் பேசி, கூடியமட்டில் தம் பாகத்தை உணர்ந்து நடித்தார். ‘லீலா’ காதலன் ‘சுந்தர’மாகத் தோன்றும் ஏ. ஆர். குமாரின் நடிப்பு பரவாயில்லை. ‘கந்தன்’ என். செல்வராஜ் தேவலை. ‘ராஜன்’ ஓ. ஆர். ஜகதீசனிடம் போலீஸ் இன்ஸ்பெக்டருக்குள்ள மிடுக்கே இல்லை. ‘லீலா’ எஸ். சுசீலா, ‘ஒய்யாரி’ எஸ். சரோஜா இருவரும் சுமாராக நடித்தனர். மற்றும் என். அருணாசலம், டி. ஆர். சிவசங்கரன், ஏ. ராமச்சந்திரன், வி. வி. எஸ். மணியன், ஆர். கதிர்வேலு, ஜி. தாமோதரன் முதலியோர் பங்கெடுத்துக்கொண்டனர்.

கதை, வசனம் எழுதியவர் ஸ்ரீ மா. ரா. நாடக அமைப்பில் புது பாணி எதுவும் கையாளப்படவில்லை. சமூகத்திலும், குறிப்பாக சினிமாத் துறையிலும் காணப்படும் சாதாரண ஊழல்களை நாசூக்காக இடித்துரைக்கிறார் கதாசிரியர். “பெரிய இடத்து விஷயம்” நாடகத்தைப்போலவே இந் நாடகத்திலும் அடுக்குச் சொற்களை அவர் பிரயாசையுடன் சேர்த்து ரஸிகர்களுக்கு ஆயாசம் உண்டாக்குகிறார். அர்த்தமற்ற வருணனைகள் பலப்பல. இவற்றினால் நாடகத்தின் நல்ல கருத்துக்கள் அதிகம் எடுபடாமல் ஆங்காங்கு பதுங்கிக் கொண்டுவிடுகின்றன. அவர் இயற்றிய பாடல்கள் அருமையாக விளங்கின.

‘பிருத்வி’ ஸ்ரீ ஆர். பார்த்தசாரதியின் சங்கீத டைரக்ஷன் நாடகத்துக்கே அலாதி சோபையூட்டியது. ஓரிரு பாடல்களுக்கு அவர் அமைத்திருந்த மெட்டுகள் கூடியிருந்தோரின் உள்ளத்தை வெகுவாகக் கொள்ளை கொண்டன. பின்னணியில் குமாரி ஆர். பிரேமாவும், அவரும் சேர்ந்து பாடிய காதல் கீதம் பிரமாதம். ஸ்ரீ எம். ஆர். வேலுசுவாமி வாத்திய கோஷ்டியின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ ... எஸ். சேஷாத்திரி நாடகத்தை டைரக்ட் செய்தார்.

ஃ ஃ ஃ

காமவெறிக்கும், குடிபோதைக்கும் இடையே எக்கச்சக்கமான அடுக்குச் சொற்களுடன் தத்தளிக்கும் வசனங்களைக் கொண்ட தமிழ் சமூக நாடகமாகும் “நான் யார்?”. அபிராமபுரம் அஸோஸியேஷன் ஆதரவில் கலவிலாசினி நாடக சபையினர் கடந்த 5-ந் தேதி அதை நடித்தனர்.

பிரதான கதாபாகமேற்ற பி. ... கிருஷ்ணனுக்கு நல்ல நடிப்புத்திறமை இருக்கிறது. ஆனால், தொழில் நடிகர ... தோழர் ஒருவரை மனதில் கொண் ... பேச்சிலும், நடிப்பிலும் அவரை ‘காப்பி’ அடிக்க முயற்சி செய்வத ... இவருடைய சுய திறமை வீணாகிற ... ஏந்த அமெச்சூர் நடிகராக இருந்தாலு ... சரி, கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவ ... அசல் திறமையைக் காட்டினால்தா ... ரஸிகர்களிடையே அவருக்கு மதி ... உயரும்.

‘சுகுமார்’ ஏ. பி. பொன்னப்பாவ ... நடிப்பு தேவலை. ‘பிரேமா’ கே. வசந்தா அவருடன் சரியாக ஒத்துழை ... தார். இருவரும் இனிமையாகப் பாடி ... குறிப்பிடத்தக்கது. ‘மாமா’ ஸி. ... தேசிகன் தம் பாகத்தைப் பூரண ... உணர்ந்து நடித்தார்; சிற்சில சம ... களில் கொஞ்சம் ‘ஓவர்’.

‘ஜமீந்தார்’ பி. ஜி. கன்னிய ... னுக்கு நல்ல வேஷப் பொருத்தம். ‘பா ... ‘அமீனா’ முதலிய பாகங்க ... தோன்றிய டி. வி. வெங்கடே ... மிகவும் இயற்கையாக நடித்த ... ‘வில்லன்’ ஆர். சோமுவின் நடிப்பில் ... பரப்பு இருந்தது; ஆனால், அந்த அ ... வுக்குப் பேச்சில் விசை இல்லை. ‘சுந்தா’ ... வி. பத்மா சுமாராக நடித்தார். கே. ஜி. கனகா, ஏ. வி. எஸ். மணி, ரங்கசாமி, காசி ராஜா முதலியோரும் நடித்தனர். கே. ஜி. சாந்தா, எஸ். பிரேமா இருவரும் ‘கொள்ளைக் கூட்டத்தினர்’ ரசிக்கும்ப ... ஆடினார்கள்.

கதை, வசனங்களை எழுதி, முக்கிய பாத்திரத்திலும் தோன்றியதோடு நில்லாமல் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருந்தார் ஸ்ரீ பி. ஏ. கிருஷ்ணன். குறுகலான மேடையாக இருந்தும் அவர் திறம்பட டைரக்ட் செய்தார். ஸ்ரீ பி. ஜி. கன்னியப்பனுடன் சேர்ந்து பாடல்களை அமைத்தவரும் அவரே.

ஃ ஃ ஃ

மயிலை ரஸிக ரஞ்சனி சபை ஆதரவில் குமாரி பத்மலோசனி போன 6-ந் தேதி அழகாகப் பரதநாட்டியமாடினாராம். பந்தநல்லூர் ஸ்ரீ எஸ். மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சிஷ்யையான அவர், பரதநாட்டியத்துக்கென மத்திய சர்க்காரின் உபகாரச் சம்பளம் பெற்றவர்.

மறு நாள் மேற்படி சபை ஹாலில் ... வழுவூர் ஸ்ரீ பி. ராமய்யா பிள்ளையின் சிஷ்யை குமாரி பத்மாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடந்தது. பிலிம் ப்ரொட்யூஸரும், டைரக்டருமான ஸ்ரீ கே. சுப்ரமண்யத்தின் புதல்வி இவர்.

—ஸஞ்சாரி.



பட்டிவீரன்பட்டி பிரபல தோட்ட முதலாளி ஸ்ரீ சந்திரசேகரனின் குமாரி கலையரசியின் பரதநாட்டிய அரங்கேற்று விழா கடந்த 27உ மதுரையில் மந்திரி ஸ்ரீ ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்

கீர்த்தனைகள்

சங்கீதகலாநிதி
ஸ்ரீ டி.எல்.வேங்கடராமய்யர் உதவியது

இக்கீர்த்தனையை ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் அவர்களின் பாடாந்தரப்படி ஸ்வரப்படுத்திக் கொடுத்தவர் ஸ்ரீ அரியக்குடியின் சிஷ்யரான ஸ்ரீ பி. ராஜம் அய்யர் அவர்கள்

பல்லவி

கோ கர்ணேச்வர பாஹி பாஹிமாம்
3

கோத்ர பிதாதி பூஜிதமூர்த்தே ஸுகீர்த்தே
3 4 3 3

(கோகர்ணேச்வர)
3

அநுபல்லவி

ஸ்ரீ கம்பு ஹேமகிரி கார்முகதர
3 3 2 4

ஸ்ரீபதி சர தரணீரத புரஹர
4 2

மத்யம காலம்

சோக ஹராஹர சுப நிகராகர
4

கோக நதபத குருகுஹாகர
3 3 3 3

(கோகர்ணேச்வர)

சரணம்

பால மண்டன தீர்த்த தீரவாஸ
3 2

பாரதீசநுத பக்த விச்வாஸ
4 4

நீலலோஹித விச்வ விலாஸ

நித்யானந்த வல்லீ மனோல்லாஸ
3

மத்யம காலம்

பாஞ்சால ஸௌராஷ்ட்ர சோளதேச
3

பால ஸேவித ம்ருகண்டு பால
3 3

தீர்க்காயு ராரோக்ய ப்ரத
3 4 3 3

பால சசிதர வரத தக்ஷிண
3 4 3 3

(கோகர்ணேச்வர)

இந்திரன் முதலியோரால் வழிபடப்பட்டவனும், சிறந்த கீர்த்தியையுடையவனும், ஸுமேரு பர்வதத்தை வில்லாக ஏந்தியவனும், லக்ஷ்மீகாந்தனை பாணமாகக் கொண்டவனும், பூமியைத் தேராகப் பெற்றவனும், புரத்தை எரித்தவனும், அல்லலைப் போக்குபவனும், ஹரன் என வழங்கப்படுபவனும், மங்களத்திற்கு இருப்பிடமானவனும், தாமரை போன்ற பாதங்களையுடையவனும், குரு குஹனுக்கு மூல காரணமானவனும், நெற்றிப் பிரதேசத்திற்கு அலங்காரமாக அமைந்த நதிக்கரையில் வசிப்பவனும், ப்ரும்ம தேவனால் துதிக்கப்பட்டவனும், பக்தர்களுக்கு நம்பிக்கையை அளிப்பவனும், நீலலோகிதன் என்ற பெயருள்ளவனும், உலகத்தை விளையாட்டாகக் கொண்டவனும், நித்யானந்தவல்லி தேவியின் மனதிற்குக் களிப்பை ஊட்டுபவனும், பாஞ்சால, ஸௌராஷ்ட்ர, சோள என்ற தேசங்களை ஆள்பவர்களால் வழிபடப்பட்டவனும், மார்க்கண்டேயனுக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் கொடுப்பவனும், சந்திர கலையைத் தரித்தவனும், வரங்களைக் கொடுப்பவனும் ஆகிய தக்ஷிண கோகர்ணேச்வரனே! என்னைக் காப்பாற்று! காப்பாற்று!

ராகம் : ஸௌராஷ்டிரம் (17-வது மேளத்தில் ஜன்யம்) **தாளம் : ஆதி (2 களை)**

ஆ : ஸரிகமபமதநிஸ். அவ : ஸ்நிதபமகரிஸ

கைசிகி நிஷாத ப்ரயோகம் உண்டு.

* இக் குறியிட்டவை கைசிகி நிஷாதங்கள்.

பல்லவி

நி ஸ் நித தநி*தப பமதபபதமா மகரி	ஸரிகமபா பம	தா ரி ஸ் ரி ; ‖
கே . . க . . . ர்ணே . . ச்வ. . ர . .	பா . . . ஹி பா.	ஹி மாம் ‖
ரிஸ்ஸ்ரிக்ா ப்ம்க்ரி க்ரிஸ் நிஸ்	நிதத தநி*தப	ப , பமபா த நி ‖
கோ . . . த்ர பி. தா. . . தி பூ.	. ஜித மூ. . .	ர்த்தே ஸ . கி ர்த்தே. ‖

(கோகர்ணேச்வர)

அநுபல்லவி

1 பா ; பமதபபமகா ; மா ப	கம கரி ஸரி கம	பர்பம தாதா ‖
ஸ்ரீ . கம். . . பு ஹே. ம . .	கி . ரி . கா. . .	ர்முக. தர ‖
2 தநி*த பா பமதப பம	do	do ‖
ஸ்ரீ. . . கம் . . பு .	ஹேம கிரி	கார்முக தர ‖
ரி ஸ்ரீ ஸ்நிஸா ரிஸ்ரீ ஸ்நிதா தா	த நி*தப தபபம	கமகரி காமா ‖
ஸ்ரீ . . ப . தி ச . ர த . . ர	ணீ. . . ர. த.	பு. ர . ஹர ‖

மத்யம காலம்

/தா, ப மகமபமகரீ மாமபமகரீ கமபப	/ ரீ , ஸ்நிதநிஸ்	ம்க்ரி ஸ் ா நிதநி ‖
சோ. க ஹ. ர . ஹ. ர சு ப . நி . க ர ா. கர	கோ க நதபத	கு ரு குஹ . கர ‖

(கோகர்ணேசவர)

சரணம்

பா ; பம கமகரி ரிஸஸா ரிஸ	ரிரி ஸநி. ஸநிதா	நீ ஸநிஸரிஸா ‖
பா ல . மண் . . . ட ன தி.	. . ர்த்த. தி . .	ர வா . . . ஸ ‖
ஸமா கமா பா ; பம தாதா	தநி*தப பமகம	கரி ஸ ரி க ப பா ‖
பா . . ர தி . ச . நு த	ப . . . க்த. வி .	. . ச்வா . . . ஸ ‖
ஸ்நிதா தநி நிஸா ; நி ரீஸா	ஸ்நி க்ரிஸா நிஸ்	தாஸ் நிஸா ; ‖
நீ . . ல . லோ . . . ஹி த	வி . . ச்வ வி.	லா . . ஸ . ‖
ரீ ஸ்ா , ரி ஸ்நிதா தநி தநிஸ்ரிஸா, ரி	நிஸா \ப கம பதநி*த	பமகம கரிஸா ‖
நி த்யா. . னந். . த. வல்	லீ . . ம . னோ. .	. . ல்லா . . . ஸ ‖

மத்யம காலம்

ஸா ஸநிதநிஸ ரீ ஸ மகரி மகம	பா, த ரிஸ்நித	ஸ்ா, ரி ம் க்ா ரி ‖
பா ஞ்சா.லஸௌ. ரா. ஷ்ட்ர சோ.ள தே.ச	பா. ல ஸே. வித	பா த ம்ருக்ண்டு ‖
க்\ரிஸ் தநிஸா ரிக்ம்க்ரிஸா நி	தபாம கரி காமப	மகரீஸா தாதநி ‖
பா. ல தி . ர்க்காயு ரா.ரோ.க்ய ப்ர	தபால சசி தர .	வ. ர த தக்ஷிண ‖

(கோகர்ணேசவர)